[வெளியீடு 28-1-1981] [Issued 28-1-1981]

136/81
1510
10 மார் 1981

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

திங்கட்கிழமை 1980 ஆகஸ்ட் 11—தொகுதி VIII—எண் 1
Monday 11th August 1980—Volume VIII—No. 1

தமிழ் நாடு அரசு—GOVERNMENT OF TAMIL NADU
1981

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை—600 009.
Assembly Department, Fort. St. George, Madras-600 009.

விலை 3-15 காசுகள்] [Price 3-15 Paise

V811,31 N80
N81-2-1
123045

## உள்ளடக்கம்.

பக்கங்கள்.

11—8—1980

(i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும். i–iv

(ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். v—vi

(iii) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற) பெயர் பட்டியல். vii—xv

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள். 1–43

2. அறிவிப்பு

மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி. 43

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

(அ) திண்டுக்கல் நகரில் கூட்டநெரிசலில் பலர் இறந்துள்ளது. 44–54

(ஆ) கும்பகோணம் அரசாங்கக் கல்லூரி மாணவர்களிடையே கலகம். 55–60

4. கவன ஈர்ப்புகள்.

(அ) சென்னை பல்லவன் போக்குவரத்துக் கழக பேருந்து விபத்து. 60–62

(ஆ) சிமெண்ட் மூட்டைகளை பதுக்கி கலப்படம் செய்து கடத்துவது. 62–68

(இ) செயற்கை பட்டு, சாயமருந்துகள் விலையேற்றமும், நெசவாளர்கள் மறியலும். 69–72

(ஈ) திருப்பத்தூர் தாலுகாவில் கால்நடைகள் வியாதியால் தாக்கப்பெறுவது. 72–75

| | பக்கங்கள். |
|---|---|
| 5. <u>ஒழுங்குப் பிரச்சினை.</u> | |
| மததிய அரசினர் செய்திப்படம். | 75 |
| 6. <u>அரசினர் சட்ட முன்வடிவுகள்.</u> | |
| (அ) நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல், இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1980 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1980)—தொடர்ச்சி. | 75–138 |
| (ஆ) உள்ளாட்சி அதிகார மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு 1980 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1980). | 138–163 |
| (இ) மாநகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு 1980 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1980). | 164–204 |
| (ஈ) கோயம்புத்தூர் நகராட்சி மன்றத் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு 1980 (சட்ட மன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1980). | 204–205 |
| (உ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்த சட்ட முன்வடிவு 1980 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 93/1980). | 205 |
| (ஊ) ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1980 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1980). | 206 |
| (எ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1980(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1980). | 206 |
| 7. <u>அறிக்கை அளித்தல்</u> | |
| விதி 107 (1)-இன் கீழ். | 164 |
| 8. <u>பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.</u> | 207–208 |


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. பிரபுதாஸ் பட்வாரி.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சி பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, பொதுப் பணித்துறை மற்றும் பொதுப் பணித்துறை (நிறுவனம்) சம்பந்தப் பட்ட. அலுவல்கள்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, திட்டம், சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் ராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்; பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, காடுகள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் வேளாண்மை பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு-சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள், மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு, கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித்துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமி தானம், கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் திரு. எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வஃபு.

14. மாண்புமிகு திரு. எஸ். முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (கைத்தறி, கதர்த்துறை அமைச்சர்)—கைத்தறி, கதர், மது அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மதுவிலக்கு, பயண இசைவுச் சீட்டு.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (அரிசன நலத் துறை அமைச்சர்)—அரிசன நலம், எழுது பொருள்-அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலை வாழ் பழங் குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

*Governor of Tamil Nadu*

THIRU PRABHUDAS PATWARI.

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. HON. THIRU M. G. RAMACHANDRAN (Chief Minister)—Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Public Works Department and Establishment Matters relating to Public Works Department.

2. HON. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Planning, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. HON. THIRU K. A. KRISHNASAMY (Minister for Rural Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development and Registration.

5. HON. THIRU S. D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. HON. THIRU R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. HON. THIRU C. ARANGANAYAGAM (Minister for Education)—Education including Technical Education and Official language.

8. HON. THIRU K. KALIMUTHU (Minister for Agriculture)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. HON. THIRU C. PONNAIYAN (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. HON. THIRU P. KULANDAIVELU (Minister for Local Administration)—Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. HON. THIRU S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing, Slum-Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. HON. Doctor H. V. HANDE (Minister for Health)—Health.

13. HON. THIRU K. RAJA MOHAMMED (Minister for Irrigation)—Agro-Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. HON. THIRU S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. HON. THIRU S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. HON. THIRU S. N. RAJENDRAN (Minister for Handlooms and Khadi)—Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits and Passports.

17. HON. THIRU M. VIJAYASARATHI (Minister for Harijan Welfare)—Harijan Welfare, Stationery and Printing, Government Press News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. HON. THIRUMATHI GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)—Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. க. இராசாராம்.

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### *மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. இரா. முத்தையா,
2. திரு. கோ. விஸ்வநாதன்,
3. திரு. பெ. சு. திருவேங்கடம்,
4. திரு. ஓ. சுப்ரமணியன்.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்கள்,

திரு. த. இராதாகிருஷ்ணன்,

திரு. கே. பாலகுரு, பி.ஏ.

### குழு அலுவலர்.

திரு. ச. பாஷ்யம், பி.ஏ. (ஆனர்ஸ்).

### சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்.,

திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி.ஏ.,

திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.,

திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.,

திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.,

திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.,

திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ. (எஸ்டேட் அதிகாரி),

திரு. பி. கோதண்டராமன்—பேரவைத் தலைவரின் தனி செயலாளர்.

### தலைமை நிருபர்.

திரு. மா. சந்திரசேகரன்.

### விவாதப் பதிப்பாளர்,

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி. லிட்.

**தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற பெயர்ப் பட்டியல்).**

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 1 | அங்குசாமி, திரு. ச. .. | திருவாடானை. |
| 2 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர். |
| 3 | அப்பாதுரை, திரு. மு. .. | ஓட்டப்பிடாரம் (செ.வ). |
| 4 | அம்பிகாபதி, திரு. மு. .. | மன்னார்குடி. |
| 5 | அரங்கநாதன், திரு. எஸ். .. | தர்மபுரி. |
| 6 | அரங்கநாதன், திரு. மு. .. | கூனூர் (செ.வ.). |
| 7 | அரங்கநாயகம், திரு. செ. .. | கோவை (மேற்கு). |
| 8 | அரங்கராசன், திரு. வெ. .. | உப்பிலியாபுரம். |
| 9 | அருணாசலம், திரு. இரா. .. | நாமக்கல் (செ.வ.) |
| 10 | அழகர்சாமி, திரு. சோ. .. | கோவில்பட்டி. |
| 11 | அன்பழகன், திரு. க. .. | புரசைவாக்கம். |
| 12 | அன்பழகன், திரு. தி. .. | நாட்ராம்பள்ளி. |
| 13 | அன்பில் தர்மலிங்கம், திரு. .. | லால்குடி. |
| 14 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம். |
| 15 | ஆண்டித் தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 16 | ஆறுமுகம், திரு. எம். .. | அவினாசி (செ.வ.) |
| 17 | சேலம் ஆறுமுகம், திரு. மு. .. | சேலம்-2. |
| 18 | ஆறுமுகம், திரு. த. .. .. | அரியலூர். |
| 19 | இரத்தினம், திரு. எம்.வி. .. | பொள்ளாச்சி. |
| 20 | இராசகுமார், திரு. மே.அ. .. | மருங்காபுரி. |
| 21 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம். |
| 22 | இராசரத்தினம், திரு. து. .. | பூந்தமல்லி. |
| 23 | இராசாம்பாள், திரு. தா. .. | தலைவாசல் (செ.வ.) |
| 24 | இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி. |
| 25 | இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம். |
| 26 | இராசு, திரு. ஜே. எஸ். .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 27 | இராசேந்திரன், திரு. எஸ்.என். | தூத்துக்குடி. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 28 இராமச்சந்திரன், திரு. எம்.ஜி. | மதுரை (மேற்கு). |
| 29 இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர். |
| 30 இராமச்சந்திரன், திரு. ச. .. | பன்ருட்டி. |
| 31 இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந. | செஞ்சி. |
| 32 இராமசாமி, திரு. த. .. | இராமநாதபுரம். |
| 33 இராமசுப்பிரமணியன், திரு. என். | ஸ்ரீவைகுண்டம். |
| 34 இராமலிங்கம், திரு. ஏ. .. | காட்டுமன்னார் (செ.வ.) |
| 35 இராமலிங்கம், டாக்டர், கே.பி. | இராசிபுரம். |
| 36 இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர். |
| 37 இராஜசேகரன், திரு. வெ. .. | இராதாகிருஷ்ண நகர். |
| 38 இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி. |
| 39 இராஜேந்திரன், திரு. எஸ்.எஸ். | ஆண்டிப்பட்டி. |
| 40 இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.) |
| 41 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம். |
| 42 உகம்சந்த், திரு. எஸ்.டி. .. | மதுராந்தகம். |
| 43 உச்சி, திரு. கே. .. .. | கூடலூர். |
| 44 உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 45 உமாநாத், திரு. ரா. .. | நாகை. |
| 46 கண்ணன், திரு. ம. .. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 47 கணபதி, திரு. கே. ஆர். .. | சிதம்பரம். |
| 48 கணேசன், திரு. இ. .. .. | இடப்பாடி. |
| 49 கணேசன், திரு. சி. .. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 50 கந்தசாமி, திரு. கா. வே. .. | கிணத்துக்கடவு. |
| 51 கந்தசாமி, திரு. பி. .. | பொங்கலூர். |
| 52 கபாலி. திரு. டி. கே. .. | மைலாப்பூர். |
| 53 கருணாநிதி, டாக்டர் மு. .. | அண்ணாநகர். |
| 54 கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 55 கருப்பையா, திரு. இரா. .. | குளித்தலை. |
| 56 கருப்பையா, திரு. ஏ. டி. .. | வால்பாரை |
| 57 கல்லன், திரு. கே. .. | உதகமண்டலம். |
| 58 கலிதீர்த்தான், திரு. சோ. .. | சங்கரபுரம். |
| 59 கலியமூர்த்தி, திரு. பெ. .. | மங்களூர் (செ.வ.). |
| 60 நன்னிலம் கலையரசன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 61 காளிமுத்து, திரு. கா. | திருப்பரங்குன்றம். |
| 62 கிட்டப்பா, திரு. என். .. | மாயவரம். |
| 63 கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம். |
| 64 கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு. |
| 65 கிருட்டிணமூர்த்தி, திரு. சா. .. | ஆண்டிமடம். |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. | நெல்லிக்குப்பம். |
| 67 கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்-1. |
| 68 கிருஷ்ணன், திரு. ரா. .. | வாசுதேவநல்லூர். |
| 69 குப்புசாமி, திரு. என். .. | மொரப்பூர். |
| 70 குப்புசாமி, திரு. கே. .. | ஒட்டன்சத்திரம். |
| 71 குப்புசாமி, திரு. செ. .. | வந்தவாசி (செ.வ.). |
| 72 குமரிஅனந்தன், திரு. .. | திருவொற்றியூர். |
| 73 குருசாமி, திரு. ப. .. .. | அந்தியூர் (செ.வ.) |
| 74 குருசாமி என்கிற அண்ணாதாசம், திரு. எம். | திருவரும்பூர். |
| 75 குலசேகர், திரு. ஏ. டி. ... | சிங்காநல்லூர். |
| 76 குலசேகரப் பாண்டியன், திரு.ந. | வாணியம்பாடி. |
| 77 குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை. |
| 78 கேசவ ஆதித்தன், திரு. சி. .. | திருச்செந்தூர். |
| 79 கோபால், திரு. சி. .. | சோளிங்கர். |
| 80 கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம். |
| 81 கோபாலன், திரு. ஆர். டி. .. | கம்பம். |
| 82 கோமதி சீனிவாசன், திருமதி. | வலங்கை (செ.வ.). |
| 83 கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி. |
| 84 கோவைத்தம்பி, திரு. .. | பேரூர். |

| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 85 | சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி. |
| 86 | சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு). |
| 87 | சட்டநாத கரையாளர், திரு. கி. | தென்காசி. |
| 88 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி. |
| 89 | சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி. |
| 90 | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி. |
| 91 | சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான். |
| 92 | சபாபதி, திரு. சி. | அரூர் (செ.வ.). |
| 93 | சமரசம், டாக்டர் கே. | காவேரிப்பட்டணம். |
| 94 | சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர். |
| 95 | சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம். |
| 96 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம். |
| 97 | சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி. |
| 98 | சிவசாமி, திரு. செ. | இளையான்குடி. |
| 99 | சிவஞானம், திரு. ந. | திருவோணம். |
| 100 | சிவப்பிரகாசம், திரு. சி. | சேந்தமங்கலம் (செ.வ.) |
| 101 | சிவபெருமாள், திரு. மு. | ஓமலூர். |
| 102 | சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம். |
| 103 | சின்னசாமி, திரு. எம். | கரூர். |
| 104 | சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர். |
| 105 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி. |
| 106 | சின்னராஜ், திரு. எம். | தொண்டாமுத்தூர். |
| 107 | சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம். |
| 108 | சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர். |
| 109 | சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம். |
| 110 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகையூர். |
| 111 | சுந்தரராஜ், திரு. நா. | திருமயம். |
| 112 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர். |
| 113 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை. |
| 114 | சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | போடிநாயக்கனூர். |
| 115 | சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு. |



| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|---|
| 116 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர். |
| 117 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர். |
| 118 | சுவாமிநான், திரு. வி. வி. | புவனகிரி. |
| 119 | செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபி செட்டிபாளையம். |
| 120 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம். |
| 121 | செல்லமுத்து, திரு, எம். | திருவாரூர் (செ.வ.), |
| 122 | செல்வராசன், திரு. அ. | துறைமுகம், |
| 123 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி. |
| 124 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு. |
| 125 | சொக்கலிங்கம், திரு. கெ. | திருப்போரூர், |
| 126 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை. |
| 127 | சோமு, திரு. என். வி. என். | பூங்கா நகர் |
| 128 | செளந்திரராசன், திரு. கே. | திருச்சி-2. |
| 129 | டாக்டர் செளரிராஜன், திரு. கே. | தி. நகர். |
| 130 | தங்கமணி கவுண்டர், திரு. கே. எம். | திண்டிவனம். |
| 131 | தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி. |
| 132 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம், | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 133 | தங்கவேலு, திரு. பி. | ஜெயங்கொண்டான். |
| 134 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ. வ ). |
| 135 | தனபால், திரு. ப. | சங்கரி (செ. வ.). |
| 136 | தனுக்கோடித் தேவர், திரு. கே. | முதுகுளத்தூர். |
| 137 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 138 | தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம். |
| 139 | திருச்சி செளந்திரராஜன் திரு. ஆர். | ஸ்ரீரங்கம். |
| 140 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி. |
| 141 | திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி. |
| 142 | திருமான், திரு. | ஏற்காடு (செ.வ.) |
| 143 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 144 | தீர்த்தராமன், திரு. ப. | பென்னகரம். |

| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 145 | துரைசாமி, திரு. பி. எஸ்... | பர்கூர். |
| 146 | துரை முருகன், திரு. .. | இராணிப்பேட்டை. |
| 147 | துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில். |
| 148 | துரைராஜ், திரு. பி, .. | சங்கரநயினார் கோவில் (செ.வ.). |
| 149 | தேவராஜ், திரு. வி. எம். | வேலூர். |
| 150 | நடராசன், திரு. எஸ். .. | தஞ்சாவூர். |
| 151 | நரசிம்மன், திரு. பூ. மு. .. | பள்ளிப்பட்டு. |
| 152 | நல்லப்பன், திரு. தி. கா. .. | பெருந்துறை. |
| 153 | நவநீதகிருஷ்ணன்பாண்டியன் திரு. | ஆலங்குளம். |
| 154 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர். |
| 155 | நாராயணசாமி, திரு. கே. .. | திருவண்ணாமலை. |
| 156 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி. |
| 157 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி. |
| 158 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய). |
| 159 | பக்கீர் முகமது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம். |
| 160 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர். |
| 161 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம். |
| 162 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லடம். |
| 163 | பலராமன், திரு. இல. .. | போளூர். |
| 164 | பழனிசாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம். |
| 165 | பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர். |
| 166 | பழனியப்பன், திரு. கு. ப. | விழுப்புரம். |
| 167 | பழனிவேல், திரு. என். .. | பழனி (செ. வ.). |
| 168 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி. |
| 169 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர். |
| 170 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு. |
| 171 | பாரமலை, திரு. க. .. | மானாமதுரை (செ.வ.). |
| 172 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி. |
| 173 | பாலகிருஷ்ணன், திரு. வி... | சிவகாசி. |



| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|---|
| 174 | பாலசுப்பிரமணியன், திரு. க. .. | சீர்காழி (செ.வ.). |
| 175 | பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர். |
| 176 | பாலன், திரு. சு. .. .. | பெரம்பூர் (செ.வ.). |
| 177 | பாலுச்சாமி, திரு. ஏ. .. | சமயநல்லூர் (செ. வ). |
| 178 | பிச்சை, திரு. எம். .. | அருப்புக்கோட்டை. |
| 179 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. .. | வில்லிவாக்கம். |
| 180 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை, சென்னை. |
| 181 | பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி. |
| 182 | பெரியசாமி, திரு. ஏ. .. | தாராபுரம் (செ. வ.). |
| 183 | பெரியசாமி, திரு. ரா. .. | தொட்டியம் (செ. வ.). |
| 184 | பெருமாள், திரு. என். .. | வரகூர் (செ.வ.). |
| 185 | பெருமாள், திரு. ரா. கு... | விளாத்திகுளம். |
| 186 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.). |
| 187 | பொன்னுரங்கம், திரு. ப. | இராயபுரம், சென்னை. |
| 188 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு. |
| 189 | மணி, திரு. டி. .. | விளவங்கோடு, |
| 190 | மணிமாறன், திரு. ஆர்... | திருப்பூர். |
| 191 | மாணிக்கம், திரு. எம்.எஸ். | வேதாரண்யம். |
| 192 | மாரிமுத்து, திரு. த. .. | குளத்தூர் (செ.வ.). |
| 193 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம். |
| 194 | முசிறிப்புத்தன், திரு. பி. | திருச்சி-1. |
| 195 | முத்துகிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி. |
| 196 | முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு. |
| 197 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம். |
| 198 | முத்துவேல், திரு. என். .. | வாலூர் (செ. வ.). |
| 199 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 200 | முனிரத்தினம், திரு. இரா. சா. .. | கும்மிடிபூண்டி. |
| 201 | முனுசாமி, திரு. மு. ப. ... | பாலக்கோடு. |
| 202 | மூர்த்தி, திரு. ஜி. .. | பேரணாம்பட்டு (செ.வ.). |
| 203 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ. வ.). |
| 204 | யசோதா, திருமதி. டி. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.). |
| 205 | ரகுமான்கான், திரு. அ. .. | சேப்பாக்கம். |
| 206 | ரங்கசாமி, திரு. ஆர். .. | சத்தியமங்கலம். |
| 207 | ரங்கசாமி, திரு. க. .. | உளுந்தூர்பேட்டை (செ. வ.). |
| 208 | ரமணி, திரு. கு. .. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 209 | ராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம். |
| 210 | ராஜமாணிக்கம், திரு. எஸ். கே. .. | முசிறி. |
| 211 | ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல். |
| 212 | வரதராஜன், திரு. என். .. | திண்டுக்கல். |
| 213 | வால்மீகி, திரு. வி. .. | திருப்பத்தூர். |
| 214 | விஜயலட்சுமி, செல்வி வி. | வீரபாண்டி. |
| 215 | வின்சென்ட், திரு. மி. | நாகர்கோவில். |
| 216 | விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ.வ.). |
| 217 | விஜயபாலன், திரு. என். | பூம்புகார். |
| 218 | விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை. |
| 219 | விஜயராகவன், திரு. பொ. .. | கிள்ளியூர். |
| 220 | விஸ்வநாதன், திரு. கோ. .. | அணைக்கட்டு. |
| 221 | வீராசாமி, திரு. த. .. | ஒரத்தநாடு. |
| 222 | வீரானம்பலம், திரு. க. வெ. | மேலூர். |
| 223 | வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சி. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 224 | வெங்கட ரெட்டி, திரு. டி. | ஓசூர். |
| 225 | வெங்கடேசன், திரு. பி. எம். | பெரணமல்லூர். |
| 226 | வெள்ளைச்சாமி, திரு. அ. | ஆத்தூர். |
| 227 | வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு. |
| 228 | வேலப்பன், திரு. சி. வி. | கபிலர்மலை. |
| 229 | ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர். |
| 230 | ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குனேரி. |
| 231 | ஜகதீசன், ஆனூர், திரு. பு. கோ. | செங்கல்பட்டு. |
| 232 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி. |
| 233 | ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி. |
| 234 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு |
| 235 | மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. | (நியமன உறுப்பினர்). |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

மாண்புமிகு அமைச்சர்கள்—

1. மாண்புமிகு திரு. ஆர். எம் வீரப்பன்—அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராசா முகமது—அமைச்சர்.
5. திரு. க. வெங்கடசாமி, வழக்கறிஞர் (பொறுப்பு).

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

## திங்கட்கிழமை, 1980 ஆகஸ்ட் 11.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவை தலைவர்

" தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினார் சுட்ட வடு."

நெருப்பினால் சுட்ட புண்ணானது வடு மேலே காணப்பட்டாலும் அப்புண் உள்ளே ஆறிவிடும். ஆனால் சுடு சொல்லால் ஏற்பட்ட மனப்புண் என்றும் ஆறாது நிலைத்து நிற்கும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### பெரம்பூர் பகுதியில் மின்சார வினியோகம்.

*வினா எண் 143— திரு. சு. பாலன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை பெரம்பூர் பகுதியில் அடிக்கடி மின்சாரத் தடை ஏற்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இதனை சரி செய்ய திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:—(அ) மற்றும் (ஆ) ஆம். எதிர்பாராத விதமாக மின் வழங்கு கருவிகள் பழுதாவதாலும் மின் தொடர்புகளிலும், புதை வடங்களிலும் ஏற்படும் தடைகளாலும், மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக மின்தடை செய்யப்படுவதாலும் பெரம்பூர் பகுதியில் மின் தடைகள் ஏற்படுகிறது. இவற்றை சரி செய்ய 1979—80-ம் ஆண்டில் இப்பகுதியில் மின் வாரியம் ரூ. 5 இலட்சம் செலவில்

12 மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்தியது. மேலும், 1980–81-ம் ஆண்டில் ரூ. 8.9 இலட்சம் செலவில் எட்டு மேம்பாட்டுத் திட்டங்கள் செயலாக்க திட்டமிட்டுள்ளது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே அடிக்கடி மின்சாரத் தடை இருக்கிறது.. பொதுக் கூட்டங்கள் நடந்தாலும், திருமண வைபவங்கள் நடந்தாலும், பக்தி நிகழ்ச்சிகள் நடந்தாலும் அடிக்கடி மின்சாரம் தடைப்பட்டு பொதுமக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் சொல்லும்போது 1979-ம் ஆண்டு அதிகப் பணம் ஒதுக்கி இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி இருந்தும் இன்னும் அந்தக் குறைகள் நீக்கப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 1979–80-ம் ஆண்டு மட்டுமல்ல. இந்த ஆண்டும் சுமார் 9 லட்சம் ரூபாய் மேம்பாட்டுக்காக திட்டம் தீட்டி நிறைவேற்றப்பட இருக்கிறது. ஆகையினால் இவைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்ட பிறகு, இந்தக் குறை பெருமளவிற்கு குறையும் என்று நம்புகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, பெரும்பாலும் உயர் அழுத்தம் பெறுகின்ற தொழிற்சாலைகளிலே கூட இது மாதிரி முன் அறிவிப்பு இல்லாமலேயே மின்சாரம் தடைபடுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. அது இங்கு மட்டுமல்ல, தமிழகம் பூராவிலும் இருக்கின்றது. உயர் அழுத்தம் பெறுகின்ற தொழிற்சாலைகளில் முன்னாலேயே தகவல் கொடுத்து மின்சாரத்தை தடை செய்யக் கூடிய பொதுவான விதிகள் இருந்த போதிலும் அது பின்பற்றப்படுவதில்லை. இதனால் தொழிற்சாலைகளில் உற்பத்திப் பாதிக்கப்படுகின்றன. எனவே இம்மாதிரி நடைபெறாமல், தகவல் கொடுத்து மின்சாரத்தை தடை செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தடையே ஏற்படாமல் இருப்பதற்குப் பாடுபடுவோம். நாம் வேண்டுமென்றே சில மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்வதற்கு தடையை உருவாக்க வேண்டும் என்றால், முன் அறிவிப்பு முறையாகத் தருவோம்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மின்சாரத் தடையை நீக்குவதற்கும், பழுது பார்ப்பதற்கும் அங்கே இருக்கிற அதிகாரிகளை விசாரித்தால் கேபிள்கள் இல்லை, சரிவர சப்ளை செய்வதில்லை என்று சொல்லுகிறார்கள். இது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அது குறித்துத் தகவல் இல்லை.





## வேதாரண்யம் பகுதியில் துணை மின்நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 144—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேதாரண்யம் பகுதியில் மின்சக்தி பற்றாக் குறையை போக்க துணை மின் நிலையம் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எங்கு அமைக்கப்படும்? எப்பொழுது முதல் செயல்பட ஆரம்பிக்கும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) வாய்மேடு என்னுமிடத்தில் அமைக்கப்படும். 1981–82-ம் ஆண்டுக்குள் செயல்படுத்த மின்வாரியம் உத்தேசித்துள்ளது.

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவர் அவர்களே, அங்கே இருக்கின்ற மின் பற்றாக்குறையைப் பற்றி அமைச்சர் அவர்கள் நேரடியாகப் பார்த்திருக்கிறார்கள். எனவே அந்தப் பணியை விரைவிலே முடிப்பதற்கு அமைச்சர் உத்தரவிட்டிருப்பதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போதும் அந்தப் பகுதியிலே மின் வெட்டிருப்பதாக புகார் வந்திருக்கிறது. அதை நீக்குவதற்கு அமைச்சர் உத்தரவிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, வேதாரண்யம் பகுதியில் போதுமான அளவுக்கு அழுத்தம் மின் சக்திக்கு சரியான அளவில் கிடைப்பதில்லை என்பதை நான் நேரிலேயே அறிவேன். அதனால்தான் 25 லட்சம் ரூபாய் செலவில் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு அது 1981–82-ம் ஆண்டில் முடிந்துவிடும். அதற்குப் பிறகு இந்தக் குறைகள் வெகுவாகத் தீரும்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே அந்தத் துணை மின் நிலையம் அமைக்கும் இடம் அறநிலையத்திற்குச் சொந்தமானது என்று சொல்லப்படுவதால், அதற்கான

அனுமதியை அறநிலையத் துறையிடமிருந்து பெறுவதற்கான குறிப்புகள் அரசுக்கு வந்து இருப்பதாகத் தெரிகிறது. அதை விரைவுபடுத்தி, அந்த இடத்தில் விரைவில் மின் நிலையம் அமைக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அது கவனிக்கப்படும்.

## சங்கு வளையல் தயாரிப்பு.

*வினா எண் 145.—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சங்கு வளையல் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றைத் துவங்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இல்லை. ஆனால் இராமநாதபுரம் மாவட்டத்தில் சங்கினால் பொருட்கள் தயாரிப்பதற்கு ஒரு பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையம் தொடங்க ஒரு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.

*திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் எடுக்கும் அந்தச் சங்கை கல்கத்தாவிற்குக் குறைந்த விலையில் அனுப்பப்படுகிறது. அங்கே அதை பல பொருள்களாக தயாரித்து விற்பனை செய்கிறார்கள். ஆகவே, இங்கே எடுக்கப்படும் சங்கை வைத்து நம்முடைய தமிழ் நாட்டிலேயே பல பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவுவதன் மூலம், பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்கும் நல்ல வேலை வாய்ப்பு அளிக்க முடியும் என்பதால், தமிழ் நாட்டில் அத்தகைய ஒரு தொழிற்சாலையை நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, தொழிற்சாலை அமைக்கு அளவிற்கு எந்த விதமான செயற்குறிப்பும் தமிழக அரசிடம் இல்லை. ஆனால் ஒரு பயிற்சி நிலையம் உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறோம். அதற்கான பயிற்சியாளர்களைப் பெறுவதற்காக மேற்கு வங்க அரசிற்கு இது பற்றி ஏற்கனவே கடிதம் எழுதியுள்ளோம்.





திரு. த. வேணுகோபால்: தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் பயிற்சி நிலையம் அமைக்கப் போவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் சங்கு எடுக்கும் இடம் பெருவாரியாக தூத்துக்குடி பகுதியில்தான் இருக்கிறது. ஆகவே, தூத்துக்குடியில் அந்தப் பயிற்சி நிலையத்தை அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் ஆலோசனை மேலும் பரிசீலிக்கப்படும்.

திரு. உ. சுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, சங்கு குளிப்பது, தூத்துக்குடி, இராமேஸ்வரம் போன்ற பகுதிகளில்தான் நடைபெறுகிறது. அங்கே தனியார் சங்கு குளிப்பதற்கும், சங்கு மூலம் பல பொருள்கள் உற்பத்தி செய்வதற்கும் தடையேதும் விதிக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாருக்கும் அங்கே தடை விதிக்கப்படவில்லை. ஆனால் அந்தச் சங்கு சம்பந்தப்பட்ட பொருள்கள் செய்யும் பயிற்சி நிலையம் இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைப்பதற்காக பயிற்சியாளர்கள் அனுப்ப வேண்டும் என்று கோரி, மேற்குவங்க அரசோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு இருக்கிறோம். நம்முடைய தமிழகத்தில் உள்ளவர்களுக்குப் பயிற்சி கொடுத்தபிறகு, அந்தத் தொழிற்சாலையைத் தொடங்குவது குறித்து அரசு முடிவு செய்ய இருக்கிறது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் கிடைக்கிற சங்கை எடுத்துக் கொண்டு மேற்கு வங்கத்திற்குச் சென்று, அங்கே பல பொருள்களைத் தயாரித்து இங்கே அதிக விலைக்குக் கொண்டு வந்து விற்கிற காரணத்தால், நம்முடைய தமிழகத்திலேயே அத்தகைய ஒரு தொழிற்சாலையை அடுத்த ஆண்டாவது அமைக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னதுபோல், சென்ற இரண்டு மாதங்களுக்கு முன்பு குறிப்பாக 9-6-1980, அன்று மேற்கு வங்க அரசுக்கு நாங்கள் தெளிவாகக் கடிதம் எழுதியிருக்கிறோம். விரைவாக அந்த பயிற்சி நிலையத்தை அமைக்க அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

[1980 ஆகஸ்ட் 1]

## டான்சி மரமறுக்கும் ஆலை, நாகர்கோவில்.

*வினா எண். 146.—திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) குமரி மாவட்டம் நாகர்கோவில் செயல்பட்டு வந்த TANSI Carpentry and Blacksmithy unit தற்பொழுது மூடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது மீண்டும் திறக்கப்படுமா?

(இ) இதனால் பாதிக்கப்படுள்ள தொழிலாளர்கள் எவ்வளவு ?

(ஈ) இவர்களுக்கு அளிக்கப்படட நிவாரணம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) நாகர்கோவிலில் செயல்பட்டு வந்த டான்சி மரமறுக்கும் ஆலை (TANSI Saw Mill) 1972-ஆம் ஆண்டு மூடப்பட்டது.

(ஆ) இல்லை.

(இ) 46 பேர்.

(ஈ) தொழிலாளர் நல சட்டங்களின்கீழ் கொடுக்கப்பட வேண்டிய வேலை இழப்பு ஈட்டுத்தொகை, அறிக்கைக்கான ஒரு மாத ஊதியம் மற்றும் கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பிற்கான ஊதியம் முதலியன அவர்களுக்குத் தரப்பட்டன.

திரு. சு. முத்துகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவிலில் செயல்பட்டு வந்த மரம் அறுக்கும் தொழிற்சாலை 1972-ம் ஆண்டிலே மூடப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை மீண்டும் திறப்பதற்கான திட்டம் அரசிடம் இல்லை என்றும் குறிப்பிட்டார்கள். ஆகவே, மறுபடியும் அந்த ஆலையைத் திறக்க அரசுக்கு இனிமேலாவது உத்தேசம் உண்டா, அதற்கான அக்கறையை எடுத்துக்கொள்ளுமா என்று கேட்டுக்கொள்வதோடு, அங்கே டான்சி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் இருந்ததையும் மூடியிருக்கிறார்கள், நாகர்கோவிலில் மட்டும் ஏன் இப்படி அடிக்கடி அந்தத் தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன என்பதற்கான விளக்கத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?



1980 ஆகஸ்ட் 11]

[முற்பகல் 9-10]

மாண்புமிகு திரு. கே. ஏ. : கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இரண்டாவது பகுதிக்கு விவரம் தற்போது என்னிடம் இல்லை. ஆனால் இந்த முதல் கேள்விக்சம்பந்தப்பட்டவரையில் அங்கே இருந்த மரம் அறுக்கும் ஆலை பற்றிச் சொன்னார்கள். மீண்டும் நாகர்கோவிலில் அந்த ஆலை திறக்கப்படுமா என்று கேட்கிறார்கள். அந்த ஆலையின் முழு திறனையும் பயன் படுத்துவதற்கு மிகவும் கடினமாக இருந்ததால்தான் அந்த ஆலை மூடப்பட்டது. ஆனால் இன்றைதினம் நாகர்கோவிலில் மரம் அறுக்கும் ஆலையை மீண்டும் திறக்க முடியவில்லை என்றாலும் இன்றைக்கு கோவை மாவட்டத்தில் பொள்ளாச் சியில் ஒரு மரம் அறுக்கும் தொழிற்சாலை இயங்கி வருகிறது. அதனுடைய பணி இப்போது சரியாக நடைபெறுகிறது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, ‘ டான்சி ’ தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அரசினுடைய தலைமையிலுள்ள ஒரு பெரிய ஸ்தாபனம். அரசே புதிய புதிய தொழிற்சாலை களை உண்டாக்கி வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும் முயற் சியில் ஈடுபட்டிருப்பதால் அந்த மரம் அறுக்கும் தொழிற் சாலை ஏன் மூடப்பட்டது? அதற்கு மூலப்பொருள் இறக்கு மதி செய்ய வேண்டியதில்லை. இலாபம் இல்லாததால் மூடப்பட்டதாகச் சொல்கிறார்கள். அதிலே வேலை செய்த தொழிலாளர்களின் கணக்கை முடித்து அனுப்பிவிட்டால் அவர்கள் நடுத்தெருவில்தான் நிற்பார்கள். ஆகவே, டான்சி நடத்துகின்ற வேறு யூனிட்டுகளில் அவர்களை நியமித்து, அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கப்படுமா? மரங்களை மற்ற பகுதிகளிலிருந்து வரவழைத்து நாகர்கோவிலில் மீண்டும் மரம் அறுக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, 8 ஆண்டுகளுக்கு முன்பே மூடப்பட்ட ஆலைப் பிரச்சனை இது என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன விவரங்களை அரசு பரிசீலனை செய்து உகந்த அளவு பிரச்சனைகளைத் தீர்க்க பரிகாரம் தேடும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, பொதுவாக அரசு நடத்துகிற ‘ கார்பென்டரி, பிளாக்ஸ்மித்தி ’ யூனிட்டு களில் அரசு நடத்துகிற கார்பென்டரி யூனிட்டில் தயாரிக்கும் உபபொருட்கள் தனியார்கள் தயாரிக்கும் உப பொருட்களை விட மலிவாக இருக்கிறது. ஆனால் பிளாக்ஸ்மித்தி யூனிட்டில் தயாரிக்கும் உப பொருட்கள் தனியார்கள் தயாரிக்கும் உப பொருட்களை விட விலை அதிகமாக இருக்கிறது. அதனால்

தனியார்களுடன் போட்டி போட்டு நடத்த முடியாமல்
நஷ்டம் ஏற்படுகிறது; அதனால் மூடவேண்டிய சூழ்நிலை
ஏற்படுகிறது. தனியார்கள் தயாரிக்கும் உப பொருட்களைவிட
குறைந்த விலைக்கு விற்றால் நல்ல இலாபம் வரும், தொழி
லாளர்களுக்கு நிரந்தரமாக வேலைவாய்ப்பளிக்கலாம்.
ஆகவே, தனியார்கள் தயாரிக்கும் உப பொருட்களை விட
குறைந்த விலைக்கு விற்பனை செய்வதற்கு ஏற்ற நடவடிக்கை
களை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்
களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் டான்சி நடத்தும்
கார்பென்டரி யூனிட் ஒன்றில் தான் குறைந்த விலைக்கு
பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன; ஆனால்
பிளாக்ஸ்மிதி யூனிட்டில் தயாரிக்கும் பொருட்களைவிட
தனியார் நிறுவனங்களில் தயாரிக்கும் பொருட்கள் விலை
குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். அது சீர்
செய்யப்படுமா என்று கேட்டார்கள். எங்கே அப்படி
விற்கப்படுகிறது என்று தனியாக விவரம் கொடுத்தால் அதற்கு
உகந்த நடவடிக்கைகயை அரசு எடுக்கும்.

நெல்லை மாவட்டம் கடம்பூரில் தொழிற் பேட்டை அமைத்தல்

*வினா எண் 147—திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு
ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா :

(அ) நெல்லை மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதி
யாக உள்ள கடம்பூரில் அரசாங்க தொழிற் பேட்டை ஒன்று
அமைப்பதற்குரிய செயற் குறிப்புகள் ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. மு. அப்பாதுரை : தலைவரவர்களே, திருநெல்வேலி
மாவட்டத்தில் மிகவும் பின் தங்கிய பகுதியாக இருப்பது ஓட்டப்
பிடாரம். கடம்பூரில் இரயில் போக்குவரத்து, சாலை போக்கு
வரத்து அதிகமாகவும் வசதியாகவும் இருப்பதால் தொழில்
பேட்டை அமைப்பதற்கு அரசு இனிமேலாவது முன் வருமா?



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு
தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம் கடம்பூரில் இது
வரை அந்த தொழில் பேட்டை கட்டுவதற்கு எந்தவிதமான
விண்ணப்பங்களும் அரசுக்கு வரவில்லை. தொழில் தொடங்கும்
இளைஞர்கள் யாராவது முன்வந்தால் கடம்பூரில் தொழிற்
கூடங்கள் கட்ட தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு
எடுக்கும்.

திரு. மு. அப்பாதுரை : தலைவரவர்களே, ஏற்கனவே
கடம்பூருக்குப் பக்கத்தில் கயத்தாறில் அத்தகைய முயற்சி
மேற்கொள்ளப்பட்டு, தளவாடங்கள் அமைக்கப்பட்டிருக்
கின்றன. அங்கே தொழிற் பேட்டை அமைப்பதற்கு குறிப்பு
இருப்பதாகச் சொல்லப்படுகிறது. கடம்பூரில் தொழில்
தொடங்க முன் வந்தால் வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதாகச்
சொன்னார்கள். அதை வரவேற்கிறேன். இப்படிப்பட்ட எண்
ணங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பதில் இல்லை).

திரு. மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே,
நெல்லை மாவட்டத்தில் இருக்கின்ற நாங்குனேரித் தொகுதி
மிகவும் பின் தங்கிய தொகுதியாகும். ஆகவே அங்கேயும்
இது போன்ற தொழிற் பேட்டைகள் அமைக்க அரசுக்கு உத்தேசம்
உண்டா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பற்றிய விவரம்
அமைச்சரவர்களிடம் இருக்காது. அடுத்த வினா எண். 148.

திருவாவடுதுறை ஆதீனத்தின் பொறுப்பிலுள்ள சொத்துக்கள்

வினா எண். 148—திரு. ரா. உமாநாத், திரு. ஆ. கலை
யரசன் : மாண்புமிகு செய்தி-அறநிலை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தஞ்சை மாவட்டம் திருவாவடுதுறை ஆதீனத்தின்
பொறுப்பில் உள்ள கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புடைய
சொத்துக்களில் ஊழல் நடந்திருப்பது குறித்தும் ஆதீனத்தின்
கட்டுப்பாட்டில் உள்ள மற்ற கோயில் அறக்கட்டளைகளிலும்
ஊழல்கள் நடத்தப்படுவதாகவும் புகார்கள் அரசுக்கு வந்திருக்
கின்றனவா ?

(ஆ) திருவாவடுதுறை ஆதீனம், எந்த தகுதியும் இல்லாத
ஒருவரை வாரிசாக நியமித்துள்ளது உண்மையா?

[திரு. ர. உமாநாத், திரு. ஆ. கலையரசன்] [1980 ஆகஸ்ட் 11

(இ) ஆம் எனில், அவற்றின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) ஆம்.

(ஆ) சுப்ரமணியத் தம்பிரான் என்பவரைத் தமது வாரிசாக நியமனம் செய்துள்ளதாக, திருவாவடுதுறை ஆதீனகர்த்தரிடமிருந்து, ஆகஸ்ட் திங்கள் 7 ஆம் நாள் அரசுக்கு ஒரு தந்தி வந்துள்ளது. இப்படி வாரிசாக நியமிக்கப்பட்டவர் கல்வித் திறனோ மற்றும் எந்தத் தகுதியோ இல்லாதவர் என்ற புகாரும் வந்துள்ளது. இதனை ஒட்டி, ஆதீனகர்த்தரிடம் விளக்கம் கேட்டு, ஆணையரால் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

(இ) இந்த ஊழல்களையும் புகார்களையும் தீர விசாரித்து உண்மைகளைக் கண்டறிய 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்ட விதிகளின் கீழ் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் வாரிசு நியமித்துள்ளது குறித்து விளக்கம் கேட்டு ஆதீனகர்த்தருக்கு அற நிலையத் துறை ஆணையர் நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இந்த ஆதீனத்தின் பொறுப்பில் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் இருக்கின்றன. அவற்றைப் பற்றி ஏராளமாக புகார்கள் வந்துள்ளதாக அரசாங்கம் ஒத்துக் கொள்கின்றது. அங்கே ராமையா பிள்ளை என்ற சமையல்காரர்தான் அந்த சொத்துக்களைப் பராமரித்து வருவதாகவும் அவர்தான் அந்தப் பொறுப்புகளில் ஆதிக்கம் செலுத்துவதாகவும் அறிகிறேன். அந்த சமையல்காரருடைய அ·.பிஸியல் ரெம்யூனரேஷன் எவ்வளவு அவருடைய சொத்து எவ்வளவு / அவருடைய சொத்துக்கும் ஊதியத்திற்கும் பொருத்தம் இருக்கின்றதா என்பது குறித்து விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு நடத்திய விசாரணையிலிருந்தும் பொது மக்களிடத்தில் இருந்து வந்திருக்கின்ற புகார்களிலிருந்தும் கிடைத்த சில விபரங்கள் அரசினிடத்தில் இருக்கின்றன. ராமையா பிள்ளை என்பவர் திருவாவடுதுறை ஆதீனத்தின் தவசுப் பிள்ளையாக இருக்கின்றார். அவருக்கு மாதச் சம்பளமாக ரூபாய் 50-ம் 5 கலம் நெல்லும் தரப்படுகின்றது. இந்தத் தவசுப் பிள்ளையினுடைய குடும்பத்திற்கு ஆதீனத்தைச் சேர்ந்த சுமார் 15 ஏக்கர் நிலம் குத்தகைக்கு



1980 ஆகஸ்ட் 11]

விடப் பட்டிருப்பதாகத் தெரிகின்றது. விசாரணையிலிருந்து அவருக்கு திருவாவடுதுறையில் சுமார் 75ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள ஒரு வீடும் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமானம் உள்ள ஒரு ரைஸ் மில்லும் திருவிடைமருதூரில் சுமார் 50 ஆயிரம் மதிப்புள்ள ஒரு வீடும் இருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கின்றது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, சமீபத்தில் வந்துள்ள ஒரு செய்தியைப் பத்திரிக்கையில் பார்த்தேன். அதில் திருவாவடுதுறை ஆதீனம் குடும்பத்தோடு குற்றாலம் சென்றதாகவும் அங்கு குளித்து விட்டு கோயிலுக்குச் சென்றதாகவும் பிறகு சங்கரன் கோயில் வந்து அங்கு சாமி கும்பிடும் போது கீழே விழுந்து மயங்கி விட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. நான் கேள்விப்பட்ட வரைக்கும் ஆதீனங்களுக்கு குடும்பம் இல்லை என்பதுதான். ஆனால் அவர் குடும்பத்தோடு சென்றதாகச் செய்தி வந்திருக்கின்றதே, இது உண்மைதானா ? அவருக்கு குடும்பம் இருக்கின்றதா என்ற விவரத்தை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே குடும்பத்தைப் பற்றிய விவரம் அரசினிடத்திலே இல்லை. ஆனால் சமீபத்திலே அவர் திருக்குற்றாலத்திற்குச் சென்றதாகவும் அவரோடு சில குடும்பத்தைச் சேர்ந்தவர்களும்—அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களோ, அல்லது மற்ற குடும்பத்தைச் சேர்ந்தவர்களோ தெரியாது—சென்றதாகவும் அவர்களிலே, பெண்கள், பிள்ளைகள் எல்லாம் உடன் சென்றதாகவும் அங்கு குற்றாலத்தினுடைய சீசன் ஒத்துக் கொள்ளாத காரணத்தால் அவர்கள் திரும்பி வருகின்ற போது அந்த குடும்பத்தைச் சேர்ந்த சில பிள்ளைகளுக்கு முடி இறக்கிவிட்டு சங்கரன் கோயில் ஆலயத்தில் பிரகாரம் வரும்போது அவர் மயங்கி விழுந்து விட்டதாகவும் உடனடியாக ஆலயத்திற்குள்ளே காரைக் கொண்டு போய் அவரை ஏற்றிக் கொண்டு தஞ்சாவூரிலே இருக்கின்ற மருத்துவமனையிலே சேர்த்ததாகவும் தெரிவிக்கப்பட்ட புகார்களிலே இதுவும் ஒரு புகார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. நன்னிலம் ஆ. கலையரசன்: தலைவரவர்களே, திருவாவடுதுறை ஆதீனத்தினுடைய முறைகேடான செயலைப் பற்றி அரசுக்கு வந்திருக்கக்கூடிய தகவலை அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட தவறான நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து அந்த திருவாவடுதுறை ஆதீனத்தினர் தொடர்ந்து நடத்தாமல் இருப்பதற்கும் அதைப் போல தர்மபுரம் மற்ற ஆதீனங்களும் நடத்தாமல் இருப்பதற்கும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1980 ஆகஸ்ட் 1.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, திருவாவடுதுறை ஆதினத்தைப்
பற்றிய கேள்வி ஆதலினால் அதைப்பற்றிய தகவல்கள் தான்
வந்திருக்கின்றன. திருவாவடுதுறை ஆதினத்தைப் பற்றி
வந்திருந்த புகார்களை ஒட்டி, சென்ற ஆண்டு அறநிலையத்துறை
அங்கே விசேஷ தணிக்கை அதிகாரியை அனுப்பி கணக்குகளை
தணிக்கை செய்திருக்கிறது.

அதில் கடந்த பல ஆண்டுகளாக கணக்குகள் தணிக்கைக்கு
உட்படுத்தப்படாமல் இருந்த தகவலும் தெரிந்தது. பல முறை
கேடுகள் அல்லது, முறையாக அறநிலையத் துறை ஆணையரிடம்
அனுமதி பெறாமல் செய்திருக்கிற வரவு செலவுகள், எல்லாம்
தனித் தனியாக ஆய்வு நடத்தினார்கள். அதிலே குறிப்பாக,
அந்த விசேஷ தணிக்கையின்படி சில ஆண்டுகளுக்கு மொத்தம்
சுமார் 81,80,748 ரூபாய் அளவிற்கு பல்வேறு இனங்களிலே
ஆயிரத்திற்கும் அதிகமான இனங்களில் முறையாக செலவு செய்
யப்பெறவில்லை அல்லது கணக்குகள் சரியாக வைக்கப் பெற
வில்லை, அல்லது ஆணையரின் அனுமதியை முறையாகப்பெற
வில்லை, மடத்திற்கு இழப்பு ஏற்படுகிற வகையில் நிலங்கள்
பிறருக்கு பராதீனம் செய்யப் பெற்றிருக்கிறது. போன்ற விவரங்
களை விசேஷ தணிக்கை அதிகாரி, அறநிலையத்துறைக்கு
அனுப்பியுள்ளார். அதைத் தொடர்ந்து ஆணையர் அவர்கள்,
அந்த ஆதீன கர்த்தருக்கு விளக்கம் கேட்டு மேல் நடவடிக்கை
ஏன் எடுக்கக்கூடாது என்று நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார்கள்.
என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர்
அவர்களே, எந்தத் தகுதியும் இல்லாத ஒருவர் திருவாவடுதுறை
ஆதீனத்தின் வாரிசாக நியமிக்கப் பெற்றதாகச் சொல்லப்படு
கிறது. ஆதீனகர்த்தா ஆவதற்கு என்னென்ன தகுதிகள் வேண்
டும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்பதையும்,
அறிவிக்க வேண்டும் என்றும் கேடடுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, ஆதீனகர்த்தா ஆவதற்கு தகுதிகள்
எதுவும் குறிப்பாக வரையறுக்கப்படவில்லை. நிர்ணயம் செய்யப்
பெறவில்லை எனினும், அவர்கள் கற்றறிந்தவர்களாக இருக்க
வேண்டும். உயர்ந்த பண்புகளை ஒழுகுபவராக இருக்க வேண்டும்.
சந்நியாசியாகவும், துறவறம் மேற் கொண்டவர்களாகவும்
இருக்க வேண்டும். இல்லறத்திலே இருந்தாலும் துறந்துவிட்டு,
சமுதாயத்திற்கு பணியாற்றுபவராக அவர்கள் தங்களை மாற்றிக்
கொள்ள வேண்டும் என்று அற விதிகள் அங்கே இருப்பதாகத்



1980 ஆகஸ்ட் 11]

தெரிகிறது. அந்த மடங்களின் கட்டளைப்படி துறவியாக
இருந்து மக்களுக்குப் பணியாற்ற வேண்டும் என்கிற விதியும்
இருக்கிறது.

இதுதான் கடைபிடித்து வருகிற முறை என்றாலும், இந்தப்
புதிய வாரிசாக நியமிக்கப்பட்டிருக்கிறவர் 1979ஆம் ஆண்டிலே
தான் இங்கே வந்து சேர்ந்தார் என்று தெரிகிறது. அதற்கு
முன்னாலே நெல்லை மாவட்டத்தில் ஒரு ஆலையிலே ஸ்டோர்
கீப்பர் பதவி வகித்து வந்ததாகத் தெரிகிறது. 1979
அக்டோபரிலே இந்த மடத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.
அதற்குப் பிறகு நடப்பு ஆண்டு ஜனவரி திங்களில் அவருக்கு
காஷாயம் கொடுக்கப்பட்டு, உடனடியாக இந்த மாதம் 6ஆம்
தேதியன்றைக்கு இளவரசுப் பட்டம் சூட்டப்பட்டிருக்கிறார்
என்று தகவல் வந்திருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, திருவாவடுதுறை ஆதினத்தைப் பற்றிய செய்திகளை
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள்.
மடத்திலே வாரிசாக நியமிக்கப்பட்ட நபரைப்பற்றிய விவரங்
களையும் இங்கே தெரிவித்தார்கள். (கூச்சல், குழப்பம்)***

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அம்பிகாபதி அவர்
கள்*** குறிப்பிட்ட வசனங்களை நீக்கிவிடும்படி உத்தரவு இடு
கிறேன். திருவாவடுதுறை, திருப்பனந்தாள் என்று சொல்லும்
போது மன்னார்குடியும் வருமென்று எதிர்பார்த்தேன் திருவாவடு
துறையோடு நிறுத்திக்கொள்ள வேண்டும். அதைப்பற்றிமட்டும்
ஏதாவது அபிப்பிராயம் இருந்தால் கேளுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, திருவாவடுதுறை ஆதீன வாரிசு நியமிப்பதைப்
பற்றியது இந்தக் கேள்வி. இந்த வாரிசு நியமித்ததிலே ஊழலுக்கு
ஊற்றாக விளங்குவதாக அமைச்சர் அவர்கள் சொல்வதால்,
இந்தப் பண்டார சந்நதியின் நிர்வாகத்தை அரசே மேற்கொள்
ளும் செயற் குறிப்பு ஏதாவது உண்டா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, இந்த மடத்திற்கு ஆதீனகர்த்தர்
நியமிப்பதைப் பற்றி 1936 ஆம் ஆண்டு உயர்நீதி மன்றம் அளித்த
தீர்ப்பின் அடிப்படையிலே இந்த நிர்வாகம் நடைபெற்று வரு
கிறது. இந்து அறநிலையை சமயக் கட்டளையின் விதியின் கீழ்
இப்போது நோட்டீஸ்கள் அறிவிக்கப்பட்டு, கணக்குகள் ஆய்வு
செய்யப்பட்டு வருவதையொட்டி, மேல் நடவடிக்கை எடுக்கப்

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

பட்டு வருவதை யொட்டி, மாண்புமிகு உறுப்பினர் அவர்களு
டைய கருத்தும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்ப
தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே,
திருவாவடுதுறை ஆதீனத்திற்கு இந்த வாரிசு எப்போது, எங்கி
இருந்து வந்தார்? எந்த ஊரைச் சேர்ந்தவர்? எந்த மடத்தைச்
சேர்ந்தவர்? ஆதீனகர்த்தராக நியமிப்பதற்கு என்ன என்ன
தகுதி? முறைப்படி நியமிக்கப்பட்டாரா? இந்த ஆதீனத்தில்
முறைகேடுகள் என்னென்ன விதத்தில் நடந்துள்ளன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட வாரிசு நியமித்தது
சம்பந்தமாக அரசுக்குத் தகவல் கிடைத்தவுடன். அதுபற்றிய
புகார்கள் முன்னரே அரசுக்கும், அறநிலையத் துறைக்கும் வந்துள்
ளதை யொட்டி, உடனடியாக ஒரு துணை ஆணையர் சென்று
விசாரித்திருக்கிறார்கள். ஆனால், ஆதீனகர்த்தர் அவர்கள்
வாரிசுகளை நியமிக்க தனக்கு உரிமை உள்ளது என்றும், அதிலே
யாரும் தலையிட முடியாது என்றும் பதில் அளித்திருக்கிறார்கள்.
ஆனால், அது சட்ட விதிகளுக்கு உட்பட்டதா என்பதைப்பற்றி
அறநிலையத் துறை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதற்
காகத்தான் ஆணையர் அதிகாரத்திற்குள் நோட்டீஸ் அனுப்பப்
பட்டிருக்கிறது.

*திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே,
இந்த திருவாவடுதுறை ஆதீனத்தில் அதிசய சமையற்காரர்
அற்புதமான விதத்தில் அனுபவித்துக் கொண்டு வருவதாகச்
சொல்லப்படுகின்ற இந்தக் குற்றச்சாட்டின் முழு விவரம் என்ன?
இந்தகுற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கு ஒரு ஹைபவர்
அதிகாரி நியமிக்கப்படுவாரா? அரசு இருக்கிறது, ஆணையர்
இருக்கிறார், நிர்வாகம் இருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட
ஒரு மடாதிபதி போஸ்டை அனுமதிக்க வேண்டுமா என்பதை
நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை இருக்கிறது;
அமைச்சர்கள் இருக்கிறார்கள்; அரசும் இருக்கிறது. இவைகளை—
தாண்டித்தான் இந்த ஆதீனகர்த்தர்கள் இருந்து கொண்
டிருக்கிறார்கள். ஏறத்தாழ 33 இலட்சம் ஏக்கர் நிலங்களைச்
சொத்தாகவும், ஆண்டு ஒன்றுக்கு 36½ இலட்சம் ரூபாய்
இன்றைய கணக்குப்படி வருமானத்தைக் கொண்டிருக்கிற இந்த
ஆதீனத்திற்கு உட்பட்ட கோயில்களுக்கு அறநிலையத் துறை
யின் சார்பிலே ஒரு நிர்வாக அலுவலர் நியமிக்க வேண்டுமென்ற
முயற்சியைக்கூட, அவர்கள் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று
முறையிட்டு, ஒரு '' ஸ்டே '' உத்தரவு மூலம் நிறுத்தி வைத்திருக்





கிறார்கள். ஆகவே, இத்தகைய நிர்வாகங்களைப் பற்றி இன்
றைக்கு மக்களுடைய நலனில் அக்கறை கொண்டுள்ள அரசு
ஏனோ தானோ என்று இருக்க முடியாது; இருக்காது என்பதை
யும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்தில் இந்த
விசாரணையை கடந்த ஆண்டில் தொடங்கி விட்டோம். இன்
றைக்கு ஆணையர் அவர்கள் அதிகாரத்தைக் கொண்டே ஆணை
யர் அவர்கள் நேரடியாக தனக்குக் கீழே ஒரு ஸ்பெஷல் டிபுடி
கமிஷனர் நியமிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதைப்
பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அப்படி ஒரு
நிர்வாக அதிகாரியை அவருக்குத் துணையாக அமைத்து, இந்த
மடத்து நிர்வாகத்திலே சீர்கேடுகள் இருக்குமானால், புகார்
களிலே கூறப்பட்டுள்ள குறைபாடுகள் இருக்குமானால், தகுந்த
நடவடிக்கைகளை அரசு விரைவிலே மேற்கொள்ளும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9—30)

திரு. உ. சுப்பிரமணியன் : இந்து மதம் சம்பந்தப்பட்ட
கோயில்கள் ஆதீனங்கள் போன்றவற்றின் கணக்குகளில்
ஊழல்களைக் களைய முற்படுவது போல் இதர மத ஸ்தாபனங்
களில் நடைபெறுகிற தவறுகள், ஊழல்களைக் களைய இந்த
அரசு நடவடிக்கை எடுக்குமா? எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இங்கே இப்போது
வந்திருக்கிற கேள்வி திருவாவடுதுறை ஆதீனத்தைப் பற்றியது.
பல ஆதீனங்கள் இருக்கின்றன. அவைகளைப் பற்றி இங்கே
குறைபாடுகள், குற்றச்சாட்டுகள் என்ற அளவுக்கு வரலாம்.
திருவாவடுதுறை ஆதீனத்தைப் பற்றி இப்போது குற்றச்சாட்டுகள்
வந்திருக்கின்றன. எந்த மதம் என்பது பற்றி அல்ல, எந்த
மதமானாலும் மதத் தலைவர்கள், ஆதினகர்த்தர்கள் ஒழுக்கம்
உடையவர்களாக, மக்கள் நம்பிவிட்டுச் சென்றிருக்கிற அறக்
கட்டளைகள், சொத்துக்களை ஒழுங்காகப் பாதுகாப்பவர்களாக
இருக்க வேண்டுமென்பதுதான் அரசின் லட்சியம். அதையொட்டி
கேள்விகள் எழுந்து பதில்கள் தரப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 149
தள்ளி வைக்கப்படுகிறது.

## கறவை மாடுகள் வாங்கக் கூட்டுறவுக் கடன்கள்

வினா எண் 150—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு
கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா :—

* 164 ம் பக்கத்திலுள்ள திருத்த அறிக்கையை காண்க

(அ) கூட்டுறவு விவசாய சங்கங்கள் மூலம் கறவை மாடுகள் வாங்கக் கடன் கோரும்போது, புதிய உறுப்பினர்களுக்கு கடன் வழங்கவேண்டாம் என கூட்டுறவு மத்திய வங்கிகளுக்குத் தாக்கீது ஏதேனும் அனுப்பப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்த நடைமுறையை வாபஸ்பெறும் திட்டம் ஏதேனும் துறையில் உள்ளதா ?

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u>

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

<u>திரு. த. வேணுகோபால் :</u> மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லையென்று பதிலளித்தார்கள். பொதுவாக எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களிலும் புதிய அங்கத்தினர்களுக்குக் கடன் வழங்குவதில்லை என்றுதான் கூறுகிறார்களே தவிர கொடுப்பதில்லை. அரசு இனியாவது புதிய அங்கத்தினர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்பதற்கு நடவடிக்கை எடுக்குமா ?

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> அப்படிப்பட்ட நிகழ்ச்சி இல்லையென்று ஏற்கனவே பதில் அளித்திருக்கிறேன். ஏதேனும் அப்படி நடைபெற்றிருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

<u>திரு. எஸ். சிவராமன் :</u> கறவை மாடுகள் வாங்க கூட்டுறவு சங்கங்களில் கடன் கேட்டால் எங்கள் பகுதியில் கள்ளக்குறிச்சி சின்னசேலம் பஞ்சாயத்துப் பகுதியில் இல்லையென்று சொல்லுகிறார்கள். அங்கே கடன் வழங்குவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று வேண்டுகோளாகக் கேட்டுக்கொள்கிறேன்.

(பதில் இல்லை)

<u>திரு. ஏ. சி. சண்முகம் :</u> கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கறவை மாடுகளுக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா ?

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> சொந்தப் பொறுப்பில் சாதாரணமாக ஆயிரம் ரூபாயும் நில அடமானத்தின் பேரில் பத்தாயிரம் ரூபாயும் தரப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், வறட்சிப்பகுதித் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்களின் அடிப்படையில் நாலாயிரம் ரூபாய் வரை கறவை மாடு வாங்கப் பணம் தரப்படுகிறது.



<u>திரு. பொ. உத்திராபதி :</u> கூட்டுறவு விவசாயச் சங்கங்கள் மூலம் கறவை மாடு வாங்க பணம் கொடுப்பது நல்ல திட்டம். அதை வரவேற்பதோடு மாடு வாங்க எந்தப் பகுதியில் பணம் கொடுக்கிறோமோ அந்தப் பகுதியிலேயே மாடு வாங்கும் முறையில் வழிவகை செய்யப்படுமா ? ஆந்திராவுக்கு மாடு வாங்கச் செல்வதால் பாதிப் பணம் அதிலேயே போய்விடுகிறது. ஆகவே, அந்தந்தப் பகுதிகளிலேயே மாடு வாங்க வழி செய்யப்படுமா ?

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> உயர்ரக மாடுகள் அந்தந்தப் பகுதிகளில் கிடைக்குமா என்பது ஐயப்பாடு. இது பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களோடு கலந்து நடவடிக்கை எடுக்க முயற்சிக்கிறேன்.

<u>திரு. கா. கோபாலகிருஷ்ணன் :</u> மாடுகளுக்குக் கடன் வழங்கப்படும்போது ஒவ்வொரு திட்டத்தின் கீழும் எவ்வளவு மானியம் வழங்கப்படுகிறது

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> குறுநில விவசாயிகளுக்கு மூன்றில் ஒரு பகுதி மானியமாகவும் சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதம் மானியமாகவும் வழங்கப்படுகிறது.

* <u>திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :</u> அமைச்சர் அவர்கள் குறுநில விவசாயிகளுக்கு மூன்றில் ஒரு பகுதியும் சிறு விவசாயிகளுக்கு நான்கில் ஒரு பகுதியும் மானியமாகத் தரப்படுகிறது என்று சொன்னதைப் பாராட்டுகிறேன். சிறு விவசாயிகளுக்கு அந்தப் பணம் ஒழுங்காகக் கிடைக்க கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கொடுக்கப்படும் இம் மானியம் விவசாயிகளுக்கு ஒழுங்காகக் கிட்டவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் கொடுக்கப்படுகின்றன. அவ்வாறு கிட்டாமல் எங்கே குறைபாடுகள் ஏற்படுகின்றன என்பதை உறுப்பினர் சுட்டிக்காட்டினால் கண்டிப்பாக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

[1980 ஆகஸ்ட் 11

## கொடுவிலான்பட்டி—கோவிந்த நகரம் நெடுஞ் சாலையினைச் செப்பனிடல்

*வினா எண். 151—திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி வட்டத்திலுள்ள கொடுவிலான்பட்டி—கோவிந்த நகரம் நெடுஞ்சாலை மிகவும் மோசமான நிலையில் உள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில். இதனை முழுவதும் செப்பனிட்டுக் கொடுப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) ஆம்.

(ஆ) எல்லா குழிப்பள்ளங்களும் மூடப்பட்டன. மேலும் இச்சாலையில் 3 கி. மீட்டர் தூரம் தார்சாலையைப் புதுப்பிக்க ரூ. 75,000 மதிப்பீட்டிற்கு வேலை எடுக்கப்பட்டு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தேனித்தொகுதியில் இருக்கிற கோவிந்தநகரம், குப்பி நாயக்கம்பட்டி, அம்பாசமுத்திரம் ஆகிய பகுதிகளை தேனியோடு இணைக்கிற ஒரே சாலையாக இது இருப்பதால் — அந்த சாலை மொத்தம் 7 கிலோ மீட்டர் தூரம் தான் இருக்கிறது—அந்த 7 கிலோ மீட்டர் தூரத்தையும் தார்போட்டு செப்பனிட்டுக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அதனுடைய தூரம் 6.8 கிலோ மீட்டர்தான். ஏற்கனவே தார் போடப்பட்டுள்ளது.

## ராஜபாளையத்திலிருந்து கேரள மாநிலத்திலுள்ள எரவங்கலார் டேமுக்கு மலைவழிச் சாலை அமைக்கும் திட்டம்

*வினா எண் 152—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ராஜபாளையத்திலிருந்து கேரளா மாநிலத்திலுள்ள எரவங்கலார் டேமுக்கு அய்யனார் கோயில் ரோடு, கம்பம்மெட்டு வழியாக மலைவழிச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?



1980 ஆகஸ்ட் 11]

(ஆ) ஆம் எனில், மேற்படி செயற்குறிப்பு நடைமுறைக்கு ஏன் காலதாமதம் ஏற்படுகிறது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, கேரள மாநிலத்தையும் தமிழ் நாட்டையும் இணைக்கும் மலைவழிச் சாலை இது. இது ரொம்பவும் முக்கியமானது. இந்தப் பாதையை அமைத்துத் தந்தால், ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் போன்ற நகரங்கள் வியாபாரத்திலே நல்ல முறையிலே முன்னேறும். ஏற்கனவே இதற்காக திட்டமிடப்பட்டு அதற்காக 200 லட்சம் ரூபாய் செலவில் எஸ்டிமேட் போடப்பட்டிருப்பதாக அந்தப் பகுதி மக்கள் பேசிக்கொள்கிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் அதை இன்னும் கொஞ்சம் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இது கேரள மாநிலத்திலே கொச்சிக்குச் செல்லும் சாலையைக் குறிப்பது. அதிலே 13 கிலோ மீட்டர் தூரம் இதர மாநிலத்து சாலையாக அமைந்திருக்கிறது. இதன் மொத்த தூரம் 85 கிலோ மீட்டர். ஏற்கெனவே அதற்காக 200 இலட்ச ரூபாய்க்கு மதிப்பீடுகள் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், நிதிப் பற்றாக்குறை காரணமாக உடனடியாக அதைச் செய்ய முடிய வில்லை. நிதி அபிவிருத்தி அடைகிற நேரத்திலே அந்தச் சாலை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, கேரள மாநிலத்திற்கும் சபரி மலைக்கும் ஸ்ரீவில்லிப்புத்தூர், ராஜ பாளையம் வழியாக மக்கள் அதிகமாகச் செல்கிறார்கள். ஸ்ரீவில்லிப்புத்தூரிலிருந்து சபரி மலைக்கு குறுக்குப் பாதையாக அது அமைந்திருக்கிறது. பக்தர்கள் சென்று வருகிறார்கள். அது மொத்தம் 35 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. மிருக பயமும் கிடையாது. அதிகமான மக்கள் அந்த மலை வழிச் சாலையின் வழியாகச் சென்றால் தமிழ்நாடு அரசுக்கு அதிக வருமானம் வரும். ஆகவே ஸ்ரீவில்லிபுத்தூர், அழகர் கோவில், குலார் மலை, வெள்ளி மலை செல்லும் குறுக்குப்பாதையை ஏற்படுத்திக் கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அந்தச் சாலையின் முக்கியத்துவத்தைப் பொறுத்து உடனடியாக அரசு பரிசீலனை செய்யும்.

[1980 ஆகஸ்ட் 11

## லோயர் கேம்ப்-குமுளி மலைச் சாலையில் தடுப்புச் சுவரைப் பழுது பார்த்தல்.

*வினா எண் 153—திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

லோயர் கேம்ப்பிலிருந்து குமுளி செல்லும் மலைச் சாலையில் தடுப்புச் சுவரை பழுது பார்க்கும் திட்டம் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஆம். ரூபாய் 52,000 செலவில் பழுது பார்க்கும் வேலை எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் முடியும் தறுவாயில் உள்ளன.

*திரு. ஆர். டி. கோபாலன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் அந்தச் சாலையிலே இரண்டுக்கும் மேற்பட்ட விபத்துக்கள் ஏற்பட்ட வண்ணம் இருக்கின்றன. அங்கே ஒரு பஸ் விபத்து ஏற்பட்டது என்றால் கிட்டத்தட்ட 15 லிருந்து 20 பேர்கள் வரையில் மரணம் அடையக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அப்போது இறந்தவர்களுடைய பிரேதங்கள் 400 அடிக்குக் கீழே போய் மேலே கொண்டுவரப் படவேண்டிய பரிதாபகரமான நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. எனவே மரண விபத்து ஏற்படுவதைத் தவிர்க்கக் கூடிய முறையிலே அங்கே உள்ள தடுப்புச் சுவர்களை வலிமையாகக் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பதில் சொன்னேன். லோயர் கேம்பிலிருந்து குமுளி செல்லும் மலைச் சாலையில் பழுது பார்க்கும் வேலை 52 ஆயிரம் ரூபாய் செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் முடியும் தறுவாயில் உள்ளன. அங்கே இருக்கிற முக்கியதுவத்தைக் கருதியும், மரணம் அடையக் கூடிய முறையில் விபத்துக்கள் ஏற்படுவதைத் தவிர்க்கவும் தான் இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவர் அவர்களே, அந்தச் சாலையில் தடுப்புச் சுவரைச் செப்பனிடுவதற்கு கிட்டத்தட்ட 52 ஆயிரம் ரூபாய் செலவாகி இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தத்





தடுப்புச் சுவர் வேலைகள் இப்போது முடிந்திருப்பதாகச் சொல்கிறார்கள். அந்தத் தடுப்புச் சுவர் பலமாக இல்லாததால், உள்ளே சிமெண்ட் போடாமல் மண்ணை வைத்துக் கட்டி மேலே சிமின்ட் பூசப்பட்டதால் பலமில்லாமல் இருக்கிறது, 52 ஆயிரம் ரூபாய் செலவிட்டும் பயன் தராத காரணத்தால் அந்தத் தடுப்புச் சுவர்களை முழுவதும் சிமென்ட்டாலேயே பலமாகக் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே. 52,000 ரூபாய் செலவில் தடுப்புச் சுவர் கட்டி முடியும் தறுவாயில் இருப்பதாகக் குறிப்புகள் சொல்லுகின்றன. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல அந்தத் தடுப்புச் சுவர் பலம் இல்லாமல் மண் வைத்துக் கட்டப் பட்டிருந்தால் உடனடியாக மாற்றி காரை அல்லது சிமென்ட் போட்டுக் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, லோயர் கேம்ப்- குமுளி செல்லும் பாதை கிட்டத்தட்ட 3 மைல் தூரம் இருக்கும். இங்கு அடிக்கடி விபத்துக்கள் நடக்கின்றன. பாதுகாப்புத் தடுப்புச் சுவர் இருந்தாலும் விபத்துக்களைத் தடுக்க முடியவில்லை. காரணம் அந்தப் பாதை குறுகலாக இருப்பது தான். ஆகவே, அந்தச் சாலையை அகலப்படுத்துவதற்கு அரசாங்கத்தில் உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இப்பொழுது இருக்கும் சாலை குறுகலான சாலைதான். ஆனால் அகலப் படுத்துவதற்குண்டான குறிப்புகள் அரசாங்கத்தினிடத்தில் இப்பொழுது இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதைப் போல நிலைமைகளை அனுசரித்து நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மலைப் பகுதிகளில் சாலை வசதிகள் சரியாக அமல் படுத்தப்படாமல் இருக்கிறது. அதே நேரத்தில் இதே போன்ற தடுப்புச் சுவர்கள் அமைக்கப்படாமல் இருக்கிறது. எனவே மலைப் பகுதிகளில் நல்ல சாலை வசதிகளை அமைப்பதற்காக சிறப்புத் திட்டமாக எடுத்துக் கொண்டு செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, ஒவ்வொரு பகுதியிலும் முக்கியத்துவத்தைக் கருதித்தான்

சில சாலைகள் போடப்பட்டு வருகின்றன ; பழுது பார்க்கப் படுகின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வது போல இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, மலைப் பகுதிகளில் போடக் கூடிய அந்தத் தடுப்புச் சுவர்கள் சிலயிடங்களில் மண்ணால் கட்டப்படுவதாக அங்கத்தினர் சொன்னார். ஆனால் எனக்குத் தெரிந்த வரையில் மண்ணால் எங்கும் கட்டப்படுவது கிடையாது ; சிமென்ட்டால் கட்டப்படுகிறது. அப்படி மண்ணால் கட்டப்பட்டிருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மண்ணால் கட்டப்பட்டதாக நான் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராமன் அவர்கள் அதைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆனால் மண்ணால் கட்டப்பட்டிருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன்.

## துறையூர் - மணப்பாறை சாலையில் உள்ள பாலம்.

*வினா எண் 154—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) துறையூர் — மணப்பாறை சாலையில் காவேரி ஆற்றின் மீது முசிறியையும், குளித்தலையையும் இணைக்கும் பாலம் எப்பொழுது திறக்கப்பட்டது ?

(ஆ) இந்தப் பாலத்திற்கு மின் விளக்குகள் போடும் திட்டம் உள்ளதா ?

(இ) திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) துறையூர் - மணப்பாறை சாலையில் காவிரி ஆற்றின் மீது முசிறியையும், குளித்தலையையும் இணைக்கும் பாலம் 8—6—1979 அன்று திறக்கப்பட்டது.

(ஆ) ஆம்.

(இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.



திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் 1979 ஆம் ஆண்டில் திறக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பாலத்திற்கான மின் விளக்குகள் போடும் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு, இதற்கான டெண்டர் கோரப்பட்டு, ஏப்ரல் மாதம் டெண்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே; நான்கு மாதங்களுக்கு மேல் ஆகியும் இந்த டெண்டர்கள் அங்கீகரிக்கப்பட்டு மின் விளக்குகள் போடும் திட்டம் துவங்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, உடனடியாக இந்த வேலைகளைத் துவக்கி மின் விளக்குகளைப் போடுவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இந்தப் பாலத்திற்கு மின் விளக்குகள் பொருத்துவதற்காக நான்கு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே உடனடியாக வேலைகள் மேற்கொள்ளப்படும்.

## சிமெண்ட், காகிதம் போன்ற தொழில்களில் பணிபுரியும் காண்டிராக்ட் தொழிலாளர்கள்.

*வினா எண். 155—திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிமெண்ட், காகிதம் போன்ற தொழில்களில் காண்டிராக்ட் தொழிலாளர்கள் நிலை பற்றி சிபாரிசு செய்ய நியமிக்கப்பட்டிருந்த மூவர் உப கமிட்டி சமர்ப்பித்த முடிவுகளை அரசு ஏற்றுக் கொண்டு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்த சிபாரிசுகளின் விவரங்கள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) உப கமிட்டி சமர்ப்பித்துள்ள முடிவுகள் மாநில ஒப்பந்த ஆலோசனை வாரியத்தின் பரிசீலனையில் உள்ளன. இவ்வாரியத்தின் பரிந்துரைகள் அரசுக்குக் கிடைக்கப்பெறவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இந்த காகிதம், சிமெண்ட் போன்ற தொழில்களில் காண்டிராக்ட் முறை நிரந்தரமான தொழிற்சாலைகள், பெரிய தொழிற்சாலைகளில் அந்த காண்ட்ராக்ட் முறை நடைபெற்று வருவதைக் கண்டறியத்தான்

இந்த உப கமிட்டி அமைக்கப்பட்டது. அதன் ரிப்போர்ட் வந்து எவ்வளவு காலம் ஆயிற்று ? இவ்வளவு காலமாகியும் இவ்வளவு முக்கியமான, அவசரமான ஒரு காரியத்தைப்பற்றி வாரியம் பரிசீலனை செய்து முடித்து அரசுக்கு அனுப்பாமல் இருப்பதற்கு என்ன காரணம் ? அதை அரசு கூர்ந்து கவனித்து, கேட்டுப் பெறுவதற்கு என்ன செய்யப்பட்டிருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, என்றையத்தினம் பரிந்துரையைக் கொடுத்தார்கள் என்ற தேதி இங்கு இல்லை. ஆனால் மாநில ஒப்பந்த ஆலோசனை வாரியத்தின் பரிசீலனையைச் செய்து இறுதியாக அவர்கள் அடுத்த வாரியக் கூட்டத்தில் பேசி முடிவு எடுக்கப்படும் என்று முடிவெடுத்திருக்கிறார்கள்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, தொழிலாளர் நல மானியம் சம்பந்தமான விவாதத்திற்குப் பதில் அளிக்கையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்த வாரியத்தில் காலி ஸ்தானங்கள் இருப்பதனால், அதைத் திருத்தி அமைப்பதற்கான பெயர்களையெல்லாம் பெற்றுக் கொண்டு உடனடியாக திருத்தி அமைக்கப்படும் என்று கூறினார். ஆனால், இன்னும் திருத்தி அமைக்கப்படாமலேயே அதனுடைய கூட்டம் 11-ஆம் தேதி அன்று கூட்டப்பட்டதோ, இல்லையோ, கூடுவதற்கு அழைப்பு அனுப்பப்பட்டது. ஆகவே, திருத்தி அமைக்கப்படும் என்று உறுதி கொடுத்த பிறகு, திருத்தி அமைக்காமலே கூட்டம் கூடுவது சரிதானா? எப்பொழுது திருத்தி அமைக்கும் வேலை துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, அதைப்பற்றி நான் விசாரிக்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமெண்ட, காகிதம் போன்ற தொழிற்சாலைகளில் காண்டராக்ட் தொழிலாளர்களுடைய நிலைபற்றி அறிய அமைக்கப்பட்ட மூவர் கமிட்டி சிபாரிசு இந்த அவையிலே வைக்கப்படுமா? அதன்மீது துரிதமாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு தனிக் கேள்வி வருமானால் அதற்குப் பதில் தரப்படும்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, மிக முக்கியமான இந்த இரண்டு தொழிற்சாலைகளிலும் பல ஆயிரக்கணக்கான காண்ட்ராக்ட் தொழிலாளர்கள் இருந்து வருவது அமைச்சருக்கே



தெரிந்த விஷயம். அதற்காக, 3 பேர்களைக் கொண்ட உப கமிட்டி அமைத்துள்ளதால், அவர்களுடைய ரிப்போர்ட் சரியான இடத்திற்குப் போய்ச் சேருவதற்கு முன்பே அதன்மீது காகிதத் தொழிற் சாலைகள், முதலாளிகளுடைய நிர்பந்தம் ஏற்பட்டு, ஒரு உறுப்பினர் இராஜிநாமா செய்ததும், அமைச்சருக்குத் தெரியும். அதற்குப் பிறகு அதை ரீகான்ஸ்டிட்யூட் செய்வதற்கு எவ்வளவு காலதாமதம் ஆகிறது என்பது அமைச்சருக்குத் தெரியும் அல்லவா ? அப்படியிருக்கும்போது ஒரு ரிப்போர்ட் கொடுத்த தேதியே தனக்குத் தெரியாது என்று அமைச்சர் சொல்கிறார். அது எப்படிச் சரியாகும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆழமான கருத்தை மாநில ஒப்பந்த ஆலோசனை வாரியத் தலைவருக்கு நான் அனுப்பி வைக்கிறேன்.

## நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள்.

வினா எண். 156—திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களுக்குக் கடன் வழங்க நிதியுதவி வராமல், கூட்டுறவு நகர்ப்புற வீட்டு வசதி சங்கங்கள் செயலற்ற நிலைமையில் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசின் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ): 1980 ஜனவரி திங்கள் முதல் ஜூன் திங்கள் முடிய, நகர்ப்புற வீட்டு வசதி சங்கங்களுக்கு, ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட கடன் விண்ணப்பங்களுக்காக ரூபாய் 9·32 கோடி கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது. பணம் பற்றாக்குறையினால், புதிய கடன்கள் அனுமதிப்பது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. நிலுவையிலுள்ள கடன் மனுக்களுக்கான தொகை 1980-81-ல் இந்திய காப்புறுதிக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெறப்பட்டு, பிரதம சங்கங்களுக்கு வழங்கப்படும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமது வினாவில் குறிப்பிட்டுள்ளது போல் நகர்ப்புற வீட்டு வசதி சங்கங்கள் மேற்படி காலத்தில் செயலற்ற நிலைமையில் இல்லை.

[1980 ஆகஸ்ட் 11

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரூபாய் 9·32 கோடி கடன் வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதற்கு முந்தைய ஆண்டு கொடுத்த அந்த கோட்டாவின்படி, இப்பொழுது ஜனவரி முதல் ஜூன் வரை வழங்கப்பட்டிருக்கின்றதே தவிர, ஜனவரியிலிருந்து ஜூன் வரையிலே எந்த வகையிலேயும் மத்திய வீட்டு வசதித் துறையிடமிருந்து தொகை வரவில்லையென்று ஆங்காங்கு நகர்ப்புறங்களிலே உள்ள வீட்டு வசதி சங்கங்களிடம் இருந்து புகார்கள் வருகின்றன. அது மட்டுமல்ல, ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து பணம் தரவில்லையென்ற புகாரையும் தெரிவித்தார்கள். முன்பு வீட்டு வசதித் துறை அமைச்சராகயிருந்த மதிப்பிற்குரிய திரு. இராசாராம் அவர்கள் பம்பாய்க்குப் பிளேனில் பறந்து சென்று, ஆயுள் காப்பீட்டுக் கழகத் தலைவரை பார்த்து, புன்னகை புரிந்து, பல கோடிக்கணக்கான ரூபாய் பணத்தைப் பெற்று வீட்டு வசதி வளர வழி செய்திருக்கிறார்கள். அந்த வகையிலே, இப்பொழுதுள்ள வீட்டு வசதி அமைச்சரவர்கள் பம்பாய் பறந்து சென்று ஆயுள் காப்பீட்டுக் கழகத் தலைவரைப் பார்த்து, பல கோடி ரூபாய்களைப் பெற்று வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு ஆண்டு ஆகிய ஜூன் முடிய உள்ள மாதங்களுக்குப் பணம் வழங்கப்பட்டு வருகிறது. ஜனவரியில் ரூபாய் 0·70 இலட்சம், பிப்ரவரியில் ரூபாய் 0·10 இலட்சமும், மார்ச்சில் ரூபாய் 302·51 இலட்சமும், ஏப்ரலில் ரூபாய் 500·33 இலட்சம், மேயில் ரூபாய் 25·73 இலட்சம், ஜூனில் ரூபாய் 102·77 இலட்சம், ஆக, ஏறத்தாழ ரூபாய் 932·14 இலட்சம் வழங்கப்பட்டிருக்கின்றது. 1980-81-க்குப் பணம் பெற்றுத் தரப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களுக்குக் கடன் வழங்க நிதியுதவி வராமல், கூட்டுறவு நகர்ப்புற வீட்டு வசதி சங்கங்கள் செயலற்ற நிலையில் இருக்கின்றனவா என்ற கேள்விக்கு இல்லையென்று அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். நானும் ஒரு நகர்ப்புற கூட்டுறவு வசதி சங்கத்தினுடைய தலைவர். ஜனவரியிலிருந்து அச் சங்கங்களுக்குக் கடன் வழங்காத காரணத்தால் அந்தச் சங்கத்தில் பணியாளர்களுக்கு எந்த வேலையும் இல்லாமல் இருக்கின்றது. ஆகவே, சங்கம் செயலற்ற நிலைமையில் இருக்கின்றது. இதற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து பணம் வருவதில் தாமதம் ஆனால், ஏதோ ரூபாய் 1 கோடியோ, ஏதோ ஒரு தொகையைக் கொடுத்து, அச் சங்கங்கள் செயல்படும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா? தற்போது, இந்தச் சங்கங்கள் செயலாற்றாமல் இருக்கின்றன—பணியாளர்களுக்கு



1980 ஆகஸ்ட் 11]

வேலையில்லாமல் இருக்கிறது. அதனால், பல கிராமங்களில் வீடு கட்டும் பணி நடக்காமல் இருக்கிறது. ஆகவே, துரிதமாகக் கடன் தொகை கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9–50]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஜனவரி முதல் ஜூன் வரை கொடுக்கப்பட்டப் பணத்தைத்தான் சொன்னேன். ஏற்கனவே ஒப்புக்கொள்ளப் பட்டுள்ள மனுக்களுக்குப் பணம் கொடுத்திருப்பார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 1980–81-க்கு விரைவில் எல்.ஐ.சி. இடமிருந்து பணம் வாங்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். அவருடைய கருத்து செயலாக்கப்படும்.

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கின்ற தனி அதிகாரிகளுக்கும் அங்கே பணி புரியும் ஊழியர்களுக்கும் இடையே தகராறுகள் இருக்கின்ற காரணத்தால் அவர்கள் சரிவர வேலை செய்வதில்லை, மேலும் அவர்கள் பணம் பெறுகிற முயற்சியில் ஈடுபட்டு பணத்தைப் பெற்று அவை கூட்டுறவு வீட்டு வசதிக் கழகத்திற்கு வழங்கப்படாமல் இருக்கிறது. இது குறித்து அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, தகராறு பற்றித் தகவல் எங்களுக்கு இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு 9·32 கோடி தந்ததாகச் சொன்னார்கள். அவ்வாண்டு எவ்வளவு ரூபாய்க்குக் கேட்டு விண்ணப்பங்கள் வந்தன. எல்.ஐ.சி. பணம் கொடுக்கவில்லை என்றும் சொன்னார்கள். அதைப்பெறுவதற்கு ஏன் காலதாமதம். அதை விரைவில் பெறுவதற்கு அரசாங்கம் ஏன் தவறிவிட்டது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அரசாங்கம் தவறவில்லை. 1980–81 என்பது ஜூலையில் இருந்து ஒரு மாதம்தான் ஆகியிருக்கிறது. விரைவில் அரசு பெற்றுத் தரும் என்று சொன்னேன். சென்ற ஆண்டுக்கு மொத்தமாகக் கொடுத்தது 13·87 கோடி ரூபாய். நான் கொடுத்த விவரம் ஜனவரியில் இருந்து ஜூன் வரையில்தான்.

[1980 ஆகஸ்ட் 11

## குறைந்த விலையில் மருந்துகள் தயாரிக்கும் திட்டம்.

*வினா எண்.157— திரு. என்.எஸ். வி. சித்தன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தலைவலி, காய்ச்சல் போன்றவைகளுக்குப் பயன்படும் குறைந்த விலை மருந்துகளை அரசு தயாரிக்கும் திட்டம் ஏதும் உள்ளதா—

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :

(அ) மற்றும் (ஆ). சாதாரணமாக பொதுமக்களுக்கு பயன்படும் விலைகுறைவுள்ள மாத்திரை, திரவம், பசை மருந்து போன்றவற்றை தயாரிக்கக்கூடிய ஒரு நிறுவனம் துவங்குவதற்குரிய செயற்குறிப்பு ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது. மேலே குறிப்பிட்ட மருந்துகள் தலைவலி காய்ச்சல் போன்றவற்றிற்குப் பயன்படலாம். ஆனால் இச்செயற்குறிப்பு தொடக்க நிலையில் உள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தான் தெரியும் என்று சொல்வார்கள். அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்திலே ஆய்விலே இருக்கிறது என்று தான் சொன்னார்கள். இந்தத் தலைவலியும் காய்ச்சலும் யாருக்கும் வராமல் இருக்க முடியாது. இன்றைக்கு வெளியிலே விற்கின்ற பல்வேறு மாத்திரைகள் வாங்கிச் சாப்பிட்டால் 'சைட் எபக்ட்' வருகின்றது. எனவே இந்த ஆய்விலே என்று சொல்லிக் காலத்தை நீட்டிக் கொள்வதை விடுத்து விரைவில் அரசாங்கமே இதை தயாரித்து, குறைந்த விலையில் தரமான மருந்து வழங்க அரசு முன் வருமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இந்த பாரசட்டாமால், ஆஸ்பிரின் போன்ற மருந்துகள் எல்லாம் நம்முடைய இலாகா மூலமாகவே தயாரிக்க வேண்டும் என்று, அந்தப் பொறுப்பை இலாகாவிடம் தரப்பட்டுள்ளது. அப்படி தயாரிக்க வேண்டும் என்றால், அதற்கான விரிவான ஏற்பாடுகளை செய்ய வேண்டும், அதாவது முதலீடு எவ்வளவு போட வேண்டும் என்பது போன்ற விரிவான பதிலைக் கேட்டு



1980 ஆகஸ்ட் 11]

இருக்கிறோம். டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீஸ் அவர்கள் நம்மு டைய நிதிநிலைமை எப்படி இருக்கிறது, எப்படி எல்லாம் செலவு செய்வது அது எவ்வளவு ஆகும் என்று குறிப்புகளை தந்திருக்கி றார்கள். அதன் பிரகாரம் ரெக்கரிங் எக்ஸ்பெண்டிச்சர் 22·40 இலட்சம் ரூபாய் என்று சொல்லி இருக்கிறார். அவர் ஒட்டு மொத்தமாக 22·40 இலட்சம் என்று சொல்லி இருக்கிறார். அதில் 20 லட்சம் ரூபாய்கள் மெட்டிரியல்ஸிக்கும், 25 ஆயிரம் ரூபாய்கள்— ஆபிஸ் கன்டின்ஜன்சிக்கும், ஸ்டாப்புக்கும் பண்ணியிருக்கிறார். இப்படி 22·40 இலட்சம் ரூபாய்கள் ரெக்கரிங் எக்ஸ்பெண்டிசர். தான்-ரெக்கரிங் எக்ஸ்பெண்டிச்சர் 19·25 லட்சம் என்று கொடுத்தி ருக்கிறார். அதாவது காஸ்ட் ஆப் மெஷினரிஸ், எக்யூப்மென்ட்ஸ் ரூ. 13 இலட்சம் என்றும், கட்டிடத்திற்கான செலவு 6 இலட்சம் என்றும், பர்னிச்சர் 25,000 என்ற அளவில் மூலதனம் போட்டுத் தயாரிக்க வேண்டும் என்று கொடுத்து இருக்கிறார்கள். அந்தக் குறிப்பீட்டின் அடிப்படையில் விரைவில் ஒரு முடிவு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆய்வு முடிந்து விரைவாக அந்தத் தொழிற்சாலையைத் தொடங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, தலைவலி, காய்ச்சல் இவற்றிற்கு யூகளிப்டஸ் ஆயில் நல்ல பலனைத் தருவதால், அதை நமது வன இலாகா வினர் தயாரித்து வருகிறார்கள். தனியார்கள் செய்வதில் கலப்படம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. சில இடங்களில் மண்ணெண்ணை கூட கலந்து விடுவதாகச் சொல்லப்படுகிறது— நீலகிரி மாவட்டங்களில் வளர்கின்ற யூகளிப்டஸ் மரங் களில் இருந்து அந்தத் தைலத்தைத் தயாரிப்பதற்கான தொழிற் சாலை ஒன்றை அரசாங்கமே ஏற்படுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் எஸ்டிமேட் கமிட்டியில் இருந்தபோது ஊட்டிக்குச் சென்று இருப்பார்கள் என்று கருதுகிறேன். அங்கே அவர்கள் நேரடி யாகப் பார்த்து இருப்பார்கள் என்று கருதுகிறேன். அங்கே பியூர் யூகளிப்டஸ் ஆயில் எந்த விதமான கலப்படமும் செய்யா மல் சிங்கோனாத் துறையினர் விற்றுக்கொண்டு இருக்கிறார்கள். எந்த அளவிற்கு வேண்டுமானாலும் அங்கே வாங்கிக்கொள்ள லாம். மற்ற இடங்களிலும் கிடைப்பதற்கான வசதிகளைச் செய்து இருக்கிறார்கள். யூகளிப்டஸ் தயாரிப்பது இதிலே வரவில்லை. இன்னொரு இலாகா அதைத் தயாரித்துக்கொண்டு இருக்கிறது.

[1980 ஆகஸ்ட் 11

*திரு. பி. முகமது இஸ்மாயில் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருந்து உற்பத்தியாளர்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் மருந்தின் விலையை உயர்த்தித் தருவதாக மத்திய அரசு இப்போது வாக்களித்து இருக்கிறது. இந்த நிலையில் அரசு மேற்கொண்டு இருக்கும் திட்டம் . பாதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, அது இன்னும் சௌகர்யமாக இருக்கும். அப்படிச் செய்தால், நாம் இன்னும் விரைவில் செய்ய வேண்டியிருக்கும். இப்போது விரைவில் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறோம். மத்திய அரசாங்கம் இப்படிச் செய்வார்களானால், மிக விரைவில் நாம் அதை நிறைவேற்ற வேண்டும் என்ற அடிப்படையில் செயல் படுவோம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்க மருத்துவ மனைகளில் தலைவலி, காய்ச்சல் போன்றவற்றிற்கு ஒரே மருந்தான ஆஸ்பிரின், சல்பாடைசின், ஏ.பி.சி. போன்ற மருந்துகளைத் தருகிறார்கள். அப்படிப் பட்ட மருந்துகள் சீப் மருந்துகளாக உள்ளன. ஆகவே, பூட்ஸ், கிளாஸ்கோ. டி.சி.ஏப்., ஸ்டான்டர்ட் பார்மசியூடி கல்ஸ் கம்பெனிகளால் தயாரிக்கப்பட்ட மருந்துகளைத் தருவ தற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, சிகிச்சை செய்கிற இடத்தில் உயர்ந்த விலையுள்ள மருந்துகள், மலிவான விலையுள்ள மருந்துகள் என்று பாகுபாடு இல்லாமல், அந்தந்த நோய்களுக்கு ஏற்றவாறு மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. பயங்கரமான நோய்க்கு சாதாரண மருந்து கூட போதும். நோய்க்கு ஏற்ற வைத்தியம்தான் கொடுக்க முடியுமே தவிர நோயாளிகளுக்கு ஏற்ற வைத்தியம் செய்வதற்கு இல்லை.

திரு. எம். ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தலைவலி, காய்ச்சல் இவற்றிற்கான மருந்துகள் தயாரிப்பதற் கான திட்டம் சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார் கள். வால்பாறையில் இருக்கும் சின்கோனாத் துறைமூலம் காய்ச்சலுக்கு மருந்துகள் தயாரிக்கப்படுகிறது. அதைப் போலவே நீலகிரியில் இருக்கும் தொட்டாபெட்டா பகுதியில் கொய்னா மருந்து தயாரிப்பதற்காக மரங்கள் நட்டு, அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆகவே, அந்த இரு பகுதிகளிலும் இருக்கும் தொழிற்சாலைகளை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?



1980 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, கொய்னைன் பொறுத்தவரையில் சின்கோனா மூல மாகத்தான் கொய்னைன் வருகிறது.

It is an alkaloid of cir.chona.

ஆகவே, சின்கோனா உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்துகொண்டு வருகிறோம். ஆனால் அங்கே ஏற்பட்டு இருக்கும் சங்கடம் எல்லாம் ஒரு 10—15 ஆண்டுகளுக்கு முன்பு சின்கோனா-கொய்னைன் பெயரே இல்லாமல் மலேரியாவிற்குச் சிகிச்சை செய்ய முடியும் என்று பரவலாக நிலை இருந்தது. ஆனால்; வியட்நாம் யுத்தத்திற்குப் பிறகுதான், பலுட்டிரின், ப்ரக்சின் போன்ற அந்த மருந்துகள் வேலை செய்யவில்லை. மீண்டும் கொய்னைன்தான் வேண்டும் என்று வந்தது. அதன் பிறகு தான் அங்கே முடக்கப் பட்டு இருந்த அந்த இலாகா மீண்டும் புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தி சின்கோனா ப்ரொடக்‌ஷனை ஜாஸ்தியாக ஆக்கியது. சென்ற 5-6 ஆண்டு காலமாக நமக்கு இலாபம் கிடைத்து வரு கிறது. புள்ளி விவரங்களைப் பார்த்தால், நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருந்த அந்த ஆலைகள் தற்போது இலாபத்தில் ஓடிக் கொண்டு இருக்கின்றன என்பது தெரியும்.

The need for quinine cinchona has increased all over the world.

ஆகவே, இப்போது அந்த மருந்துகள் தேவைப்படுகிறது. அது மட்டுமல்லாமல், புதிதாக இன்னொரு பிரச்னை ஏற்பட்டு இருக் கிறது. மலேரியா தலை தூக்கிக்கொண்டு இருக்கிறது. 4-5 ஆண்டுகளுக்கு முன்பு இல்லை. 4-5 ஆண்டு கால புள்ளி விவரங்களைப் பார்த்தால், மலேரியா ஜாஸ்தியாகிக்கொண்டு இருக்கிறது. ஆகவே, சின்கோனா பாரஸ்ட் டிபார்ட்மென்ட் மூலமாகவும், நம்முடைய மருத்துவத் துறை மூலமாகவும் இன் னும் நல்ல முறையில் சீரான வகையில் உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்து கொண்டு இருக்கிறோம்.

[முற்பகல் 10-00]

திரு. கே. பி. நாச்சிமுத்து : தலைவரவர்களே, இப்போது மாத்திரை தயார் செய்வதில், மூலிகைகள், பச்சிலைகளை வைத்து மாத்திரை தயார் செய்யப்படுமா ? அப்படித் தயார் செய்யும் முறை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர் களே, சித்த வைத்தியத்தைப் பொறுத்தவரையில் அந்த மூலிகை களிலிருந்து பௌடர் செய்து, அதை மாத்திரையாகச் செய் கிறோம். மாடர்ன் மெடிசினைப் பொருத்தவரையில் சல்ஃபடைசின், வைட்டமின்கள் போன்றவைகளுக்கு "ரா மெட்

டீரியல்ஸ்'' வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து, குறிட
பாக 'ரோஷ் கம்பெனி' ரா மெட்டீரியல்ஸ் கொடுக்கிறார்கள்
அதை வைத்து மாத்திரைகள் தயார் செய்கிறோம்.

பூலாங்குறிச்சி மருத்துவமனைகளில் டாக்டர்கள் நியமனம்.

*வினா எண். 158—திரு. வி. வால்மீகி : மாண்புமிகு மக்கள்
நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதியில் உள்ள பூலாங்குறிச்சியில்
உள்ள மகப்பேறு மருத்துவ மனையிலும் பொது மருத்துவ மனை
யிலும் சுமார் எட்டு மாதங்களாக டாக்டர்கள் பதவிகள் திரப்பட்
படவில்லை என்பது உ . மையா ?

(ஆ) ஆம் என்றால் உடனடியாக டாக்டர்கள் நியமனப்
செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) விரைவில் நிரப்ப அரசு தக்க நடவடிக்கை எடுத்து
வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்
அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரத்தை சிறிது நீட்டிக்
கிறேன்.

அரசு மருத்துவமனை, ஓமலூர்.

*வினா எண். 159—திரு. செ. செம்மலை : மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா —

(அ) ஓமலூர் அரசாங்க மருத்துவமனையில் நோயாளிகள்
தங்கி சிகிச்சை பெற தற்போது எத்தனை படுக்கைகள் உள்ளன ?

(ஆ) படுக்கைகளை அதிகப்படுத்த ஏதேனும் அரசு நட
வடிக்கை எடுத்துள்ளதா ?

(இ) ஆம், எனில், எத்தனை படுக்கைகள் ?



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஓமலூர்
அரசு மருத்துவமனையில் தற்சமயம் 18 படுக்கைகள் உள்ளன.

(ஆ) மற்றும் (இ) : டானிடா திட்டத்தின் கீழ் 24 படுக்கை
கள் கொண்ட மகப்பேறு வார்டு கட்டும் திட்டம் ஆய்வில் உள்ளது.

* திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, பொதுவாக
அரசு மருத்துவ மனைகளில் வசதி குறைவு என்று நினைத்து
வசதி படைத்தவர்கள் கட்டணம் கொடுத்து தனியார் மருத்துவ
மனைகளுக்குச் செல்கிறார்கள். ஆகவே, அரசே முன்வந்து
விரும்புகிறவர்களுக்கு கூடுதல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும்
வகையில் மருத்துவ மனைகளைக் கட்டி, கன்செஷன் ரேட்டில்
கட்டணம் வசூல் செய்யும் முறையை ஏற்படுத்தினால் கூடுதல்
வசதியை விரும்புகிறவர்களிடமிருந்து தொகை வசூல் செய்வதன்
மூலம் அரசுக்கு வருமானம் கிடைக்கும். இந்த யோசனையை
அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே,
இது மூலக்கேள்விக்கு தொடர்பு உடையது அல்ல. இது ஒரு
கொள்கைப் பிரச்சனையாக இருக்கிறது. ஆகவே, இதுபற்றி
வேறு ஒரு சந்தர்ப்பத்தில் பதில் தரலாம் என்று கருதுகிறேன்.

திரு. மு. சிவபெருமாள் : தலைவரவர்களே, ஓமலூர்
மருத்துவ மனையில் மொத்தம் உள்ள டாக்டர்களின் எண்ணிக்கை
3 தற்போது ஒரே ஒரு டாக்டர்தான் இருக்கிறார். ஒரு ஆண்
டாக்டர் ஒரு மாதத்திற்கு முன்பு 10 மாத பயிற்சிக்காகச் சென்
றிருக்கிறார். ஒரு பெண் டாக்டர் இரண்டு மாத விடுப்பில்
சென்றிருக்கிறார். அந்த இடங்களைப் பூர்த்தி செய்ய உடனடி
யாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே,
இந்த மருத்துவ மனையைப் பொறுத்தவரையில்

The sanctioned bed-strength of the Government Hospital Omalur is

18-ஆக இருக்கிறது. ஆனால் நான் ஏற்
கெனவே மூலக்கேள்விக்கு பதில் அளித்த அடிப்படையில்
'' டானிடா ஹெல்த் கெயர் பிராஜெக்ட் '' திட்டம் ஒன்று
இருக்கிறது. அது சம்பந்தமாக 'டேனிஷ் பார்லிமெண்டில்'
என்ன என்ன உதவி செய்ய வேண்டுமென்ற ஆய்வு நடக்கிறது.
ஆய்வில் பாதி முடிந்திருக்கிறது. முழுமையாகப் பெறுவதில்
சில நடைமுறைகள் இருக்கின்றன. டானிடா ஹெல்த் கெயர்
பிராஜெக்ட் அடிப்படையில்,

[[1980 ஆகஸ்ட் 11

Clinical laboratory 24-bedded maternity ward, construction if operation theatre equipment for operation theatre provision of bore-well

சாங்ஷன் செய்யலாம் என்ற குறிப்புகள் கூறப்பட்டு, அவை அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

## கொடுமுடியாறு நீர்ப்பாசனத் திட்டம்.

*வினா எண். 160—திரு. இ. முத்துராமலிங்கம், திரு. மி. வின்சென்ட், திரு. மு. ஜான் வின்சென்ட், திரு. பொ. விஜய ராகவன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நான்குநேரி தாலுகாவில் உள்ள கொடுமுடியாறு நீர்ப்பாசனத் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், 1980–81 நிதியாண்டில் அதனை ஏற்று செயல்படுத்தும் திட்டம் உள்ளதா ?

(இ) இதனால் பயன்பெறும் பகுதிகள் எவை ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ), (ஆ) மற்றும் (இ) : இத்திட்டம் தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களின் ஆய்வில் உள்ளது.

திரு. இ. முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டம் 1975 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இதுவரை 30 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு விட்டது. இதில் ஏதோ ஒரு ராஜ்ய சபையின் எம்.பி. தலையீட்டின் காரணமாக இத்திட்டம் முடக்கப்பட்டுள்ளது என்று அப்பகுதியிலுள்ள மக்கள் பேசிக்கொள்கிறார்கள். . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தின்போது யாரைப்பற்றியும் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. ஆகவே இந்தத் திட்டம் ஆய்வில் இருக்கின்றதா இல்லையா என்பது குறித்து மட்டும் கேளுங்கள்.

திரு. இ. முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, 30 இலட்ச ரூபாய் இத்திட்டத்திற்காகச் செலவழிக்கப் பட்டு விட்டது. அப்படி இருந்தும் இந்தத் திட்டத்தை மேற் கொள்ளாததன் காரணம் யாது ?



1980 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல 1975 ஆம் ஆண்டு கொள்கை அளவிலே இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துவிட்டு அதற்குப் பிறகு அங்கே நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் எவ்வளவு நீர் இருக்கின்றது என்று ஆய்வு செய்து ஒரு திட்டத்தை அரசுக்கு அனுப்பினார்கள். அந்த ஆய்வு நடந்து கொண்டிருந்தபோது வறட்சி நிவாரணப் பணியிலே இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியை மேற்கொள்ள வேண்டும் என்று தனியாக வேறு ஒரு உத்தரவு போடப்பட்டுள் ளது. அதன் விளைவாக 30 இலட்சம் ரூபாய் செலவழிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

அதன் பிறகு வருவாய் வாரியம், கிடைக்கின்ற நீரின் அளவை யும் அதற்காகச் செலவிடும் செலவினங்களையும் கணக்கெடுத் துப் பார்க்கின்றபோது இந்தத் திட்டம் பயனற்றதாக இருக் கின்றது என்ற கருத்தினைத் தெரிவித்த காரணத்தால் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட முடியாது என்ற சூழ்நிலை ஏற் பட்டது. ஆனால் தற்போது மீண்டும் அரசு தலைமைப் பொறியாளருக்கு உத்தரவு அனுப்பி சரியான ஆய்வு செய்து அங்கே எந்த அளவுக்கு நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் நீர் தேக்க முடியும் என்பதை அரசுக்கு தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கின்றார். அந்த ஆய்வு அறிக்கை வந்ததற்குப் பிறகு இந்தத் திட்டத்தை அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட் : தலைவரவர்களே, சில தனியார்கள் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை ஆக்கிரமித்து வைத்திருக் கிறார்கள். இந்தத் திட்டத்தினால் அந்த நிலங்கள் சப்மெர்ஜ் ஆகிவிடும் என்பதாகத் தெரியவருகின்றது. ஆனால் 5150 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பதுடன் இந்தத் திட்டத்தினால் குடிநீர் பிரச்சினையும் தீரும் என்ற உண்மை இருப்பதன் காரணமாக இந்தத் திட்டத்தை வெகு வேகமாக நிறைவேற்றுகின்ற வகையிலே நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவ ரவர்களே, கொடுமுடியாறு கோம்பையாறு ஆகிய இரண்டு ஆறுகளும் சந்திக்கின்ற இடத்தில் அதாவது தாமரையாறு என்று அழைக்கப்படும் இடத்தில் இந்த அணையைக் கட்ட வேண்டும் என்று ஒரு கருத்துரு உருவாக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல இந்தத் திட்டத்தின் மூலம் இதுவரை பாசனம் பெறாத 93,11 ஹெக்டேர் நிலங்களில் நீண்ட காலப் பயிருக்கும் 133:98 ஹெக்டேர் நிலங்களில்

[1980 ஆகஸ்ட் 11

குறுகியகாலப் பயிருக்கும் பாசனம் அளிப்பதுடன் தற்போ
துள்ள 1,948.33 ஹெக்டேர் நீண்ட காலப் பயிருக்கும், 333.56
ஹெக்டேர் குறுகிய காலப் பயிருக்கும் பாசன வசதி உறுதிப்
படுத்துவதும் இந்தத் திட்டத்தின் நோக்கமாக இருக்கும் என்ற
அடிப்படையிலேதான் இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள
வேண்டும் என்று ஆரம்பத்திலே கருத்து தெரிவிக்கப்பட்டது.
ஆனால் பிறகு இந்த நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் இந்தத்
திட்டத்திற்கு கிட்டத்தட்ட 330 மில்லியன் கன அடித் தண்ணீர்
தேவைப்படும் என்றும் ஆனால் அங்கு இருக்கக்கூடிய நீர்ப்
பிடிப்புப் பகுதிகளில் இருந்து 135 கன அடித் தண்ணீர் தான்
கிடைக்கும் என்ற தகவலை தற்போது கொடுத்திருக்கிறார்கள்.
இந்த முரண்பாடுகளை மனதில் வைத்துத்தான் எந்த அளவுக்கு
இந்த திட்டத்தை உருவாக்க முடியும் என்று திரும்பவும் ஆய்வு
செய்து அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்
பட்டுள்ளது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியார் நிலங்கள் சப்
மெர்ஜ் ஆகக்கூடிய நிலை இருப்பதன் காரணமாகத்தான்
முடக்குகிறார்கள் என்ற நிலைமை இருக்குமேயானால் நிச்சயமாக
அரசு அதற்குப் பணிந்து கொடுக்காது என்றும் அங்கே இருக்கக்
கூடிய விவசாயிகளின் நன்மையைக் கருத்தில் கொண்டு அரசு
நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்
கொள்கிறேன்.

<u>திரு. மு. ஜான் வின்செண்ட்</u> : பேரவைத் தலைவரவர்களே,
அரசு ஆணை 322/75 என்ற எண்ணில் 188 இலட்சம் ரூபாய்
மதிப்பில் திட்டம் போடப்பட்டு பின்னால் அதனுடைய மதிப்பு
205 இலட்ச ரூபாய் என்று உயர்த்தப்பட்டு 30 இலட்ச ரூபாய்
செலவு செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்த நீர்ப் பிடிப்
புப் பகுதிகளில் 2,800 தென்னை மரங்கள் இருக்கின்றன என்றும்
அதன் காரணத்தால்தான் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட
வில்லை என்று மக்கள் மத்தியிலே கூறப்படுகின்றது. ஆகவே
அந்தத் திட்டத்தை மிக விரைவில் செயல்படுத்த அரசு முன்
வருமா ? மேலும் கடந்த மூன்றாண்டுகளில் நல்ல மழை பெய்து
தண்ணீர் போதிய அளவு ஏற்பட்டிருக்கின்றது என்று சொல்லப்
படுகின்றது. ஆகவே இந்தத் திட்டத்தை விரைவில் நிறை
வேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது</u> : தலைவரவர்களே,
1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் தேதியன்று தலை
மைப் பொறியாளருக்கு அரசு உத்தரவு போட்டிருக்கின்றது.
அதன்படி தலைமைப் பொறியாளர் அவர்கள் அந்த நீர்ப்
பிடிப்புப் பகுதிகளில் எவ்வளவு நீர் இருக்கின்றது என்று
ஆய்வு செய்து சரியான தகவலை அரசுக்கு தெரிவிக்க வேண்டும்
என்று சொல்லி இருக்கிறோம்.



1980 ஆகஸ்ட் 11]

அதன்படி இன்னும் ஓராண்டுக்காலம் அவர்கள் பொறுத்
திருப்பார்களேயானால் ஒரு முழுமையான ஆய்வறிக்கை நமக்குக்
கிடைக்கும். அந்த அடிப்படையிலே அந்தத் திட்டத்தை அரசு
திரும்பவும் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

[முற்பகல் 10-10]

<u>திரு. சோ. அழகர்சாமி</u> : பேரவைத் தலைவர் அவர்களே.
இந்தக் கொடுமுடியாறு திட்டம் சம்பந்தமாக, இந்த விஷயத்
திலே இதற்கு முன்னால் பல விதமான கேள்விகள் பலநேரங்
களில் கேட்கப்பட்டபோதும், அமைச்சர் அவர்கள் பதில் சொல்
லும்போது, விவசாயிகளுடைய நலன் கருதி முடிவு எடுக்கப்
படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போதும் கூட
அதேமாதிரி, சில நிலங்கள் பாதிக்கப்பட்டாலும் கூட, விவசாயி
களுடைய நலனைக்கருதி, இத்திட்டத்தை எடுத்துக் கொள்வதாக
வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். மிக்க மகிழ்ச்சி.

இருந்தாலும் கூட இந்தத் திட்டம் சம்பந்தமாக திட்டப்
பணிகளை ஆய்வு செய்யும் வகையில் பரிசீலனை செய்வதற்காக
அமைச்சர் அவர்களே ஒரு முறை அந்தப் பகுதிக்கு சென்று,
அங்குள்ள நிலைமைகளை அறிந்து முடிவு எடுத்தால் நலமாக
இருக்கும். இந்த திட்டம் நிறைவேறினால் இரண்டு
மூன்று பகுதிகள் பயன் அடையும். 30 லட்சம்ரூபாய்
செலவு என்று அதிகாரிகள் மதிப்புப் போட்டுக் கொடுத்
திருக்கிறார்களே, அவர்கள் சரியாகத்தான் அனேகமாக முடிவு
செய்திருப்பார்கள். ஆகவே உடனடியாக அந்த இடத்திற்கே
சென்று பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கும் வகையில்
அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது</u> : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
தெரிவித்திருப்பது போல் அந்த பகுதிக்கு சென்று அங்கே
உள்ள பிரச்னையை கண்டறிந்து ஆய்வு செய்யக்கூடிய நிலைமை
இன்னும் உருவாகவில்லை என்று நினைக்கிறேன். சாதாரண
மாக பகுதி மக்களிடம் கோரிக்கைகளை வாங்கச் செல்வதுண்டு
அது வேறு. நான் சொன்னது, தனியார்களுடைய நிலம் இத்
திட்டத்தினால் பாதிக்கப்படுவதாக இருந்தாலும், விவசாயி
களுடைய நலனையும் முதன்மை கொடுத்து கருத்தில் கொண்டு
அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சொன்னேன். அந்த அடிப்
படையில் அரசு உறுதியாகத்தான் இருக்கிறது.

[1980 ஆகஸ்ட் 11

இங்கே உள்ள பிரச்னை என்னவென்றால், திட்டம் தயாரிக்கப் பெறுகிறபோது, இத்திட்டத்தினால் 4,000 ஏக்கர் நிலம் பயன் அடையும் என்றும் அதற்கு 330 மில்லியன் கன அடி தண்ணீர் தேவைப்படும் என்றும் கணக்கிடப்பட்டது. ஆனால், இதில் 135 மில்லியன் கன அடி தண்ணீர் தான் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. அதனால் ஆய்வை திரும்பவும் செய்ய வேண்டும் என்று 1979 ஆம் ஆண்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆய்வுப் பணிகள் நடந்துக் கொண்டிருக்கின்றன. அந்தப் பகுதியில் போகும் சந்தர்ப்பம் ஏற்பட்டால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனைப்படி நேரில் கண்டு அவற்றைத் தெரிந்து கொள்ள அரசு தயாராக இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## கந்தாடு கிராமத்தில் ஏரி அமைப்பதற்கு எடுக்கப்பட்ட நிலங்கள்.

*வினா எண். 161—திரு. என். முத்துவேல் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திண்டிவனம் வட்டம் வானூர் தொகுதி கந்தாடு கிராமத்தில் புதிதாக ஏரி அமைக்க தனியார் நிலங்கள் 34 ஏக்கர் எடுக்கப்பட்டு மேற்படி நபர்களுக்கு இதுவரை நட்ட ஈட்டு தொகை தரவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், உடனடியாக தர என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

(இ) கந்தாடு புதிய ஏரியின் மூலம் பாசனம் பெற்று பலன் அடையும் நிலங்கள் எத்தனை ஏக்கர்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஆம்.

(ஆ) நிலச்சொந்தக்காரர்களுக்கு சேர வேண்டிய பணத்தை விரைவில் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

(இ) 76·67 ஏக்கராகும்.

திரு. எல். இளைய பெருமாள் : தலைவர் அவர்களே; கொடுக்க வேண்டிய தொகை எவ்வளவு என்பதை தெரிவிப்பாரா என்று கேட்கிறேன் ?



1980 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, கிட்டத் தட்ட 1,92,795 ரூபாய் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

## சோத்துப்பாறை குப்பாம்பாறை அணைக் கட்டுத் திட்டங்கள்.

*வினா எண். 162—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியகுளம் தொகுதியில் சோத்துப்பாறை, குப்பாம்பாறை பகுதியில் அணைகள் கட்டும் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பெரியகுளம் வட்டம் தென்கரை கிராமத்திற்கருகில் வராக நதியின் குறுக்கே சோத்துப்பாறை நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

பெரிய குளம் வட்டம் வடகரை கிராமத்தின் அருகே கல்லாற்றின் குறுக்கே குப்பம்பாறை என்ற நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் தலைமைப் பொறியாளரின் (ஆய்வு) மறு ஆய்வில் உள்ளது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆய்வு பணிகள் முடிந்தவுடன் எடுத்துக் கொள்ளப்படும் என்று நம்பலாமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வில் இருக்கிறது என்று சொன்னாலே, எடுத்துக் கொள்ளப்படும் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. ஆய்வு அறிக்கை வந்தபிறகு அதன் டெக்னிகல் பீசிபிலிட்டி, மற்றும் நிதி வசதிகளைப் பார்த்துதான் எந்த பிரச்சனையும் எடுத்துக் கொள்வதா ஒத்திவைக்கப்படுவதா என்று முடிவு செய்யப்படும். இதைப் பொருத்தவரையில் ஆய்வில் இருக்கிறது.

[1980 ஆகஸ்ட் 11

## பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கப்பெறும் வீட்டுவசதி வாரிய குடியிருப்புகள்.

*குறுகியகால வினா எண். 65— திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்திரிகையாளர்களுக்கு வீட்டு வசதி வாரிய வாடகை குடியிருப்புகளில் ஒதுக்கப்பட்டுள்ள வீடுகளின் 'கோட்டாவை' அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது விரைவில் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுடச் சுட செய்திகளை மக்களுக்கு நாள் தோறும் கொடுக்கவேண்டும் என்பதற்காகப் பாடுபடும் பத்திரிகை யாளர்களுக்கு, எத்தனை பேர்களுக்கு அரசாங்கத்தின் சார்பிலே வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. எத்தனை பேர்கள் மனு செய் தார்கள் என்பதைப் போன்ற விவரங்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, 50 வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இது கூட இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் உயர்த்தினோம். எத்தனை பேர்கள் மனு செய்திருக்கிறார்கள் என்கிற தகவல் என்னிடத்தில் இப்போது இல்லை. மீண்டும் எப்போது உயர்த்து வது என்பதைப் பற்றி அரசு தக்க சமயத்தில் பரிசீலனை செய்யும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப் போல் இந்தப் பணியிலே உள்ளவர்களுக்கு விரைவிலே அரசாங்கம் அதிக அளவிலே வீடுகளை ஒதுக்க முன்வருமா? முன்பு ஒரு முறை இந்த பத்திரிகையாளர்களுக்கு அரசாங்கதத்தின் மூலம் கடனுதவி அளித்து, வீடுகள் கட்டுவதற்கான திட்டம் முன்பிருந்த அரசு மேற்கொண்டதாகக் கவனம். அதை இந்த அரசு மேற்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பிருந்த அரசு என்ன முயற்சிகளை மேற் கொண்டார்கள் என்கிற தகவல் என்னிடத்தில் இல்லை. சென்ற



1980 ஆகஸ்ட் 11]

முறை உயர்த்தியது கூட இந்த பத்திரிகை நிருபர்களிடமிருந்து கோரிக்கை வந்து உயர்த்தப்பட வில்லை. அவர்களுக்கு அதிக மாகக் கொடுக்க வேண்டுமென்ற நிலையில் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு ஆர்வம் கொண்டிருக்கிறது. மீண்டும் இந்தப் பற்றி நேரம் வருகின்றபோது பரிசீலனை செய்யப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் பத்திரிகை நிருபர்களுக்கு அளிக்கப்பட்ட வீடுகளில் ஒழுகுவதாகவும், ஜன்னல்கள் இருந்தால், கதவுகள் இல்லை என்றும், கதவுகள் இருந்தால் அவற்றிலே தாழ்ப்பாள்கள் இல்லை என்றும், மற்றும் லைட்டுகள் எரிவதில்லை என்றும் ரிப்போர்ட் அரசுக்கு வந்திருக்கிறதா ? அப்படி வந்திருந்தால், அதிலே அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகைத் தொழிலிலே ஈடுபட்டுள்ள நண்பர்க ளோடு நான் நெருங்கிய தொடர்புள்ளவன். என்னிடம் அப்படி யாரும் புகார் சொல்லவில்லை.

## அங்கீகாரம் பெற்ற நிருபர்களுக்கு இலவச மருந்துவ வசதி

* கு. கா. வி. எண். 66—திரு. எஸ். ஜகத்ரட்சகன் ; திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசின் அங்கீகாரம் பெற்ற நிருபர்களுக்கு (Accredited Correspondents) அரசு மருத்துவமனைகளில் இலவச சிகிச்சை வசதி அளிப்பதற்கான திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹாண்டே : ஒரு திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, சினிமா டைரக்டர்கள், கதாசிரியர்கள் மூடு வருவதற்கு என்னென்ன வசதிகள் தரப்படுகிறதோ, அந்த வசதிகள் இந்த பத்திரிகை நிருபர்களுக்கும் அளிக்கப்படுமா ? அந்த வசதிகள் இல்லாத காரணத்தால், அவர்கள் டி. பி., மூல வியாதி போன்ற வற்றால் அடிக்கடி பாதிக்கப்படுகிறார்கள். ஏற்கனவே தென்னகம் சங்கரன் அவர்கள் இறந்து விட்டார்கள். இன்னும் பல பத்திரிகை யாளர்கள் மோசமான நிலையிலே இருக்கிறார்கள். மொத்தம்

20 அங்கீகாரம் பெற்றவர்கள் இருப்பார்கள். பெரிய நிருபர்கள் அங்கே போக மாட்டார்கள். எனவே, அரசாங்கத்தின் சார்பிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கும் சலுகைகள், இந்த நிருபர்களுக்கும் அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, மூளை வியாதியா, மூல வியாதியா ? எதைப்பற்றி அவர்கள் சொல்கிறார்கள் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதிலும் ஓரளவுக்கு உண்மை இருக்கிறது. உட்கார்ந்துகொண்டே வேலை செய்தால் பைல்ஸ் வருவதற்கு வாய்ப்புண்டு. அரசியல்வாதிகள் அனைவரும் உட்கார்ந்துகொண்டு வேலை செய்கிற போது, பைல்ஸ் வருவதற்கு வாய்ப்பு உண்டு. ஆனால், இங்கே அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் முன்னாள் சுகாதார அமைச்சராக இருந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 6—4—1979 அன்று இத்தகைய மருத்துவ வசதியை எக்ஸ்டெண்ட் பண்ணுவதைப் பற்றி.

"Medical facilities will be extended to newspaper Reporters in Government hospitals"

சட்டமன்றத்திலே ஒரு வாக்குறுதியைத் தந்திருக்கிறார்கள்.
அந்த வாக்குறுதியின் அடிப்படையிலே, இந்த விஷயத்தைப்
பற்றி மக்கள் நல்வாழ்வுத் துறையும், லேபர் இலாகாவும்
ஆராய்ந்து, இதிலே ஏற்கனவே இந்த ஜர்னலிஸ்டுகள் ஈ.எஸ்.ஐ.
மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருவதைப் பற்றி லேபர்
இலாகா ஒரு பிரச்னையை எழுப்பியது, இன்றைக்கு யார் யார்
அப்படி வருகிறார்கள் என்பதைப் பற்றி புள்ளிவிவரங்கள் இப்
போது சேகரிக்கப்பட்டு வருகின்றன. அதற்குப் பிறகு ஒரு நல்ல
முடிவை இந்த அரசு பத்திரிகை நிருபர்களுக்குச் சாதகமாக
விரைவிலேயே அறிவிக்கும் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்
கிறது.

திரு இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே,
இந்தச் சாதகமான முடிவை அமைச்சர் அவர்கள் விரைவிலே
பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
மாநில தலைநகரிலே உள்ள நிருபர்களுக்கு அளிக்கப்படும்
வசதிகள், மாவட்டங்களிலே இருக்கின்ற நிருபர்களுக்கும் அளிக்கப்
படுமா என்று அறிய விரும்புகிறேன் ?



(முற்பகல் 10–20)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இந்தக் கேள்வி வரும் என்ற அடிப்படையில்தான் விரிவாக ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். பினான்ஷியல் இம்ப்ளிகேஷன்ஸ் எவ்வளவு என்று பினான்ஸ் டிபார்ட்மெண்ட் புள்ளிவிவரங்களைச் சேகரித்துக்கொண்டிருக்கிறது. அக்ரெடிடெட் ஜர்னலிஸ்ட் என்பது சென்னையைப் பொறுத்த வரை இருக்கிறது. அக்ரெடிடெட் ஜர்னலிஸ்ட் யார் என்பதைக் கேட்டு அறிந்து அதற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். சிவராமன்: மாவட்ட நிருபர்களுக்கு வைத்திய உதவி அளிக்கப்படுமா என்று கேட்டார்கள். அதே போன்று மாவட்ட நிருபர்கள் செய்திகளைச் சேகரிக்கச் செல்லும்போது அரசாங்கப் பேருந்துகளில் அந்த மாவட்டப் பேருந்துகளில் தான் செல்ல முடிகிறதே தவிர மற்ற மாவட்டப் பேருந்துகளில் செல்ல வசதிகள் செய்து தரப்படவில்லை. அந்த வசதிகள் செய்து தரப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி மருத்துவ வசதிகள் செய்து கொடுப்பது பற்றியது.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு.

### மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகளில் திருத்தம் ஏதுமின்றி ஒப்புதல் அளித்துள்ளதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது.

1. 1980 ஆம் ஆண்டு இந்திய மின்சார (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1980).

2. தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் கடன் நிவாரணச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 28/1980)

## 3. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### அ. திண்டுக்கல் நகரில் கூட்ட நெரிசலில் பலர் இறந்துள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திண்டுக்கல் நகரில் ஆகஸ்டு திங்கள் 8-ம் நாள் அன்று கூட்ட நெரிசலில் சிக்கி சுமார் 17 பேர் நசுங்கி இறந்து போன நிகழ்ச்சி பற்றி திருவாளர்கள் ப. நெடுமாறன், என். வரதராஜன், கு. ரமணி, கே. எம். தங்கமணி, என். எஸ். வி. சித்தன், சோ. அழகர்சாமி, எம். ஆறுமுகம், ஏ. டி. கருப்பையா, டி. கே. நல்லப்பன், ஏ. எம். பூங்காவனம், சு. பாலன், ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவ ர முக்கியமானது என்பது குறித்து சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன். திரு. ப. நெடுமாறன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே . . . .

திரு அ. இரகுமான்கான் : தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னால் நான் ஒரு பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டு விட்டது. பேரவை காலை 9 மணிக்குத் துவங்குகிறது. மாண்புமிகு உறுப்பினர் 9½ மணிக்கு வந்து ஏதாவது எழுதிக் கொடுத்துவிட்டு உடனே 10½ மணிக்கு கேள்வி நேரம் முடிந்தவுடன் அந்தப் பிரச்சினையை அவையிலே எழுப்புவது முறையானது அல்ல. பேரவைத் தலைவர் உறுப்பினர் வருகிற வரை அறையிலே உட்கார்ந்து கொண்டிருக்க முடியாது.

திரு. அ. இரகுமான்கான்: தயவு செய்து தாங்கள் இரண்டு நிமிடங்கள் அனுமதிக்க வேண்டும். நான் 73-வது விதியின்கீழ் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன். சபை நாளைக்கு முடியப் போகிறது. * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் பிரச்சினைகளுக்குள்ளே போவது மிகவும் தவறானது. காலை 9 மணிக்கு சபை கூடுகிறது என்பதைத் தெரிந்த உறுப்பினர் காலை 8 மணிக்கே வந்து கொடுத்திருக்கவேண்டும். உறுப்பினர்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





அறையிலேயே வருகிறார் என்பதற்காக பேரவைத் தலைவர் காத்துக்கொண்டிருக்க வேண்டுமென்று உறுப்பினர் விரும்புகிறாரா என்று தெரியவில்லை. 73-வது விதியின் கீழ் உறுப்பினர் கொடுத்துள்ளதை நான் பார்த்து பரிசீலித்து பார்த்து எடுக்கக் கூடியதாக, நியாயமானதாக, விதிகளுக்கு உட்பட்டு இருந்தால் தான் எடுக்க முடியும். அப்படி அதற்கு அனுமதி கொடுக்காத நிலையில் உறுப்பினர் விவரங்களுக்குள்ளே போவது சரியல்ல. உறுப்பினர் காலை 9½ மணிக்கு வந்து 73-வது விதியின்கீழ் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார். பேரவைத் தலைவர் அறைக்குச் சென்று அதைப் பரிசீலித்து விட்டு வரும் வரை பேரவையை அப்படியே விட்டுச் செல்லவேண்டுமென்று விரும்புகிறாரா ?

திரு. அ. இரகுமான்கான்: தாங்கள் எனக்கு அனுமதி தருகிறீர்களா என்பதைத் தான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொருவரும் கொடுத்ததைப் பற்றியெல்லாம் இங்கேயே படித்துப் பார்த்து அனுமதிப்பது என்றால் நேரம் என்ன ஆகும். மாண்புமிகு உறுப்பினர் மட்டும் தான் கொடுத்திருக்கிறார்கள் என்பதல்ல.

திரு. அ. ரகுமான்கான்: நாளைக்கு எடுத்துக்கொள்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எடுத்துக்கொள்ளப்படுமா இல்லையா என்பதைப் பரிசீலித்துத்தான் சொல்லமுடியும். இப்போது எப்படி சொல்லமுடியும்.

திரு. ப. நெடுமாறன் ; மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதையும் மிகப் பெரிய துயரத்திலே ஆழ்த்தக்கூடிய அதிர்ச்சிதரக்கூடிய ஒரு நிகழ்ச்சி திண்டுக்கல்லிலே 2 நாட்களுக்கு முன்னாலே நடைபெற்று இருககிறது. அங்கே அப்துல் கனி என்பவர் பெரிய செல்வந்தர். ஆண்டு தோறும் ரம்ஜான் பண்டிகையின் போது ஏழைகளுக்கு பணமும் துணியும் அவர் வழங்குவது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. அந்த நேரத்திலே ஆயிரக்கணக்கான ஏழைகள் அவர் வீட்டிற்கு முன்னாலே கூடி அந்தச் சலுகைகளைப் பெறுவதற்காக வருவது வழக்கம். ஆனால், இந்தத் தடவை அந்த வீட்டில் முன்புறம் யாரையும் வரச் சொல்லாமல் பின்புறமாக இருக்கக்கூடிய சிறிய சந்தின் வழியாக மக்கள் வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தச் சிறிய சந்தின் வழியாக வந்து வீட்டின் பின்பகுதியிலே இருந்த சிறு திடலிலே ஆயிரக்கணக்கான மக்களை உட்கார வைத்து அவர்களுக்கு பணமும் துணியும் வழங்குவதற்கு அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்தச் சிறிய சந்தின் வழியிலே ஆயிரக்கணக்கானவர்கள் முண்டி அடித்துக்

கொண்டு வருகிறபோது நெரிசல் ஏற்பட்டிருக்கிறது. அதன்
விளைவாக 14 பேர்கள் மிதிபட்டு இறக்கக்கூடிய துயரமான
நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. 14 பேர்களில் 10 பேர்கள்
சிறுவர்கள், 4 பேர்கள் முதியவர்கள். அதைத் தவிர 20, 30
பேர்களுக்கும் மேலாக படுகாயமடைந்து மருத்துவ விடுதியிலே
உயிருக்கு ஆபத்தான நிலைமையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்
கள், இவ்வளவு பெரிய கூட்டம்கூடி நெரிசல் எல்லாம் ஏற்
பட்டிருக்கிறது. இந்தச் சம்பவம் நடந்த இடத்திற்கு அருகா
மையிலே மேட்டுப்பட்டியிலே ஒரு போலீஸ் ஸ்டேஷன்
இருக்கிறது. அந்த போலீஸ் ஸ்டேஷனுக்கு தகவல் எதுவும்
அளிக்கப்பட்டதா இல்லையா என்பது தெரியவில்லை. அங்கு
போலீஸார் யாரும் இல்லை. போலீசார் அந்த இடத்திலே
ஒழுங்குபடுத்துவதற்காக வரவில்லை. அதன்காரணமாக கூட்ட
நெரிசல் ஏற்பட்டு இப்படிப்பட்ட துயரமான நிகழ்ச்சி ஏற்
பட்டு 14 பேர்கள் உயிர்போவதற்குக் காரணமாக அமைந்
திருக்கிறது. அந்த நிகழ்ச்சிக்குப் பின்னால் அப்துல் கனி என்
பவரை போலீஸார் கைது செய்து பின்னாலே விடுதலை செய்
திருக்கிறார்கள். இந்த துயர நிகழ்ச்சி சம்பந்தமாக விவாதிப்
பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி
வைத்து விவாதிக்க நான் விரும்புகிறேன்.

<u>திரு. என். வரதராஜன் :</u> தலைவர் அவர்களே, 8 ஆம்
தேதியன்று திண்டுக்கல் தோல் வர்த்தகர் முகமது அப்துல்
காதர் அவர்களுடைய சன்ஸை சேர்ந்த இல்லத்திலே இப்படிப்
பட்ட துயரம் மிகுந்த சம்பவம் நடைபெற்று இருக்கிறது.
14 உயிர்கள் பறிபோய் இருக்கிறது. 16 பேர்களுக்கு மேலே
மருத்துவ மனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்
கள் சிலர் ஆபத்தான நிலைமையில் இருக்கிறார்கள் என்ற
தகவல் இருக்கிறது. 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட கூட்டம்
8 ஆம் தேதியன்று காலை 10 மணிக்கே திரண்டிருக்கிறார்கள்.
சம்பவம் நடைபெற்றது 12 மணியிலிருந்து 1 மணிக்குள்.
இவ்வளவு நேரத்திலே அங்கே இருக்கின்ற போலீஸ் அதிகாரி
கள் அந்த இடத்திற்கு வந்து அந்தக் கூட்டத்தை முறைப்
படுத்துவதிலே ஏன் கவனம் செலுத்தவில்லை என்ற கேள்வி
வந்திருக்கிறது. ஒரு கவளம் சோற்றுக்கும், ஒரு முழம் துணிக்
கும் நம்முடைய மக்கள் படும் அவதியின் சின்னமாகத்தான்
இந்த திண்டுக்கல் சம்பவத்தை நாம் பார்க்கவேண்டுமென்பதை
நான் இந்த மன்றத்தின் இந்த அரசின் கவனத்திற்குக்
கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-30)

எல்லையற்ற ஏழ்மையும், வறுமையின் முழு வடிவமும்
தான் திண்டுக்கல் சம்பவம் என்பதை அரசு உணர வேண்டு
மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.





உயிர் நீத்த அந்த மாணிக்கங்கள் நமது சமுதாயத்திற்கு
அபாய அறிவிப்பை செய்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த
மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, இப்படிப்பட்ட சம்பவங்கள் தொடர்ச்சியாக
ஏற்படுகின்ற நிகழ்ச்சிகளாக மாறி விடக் கூடாது. சில ஆண்டு
களுக்கு முன்னாலே மதுரை நகரத்தில் இப்படிப்பட்ட ஒரு
துயரமான சம்பவம் நடைபெற்றது.

இப்படி இனாம் வழங்குபவர்கள் தாங்கள் செல்வத்தைத்
திரட்டியிருக்கின்ற மமதையில் இப்படி உயிர்களைப் பறிக்க
லாமா என்று வினவவேண்டியிருக்கிறது. ஏன் அவர்கள் முன்
கூட்டியே அரசாட்சிக்குத் தெரிவித்து, போலீஸாரின் உதவியைப்
பெற்று முறைப்படி நடத்தியிருக்கக் கூடாது? பத்தாயிரம்
மக்களைத் திரட்டி, அமளி துமளி நடத்தி உயிர்களைப் பறிப்பது
என்பது சாதாரண விஷயமா?

இதனை ஆழ்ந்து பரிசீலனை செய்து, இனிமேல் இப்படிப்
பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
உயிர் பிரிந்த அந்தக் குடும்பத்தில் இருக்கின்றவர்கள் அனாதை
களாக இருக்கின்ற பல குடும்பங்கள் பரிதவித்துக் கொண்டி
ருக்கின்ற காட்சியை அரசு உணர வேண்டும்.

நான் ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். மாண்பு
மிகு முதலமைச்சர் நிதியிலிருந்து இப்படிப்பட்ட குடும்பங்
களுக்கு உதவி செய்ய வேண்டும். அந்த வர்த்தகரே கூட
பெரும் வசதி படைத்தவர், அவர் மூலமும் இந்தக் குடும்பங்
களுக்கு நிதி பெற்றுத் தர வேண்டும். இவைகளைப் பற்றி
யெல்லாம் ஆழ்ந்து பரிசீலனை செய்து முடிவெடுப்பதற்காக
இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. என்.எஸ்.வி. சித்தன் :</u> மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்
கள் சொன்னதைப்போல, நெஞ்சு வெடிக்கக்கூடிய இத்தகைய
துயரமான நிகழ்ச்சி மதுரை மாவட்டத்திலே திண்டுக்கல்லில்
நடைபெற்றிருக்கிறது. 14 பேர் உயிரிழந்து இருக்கிறார்கள்;
இன்னும் பலர் ஆபத்தான நிலையில் அரசினர் மருத்துவ
மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தத் திண்டுக்
கல்லிலே, இந்த நண்பர், ஏழைகளுக்கு உதவுகின்ற இந்தப்
பணியை ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து செய்துகொண்டே
வருகிறார். எனவே, இதைப்பற்றி அவர்கள் போலீசுக்கு
முன்னாலேயே அறிவித்திருப்பார்கள் என்று நிச்சயமாக எதிர்
பார்க்க இடமிருக்கிறது. அப்படியென்றால், பல்லாயிரக்

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1980 ஆகஸ்ட் 11

கணக்கான மக்கள் கூடும் அந்த இடத்தில் போதுமான பாது காப்பு வசதி ஏன் காவல்துறையினரால் செய்யப்படவில்லை? இப்பொழுது பத்திரிக்கையிலே வந்த செய்திகளைப் பார்க்கின்ற பொழுது சம்பவம் நடந்த பிறகுதான் காவல் துறையினர் அங்கு போய் இருப்பதாக நமக்குத் தெரிய வருகிறது.

எனவே, நல்லெண்ணத்தோடு ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற பெருந்தன்மை உள்ளத்தோடு ஒருவர் செய் திருக்கின்ற இந்தக் காரியத்திலே இம்மாதிரியான துயர நிகழ்ச்சி நடந்திருப்பது வேதனைக்குரியது. மாண்புமிகு உறுப் தினர் திரு. வரதராஜன் அவர்கள் சொன்னதைப் போல மதுரையில் சில ஆண்டுகளுக்கு முன்னால் பிரபல நூற்பாலை ஒன்றின் சொந்தக்காரர் ஏழைகளுக்குப் பணம் வழங்குவது போன்ற நிகழ்ச்சியிலே பலர் சிக்குண்டு இறந்து போனார்கள்.

ரம்ஜானுக்காக ஆண்களுக்கு 5 ரூபாயும் வேட்டியும் என்றும், பெண்களுக்கு 5 ரூபாயும் புடவையும் என்றும் வழங்குகின்ற இந்தச் சமயத்திலே இஸ்லாமிய சமுதாயத்தினர் மட்டும் அல்லாமல் எல்லாச் சகோதரர்களும் இருந்திருக்கிறார் வரி என்பது செய்தியிலிருந்து நம்மால் பார்க்க முடிகிறது. ஏழை நாடக நடிகர் ஒருவருடைய குடும்பத்தினர் மூன்று பேர் இதிலே சிக்குண்டு உயிர் துறந்திருக்கிறார்கள்.

ஆகவே, உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு உதவி செய்ய வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். ஆனால் அந்த வணிகர் மீது நடவடிக்கை எடுத்தால் எதிர்காலத்திலே இது போன்ற தர்ம உள்ளங்களுக்கு அது தடையாக இருக்காதா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். ஆகவே முதலமைச்சர் நிதியிலிருந்து இந்த உரியிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிதி வழங்க வேண்டும். அத்துடன் இதுபோன்ற நிகழ்ச்சிகள் தமிழகத்தில் தொடர்ச்சி யாக நடக்காமல், இதுவே கடைசி நிகழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற முறையில் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசு செய்யவேண்டுமென்பது போன்ற பல்வேறு பிரச்சனைகள் இருப்பதால் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரர்களே, திண்டுக்கல்லில் நடந்த இந்தச் சம்பவத்தில் எட்டு குழந்தைகள் ஆறு பெண்கள் உட்பட பதினான்கு பேர் உயிர் துறந்திருக் கிறார்கள். அது மட்டும் அல்லாமல் மருத்துமனையிலே 10, 14 பேர் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற அளவிற்கு மிகக் கோரமான சம்பவம் நடந்திருக்கிறது.



1980 ஆகஸ்ட் 11] [திரு. சோ. அழகர்சாமி]

இதை நினைக்கும்போது அரசியல் கட்சிகளைச் சேர்ந்த நாமெல்லாம் வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலையில் இருக்கிறது. சுதந்திரம் பெற்று 33 ஆண்டுகள் உருண்டோடி விட்ட பிறகும் இன்னும் வேட்டி, சேலைகளுக்காக பத்தாயிரக் கணக்கான மக்கள் திரண்டுபோய் நெறிபட்டுச் சாகிறார்கள் என்றால் நாமெல்லாம் வாஸ்தவத்திலேயே அரசியல் கட்சி களைச் சேர்ந்தவர்களெல்லாம் வெட்கித் தலை குனியவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

அதற்குமேல் எனக்கு வார்த்தையே கிடைக்கவில்லை. காரணம், கைத்தறித் துணிகள் விற்கவில்லையென்று, ஏகப்பட்ட ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் இங்கு வருகின்றன. கைத்தறித் துணிகள் விற்காமல் தேக்கம் இருக்கிறது. ஆனால் அங்கே துணிக்காக உயிரை இழந்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த துணி, ரூ. 10 ரூ. 15 மதிப்பு பெறும். அதை வாங்கினால் 2 வருஷம் ஓட்டலாம் என்று அப்படி குவிந்திருக்கிறார்கள். அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியத்திற்காக இதையெல்லாம் சொல்கிறேன். இந்தத் தரித்திர நிலையைப் போக்க அந்தத் தரும புண்ணியவான் அன்றைக்கு மட்டும் கொடுப்பானேன்? எப்பொழுது ஏழைகள் கேட்கிறார்களோ, அப்பொழுதெல்லாம் கொடுக்கலாமே? இப்படி ஆட்களை கொல்வதற்காக ஏன் தர்மம் செய்ய வேண்டுமென்று கேட்கிறேன். நான் ஒரு சம்பவம் கேள்விப்பட்டிருக்கிறேன். ஒருவர் பக்கத்து வீட்டுக்காரன் பிள்ளைக்கு புத்தகம் வாங்கு வதற்கென்று — ஏழையாக இருப்பவனுக்குத்தான் — ரூ. 5 கொடுக்கச் சொன்னால் கொடுக்கமாட்டார். ஆனால், ஒரு விழா ஏற்பாடு செய்து, ஒரு அமைச்சரைத் தலைமை தாங்கச் செய்து, ரூ. 1,000-க்குப் புத்தகம் வழங்குவார். ஆனால் அந்த விழாவுக்குப் பிறகு, 10 நாட்கள் கழித்து, பக்கத்து வீட்டுக் காரரின் பிள்ளைக்கே புத்தகம் வாங்க முடியாத நிலை வந்து, ரூ. 5 ரூ. 10 கேட்டால் கொடுக்கமாட்டார். அதுபோல், இந்தத் தர்மப் புண்ணியவான். துணி கொடுக்கிறேன் என்று சொல்லி, இத்தனை பேரைக் கொல்ல வேண்டுமா? மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் சொன்ன மாதிரி, 14 உயிர்கள் கொல்லப் பட்டிருக்கிறார்கள். ஆனால், அந்தக் குடும்பத்தினர் இறந்தவர் குடும்பத்திற்கு ரூ. 100 கொடுத்திருக்கிறேன் என்று சொல்லி யிருக்கிறார்கள். அது எப்படியும் போகட்டும். அரசு, உயிரிழந் தவர் குடும்பங்களுக்குக் குறைந்தபட்சம் ஒவ்வொரு குடும்பத் துக்கும் ரூ. 1,000 கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மதுரையிலே அதே மாதிரி ஒரு சம்பவம். அங்கும் இதே மாதிரி துணிவழங்கும் விழா. சௌராஷ்டிரா பள்ளிக்கூடத்திலே துணி வழங்கும்போது, இதே மாதிரி 10 15 பேர்கள் இறந்தார்கள் இந்த துக்ககரமான சம்பவம், மனத்தைத் தொடும் சம்பவம், வேட்டி சேலைக்காக கியூவிலே

[திரு. சோ. அழகர்சாமி] [1980 ஆகஸ்ட் 11

நின்று, நெரிசலிலே 14 பேர்கள் சாகிறார்கள் என்றால்,
கீழ்வெண்மணியிலே, தீ வைத்து கொளுத்திய சம்பவம் மாதிரி
எனக்குத் தெரிகிறது. இது இனிமேல் நடக்காமல் இருக்க,
தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இது முக்கியமான ஒரு
விஷயம். ஆகவே, இதுகுறித்து விவாதிக்க, அவையின் இதர
அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று நான் தலைவர்
அவர்களைக் கேட்டுக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்
களே, கடந்த 8-ந் தேதியன்று திண்டுக்கல்லிலே நடைபெற்ற
ஒரு கோரச் சம்பவம் உள்ளபடியே தமிழ்நாட்டிலே உள்ள எல்லா
ஜாதியினரும், எல்லா மதத்தினரும் கண்ணீர் விடுகின்ற ஒரு
சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. 8-ஆம் தேதி பகல் 11
மணி அளவில் இது நடைபெற்றுள்ளது. பிரபல தோல் வியாபாரி
திரு. கே. எம். அப்துல்காதர் ஆண்டுதோறும் இப்படி ரம்சான்
பண்டிகையையொட்டி, ரம்சான் பண்டிகை முடிகிற 27-ஆம்
நாள் அன்று, ஏழை, எளியவர்களுக்கு, ஜாதி பேதமற்ற முறை
யிலே, இனாம் வழங்குவது வழக்கம். அவருடைய மதக் கொள்
கையின் அடிப்படையிலே, ஒரு வியாபாரி, அவன் எவ்வளவு
இலாபம் சம்பாதிக்கிறானோ, அந்த இலாபத்தில் ஒரு பெருந்
தொகையை, இப்படிப்பட்ட ஏழை, எளியவர்களுக்கு இனாமாகத்
தர வேண்டுமென்ற அடிப்படையிலேதான் அந்த வியாபாரி
கடந்த 30 ஆண்டுகாலமாக, இத்தகைய சீரிய பணியை நடத்தி
வருகிறார்கள். அதன்மூலம், நாட்டிலே வறுமைக் கோட்டுக்கும்
அடியிலே இருக்கிற ஏழை, எளிய மக்களை அவர்கள் காப்பாற்றி
வருகிறார்கள். ஆனால், அன்றையதினம் பல்லாயிரக்கணக்கான
மக்கள் அவருடைய வீட்டு வாசலின் எதிரிலே கூடிவிட்டார்கள்.
நேரம் அதிகம், ஆக, ஆக, மக்கள் தொகை அதிகமாகி இருக்கிறது.
அந்த நேரத்தில், யாரோ சிலர் பின்புறமாக மக்களை விடுகிறார்
கள் என்ற புரளியைக் கிளப்பி விட்டார்கள். அதன் காரணமாக,
முன்னே இருந்த இரண்டு வாலிபர்கள், அந்த கேட்டைத் திறந்து
விட்டதன் காரணமாக, எல்லா மக்களும் ஒரேயடியாக விழுந்
தடித்து முந்திச் சென்றிருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான்
குழந்தைகள் 10 பேர், பெரியவர்கள் 4 பேர், தங்களுடைய
உயிர்களை இழக்க நேரிட்டது. அந்த நேரத்திலே, எப்படிப்
பட்ட நிலைமைகள் இருந்தாலும், பெருங்கூட்டம் கூடுகிற நேரத்
தில், உடனடியாகக் கண்காணித்து, மக்களைக் கட்டுப்படுத்தக்
கூடிய ஒரு சூழ்நிலை நம்முடைய போலீசாருக்கு ஏற்பட வேண்
டும். இப்படி ஒரு நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், ஏழை,
எளிய மக்களைக் காப்பாற்ற, சிலர் உயிரிழந்த பரிதாப நிலை
யிலே, அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களைக் கைது செய்
கிறார்கள் என்றால், இனிமேல், ஏழை, எளியவர்களைக் காப்
பாற்ற, இனாம் கொடுக்க யாரும் முன்வர முடியாத சூழ்நிலை
ஏற்படும் என்ற காரணத்தால், இதையெல்லாம் விவரமாக நாம



1980 ஆகஸ்ட் 11] [திரு. சு. பாலன்]

கண்டறிந்து, நல்லதொரு நடவடிக்கை எடுக்க, இறந்தவர்கள்
குடும்பத்திற்கு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருடைய நிதி
யிலிருந்தும், மற்ற தனவந்தர்களும், அவர்களுக்கு நல்ல உதவி
கொடுப்பதற்கான வழிவகைகளைத் தேடுவதற்காக, இந்தச் சபை
யிலே அவை பற்றி விவாதிக்க, சபையினுடைய இதர அலுவல்
களை ஒத்திவைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10–40]

மாண்புமிகு பேர
மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தச் சம்
வைத் தலைவர் அவர்களே, நடைபெற்றிருக்கின்ற தெரிவித்த
பவம் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துத் என்பதை
தைப்போல மிகுந்த வேதனைக்குரிய ஒரு சம்பவம் இத்தகைய சம்
நான் முதலிலேயே சொல்ல விரும்புகிறேன். வேண்டியது அர
பவங்கள் நடைபெறாமல் பார்த்துக் கொள்ள வழங்கவேண்டும்
சின் கடமை மட்டுமல்ல, நல்லுள்ளத்தோடு கவனமாக இருக்க
மென்று நினைக்கின்ற செல்வவான்களும் இதில் விரும்புகிறேன்.
வேண்டும் என்று முதலிலே தெரிவித்துக் கொள்ள பேசுகிறபோது
மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டுப் என்ற
காவல் துறையினருக்கு முன்னாலே தெரிவிக்கப்பட்டதா சரி
கேள்வியைக் கேட்டார்கள். அதேபோல இந்த நெரிசலை என்
யாக வகுத்துத் தருதவற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டனவா அரசுக்குக்
பதைப் பற்றியும் கேட்டார்கள். நான் இது பற்றி கவனத்திற்குக்
கிடைத்திருக்கிற தகவல்களை முதலில் அவையின்
கொண்டுவர விரும்புகிறேன்.

தோல்
திண்டுக்கல்லில் கே. எம். ஏ. நிறுவனம் என்பது நிறுவனத்தின்
வியாபாரம் செய்யும் நிறுவனமாகும். இந்த 27-ஆம்
உரிமையாளர்கள் ஆண்டுதோரும் ரம்சான் மாதத்தில் முதலிய
நாள் ஜஹாத் செய்து ஏழைகளுக்கு இலவசமாக ஆடை வருகின்
வைகளைக் கொடுப்பதை வழக்கமாகக் கடைப்பிடித்து இருந்து
றனர். இது கடந்த 40 ஆண்டுகளாக நடைமுறையில் மதத்தைச்
வருகிறது. முஸ்லீம்களுக்கு மட்டுமல்லாது மற்ற கொடுக்
சார்ந்தவர்களுக்கும் மேற்படி இலவச ஆடை முதலியன உரிமையாளர்
கப்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்தின் மறைந்த வந்த
திரு. கே. எம். அப்துல்காதர் இந்தப் பணியை செய்து இதைத்
தாகவும் அவரது மறைவுக்குப் பிறகு அவருடைய மகன்கள் சாதாரணமாக
தொடர்ந்து செய்து வருவதாகவும் தெரிகிறது. வரை இப்
ஒவ்வொரு ஆண்டும் 3,000-லிருந்து 4,000 பேர் இப்
பொருள்களைப் இலவசமாகப் பெற்று வந்துள்ளனர். பள்ளி
பொருட்களைக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை அங்குள்ள சேர்ந்த
வாசலைச்சேர்ந்த தொண்டர்கள் அந்த நிறுவனத்தைச் தெரிகிறது.
பாதுகாவலர்கள் ஆகியோர் கவனித்து வந்ததாகத்

ஒவ்வொரு ஆண்டும் அங்கு ஏற்படுகின்ற போக்குவரத்து நெரி
சலைத் தவிர்ப்பதற்காக மட்டும் இரண்டு அல்லது மூன்று போக்கு
வரத்துக் காவலர்கள் அங்கு சென்று அவர்களுக்கு உதவி புரிவர்.

கே. எம். அப்துல்காதர் குடும்பத்தினருக்கு திண்டுக்கல் மேட்
டுப்பட்டி சாலையில் இருபுறமும் எதிரும் புதிருமாக இரண்டு
பங்களாக்கள் உள்ளன. இதில் 1-ஆம் எண் பங்களா பழைய
பங்களாவாகும். இதனுடைய பின்புறத்தில் சுமார் 4,000 பேர்
கள் வரை அமர இடவசதி உள்ளதாகத் தெரிகிறது. 120ஆம்
எண்ணுள்ள புதிய பங்களா சமீபத்தில் கட்டப்பட்டதாகத் தெரி
கிறது. இந்த பங்களாவின் முன்புறம் காலியிடம் உள்ளதாகத்
தெரிகிறது. நிகழ்ச்சி நடந்த 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு
திங்கள் 8 ஆம் நாள் அன்று காலை 10—00 மணிக்கு இலவசப்
பொருட்கள் பெறுவதற்காகக் கூட்டம் சேர்ந்துள்ளது. கூட்டத்
தில் 2,000 பேர்கள் 120-ஆம் எண்ணுள்ள பங்களாவின் முன்
இருந்துள்ளனர். வழக்கமாக பழைய பங்களாவின் பின்புறத்திலே
இவர்கள் அந்தப் பொருள்களை வழங்குவது வாடிக்கை. ஆனால்
இந்தத் தடவை பழைய பங்களாவின் முன் புறத்திலே வழங்கு
வதற்காக அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆகையினால்
தான் இலதைப் பெறச் சென்ற ஏழைகள் பழைய பங்களாவின்
முன்புறத்திலே கூடி இருந்தார்கள். பழைய பங்களாவின் பின்
புறத்திற்குப் போகிற பாதை ஒரு சந்துப் பாதை. பழைய
பங்களாவின் பின்புறத்திலே வழங்கப் போகிறார்கள் என்று ஒரு
வதந்தி கிளப்பப்பட்டதன் விளைவாகத்தான் இந்த ஆபத்து ஏற்
பட்டிருக்கிறது. ஆகவேதான் இந்த விளக்கத்தைச் சொல்ல
விரும்புகிறேன்.

அந்த 120-ஆம் எண். பங்களாவிலிருந்து 1-ஆம் எண் பங்களாவிற்
குச் செல்ல வேண்டுமானால், சாலையைக் கடந்து ஒரு சிறிய
சந்து வழியாகச் சென்று பழைய பங்களாவின் பின் பகுதியை
அடைய வேண்டும். அந்தப் பின் பகுதியில் 10 அடி உயரமும்,
12 அடி அகலமும் கொண்ட ஒரு வாயிற் கதவு உள்ளது. அந்த
நிறுவனத்தைச் சேர்ந்த முகமது கனியும், மற்றவர்களும் ஒரு
மணிக்கு மசூதிக்கு தொழுகைக்காகச் சென்று உள்ளனர். அப்
படிச் செல்லும்போது, அவர்கள் தொழுகை முடித்து விட்டு
வந்த பிறகு அந்த இலவச பொருள்களை விநியோகிப்பதாகச்
சொல்லிவிட்டுச் சென்றனர்.

இதற்கிடையில் யாரோ ஒருவர் புதிய பங்களாவில் இலவசப்
பொருள்கள் கொடுக்கப்படாமல் ஆண்டுதோறும் வழக்கமாகக்
கொடுக்கப்படுகிற பழைய பங்களாவில்தான் வழங்கப்படும் என்று
புரளியைக் கிளப்பி விட்டதாகத் தெரிகிறது. அந்தப் புரளியை
நம்பி கூட்டத்தின் பெரும்பகுதி, அந்தச் சின்ன சந்து வழியாக





பழைய பங்களாவின் பின் பகுதியைச் சென்று அடைய விரும்பி
ஓடினர். அந்தக் கூட்டத்தில் பெரும்பாலோர் பெண்களும்,
குழந்தைகளுமே உள்ளனர்.

பின்னாலே இருந்த வெளிக்கதவு பூட்டப்பட்டு இருந்ததால்
ஓடிவந்த கூட்டம் கதவு திறப்பதற்கு முன்பே அதன்மேல் விழுந்
துள்ளது. நெரிசல் தாளாமல் வெளிக்கதவு கீழே விழுந்து விட்
டது. கதவு கீழே விழுந்து விட்டதால் முன்னால் இருந்த கூட்
டத்தினர் கீழே விழுந்தனர். பின்னால் இருந்தவர்கள் முன்னால்
இருந்தவர்கள் மீது மிதித்து ஓடியதால் 14 பேர் இறந்துவிட்டனர்.
அவர்களில் 6 பேர் பெண்கள், 8 குழந்தைகள். 8 குழந்தை
களில் 6 பெண் குழந்தைகள், 2 ஆண் குழந்தைகள். இறந்து
விட்ட 14 பேர்களில் 9 பேர் நிகழ்ச்சி நடந்த இடத்திலேயே
இறந்து விட்டனர். 18 பேர் காயம் அடைந்து மருத்துவ
மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அவர்களில் 5 பேர் மருத்
துவ மனையில் இறந்து விட்டனர். 11 பேர் சிகிச்சை பெற்று
வீட்டுக்குச் சென்றனர். மீதம் 2 பேர் மருத்துவ மனையில்
உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்று தேறி வருகின்றனர்.

இச்செய்தியை அறிந்தவுடன் தொழுகைக்குச் சென்றிருந்த
கே. எம். ஏ. நிறுவனத்தினரும், நிறுவனத்தின் தொண்டர்களும்
நிகழ்ச்சி நடந்த இடத்திற்கு ஓடிச்சென்று, அங்கே இருந்த
இரண்டு போலீசாரின் உதவியுடன் கூட்டத்தை ஒழுங்குபடுத்தி
உள்ளனர். இறந்தவர்களின் சடலங்கள் உடனடியாக சவப்பரி
சோதனை செய்து சொந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.
இறந்தவர்களின் ஈமச்சடங்குகளுக்காக தலா ரூபாய் 100
அந்த நிறுவனத்தினர் கொடுத்துள்ளனர். அந்த நிகழ்ச்சி பிற்
பகல் 1—30 மணிக்கு நடந்துள்ளது.

அதை அறிந்தவுடனே திண்டுக்கல் சப்-கலெக்டர் மற்றும்
ஏ. எஸ். பி. நிகழ்ச்சி நடந்த இடத்திற்கு விரைந்து சென்று ஏற்
பாடுகளைக் கவனித்துள்ளனர். மதுரை கலெக்டரும், காவல்துறை
கண்காணிப்பாளரும் பிறகு அந்த இடத்திற்குச் சென்று, பார்வை
யிட்டு மற்ற ஏற்பாடுகளைக் கவனித்துள்ளனர்.

இதிலிருந்து என்ன தெரிகிறது என்று சொன்னால், முதலில்
புதிய கட்டிடத்தின் முன் புறத்தில் அவர்கள் தருவதற்கான
ஏற்பாடுகளைச் செய்து இருக்கிறார்கள். அதற்குப் பிறகு ஒரு
புரளி உருவாக்கப்பட்டதால் ஏற்பட்டுவிட்ட ஒரு காரியமாகும்.
இது.

இதிலே காவல் துறை ஆண்டுதோறும் போக்குவரத்திற்கு
இடைஞ்சலாக இந்தக் கூட்டம் இருந்துவிடக்கூடாது என்று
ஒழுங்'(' 'டுத்துவதற்காக வருவதுபோல் வந்து இருக்கிறார்கள்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1980 ஆகஸ்ட் 11

இலவச உடைகளைப் பெறும் ஏழைகள் அந்த வீட்டின் உள் புறம் சென்று, அதைப்பெற்று வந்ததால் இதுவரையில் பிரச்னை எழவில்லை. ஆகவே, காவல் துறையைப் பொறுத்தவரையில், இந்த விஷயம் தெரிவிக்கப்பட்டது. ஆனால், அந்தப் புரளி ஏற் பட்டதன் காரணமாக இந்த நிகழ்ச்சி நடந்து இருக்கின்றது.

1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 9 ஆம் நாள் அன்று இலவச உடைகள் வழங்குவதற்கு அறிவித்த திரு. அப்துல் கனி என்பவர் கைது செய்யப்பட்டு, பொறுப்பில் விடப்பட்டுள்ளார். இந்திய குற்றவியல் சட்டம் 304-ஏ பிரிவின்படி வழக்கு ஒன்று திண்டுக்கல் நகர காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது, இப்படி நல்ல உள்ளத்தோடு நன்கொடை தந்த ஒருவரைக் கைது செய் வதன்மூலம், இது போன்று இனிமேல் யாரும் உதவி செய்ய முன்வராவிட்டால் என்ன செய்வது என்பதை மாண்புமிகு உறுப் பினர் சித்தன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் பாலன் அவர் களும் கேட்டார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் வரத ராஜன், அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர் களும் சொன்னது—இத்தகைய நிலைமை நாட்டிலே இருப்பது தவறானது. இது ஒரு வேளை செல்வச் செருக்கின் விளைவாகக் கூட இப்படி நடந்து இருக்குமோ அல்லது விளம்பரத்திற்காகவும் இப்படி நடந்து இருக்கலாம் என்று எல்லாம் கூட வேதனைப் பட்டார்கள். நான் சொல்ல விரும்புவது, இதற்கு எல்லாம் அடிப்படைக் காரணம் வறுமை என்பதை நாம் மறந்து விடுவ தற்கு இல்லை. என்னைப் பொறுத்த வரையில், வறுமையும் வேண்டாம், வள்ளல் தன்மையும் வேண்டாம். அத்தகைய சமு தாய அமைப்பை உருவாக்குவதன் மூலம் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண முடியுமே தவிர வேறு வகையில் அல்ல என்பதை மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

[முற்பகல் 10–50].

தலைவரவர்களே, இறந்துவிட்டவர்களுடைய அந்த ஏழைக் குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து ஏதாவது உதவித் தொகை வழங்கப்படுமா என்று கேட்டார்கள். தாராள உள்ளத் தோடு அது கவனிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பின், பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.



1980 ஆகஸ்ட் 11]

*(ஆ) கும்பகோணம் அரசாங்கக் கல்லூரி மாணவர் களிடையே கலகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தஞ்சை மாவட்டம்
கும்பகோணம் வட்டம், கும்பகோணம் நகரம் அரசாங்கக்
கல்லூரியில் பின்தங்கிய மாணவர் அரிசன மாணவர்களிடையே
கலகம்—கத்திக்குத்து ஏற்பட்டதால் ஏற்பட்டுள்ள கொந்
தளிப்பு குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை
ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டு திருவாளர்கள் எல்.
இளையபெருமாள், செ. இராமலிங்கம், மு. அம்பிகாபதி, பொ.
உத்திராபதி, தி.கா. நல்லப்பன், ஏ. டி. கருப்பையா ஆகியோர்
தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கிய
மானது என்பது குறித்துச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்
கொள்கிறேன். முதலில் திரு. எல் இளையபெருமாள்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, கடந்த
ஏழு ஆண்டு காலமாக அந்தக் கல்லூரியிலே இதைப் போன்ற
பரிதாபகரமான நிலைமை இருந்து வருகிறது. அதற்குக் காரணம்
அரசியல்வாதிகளும் என்பதை இந்த இடத்திலே அரசுக்குத் தெரி
விக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

அங்கே இரண்டுவிதமான விடுதிகள் இருக்கின்றன. அங்கு
ஒரு பெருந்தனக்காரர் நல்ல எண்ணத்தோடு இரக்கத்தோடு
சுமார் 75 சதவிகிதம் அரிசன மாணவர்கள், 25 சதவிகிதம்
பின்தங்கிய மாணவர்கள், முன்னேறிய சமூக மாணவர்கள்
தங்கிப் படிக்க வேண்டுமென்று ஒரு அறக்கட்டளையை நிறுவி,
அதற்கு அங்கிருக்கிற கல்லூரி முதல்வரும் அங்கு வருகிற சப்-
கலெக்டர் அவர்களும், நகர சேர்மென் அவர்களும் டிரஸ்டிகள்
என்ற தன்மையில் இருந்து அதை நடத்தி வருகிறார்கள். அங்கே
நடப்பது என்னவென்றால் உங்களுக்குத் தெரியும். இன்று இருக்
கிற அவை முன்னவருக்கும் நிச்சயமாக நல்லமுறையில் தெரியும்
என்று எண்ணுகிறேன். காரணம் பின்தங்கிய மாணவர்களும்,
அரிசன மாணவர்களும் கும்பகோணம் கல்லூரியைப் பொறுத்த
வரையில் அதிகமாகப் படிக்கிறார்கள். அந்த நகரத்தில் கடந்த
7 ஆண்டு காலமாக அடிக்கடி சிறிய அளவில், சில நேரங்களில்
பெரிய அளவில் பலாத்காரம் நடைபெறுவதும் அதிலே வெளி
யார் தலையீடு இருப்பதும் எல்லோருக்கும் தெரியும்.

திராவிடர் கழகத்தைச் சேர்ந்த நண்பர்களும், முஸ்லீ
நண்பர்களும் கூட இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் இ
விடுதியில் தகராறு வந்து, அரிசன மாணவர்கள் பக்கம் நியாய
இருந்தும்கூட, அநியாயமாகப் பாதிக்கப்பட்டார்கள் என்

* 1980ம் ஆண்டு ஆகஸ்ட் 8-ம் தேதியன்றே சபையில் அனும
பெறப்பெற்றுள்ளது.

தெரிந்தும் கூட, அரிசன மாணவர்களும் பின்தங்கிய மாண
வர்களும் சகோதரர்களாக நடந்து கொள்ள வேண்டும் என்ற
முறையில் சமாதான கமிட்டி ஏற்படுத்தி, அதன் மூலம் பின்
தங்கிய மாணவர்கள் தவறு செய்திருந்தாலும், அரிசன மாண
வர்கள் பக்கம் தவறு இல்லை என்றாலும் கல்வி பெறுவதை
உத்தேசித்து ஒன்றுபட வேண்டுமென்று அந்த கமிட்டி சொல்லி
யிருக்கிறது.

மேலும் அரசு அதன் பக்கத்திலே பின் தங்கிய வகுப்பு மாண
வர்களுக்கு ஒரு விடுதியை ஏற்படுத்தியிருக்கிறது. அந்த விடுதி
யில் 80 சதவிகிதம் பின் தங்கிய மாணவர்கள் என்று நினைக்
கிறேன்; 5 சதவிகிதம் மற்ற மாணவர்களும், 10 சதவிகிதம்
அரிசன மாணவர்களும் தங்கிப் படிக்க வேண்டுமென்று அரசாங்
கம் உத்தரவிட்டிருக்கிறது. இந்த சதவிகிதத்தில் வேண்டு
மானால் 5 சதவிகிதம், 3 சதவிகிதம் வித்தியாசம் இருக்கலாம்.
அந்தக் கல்லூரியிலே ஒரு சிறிய சம்பவம் நடக்கிறது என்றாலும்
அங்கே பாதிக்கப்படுகிறவர்கள் அரிசன மாணவர்கள்தான்.
அங்கே மைனாரிட்டியாக இருப்பவர்கள் ஷெட்யூல்டு காஸ்ட்
மாணவர்கள். உடனே அவர்கள் இந்த 10 சதவிகிதம் மாணவர்
களை நியாயம் இல்லாமல், உணர்ச்சி வசப்பட்டு, இம்சிக்கிறார்
கள்.

அதைப்போல தர்ம சிந்தனையுடன் அறக்கட்டளை நிறுவி
அதன் மூலம் நடத்தப்பட்டு வருகிற விடுதியில் தாழ்த்தப்பட்ட
மாணவர்கள் அதிகமாக இருக்கிறார்கள்; பின்தங்கிய மாண
வர்கள் குறைவாக இருக்கிறார்கள். அங்கே எந்த ஒரு சிறு தவறு
வந்தாலும் அந்த மாணவர்களுக்கும் இந்த மாணவர்களுக்கும்
தொல்லை என்ற நிலையை உருவாக்கிவிடுகிறார்கள். எல்லா
வற்றுக்கும் மேலாக அந்தக் கல்லூரியை எடுத்துக் கொண்டால்
அங்கே பின்தங்கிய மாணவர்கள் அதிகமாக வருகிறார்கள்.
'டேஸ்காலர்' முறையில். அந்தக் கல்லூரியிலே பணியாற்றும்
முதல்வரும் மற்றவர்களும் கூட அரிசன மாணவர்கள் பாதிக்கப்
படுவதைத் தடுப்பதற்கு எந்த விதமான ஏற்பாடுகளையும் செய்
வதாகத் தெரியவில்லை. இப்படிப்பட்ட பரிதாபகரமான
நிலைமை இருப்பதால், அடிக்கடி இப்படிப்பட்ட தொல்லைகள்
ஏற்படுகிற காரணத்தால் இதைப்பற்றி விவாதிக்க வேண்டியது
அவசியம் என்று கருதி, இந்த மாமன்றத்தின் இதர அலுவல்களை
ஒத்தி வைத்து, இதுபற்றி தீர்க்கமாக விசாரித்து, பேசி ஒரு நல்ல
முடிவை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் துணைத் தலைவரவர்
களே, குடந்தை அரசினர் ஆடவர் கல்லூரியில் கடந்த 1980-ம்
ஆண்டு ஆகஸ்டு திங்கள் 3-ம் நாளன்று விடுதிக்குள் தாழ்த்தப்
[illegible] மாணவர்களுக்கும் பின்தங்கிய மாணவர்களுக்கும் தகராறு



ஏற்பட்டிருக்கின்றது. அதற்குப் பின்னால் மறுநாள் 1980-ம்
ஆண்டு ஆகஸ்டு திங்கள் 4-ம் நாளன்று கல்லூரி நடைபெற்றுக்
கொண்டிருக்கும்போது அதே தகராறு தொடர்ந்து தாழ்த்தப்
பட்ட மாணவர்களுக்கும் பிற்பட்ட மாணவர்களுக்கும் இடையே
தகராறு ஏற்பட்டு ராதா, திருநாவுக்கரசு என்ற எம்.எஸ்ஸி.
படிக்கின்ற மாணவர்கள் கத்தியால் குத்தப்பட்டிருக்கிறார்கள்.
அவர்கள் தஞ்சை மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்
கள். இவற்றுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் கடந்த இரண்டு
மூன்று ஆண்டுக்காலமாக அந்தக் கல்லூரியைப் பொறுத்த
மட்டில் சரியான முறையிலே நிர்வாகம் சரியாக நடைபெறாதது
தான். அந்தக் கல்லூரியின் பிரின்சிபால் கடந்த ஓராண்டுக்
காலத்தில் கல்லூரியில் பணியாற்றிய நாட்கள் 10 அல்லது 15
நாட்கள்தான் இருக்கும். ஏனைய நாட்களிலே எல்லாம் அந்த
பிரின்சிபால் விடுமுறையிலே இருந்திருக்கிறார். ஆனால் அப்
படிப்பட்ட நிலையில் அங்கே மாற்று முதல்வர் ஒருவர் நியமிக்கப்
படவில்லை. அங்கே கடந்த ஓராண்டுக்காலமாக துணை முதல்
வர்தான் பொறுப்பிலே இருந்தார். அந்தத் துணை முதல்வரும்
ஒரு வாரத்திற்கு முன்னால் அந்தக் கல்லூரியிலிருந்து இராம
நாதபுரம் மாவட்டத்திற்கு மாறுதல் செய்யப்பட்டிருக்கிறார்.
ஆகவே அங்கே தற்போது முதல்வரோ துணை முதல்வரோ,
நிர்வாகத்திற்குப் பொறுப்பானவர்கள் கிடையாது. அதே
போன்றுதான் விடுதியிலே இருக்கின்ற வார்டனும் சரிவர நிர்
வகிப்பது கிடையாது. இன்னும் சொல்லப் போனால் தாழ்த்தப்
பட்ட மாணவர்கள் அதிகமாக இருக்கின்ற அந்த விடுதிக்கு
ஒரு தாழ்த்தப்பட்ட ஆசிரியரை வார்டனாகப் போட்டால்
இப்படிப்பட்ட தகராறுகள் வராது. எனவே உடனடியாக இந்த
கல்லூரியில் நிரந்தரமான அமைதியை ஏற்படுத்த இந்த அவை
யின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும். மேலும்
கடந்த 3 ஆண்டுக் காலமாக குடந்தை கல்லூரியில் இப்படிப்பட்ட
ஜாதித் தகராறுகள் அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.
எனவே இந்த அவையின் இதர அலுவல்களை உடனடியாக
ஒத்திவைத்து இது பற்றி தீவிரமாக விவாதித்து முடிவு எடுக்க
வேண்டும் என்று கேட்டு விடை பெறுகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, குடந்தைக் கல்லூரியில் 1980-ம் ஆண்டு ஆகஸ்டு
திங்கள் 3-ம் நாளன்று நடைபெற்ற தகராறில் மாணவர்களுக்
குள்ளே கத்திக் குத்துச் சம்பவம் நடந்திருக்கின்றது. 3-ம்
தேதியும், 4-ம் தேதியும் தகராறு நடந்திருக்கின்றது. அரிசன
மாணவர்களுக்கும் பிற்பட்ட மாணவர்களுக்கும் இடையில் இந்தத்
தகராறு நடந்திருக்கின்றது. இந்தத் தகராறு வராமல் தடுத்து
இருக்க முடியுமா என்றால் முடியும். ஆனால் அதைச் செய்வதற்
குரிய பிரின்சிபால் நீண்ட நெடுங்காலமாக விடுப்பிலே இருந்து
கொண்டிருக்கிறார். மாணவர்களுக்குள்ளே வருகின்ற பிரச்சினை
களான ஹாஸ்டல் பிரச்சினையும் மற்றும் பல்வேறு பிரச்சினை

களையும் தீர்க்க வேண்டிய பிரின்சிபால் விடுப்பிலே இருந்தால் மாணவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பது யார்? இதன் விளைவாக மாணவர்களுக்குள்ளே தகராறு முற்றி மூன்றாம் தேதி ஏற்பட்ட தகராறு தொடர்ந்து 4-ம் தேதி கத்திக் குத்து சம்பவம் நடந்திருக்கின்றது. அதன்படி இரண்டு பேர் தஞ்சாவூர் மருத்துவமனையில சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மாணவர்களுக்குள்ளே இந்த மாதிரித் தகராறுகள் வராமல் ஆங்காங்கிருக்கின்ற கல்லூரியின் முதல்வர்கள் முறையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அப்படி எடுத்தால்தான் அதைத் தவிர்க்க முடியும். கும்பகோணம் கல்லூரியில் படிக்கின்ற மாணவர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் பரீட்சை எழுதி விட்ட பின்னால் அவர்களது ரிசல்ட்டை தடுத்து வைக்கின்ற நிலை ஏற்பட்டது. ஆகவே தொடர்ந்து இத்தகைய பிரச்சினைகள் எழுந்துக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு கல்வியமைச்சரின் கவனத்திற்கு இது கொண்டு செல்லப்பட்ட பிறகு தேர்தல் ரிசல்ட்டைத் தடுத்தது தவறு என்று நடவடிக்கை எடுத்தார்கள். இப்படி கீழே இருக்கக்கூடிய கல்லூரி முதல்வர் அவர்கள் சரியான நடவடிக்கை எடுக்காததன் விளைவாக முறையாகப் படித்து நல்ல வழிகளுக்கு வரவேண்டிய மாணவர்கள் இவ்வாறு ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் கத்திக் குத்து நடந்திருக்கின்றது என்றால், அதனால் காயம் ஏற்பட்டிருக்கின்றது என்றால் இந்தப் பிரச்சினையைப் பற்றி விரிவாக விவாதிக்க வேண்டும் அவ்வாறு விரிவாக விவாதிப்பதற்காக இன்றைய பிற அலுவல்கள் அனைத்தையும் ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும், பின்தங்கிய மாணவர்களுக்கும் இருந்து வருகின்ற ஒரு தொடர் தகராறின் விளைவாக எழுந்திருக்கிறது. உண்மையிலேயே கல்லூரி வரை வந்து கல்லூரியிலே பட்டப் படிப்பு படிக்கக்கூடிய மாணவர்கள் ஜாதியை அடிப்படையாக வைத்து, இந்தப் பிரச்னைகளில் ஈடுபடுகிறார்கள் என்று கருதுகிறபோது, உண்மையிலேயே நாம் வேதனைப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். வெட்கப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். கல்விதான் சமத்துவத்தைக் கொண்டு வருமென்று கருதியவர்கள் உண்டு. ஆனால் கல்வி சமூக அமைப்பில் தோற்றுவிட்டது என்று எண்ணுகிறபோது, வேதனைப்படாமல் இருக்க முடியாது. அதேபோல், இந்தப் பின்தங்கிய மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும், சமுதாயத்தில் ஏழைகளாக இருக்கின்றவர்களும், அந்த ஏழை எளியோர்கள் ஒன்று சேர்ந்து தங்களுடைய வாழ்வை உருவாக்கிக் கொள்ள வேண்டிய கால கட்டத்தில் இருக்கும்போது, அப்படி ஒன்றுசேர வேண்டியவர்கள் தங்களுக்குள் இந்த முரண்பாடுகளை வளர்த்துக் கொண்டிருக்



கிறார்கள் என்று கருதுகிறபோது, அவர்களுடைய எதிர்காலத்தைப் பற்றி நாம் அனைவரும் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். எப்படி தன் கை விரலால் தன் கண்ணைக் குத்திக் கொண்டால், ஆபத்து ஏற்பட முடியுமோ, அப்படித்தான் இந்த சம்பவம் நடந்திருக்கிறது என்பதை நான் முதலில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கும்பகோணம் அரசு கலைக் கல்லூரி, விக்டோரியா ஜூபிலி விடுதியைச் சார்ந்த எட்டு அரிசன மாணவர்கள் கும்பகோணம் கோட்ட ஆட்சியர் அவர்களை 4–8–80 அன்று சந்தித்து, பின் தங்கிய வகுப்பைச் சார்ந்த மாணவர்கள்மீது குற்றச்சாட்டைக் கூறி, ஒரு மனுவையும் அளித்தனர். அவர்களிடம், கோட்ட ஆட்சியர், அவர்களுடைய குறையை கல்லூரி முதல்வரைச் சந்தித்துத் தீர்த்து வைப்பதாகக் கூறி அனுப்பினார். இதற்குப் பின்னர், கும்பகோணம் அரசு கலைக் கல்லூரியைச் சார்ந்த பின் தங்கிய வகுப்பு மாணவர்கள், தங்கள் கல்லூரி மாணவர் திரு. போர்ச்செழியன் என்பவரை 1–8–80 அன்று சோழன் போக்கு வரத்துக் கழகத்தைச் சார்ந்த நடத்துனர் ஒருவர் அடித்ததைக் கண்டித்து ஊர்வலம் செல்ல வேண்டும் என்று கூறினர். முன்னரே ஏற்பட்டிருந்த மனவேறுபாட்டினால், அரிசன மாணவர்கள் மேற்படி ஊர்வலத்தில் கலந்துகொள்ள மறுத்துவிட்டனர். இதன் தொடர்பாக ஏற்பட்ட வாய்த் தகராறு கலவரத்தில் முடிந்தது. பின் தங்கிய மாணவர்களுக்கும், அரிசன மாணவர்களுக்கும் இடையே ஏற்பட்ட தாக்குதலில், பின்தங்கிய வகுப்பினரைச் சார்ந்த மாணவர்களில், திரு. இராதா (முதுகலை இரண்டாம் ஆண்டு மாணவர்), திரு. திருநாவுக்கரசு (இரண்டாம் ஆண்டு முதுகலை விஞ்ஞானப் பிரிவைச் சார்ந்தவர்) ஆகியோர், திருவாளர்கள் தமிழ்ச்செல்வன் மற்றும் செயபால் எனப்படும் அரிசன மாணவர்களால் கத்தியால் குத்தப்பட்டு விட்டனர். பின்தங்கிய மாணவர்களின் கல்லெறித் தாக்குதலினால், ஆறு அரிசன மாணவர்களுக்குச் சிறு காயமேற்பட்டது. இதன் தொடர்பாக, கும்பகோணம் வடக்குக் காவல் நிலையத்தில், குற்ற எண். 400/80-ல் இந்திய தண்டனைச் சட்டம் 147, 323, 324 மற்றும் 336 பிரிவின் கீழ் ஒரு வழக்கும், மற்றும் குற்ற எண். 401/80-ல் இந்திய தண்டனைச் சட்டம் 147, 323, 336 பிரிவின்கீழ் ஒரு வழக்கும் பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடைபெற்று வருகிறது.

கத்திக் குத்துக் காயம்பட்ட மாணவர்களுக்கு, தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு, வருகிறது. அவர்களின் நிலைமை தேறி வருகிறது. சிறு காயமேற்பட்டவர்களுக்கு, பாபநாசம் அரசினர் மருத்துவ மனையில் புற நோயாளிகளாக சிகிச்சை அளிக்கப்பட்டது. செயபாலன் என்ற அரிசன மாணவர் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டுள்ளார். இராசேந்திரன், நீலமேகம் என்ற இரண்டு அரிசன மாணவர்களும் கைது செய்யப்பட்டு, ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளனர். தமிழ்ச்செல்வன் என்கிற அரிசன

[திரு. ச. இராமச்சந்திரன்] [1980 ஆகஸ்ட் 11

மாணவர் தலைமறைவாக உள்ளார். பின்தங்கிய வகுப்பு மாண
வர்களில் செல்வராஜ் மற்றும் புஷ்பராஜ் என்பவர்கள் கைது
செய்யப்பட்டு, ஜாமீனில் விடப்பட்டனர். மேற்கண்ட
அனைத்துநிகழ்ச்சிகளும் கல்லூரிக்குள், கல்லூரி முதல்வர் அறைக்கு
முன்னர் நிகழ்ந்துள்ளது. கல்லூரி முதல்வர் அவர்கள் நீண்ட
காலமாக விடுப்பில் இருக்கிறார்கள். அந்த நிறுவனத்தை சரி
யாகக் கண்காணிக்கவில்லை என்ற குறையை மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நிச்சயமாக அரசு
அதைப்பற்றிக் கவனிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன்.

10–8–80 வரை கல்லூரியும், விடுதியும் மூடப்பட்டுள்ளது.
கல்லூரி விடுதியில் தங்கியுள்ள மாணவர்களை, அவர்களுடைய
சொந்த ஊருக்கு காவல் துறையினரின் துணையுடன் அனுப்பி
வைக்கப்பட்டுள்ளனர். தகுந்த காவல் துறை பந்தோபஸ்து
கல்லூரியிலும், விடுதியிலும் போடப்பட்டுள்ளது. கும்பகோணம்
துணை காவல் துறைக் கண்காணிப்பாளர், நகரக் காவல் துறை
விதி, பிரிவு 30 (2)ன்படி ஒரு தடை உத்திரவினைப் பிறப்பித்
துள்ளார்.

தற்போது அங்கு அமைதி நிலவுகிறது. எனவே இப்பிரச்சினை
குறித்து விவாதிக்க சட்டமன்றப் பேரவையின் இதர அலுவல்
களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப்பின்
பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம்
குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால் இதற்கு இசைவு
மறுக்கப்பெறுகிறது.

## 4. கவன ஈர்ப்புகள்.

### அ. சென்னை பல்லவன் போக்குவரத்துக் கழக பேருந்து விபத்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள்
ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன் ஆகியோர்
கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள்.
திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் மாண்புமிகு போக்கு
வரத்துத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவார்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, "28–7–1980 அன்று பல்லவன்
போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து ஒன்று சென்னை சென்ட்ரல்
ரயில் நிலையத்தில் புகுந்து பொதுச் சொத்துக்குச் சேதம் விளை





வித்தது" குறித்த பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவ
னத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, 28–7–1980 அன்று சென்னை மத்திய
புகைவண்டி நிலையத்தில் ஏற்பட்ட விபத்து பற்றிய விவரம் :—

பல்லவன் போக்குவரத்துக் கழக பெருநகர்ப் பிரிவைச் சேர்ந்த
பேருந்து பதிவு எண். TMN. 1500, தடம் எண். 21-ல் மந்தை
வெளியிலிருந்து பாரிமுனைக்கு ஓடிக்கொண்டிருந்தபோது 'பிரேக்
பிடிக்காமல்' சென்னை 'ஸ்டான்லி வயடெக்ட்' பாலத்தி
லிருந்து பெரியார் சாலைக்குத் திரும்ப முடியாமல் அதன் ஓட்டுநர்
திரு. முனுசாமி அந்தப் பேருந்தை முன் செல்லும் பேருந்துகளின்
மீது மோதாமல் தடுப்பதற்காக நேராகச் செலுத்தி ஆட்கள்
இல்லாத போக்குவரத்துத் திடலில் ஏற்றி விளக்குக் கம்பத்தில்
மோதி நிறுத்தினார். இந்த மோதலின் விளைவாக இரண்டு
பயணிகளுக்கு சிறிது காயம் ஏற்பட்டு சென்னைப் பொது
மருத்துவ மனையில் புற நோயாளிகளாக சிகிச்சை அளிக்கப்
பட்டது. இவ்விபத்தில் காயமடைந்தவர்களின் விபரங்
களாவன :—

(1) சங்கர் (இடது புருவத்தில் வெட்டு), த.பெ., முனுசாமி,
2 பிளாக், மகுதித் தெரு, மைலாப்பூர், சென்னை-4.

(2) சுப்பிரமணி (இடது கணுக்காலில் சிராய்ப்பு) த.பெ.
கன்னியப்ப கிராமணி, 98, பிள்ளையார் கோயில் தெரு, ஆர். கே.
நகர், சென்னை.

இந்த திடீர் விபத்திற்கான காரணம் பற்றி மோட்டார் வாகன
ஆய்வாளரின் ஆய்வுப்படி வலது முன்புற சக்கரத்தின் பிரேக் பிடிக்
கும் 'கப் வாஷர்' வேலை செய்யவில்லை. இந்த பிரேக் சிலிண்
டரில் உள்ள 'பிஸ்டனில்' கோடுகள் இருக்கின்றன என்பதாகும்.
இந்த பேருந்து பற்றிய விவரங்கள் :

19–2–1980ல் பேருந்துக்கு தகுதி சான்றிதழ் பெறப்பட்டது
இது 18–8–1980 வரை செல்லுபடி ஆகும். 27–6–1980
தேதி வாரப் பராமரிப்பில் இந்த 'வீல் சிலிண்டர்' சீர் செய்து
மாட்டப்பட்டது. ஜூலை மாதத்தில் இந்த வண்டியில் தடை
பற்றிய புகார் எதுவும் இருக்கவில்லை, எதிர்பாராவிதமாக
இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. பேருந்தைத் தயாரிக்கும் நிறுவனங்
கள் தங்களுக்கு வேண்டிய பிரேக் சம்பந்தப்பட்ட பாகங்களைக்
கீழ்க்கண்ட இரு நிறுவனங்களிடமிருந்து மட்டுமே வாங்குகின்றன:

## (1) BRAKES INDIA LIMITED
## (2) AUTOMOBILE PRODUCTS OF INDIA API

அதைப் போலவே பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலும் மேற் கண்ட இரு நிறுவனங்களிடமிருந்து மட்டுமே பிரேக்குகளுக்கு வேண்டிய உதிரிப் பாகங்கள் வாங்கப்படுகின்றன. விபத்து நடந்த பேருந்திலும் இதே உதிரிப் பாகங்கள்தான் பொருத்தப்பட்டிருக் கின்றன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: இந்த விவர அறிக்கையில் சில விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே, பிரேக் பிடிக்கப்படாததற்குக் காரணமாக 'கப் வாஷர்' வேலை செய்யவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். பிரேக் சிலிண்டரில் உள்ள பிஸ்டனில் கோடுகள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். மேலும் 19–2–1980-ல் பேருந்துக்குத் தகுதிச் சான்றிதழ் பெறப்பட்டது என்றும் 18–8–1980 வரை செல்லுபடியாகுமென்றும், 27–6–1980 தேதி வரைப் பராமரிப் பில் இந்த 'வீல் சிலிண்டர்' சீர் செய்து மாட்டப்பட்டது என்றும் கூறியிருக்கிறார்கள். வாரப் பராமரிப்பு நடந்தது 27–6–1980. விபத்து நடந்தது 28–7–80 என்பதைப் பார்க்கும் போது வாரப் பராமரிப்புக்குப் பிறகு மீண்டும் சரிபார்க்கப்பட வில்லை என்று தெரிகிறது. டிரைவரின் சாமர்த்தியத்தால் சேதம் இல்லாமல் தடுத்து நிறுத்தியிருக்கிறார். இதே போன்று இதே இடத்தில் போன ஆண்டும் ஒரு விபத்து ஏற்பட்டு சிலர் இறந்திருக்கிறார்கள். இதையெல்லாம் தவிர்க்கும் முறையில் பராமரிப்பு ஏற்பாடுகளை நல்ல முறையில் செய்ய நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: வாரப் பராமரிப்பு என்று பராமரிப்பு செய்யப்பட்டு வந்தாலும், இந்த பிரேக் சிலிண்டர் களைப் பொறுத்தவரை அவ்வப்போது அதிலே குறைகள் ஏற்படு கிற நேரத்தில் அங்கு பராமரிப்பதற்காக இருக்கின்ற தொழி லாளர்கள் பார்க்கிறார்கள். அங்கிருக்கும் அதிகாரிகள் பார்க் கிறார்கள். அப்படிப் பார்த்து சோதனை செய்த பின்புதான் வண்டி வெளியே எடுக்கப்படுகிறது. இதுபோன்ற பொருள்களை ஆயிரக் கணக்கில் வாங்கும்போது இரண்டொன்று இதுபோன்று அமைந்து விடுகின்றன. எவ்வளவு நல்ல முறையில் பராமரித் தாலும் சில நேரங்களில் இப்படிப்பட்ட கோளாறுகள் ஏற்பட்டு விடுகின்றன. இந்தக் கோளாறுகளை வைத்து அங்கே இருக் கிறவர்கள் சரியாகப் பராமரிக்கவில்லை என்று சொல்ல முடி யாது. அந்த வண்டிகள் ஓட்டிப் பார்க்கப்படும்போது நல்ல முறையில் இருக்கின்றன. மூன்று மணிநேரம், நான்கு மணி நேரம் ஓடிய பிறகு கோளாறு வந்து விடுகிறது. இதையும் கூடக் களையும் அளவுக்குத் திறமை வாய்ந்தவர்களை அமைத்து, இருப்பவர் களையும் பயன்படுத்தி நல்ல முறையில் நடவடிக்கை எடுக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



(முற்பகல் 11-10)

### ஆ. சிமிண்டு மூட்டைகளைப் பதுக்கி கலப்படம்செய்து கடத்துவது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே,

" விருகம்பாக்கம் வெங்கடேச நகரில் 1980 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 18 ஆம் தேதியன்று ஒரு குடிசைக்குள் 240 சிமிண்ட் மூட்டைகளை பதுக்கி வைத்திருந்ததாக நடவடிக் வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதே மாதிரி தமிழ்நாட்டில் எல்லா இடங்களிலும் பதுக்கி கலப்படம் செய்து கடத்துவதால் உண்மையாக வீடுகட்டும் பொதுமக்களுக்கு சிமிண்ட் கிடைக்காத காரணத்தால் மக்கள் அல்லல் படுவது குறித்த "

அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்பு மிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, சிமெண்ட் விநியோக முறையில் 1979ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த நிலைக்கு மாறாக, குறைபாடுகள் மற்றும் பதுக்கல், கலப்படம் முதலான முறைகேடுகள் எதுவும் விளையாவண்ணம் சீரான முறையில் பொதுமக்களுக்கு சிமெண்ட்டை அரசு நிர் ணயித்த விலையில் விற்பனை செய்யப்பட வேண்டும் என்ற நோக்குடன் மத்திய அரசின் அனுமதியுடன் கொண்டுவரப் பட்ட 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிமெண்டு விநியோகம் (உரிமம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) ஆணை 1979 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் தேதி முதல் இம்மாநிலத்தில் அமுல் படுத்தப்பட்டது. பொது விநியோகத்தைப் பொறுத்தவரை இவ்வாணையின்படி 5 மூட்டையும் அதற்குக் குறைவாகவும் சிமெண்ட் தேவைப்படுபவர்கள் சிமெண்டை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட் டுறவு நிறுவனங்கள் மூலமாக ஆதாரம் எதுவுமின்றி பெற்றுக் கொள்ளலாம். 5 மூட்டைக்கு மேல் 20 மூட்டைகள் வரை தேவைப்படுபவர்கள் சொத்து வரி ரசீது அல்லது கிஸ்தி ரசீதையோ அடையாளம் காட்டி அனுமதிச்சீட்டு மூலம் பெற் றுக் கொள்ளலாம். 20 மூட்டைக்கு மேல் தேவைப்படுபவர்கள் தகுதிபெற்ற பொறியாளரின் சான்றிதழ்கள் அங்கீகரிக்கப் பட்ட வரைபடங்கள், மதிப்பீடுகள் மற்றும் சிமெண்ட் தேவை பற்றிய விபரங்களுடன் பர்மிட் வழங்க, அங்கீகரிக்கப்பட்ட அதி காரிகளான தாசில்தார், பஞ்சாயத்து ஒன்றிய ஆணையரிட மிருந்து விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். இப்பொழுது முறையாக கட்டிடம் கட்ட ஒப்புதல் முதலியன பெற்றவர் கட்கும், நியாயமாக கட்டிடம் கட்ட தேவைப்படுபவர்கட்கும் சிமெண்ட் இன்னல் எதுவும் இன்றி நியாய விலையில் கிடைக் கிறது.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1980 ஆகஸ்ட் 11

நாட்டில் .மொத்த சிமெண்ட் உற்பத்தியில் 15 சதவிகிதம்
இம்மாநிலத்தில் மட்டும் உற்பத்தியாகும் நிலையில் சிமெண்ட்
உற்பத்தியில் இம்மாநிலம் முன்னணியில் இருக்கிறது.
என்றாலும், சிமெண்ட் விநியோகத்தைப் பொறுத்தமட்டில்
பொதுவாக மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதால்
மத்திய அரசு மாநிலத்திற்கு என ஒதுக்கீடு செய்யும்
சிமெண்டை மட்டுமே இம்மாநிலத்தின் பல்வேறு துறைகளின்
தேவைக்கும் சரிக்கட்ட வேண்டியுள்ளது. இவ்வாறு மத்திய
அரசால் தமிழகத்திற்கு முதல் காலாண்டில் மொத்தம் ஒதுக்கப்
பட்ட 3·84 இலட்சம் டன் சிமெண்ட்டில் பொது விநியோகத்
திற்கு 1·44 இலட்சம் டன் சிமெண்ட் ஒதுக்கீடு செய்யப்பட்டது.
இவ்வாண்டில் 2-ம் காலாண்டில் மொத்தம் ஒதுக்கப்பட்ட
4,01,000 டன்களில் பொது விநியோகத்திற்கென மாவட்ட
ஆட்சியாளர்கள் மூலம் பெர்மிட் முறையில் விற்பனை செய்
வதற்காக 2,33,000 டன் சிமெண்ட் ஒதுக்கீடு செய்யப்பட்டது.
மாவட்ட ஆட்சியாளர்களது தேவை மேலும் மேலும் அதி
கரித்து வருவதால் இவ்வாண்டில் மூன்றாம் காலாண்டிற்கு
வழக்கமாக ஒதுக்கப்பட்டுள்ள 3,80,000 டன்னுக்கு மேல்
கூடுதலாக 50,000 டன் சிமெண்ட் ஒதுக்குமாறு மத்திய
சிமெண்ட் கட்டுப்பாடு அதிகாரியை இவ்வரசு கோரியுள்ளது.
இவ்வாறு தமிழகத்தின் சிமெண்ட் தேவையைவிட இம்மாநிலத்
திற்கு ஒதுக்கப்படும் சிமெண்ட்டின் அளவு குறைவாகவே உள்ள
தால் பொதுமக்கள் தங்கள் தேவைப்படி சிமெண்ட் பெறுவதில்
ஓரளவு இன்னல் ஏற்படுகிறது.

இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி சில சமூக விரோதிகள்
பதுக்கல், கலப்படம் முதலான முறைகேடுகளை செய்ய முற்படு
கின்றனர். என்றாலும், மாவட்ட ஆட்சியாளர்கள் சிமெண்ட்
விநியோகத்தை சீரான முறையில் உடனடியாக காலதாமத
மின்றி வழங்குவதற்கான உத்தரவுகளை அரசு அவ்வப்போது
பிறப்பித்து வருகிறது. பெர்மிட் முறைப்படி முறையான உப
யோகத்துக்கு மட்டுமே சிமெண்ட் பெறுவதையும் விரைவாக
பரிசீலிப்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள வட்ட
ஆட்சியலுவலகங்களில், 1000-க்கு மேற்பட்ட சிமெண்ட் பெர்மிட்
விண்ணப்பங்கள் பெறும் சில அலுவல்கங்களுக்கு சிமெண்ட் விநி
யோக வேலைக்காக சிறப்பு பணியாளர்கள் நியமிக்க அரசு
ஏற்பாடு செய்துள்ளது. மேலும் பதுக்கல், மற்றும் கலப்படம்
செய்யும் சமூக விரோதிகளையும் கண்டுபிடித்து தண்டிப்பதற்
காக மாநில அரசின் ஒரு பிரிவான குடிமைப்பொருள் குற்றப்
புலனாய்வுத்துறை (C.I.D. Civil Supplies) செயல்பட்டு
வருகிறது. ஆகவே, விதிமுறைகளுக்குப் புறம்பாக சிமெண்ட்
விற்பனையில் பதுக்கல், கலப்படம் செய்வது என்பது அவ்
வளவு எளிதன்று. அவ்வாறு செய்பவர்கள் குற்றப்புலனாய்வுத்
துறையின் கண்காணிப்பினால் மாட்டிக்கொள்கிறார்கள்.



1980 ஆகஸ்ட் 11] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வுப் பிரிவின் காவல் துறை துணைத் தலைவர் கொடுத்துள்ள விவரங்களின்படி இந்த ஆண்டில், இன்றைய தேதிவரை, சிமெண்ட் மூட்டைகளைப் பதுக்கி வைத்திருந்த குற்றங்களுக்காகவும், உரிமம் பெற்ற கையிருப்பிற்கு மேலே, சிமெண்டு மூட்டைகளை, வைத்திருந்த குற்றங்களுக்காகவும், உரிமம் இல்லாமல் வைத்து இருந்த குற்றங்களுக்காகவும், மொத்தம் 84 குற்றங்கள் தமிழ்நாட்டிலுள்ள குடிமைப் பொருள் குற்றப்புலனாய்வுத் துறையின் பல்வேறு பிரிவுகளால் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றில் விருகம்பாக்கத்தில், 1980 ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 17-ம் தேதியிலும், 1980 ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 21-ம் தேதியிலும் , கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு சிமெண்டு கலப்படக் குற்றங்களும் அடங்கும். கண்டுபிடிக்கப்பட்ட 84 குற்றங்களில் மொத்தம் ரூ. 2·75 இலட்சம் பெறுமானமுள்ள 10,896 சிமெண்ட் மூட்டைகள் கைப்பற்றப்பட்டன. 84 குற்றங்களில், குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் 72-ம் பதுக்கல் ஒழிப்புக் குற்றப் புலனாய்வு பிரிவால் 12-ம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கடந்த (1979) ஆண்டிலும் குடிமைப்பொருள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால், 3 குற்றங்கள் சிமெண்ட் கலப்படம் செய்ததற்காகவும், 55 குற்றங்கள் உரிமம் இன்றி சிமெண்ட் மூட்டைகள் வைத்திருந்ததாகவும், மற்றும் கையிருப்பு அளவுக்கு மிகையாக வைத்து இருந்ததற்காகவும், கண்டுபிடிக்கப்பட்டன.

கடந்த 1980 ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 17-ம் தேதியிலும், 1980 ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 21-ம் தேதியிலும் விருகம்பாக்கத்தில் '' சிமெண்ட் கலப்படக் குற்றத்திற்காக '' கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு குற்றங்கள் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

விருகம்பாக்கம் பகுதியில் '' சிமெண்ட் '' கலப்படக் குற்றங்கள் நடப்பதாகக் கிடைத்த தகவலின்பேரில், 1980 ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 17 ஆம் நாள் அன்று, குற்றமிழைப்போரைக் கண்டுபிடித்து அவர்களின் மீது நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப் புலனாய்வுப் பிரிவு சோதனை நடத்தியது. விருகம்பாக்கம் பகுதியில், வெங்கடேசபுரம், பிளாட் எண். 72-ல், உள்ள குடிசையில் திடீரென்று சோதனையிடப்பட்டதில், கலப்படம் செய்வதற்காகவும் கள்ளமார்க்கெட்டில் விற்பதற்காகவும் வைத்திருந்த 240 சிமெண்ட் மூட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டன. சோதனையிடப்பட்ட சமயத்தில், மேற்படி குடிசையை கள்ளமார்க்கெட்டில் சிமெண்ட் விற்பனை செய்யும் பொருட்டு குத்தகைக்கு வாங்கிய திரு. சு. வேலு மற்றும் அவரால் சிமெண்ட் கலப்படத்திற்காக வேலைக்கு வைக்கப்பட்டிருந்த (1) த. நடராசன், (2) வீ. ஆறுமுகம் ஆகியோரை விசாரித்ததில் கருங்கல்தூள் (Stone Powder) எடுத்து வருபவர்கள் வருகைக்காக அவர்கள் காத்துக்கொண்டிருப்பதாக தெரிந்தது. அந்த நேரத்தில், 100 மூட்டை கல்தூள்வேன்,

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1980 ஆகஸ்ட் 11

எம்.டி.டி. 1977-ல் ஏற்றிக்கொண்டு, அமிஞ்சிக்கரை, பட்டாபி
ராமன் என்ற காரோட்டுநரும், மற்றும் நான்கு பேர்களும்
வேனில் அந்தக் குடிசைக்கு வந்தனர். அவர்களை விசாரித்த
தில், சிமெண்டுடன் கலப்பதற்காகத்தான் 100 மூட்டை
கல்தூளை கொண்டு வந்திருப்பதாக, அவர்கள் ஒப்புக்கொண்ட
னர். அவர்களிடமிருந்து ரூ. 6,480 பெறுமான , 240 மூட்டை
சிமெண்ட்டும், 100 மூட்டை கருங்கல் தூளும் கைப்பற்றப்பட்ட
துடன் குற்றவாளிகள் வேலுவும் மற்றும் 7 பேரும் கைது
செய்யப்பட்டனர். விருகம்பாக்கம் காவல் நிலையத்தில்
அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அவர்கள்
எட்டுப்பேர்களையும், பூந்தமல்லி சப்-டிவிஷன் ஜுடிஷியல்
மாஜிஸ்ரேட்டினால், 15 நாட்கள் காவலில் வைக்க உத்திரவிடப்
பட்டது. கைப்பற்றப்பட்ட பொருட்கள் நீதிமன்றத்தில் ஒப்
படைக்கப்பட்டன. வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

அதே போல் 1980 ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 21-ம்
தேதி அன்று இரவு கிடைத்த தகவலின்பேரில் விருகம்பாக்கம்,
வெங்கடேசபுரம் எக்டன்சன்-1, பிளாட் எண். 75-ல் உள்ள
குடிசையும் சோதனை போடப்பட்டது. சோதனையில், கலப்
படத்திற்காக அங்கு வைக்கப்பட்டிருந்த 57 மூட்டை சிமெண்
டும், 120 மூட்டை கருங்கல் தூளும், கண்டு பிடிக்கப்பட்டு,
கைப்பற்றப்பட்டன. இவைகளின் மதிப்பு ரூ. 1,539 ஆகும்.
இது தொடர்பாக ஜெயராமன், பெருமாள் என்ற இருவரையும்
கைது செய்து, விருகம்பாக்கம் காவல் நிலையத்தில், வழக்கு
பதிவு செய்யப்பட்டது. கைப்பற்றப்பட்ட சிமெண்ட் மூட்டை
களும், கல்தூள் மூட்டைகளும் பூந்தமல்லி சப்-டிவிஷன் நீதி
மன்றத்தில் ஒப்படைக்கப்பட்டன. அவர்கள் இருவரையும் 15
நாட்கள் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார். வழக்கு
புலன் விசாரணையில் உள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள விவரங்களிலிருந்து இம்மாநிலத்
தில் சிமெண்ட் விநியோகம் செய்வதில் ஏற்படும் பதுக்கல்,
கலப்படம் முதலான குற்றங்களை குடிமைப்பொருள் குற்றப்
புலனாய்வுப் பிரிவு கண்காணித்து தக்க நடவடிக்கை எடுத்து
வருகிறது என்பது தெளிவாகும். மேலும் மேற்படி குற்றங்களை
அறவே ஒழிப்பதற்கான முயற்சிகளையும் அரசு எடுத்துவருகிறது.
இது சம்பந்தமாக மாவட்ட ரீதியாக கண்காணிப்புக் குழுக்கள்
(Vigilance Commitees) ஏற்படுத்துவது பற்றியும் அரசு
ஆலோசித்து வருகிறது.

இதிலிருந்து பொதுமக்களுக்கு குறைபாடுகளும், ஊழலும்
காலதாமதமும் ஏனைய இடர்பாடுகளும் தோன்றாவண்ணம்
அரசு விழிப்பாக சீரான முறையில் சிமெண்ட் விநியோகம்
செய்வதற்கான வழிவகைகளை மேற்கொண்டுள்ளது என்பது
தெளிவாகும்.



1980 ஆகஸ்ட் 11]

திரு. இரா. தாமரைக்கனி : துணைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில், வட்ட ஆட்சியர்
அலுவலகத்திலே மனுக் கொடுத்தால் சிமிண்ட் மூடை வழங்கப்
படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் வட்டாட்சியர்
அலுவலகத்திலே சிமிண்ட் வேண்டுமென்று மனுக்கள் கொடுத்
தால் சீனியாரிட்டி அடிப்படையிலே சிமிண்ட் வழங்கப்படு
வதில்லை. உதாரணம் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகா அலுவலகம்.
சிமிண்ட் எந்த நோக்கத்திற்காக கொடுக்கிறார்களோ அந்த
நோக்கத்திற்காக அவர்கள் பயன்படுத்துகிறார்களா என்று வட்ட
ஆட்சியர் தணிக்கை செய்வது கிடையாது. ஆகவே பதுக்கல்
செய்கிறார்கள். வியாபாரிகள் அதிகமாகக் கலப்படம் செய்து
அதை விற்கிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது. அந்த
அலுவலலத்தில் ஏற்கெனவே அதிகாரிகள் பற்றாக்குறை. அதே
நேரத்தில் தாலூக்கா அலுவலகத்திலே மனுக்கொடுத்தவர்களுக்கு
சிமிண்ட் கொடுப்பதற்கு போதுமான ஸ்டாக் இல்லை என்ற
நிலைமையும் இருக்கிறது. ஆகவே சிமிண்ட் மூடைகளை
விநியோகம் செய்வதற்கு தனியாக அதிகாரிகள் போடப்படுமா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : துணைத் தலைவர்
அவர்களே, ஆயிரத்திற்கும் மேற்பட்ட மனுக்கள் வருகின்ற
தாலூக்கா அலுவலகங்களிலே கூடுதலாக ஒரு அலுவலரைக்
கொண்டு பணியாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.
அதற்கு அடுத்து பதுக்கல், கலப்படம் இவற்றைத் தடுப்பதற்
காக விஜிலன்ஸ் கமிட்டீஸ் ஒவ்வொரு மாவட்டத்திலேயும் கண்
காணிப்புக் குழுக்களை அமைப்பதற்காகவும் இந்த அரசு முடிவு
செய்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத்
தெரிவித்துக் கொள்கிறேன். தாலூகா அலுவலகங்களிலே தாசில்
தாரைப் பொறுத்தவரையில் சீனியாரிடி அடிப்படையிலே தான்
வருகின்ற மனுக்களை வைத்துப் பரிசீலிக்கவேண்டும். மாண்பு
மிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே தாலூகா அலு
வலகத்திலே தவறு நடப்பதாகச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.
தவறு செய்வதாக சம்பந்தப்பட்ட அதிகாரி தவறு செய்வ
தாக அல்லது அந்த அலுவலகத்திலே தவறு நடப்பதாக கவனத்
திற்கு அவர்கள் கொண்டுவருகிறபோது சம்பந்தப்பட்டவர்கள்
மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : துணைத் தலைவர் அவர்களே,
அமைச்சர் அவர்கள் விஜிலென்ஸ் இதற்காக என்று தனியாக
அமைக்கப்பட்டிருக்கிறது அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்
என்று சொன்னார்கள். பொது மக்கள் விஜிலன்சுக்குப்
போவது இல்லை. அதிகாரிகளிடம்தான் போவார்கள். சிவில்

சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஐ.ஏ.எஸ். அதிகாரி ( ** ** )
இருக்கிறார்கள், அவர்களிடம் சிமிண்ட் கடத்தப்
படுகிறது என்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமானது ஒரு
அதிகாரியிடம் 'புகார் கொடுக்கப்பட்டது, சம்பந்தப்பட்ட
ஐ.ஏ.எஸ் அதிகாரி மாறுவேடத்திலே அங்கே சென்றிருக்கிறார்கு
சிவில் சப்ளைஸ் அதிகாரிகள் அவரிடமே அதிகமாகக் கேட்டிருக்
கிறார்கள்...........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பெயர் குறிப்
பிட்டுச் சொல்லக்கூடாது. சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: கேள்வியைத் தான் கேட்க வரு
கிறேன்.

* * * * *

ஆதலால் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முடிய
வில்லை. எனவே, ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு இதற்கான பவர்
கொடுக்கப்படுமா? வருவாய்த்துறை அதிகாரியிடம் இருக்கின்ற
அலட்சியப் போக்கின் காரணமாகக் கடைக்காரர் மூட்டைகளில்
ஹூக் போட்டு சிமிண்டை எடுத்துவிடுவதால் அதன் எடை குறை
வாக இருக்கிறது. அந்தக் குறையையும் போக்குவதற்கு அரசு
என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதையும் அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு சட்டப்
பேரவைத் துணைத் தலைவரவர்களே, எந்தக் குற்றங்களாக
இருந்தாலும் காவல்துறையினர் பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்கு
களைப் பதிவு செய்ய வேண்டும், அல்லது விசாரணைக்கு உட்
படுத்த வேண்டும் என்பது நடைமுறையாக இருக்கிறது. நான்
சொன்னது, விஜிலன்ஸ் கமிட்டி ஏற்கெனவே இல்லை இப்போது
கண்காணிப்புக் குழு என்று மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு,
மாவட்டங்கள்தோறும் அமைத்து இப்படிப்பட்ட தவறுகள் நடக்
கும் பொழுது அது பற்றிக் கண்காணிப்பதற்காக நடவடிக்கை
எடுக்க அந்த மக்கள் குழு, 'விஜிலென்ஸ் கமிட்டி' அல்லது
கணிகாணிப்புக் குழு என்று ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்க
லாம் என்பதைப்பற்றி அரசு ஆலோசித்து வருகிறது என்று
நான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு
உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் பேசும்பொழுது

* * * * * *

என்று சொன்னார்கள். அதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து
நீக்கி விடும்படி ஆணையிடுகிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது.





## *இ. செயற்கைபட்டு, சாயமருந்துகள் விலையேற்றமும் நெசவாளர்கள் மறியலும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து திரு.
கே. எம். தங்கமணி அவர்கள் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம்
வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்பு கொடுத்திருக்
கிறார்கள். அவர்கள் அமைச்சரின் கவனத்திற்கு அதைக்
கொண்டு வருவார்கள்.

* திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு சட்டமன்றப்
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''செயற்கைபட்டு, சாய மருந்துகள், பருத்தி நூல் ஆகிய
வற்றின் விலையேற்றத்தால் தென் ஆற்காடு மாவட்டத்தில் நெச
வாளர்கள் மறியலில் ஈடுபட்டு வருவது குறித்த'' அவசரப்
பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு
கைத்தறி கதர்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்
கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள 12 கூட்டுறவு
நூற்பாலைகள் உற்பத்தி செய்யும் 7,000 பேல்தளைக் கொண்ட
பருத்திநூல், கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள நெசவாளர்களுக்கு
நியாயமான விலையில் கோ ஆப்டெக்சின் 21 நூல் விற்பனை
நிலையங்கள் வாயிலாக தட்டுப்பாடில்லாமல் விநியோகிக்கப்
படுகின்றன.

1979 மே/ஜூன் மாதங்களில் ஏற்பட்ட நூற்பாலை தொழி
லாளர்கள் வேலை நிறுத்தத்திற்குப் பின் நூல்விலை 15 முதல்
30 சதவிகிதம் வரையில் உயர்ந்து தனியார் துறை நெசவாளர்கள்
பாதிக்கப்பட்டனர். அப்பொழுது தனியார் துறையில் உள்ள
நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் நூல் கிடைக்கச் செய்ய
கைத்தறித் துணிநூல் துறையினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை
யினால் கோவை தென்னிந்திய ஆலைகள் சங்கம் வாயிலாக 1979
செம்டம்பர் மாதம் 3674 பேல்கள் நூல் நியாயமான விலையில்
தனியார் துறை நெசவாளர்களுக்குக் கிடைத்தது.

அதன் பின் மத்திய அரசு கொண்டு வந்த நியாய விலையில்
நூல் விநியோகிக்கும் திட்டத்தின் மூலம் 1979 அக்டோபர் முதல்
1980 ஜனவரி வரை மொத்தம் 12,903 பேல் நூல் தனியார்

---

*1980-ம் ஆண்டு, ஆகஸ்ட் 7-ம் தேதியன்றே அவையில்
அனுமதி பெற பெற்றுள்ளது.

துறை நெசவாளர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் காரணமாக நூல்விலை ஓரளவு இறங்கியது. இதை அடுத்து இத்திட்டம் மத்திய அரசினால் 1980 பிப்ரவரி முதல் தேதியிலிருந்து கைவிடப்பட்டது.

தமிழ்நாட்டில் அமல்படுத்தப்பட்ட மின்வெட்டின் காரணமாக நூல் விலை மீண்டும் ஏறியது. நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் நூல் கிடைக்க வழி வகைகள் செய்யும் பொருட்டு, மேலே கண்டுள்ள மத்திய அரசுத் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்தும்படியும், 1980 பிப்ரவரி மாதம் கடைசி வாரம் நிலவிய விலையில் நூல் விநியோகம் செய்யவும், மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.

இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் வாரம், ஏப்ரல் மாதம் முதல் வாரம், ஜூலை மாதம் முதல் வாரங்களில் நிலவிய நூல் விலை விபரம் வருமாறு:—

| நூல் எண். | ஜனவரி விலை. | ஏப்ரல் விலை. | ஜூலை விலை. |
|---|---|---|---|
| | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| 20 எண் .. | 85·50 | 90·00 | 91·00 |
| 40 .. .. | 126·00 | 137·00 | 135·00 |
| 60 கார்டெடு. .. | 175·00 | 180·00 | 186·00 |
| 80 கார்டெடு. .. | 217·30 | 217·00 | 220·00 |
| 100 கார்டெடு. .. | 295·00 | 340·00 | 312·40 |

செயற்கைப்பட்டு நூல்.—செயற்கைப்பட்டு நூல் சமீப காலத்தில் கீழ்க்கண்டவாறு ஓர் அளவு விலை உயர்ந்துள்ளது.

| | ஏப்ரல். | மே. | ஜூன். | ஜூலை. |
|---|---|---|---|---|
| 75 டெனியர் (கிலோ ரூ.) | 35·75 | 37·75 | 39·08 | 39·75 |
| 120 டெனியர் .. | 48·15 | 49·65 | 52·21 | 52·65 |

தமிழ்நாட்டில் இந்நூலின் மாதாந்திர தேவை சுமார் மூன்று இலட்சம் கிலோ கிராம் ஆகும். கூட்டுறவுத் துறை நெசவாளர்களுக்கு தேவைப்படும் செயற்கைப் பட்டு நூல் தென்னிந்





திய விஸ்கோஸ் நிறுவனத்தால் மாதம் 33 டன் கோ-ஆப்டெக்ஸிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றது. தனியார் துறை நெசவாளர்களுக்கு இதுபோல் தென்னிந்திய விஸ்கோஸ் நிறுவனத்தின் மூலம் ஒதுக்கீடு பெற்று விநியோகிப்பது பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

சாய மருந்துகள்

பொதுவாக கைத்தறி நெசவாளர்களுக்கு தேவையான சாய மருந்துகள் வடநாட்டில் உள்ள ஒருசில நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன. கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான காஸ்டிக் சோடா, ஹைட்ரோ சல்பேட் போன்ற சாய மருந்துகளை நேரிடையாக கோஆப்டெக்ஸ் வாங்கி விநியோகிக்கிறது. கூட்டுறவுத் துறையில் அல்லாத நெசவாளர்கள் வெளிமார்க்கெட்டில் சாயப் பொருள்களைத் வாங்கி உபயோகிக்கிறார்கள். பொதுவாக கைத்தறிகளுக்கு தேவைப்படும் சாய மருந்துகளை தமிழ்நாட்டிலேயே தயாரிப்பதற்கென ''வானவில் டைஸ் அண்டு கெமிகல்ஸ்'' என்ற நிறுவனம் அமைக்கப்பட்டு வருகின்றது. இந்நிறுவனம் உற்பத்தி தொடங்கும்போது நெசவாளர்களுக்கு தேவையான சாய மருந்துகள் தமிழ்நாட்டிலேயே நியாய விலையில் கிடைக்கும்.

திரு கே. எம். தங்கமணி: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார் துறை நெசவாளர்களுக்கு இதுபோல் தென்னிந்திய விஸ்கோஸ் நிறுவனத்தின்மூலம் ஒதுக்கீடு பெற்று விநியோகிப்பது பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. என்று விவர அறிக்கையில் உள்ளது. இப்பிரச்சனையின் முக்கியத்துவத்தை உணர்ந்து பரிசீலனை எப்பொழுது முடியும் என்று அரசு திட்டவட்டமாக அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, விரைவில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு கே. எம். தங்கமணி: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறிகளுக்கு தேவைப்படும் சாய மருந்துகளை தமிழ்நாட்டிலேயே தயாரிப்பதற்கென அமைக்கப்பட்ட '' வானவில் டைஸ் அண்டு கெமிகல்ஸ் '' என்ற நிறுவனம் எப்பொழுது உற்பத்தியைத் துவங்கும், அதற்கு ஏதேனும் காலக்கெடுவை அரசு வைத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ் என். இராசேந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இதன் முக்கியத்துவத்தை அரசு உணர்கிறது. ஆகவே, கூடிய விரைவில் "வானவில் டைஸ் அண்டு கெமிகல்ஸ்" என்ற நிறுவனத்தை அமைக்க ஏற்பாடு களைச் செய்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

## ஈ. திருப்பத்தூர் தாலுகாவில் கால்நடைகள் வியாதியால் தாக்கப்பெறுவது.

மாண்மிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, திரு வாளர்கள் ப. பொன்னுரங்கம், பொ. விஜயராகவன் ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். திரு. ப. பொன்னுரங்கம் அவர்கள் அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டுவருவார்கள்.

திரு ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, "இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் தாலுகாவில் உள்ள கருப்பூர், நட்டாரமங்கலம், தாணிப்பட் கோட்டை, இருப்பூர் ஆகிய கிராமங்களில் 500-க்கு மேற்பட்ட கால்நடைகள் பயங்கரமான வியாதியால் தாக்கப்பட்டு இறந்தது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் தாலூக்காவில் அடங்கியுள்ள கருப்பூர், நாட்டார மங்கலம் முதலிய கிராமங் களில் பல கால்நடைகள் பயங்கரமான வியாதியால் தாக்கப் பட்டு, இறந்து விட்டன என்ற செய்திக் குறிப்பு 17—7—1980 நாளிட்ட 'இந்து' நாளிதழில் காணப்பட்ட அன்றே, இராம நாதபுரம் மற்றும் மதுரை மண்டல இணை இயக்குநர்கள் சம் பந்தப்பட்ட கிராமங்களுக்கு நேரிலே சென்று தகவல் சேகரிக்கவும் தடுப்பு நடவடிக்கை எடுக்கவும் கேட்கப்பட்டனர். நோயின் காரணம் பற்றி விரிவான ஆய்வு செய்து நோயினைத் தடுக்கவும் சிகிச்சை அளிக்கவும் உதவும் பொருட்டு இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து ஆராய்ச்சி நிலைய இயக்குநர், ஆராய்ச்சியாளர்களை அனுப்பியும் அறிவுறுத்தப் பட்டார். மதுரை மண்டல கால்நடை நோய்த் தடுப்பு சிறப்பு



அறிஞர், மற்றும் பால்பெருக்கு அலுவலர், கோட்டை இருப்பூர் கிராமத்திற்கு நேரில் சென்று விசாரித்தனர். விசாரணையில் 27—5—1980 தொடங்கி 16—7—1980 வரை 50 நாட்கள் இம்மாதிரியான நோய் கண்டது என்றும், இறப்பு பற்றிய விவரங் களை சம்பந்தப்பட்ட கால்நடை அதிகாரிக்கோ, ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கோ, வட்ட ஆட்சியாளருக்கோ சம்பந்தப் பட்டவர்கள் தெரிவிக்க வில்லை என்று தெரியவந்தது.

காரைக்குடி கால்நடை பராமரிப்பு உதவி இயக்கு நரின் அறிக்கைப்படி, கோட்டை இருப்பூர் கிராம கால்நடை மரணப்பதிவேடு பரிசீலிக்கப்பட்டதில் கால்நடை மரணம் பற்றிய குறிப்பு ஏது மில்லை என்றும், 500-க்கும் மேற்பட்ட கால்நடைகள் இறந்து விட்டன என்ற குறிப்பு மிகைப்படுத்தப்பட்ட ஒன்று என்றும் தெரியவருகிறது. இம் மரணங்கள் குடற்புழு நோயினால் ஏற் பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இதன் மூலம் 29—5—1980 அன்று நோய் தோன்றி, 2—6—1980 அன்று முதல் இறப்பும், 17—7—1980 அன்று, கடைசி இறப்பும்நேரிட் டுள்ளது. இராமநாதபுரம் மண்டல இணை இயக்குநரிடமிருந்து கடைசியாக வந்த தகவலில் தற்போது நோய் கட்டுப்படுத்தப் பட்டுவிட்டதாகவும் இதுவரை மொத்தம் 197 கால்நடைகள் இறந்து இருக்கலாம் என்று உள்ளூர் மக்களை விசாரித்ததில் தெரியவருவதாகவும் தெரிவித்துள்ளார். சிறப்பு கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட ஆடுமாடுகளில் எவ்வித இழப்பும் ஏற்படவில்லை.

காரைக்குடியிலுள்ள இராமநாதபுரம் மாவட்ட கால்நடை நோய் புலனமைப்புப் பிரிவு உதவி இயக்குநர். மேற்கண்ட கிராமங்களில் தங்கி தடுப்பு நடவடிக்கை மேற்கொண்டு வருகி றார். நோயை அடியோடு ஒழிக்க வெக்கை நோய் தடுப்பு ஊசி போடப்பட்டு வருகிறது. மேற்கண்ட கிராமங்களில் மேலும் இறப்பு ஏற்படவில்லை.

திரு ப. பொன்னுரங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறிக்கையிலேகூட தெளிவாக ஒப்புக்கொள்ளப்பட் டிருக்கிறது. 15 நாட்களாக அல்லது 50 நாட்களாக இந்த நோய் அந்தப் பகுதியிலே கால்நடைகளைப் பாதித்திருக்கிறது. ஆனால் தகவல் நம்முடைய தலைமை இலாக்காவிற்கு—ஹெட் ஆபீசிற்கு—வரவில்லை. இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து வரவில்லை. அப்படியானால் அங்குள்ள அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்று தெரியவில்லை. இது ஒன்று. இரண்டாவது தாக, கால்நடைகள் மயக்கமுற்று, நுரை தள்ளி இருந்ததாகத் தகவல். 15 நாட்களாகப் பாதிக்கப்பட்டிருந்தும் அந்தக் கால்நடைகளுக்கு எந்த மருந்தும் கொடுக்கப்படவில்லை என்ப தாலே இறந்தன என்று பத்திரிக்கைக் குறிப்பு கூறுகிறது. அப்படி

இருக்கும்பொழுது அங்குள்ள அதிகாரிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதைக் கூடப் பராமரிக்க முடியாத அவல நிலையில் இருக்கிறார்களே, அது முறைதானா, சரிதானா என்பது ஒன்று.

(முற்பகல் 11-20)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதே பிரச்னை ஏற்கனவே வந்தது. ஒரு கேள்வி கேளுங்கள், இன்னொரு வாய்ப்பு தருகிறேன். இன்னொரு கேள்வி கேளுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : ஆகவே, சம்பந்தப்பட்ட அதிகாரி மீது, உடனடி நடவடிக்கை எடுக்கத் தவறிய அந்த அதிகாரி மீது, தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிகாரி அவர்கள் தடுப்பு மருந்து கொண்டு போகவில்லையென்றும் அதனால், கால்நடைகள் இறந்தன என்றும் நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். அதிகாரி அவர்கள் நல்ல முறையில் கால்நடைகளுக்கு, தடுப்பு மருந்துகள் கொண்டு செல்கின்றார் கள். ஆனால், மக்கள், அதிகாரி அவர்களுக்குத் தெரியப்படுத்த வில்லையென்றும் பத்திரிகை வாயிலாகத்தான் அதிகாரி அவர்கள் தெரிந்து கொண்டார்கள் என்றும் இனிமேல் நல்ல முறையில் செயல்படுத்துவார்கள் என்றும் கூறிக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இறந்ததற்குக் காரணம் There is no medicine என்றுதான் பத்திரிகையிலே இருக்கிறது. அது மட்டுமல்ல, நம்முடைய அரசு ஒதுக்கிய தொகைகூட போதுமானதாக இல்லை. கலைஞர் ஆட்சிக் காலத்தில்கூட....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது கேள்வியே அல்ல. ஒரு வரி அல்லது இரண்டு வரிகளில் கேள்வி இருக்க வேண்டும். திருக்குறள் மாதிரி கேளுங்கள். அதனால்தான் பேரவைத் தலைவர் காலையில் திருக்குறள் சொல்கிறார்.

திரு. ப. பொன்னுரங்கம் : 1975–76-ல் 'வெட்டரினரி ரிசர்ச்' சுகாதார கால்நடை மருந்துகள் ஆராய்ச்சிக்காக ரூ. 45,60,000 கலைஞர் ஆட்சிக் காலத்திலே ஒதுக்கபட்டது. ஆனால், இந்த ஆட்சிக் காலத்தில், அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் ரூ. 1,81,000 தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் மருந்து தட்டுப்பாடு ஏற்படுகிறது, போதிய ஆராய்ச்சி இல்லை



முறையான ஆராய்ச்சி இல்லை என்று நான் அறிகிறேன். எனவே, இந்தக் குறையைப் போக்க அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதில் குறையிருப்பின் குறையைத் தீர்க்க அரசு முன் வரும்.

## 5. ஒழுங்குப் பிரச்சினை

### மத்திய அரசினர் செய்திப் படம்

* திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர். இந்திய அரசின் சார்பாக ஒரு செய்திப் படம் இப்பொழுது எல்லா சினிமா தியேட்டர்களிலும் காட்டப்படுகிறது. அந்தச் செய்திப் படங்களில் இந்தியா முழுவதும் இருக்கிற தொழிலாளர் நல அமைச்சர்கள் தொழிலாளர் பிரச்சினையைப் பற்றி பேசுவதாக. அந்தச் செய்திப் படத்தில் ஒரு பகுதியில் குறிப்பிடப்படுகிறது, ஆனால், எல்லா தொழிலாளர் நல அமைச்சர்களையும் பெய ரோடு, அதாவது 'குளோசப்' என்று சொல்வார்களே அந்த வகையில் உருவத்தை முன்னால் கொண்டு வந்து காட்டுகிறார்கள். ஆனால், தமிழில் ஒலிபரப்பப்படுகிற அந்தச் செய்திப் படத்தில் தமிழக தொழிலாளர் நலத் துறை அமைச்சர் இல்லை என்பதை இந்த அரசு கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக் கிறேன். அதற்குத் தமிழக அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்து, அப்படிப்பட்ட செய்திப் படத்தை, நிறுத்துவதற்குரிய முயற்சி செய்யுமா ? அல்லது, மத்திய அரசிடம் ஏதாவது கடிதப் போக்கு வரத்து வைத்து, நம்முடைய தொழிலாளர் நல அமைச்சரையும்......................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் பார்த்த படத்திலே இவர் போஸ் கொடுத்திருக்கமாட்டார்கள். அவ்வளவு தான், இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

அ. நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு 1980 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1980) விவாதம்—தொடர்ச்சி.]

திரு. என். சங்கரய்யா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது ஆய்விலிருக்கக்கூடிய நிலவுடைமைக்கு வரம்பு கட்டக்கூடிய 1961 ஆம் ஆண்டு சட்டத்திற்குக்

[திரு. என். சங்கரய்யா] [1980 ஆகஸ்ட் 11

கொடுக்கப்பட்டுள்ள திருத்த சட்ட முன்வடிவின்மீது மார்க்
சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே பின்வரும் கருத்துக்
களை நான் தெரிவிக்க விரும்புகிறேன் இந்தக் குறிப்பிட்ட
சட்டத்தை, அதனுடைய நோக்கத்தை நாங்கள் வரவேற்
கிறோம். 1961 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட நிலவுடைமைக்கு
வரம்பு கட்டக்கூடிய சட்டத்திலேயிருந்து தப்பித்துக்
கொள்வதற்காக பலர் பலவிதமான தந்திரங்களைக் கையாண்
டார்கள். அவ்வாறு கையாண்டதன்மூலம் இந்த நிலவுடை
மைக்கு வரம்பு என்பதிலேயிருந்து, உபரியாக அரசுக்கு வர
வேண்டிய நிலங்கள் வராமல் அவர்களுக்குள்ளேயே ஏதாவது
ஒரு ஏற்பாட்டின்படி மறைத்து வைக்கப்பட்டன. இன்றைக்கு
அதை மீண்டும் வெளிப்படுத்த, அரசாங்கத்தினுடைய பொறுப்
பிலே கொண்டு வந்து நிலமற்றவர்களுக்கும் விவசாயத்
தொழிலாளர்களுக்கும், ஏழை விவசாயிகளுக்கும் விநியோகிப்
பதற்கான ஒரு ஏற்பாட்டினுடைய முயற்சிக்கு இந்தச்
சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருப்பதை நான் ஆதரிக்
கிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவுகள், இதற்கு அரசியல் சட்ட
ரீதியிலே உடன்பாடு இருக்கிறதா என்ற பிரச்சினைகள் இங்கே
கிளப்பப்பட்டிருக்கின்றன. நான் அதை சட்ட நிபுணர்களுடன்
கலந்து ஆலோசித்துப் பார்த்த அளவுக்கு இந்தச் சட்டமானது,
அரசியல் அமைப்புச் சட்டத்தின் பாதுகாப்பிலே அமைக்கப்பட்டி
ருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதா
வது நமது அரசியல் அமைப்பு சட்டத்தினுடைய 39 பிரிவின்
படி அதனுடைய பிரிவுகள் பி. சி. என்ற அடிப்படையிலே
இதிலே கொடுக்கப்பட்டிருக்கிற அறிவிப்பு இதற்கு சட்டரீதியான
பாதுகாப்பு அளிக்கிறது என்பதை நான் உங்கள் கவனத்திற்குக்
கொண்டு வர விரும்புகிறேன். இந்தச் சட்டத்திற்குக் குடியரசுத்
தலைவருடைய ஒப்புதல் தேவையாக இருக்கிறது. எனவே
இங்கே சட்டம் நிறைவேற்றியதற்குப் பிறகு, இன்றைக்கு
தமிழக அரசாங்கம், மத்திய சர்க்கார் அங்கீகாரம் கொடுப்
பதற்கு மட்டுமே அல்ல, மேலும் பாதுகாப்பு அளிப்பதற்கு
இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 9 ஆவது அட்டவணை
யின்படி இந்தச் சட்டத்திற்குப் பாதுகாப்புக் கொடுக்க
வேண்டும் என்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும்
கேட்டுக்கொள்கிறேன்.

நமது அரசியல் அமைப்பு சட்டத்தில் 9-வது அட்டவணை
யில் கொண்டு வரப்பட்டால், அதற்கு மேலும் சட்டரீதியான
பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்ற காரணத்தால் நட
வடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1980 ஆகஸ்ட் 11] [திரு. என். சங்கரய்யா]

இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்ட முன்வடி
வுக்கு அரசாங்கத்தின் சார்பிலே சில திருத்தங்கள் இன்று
காலையில் கொண்டு வரப்பட்டு சுற்றுக்கு விடப்பட்டிருக்கிறது.
அதுபோலவே மேலும் சில திருத்தங்கள் மாண்புமிகு
உறுப்பினர்கள் சிலரால் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எங்
களுடைய கட்சியினுடைய அபிப்பிராயத்தில் இன்றைக்கு இந்த
நில மாற்றங்களைச் செய்ததில் குறிப்பிட்ட பகுதியான
1958 லிருந்து 1960 ஆண்டுக்கு இடையிலே ஏற்படக்கூடிய
இந்த டிரான்ஸ்பர்களை, நில மாற்றங்களை மட்டும் கவனித்
தால் மட்டும் போதாது என்று நாங்கள் கருதுகிறோம். இந்தச்
சட்டத்திலே இன்றைக்கு அரசாங்கம் பரிசீலித்து இதைப்
பரிசீலனை செய்வதற்காகப் போடப்பட்டிருக்கிற குழுவினிடத்
திலேயும், அத்தனை அதிகாரமும் பெற்றிருக்கின்ற அதிகாரி
களிடத்திலேயும் இன்றுவரை எந்தக் காரணத்திற்காகவும்,
எந்த ஒரு குடும்பமும் தங்களுடைய தேவைக்கு அதிகமாக
வைத்திருக்கின்ற உபரி நிலங்களை, அவைகளை என்ன பெயரிலே
வைத்திருந்தாலும், அதைப் பரிசீலனை செய்யக்கூடிய வகையிலே
அமைக்கப்பட்டிருக்கக்கூடிய அந்தக் குழுவுக்கும் இந்தச் சட்டத்
தினால் அதிகாரம் பெற்றிருக்கிற அதிகாரிகளுக்கும் அதிகாரங்
கள் வழங்கப்படவேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 30 ஸ்டாண்டர்டு
ஏக்கர் என்றிருந்ததை 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று குறைத்த
பிறகும் இந்த பினாமி நிலங்கள் இப்போதும் தொடர்ந்து
நடைபெற்று வந்திருக்கிறது என்பதைத்தான் மார்க்சிஸ்ட் கம்யூ
னிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.
அவைகள் என்ன வடிவத்தில் இருக்கின்றன என்றால் அவைகள்
மற்றவர்கள் பேரிலே அவர்களுக்கு வேண்டியவர்கள் பேரிலே
அவர்களுக்குப் பலவிதமான சட்ட வடிவிலே பதிவு செய்யப்
பட்டிருக்கிறது. அவைகள் யார் பெயரிலே பதிவு செய்யப்
பட்டிருக்கிறதோ. அவர்கள் பொறுப்பிலே இன்றையதினம்
இல்லை. அவைகள் அனைத்தும் இந்த நிலப்பிரபுக்கள் பொறுப்
பிலே இருக்கின்றன. ஆனால் வேறொரு பேரிலே பட்டா
செய்யப்பட்டு இருக்கலாம். அல்லது மற்றப் பெயரிலே அது
இருக்கலாம். இன்றைக்கு வரை.

ஆகவே உண்மையிலேயே நில உடைமைக்கு வரம்பு கட்டுகிற
சட்டத்திலே இருந்து தப்பிக்க விடாமல், சாத்தியமான அளவுக்கு
நிலங்களை எடுத்து ஏழை எளிய மக்களுக்கு வினியோகிக்க
வேண்டும் என்று இன்று வரையில் இருக்கக்கூடிய பினாமிகளைப்
பற்றி ஆய்வு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள
வேண்டும் என்று அரசாங்கத்தை வற்புறுத்த விரும்புகிறேன்.
அப்படி வரும்போது இன்றைக்கு நம்முடைய மாவட்ட அதிகாரி
கள் வெகுஜன விசாயிகளும், விவசாயச் சங்கத் தோழர்களும்

அவர்களின் பிரதிநிதிகளுக்கும் எந்தக் குடும்பங்கள் இன்றைக்கு 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா அளவுக்கும் அதற்கு மேலும் பினாமியாக வைத்திருக்கிறார்கள், எப்படி மற்றவர்கள் பெயரிலே வைத்திருக்கிறார்கள் என்கின்ற விவரங்கள், இன்றைக்கு கிராமப் புறங்களில் இருக்ககூடிய விவசாயச் சங்கத்தைச் சேர்ந்த ஊழியர்கள், சமுதாய ஊழியர்களுக்கும் இன்றைக்கு நன்றாகத் தெரிந்த விஷயம்.

[முற்பகல் 11-30]

ஆகவே, நான் கேட்கவிரும்புவது, அப்படிப்பட்டவர்கள் அனைவரும் அரசாங்கத்தால் பெரிய அளவில் பினாமியாக நிலம் வைத்து இருக்கக்கூடியவர்கள் என்று சந்தேகப்படக்கூடிய அத்தனை நிலவுடைமையாளர்களையும், அரசாங்கததின் சார் பில் அதிகாரம் பெற்று இருக்கிற இந்தச் சட்டத்தின் மூலம் நியமிக்கப்படும் குழுவிற்கு அவர்களுடைய நிலங்களைப்பற்றி விசாரிப்பதற்கான அதிகாரம் கொடுக்கப்படவேண்டும்.

இன்றைக்குள்ள சட்டத்தின்படி பினாமியாக நிலம் வைத்து இருக்கக்கூடியவர்கள் என்று சந்தேகப்பட்டால், அவர்களுக்கு அறிவிப்பு அதற்கு மேல் அவர் நிலம் வைத்து இருக்கவில்லை என்று நிரூபிக்கும் பொறுப்பு அவரிடத்தில் விட்டுவிடவேண்டும். இங்கே வேறு பல சட்டங்களில் எல்லாம் ரைட் ஆப் ரிடம்ஷன் என்பது இன்றைக்கு அரசாங்கம் நிரூபிக்காமல், பொறுப்பு அவர்மேல் சுமத்தப்பட்டது. அதைப்பற்றிகூட நான் இங்கே மின்சாரச் சட்டம் வந்தபோது பேசினேன். அந்த விஷயத்தில் வைக்கக்கூடாது என்று. ஆனால் ஏதாவது ஒரு பிரச்சினையிலே அந்தப் பொறுப்பு வைக்கவேண்டுமானால், இந்தப் பிரச் னையில்தான் அதை வைக்கவேண்டும். அந்த நிலப்பிரபுக்கள் வைத்து இருக்கும் நிலம் சந்தேகப்படக்கூடிய விதத்தில் இருந் தால், தாங்கள் வைத்து இருக்கும் நிலம் அந்த ஸ்டாண்டர்டு ஏக்கர் வரம்பிற்குள்தான் இருக்கிறது என்று நிரூபிக்கும் பொறுப்பு அவர்களிடம் வைக்கப்பட்டு, அவர்கள் அதை நிரூபிக்க முடியாமல் போனால், அவர் உபரியாக நிலம் வைத்து இருக்கிறார் என்று அரசாங்கம் சந்தேகிக்கவேண்டும். இதுதான் முக்கியமான நிலை என்று நான் கருதுகிறேன். இதைக் கண்டு பிடிக்கவேண்டியது என்பது சமுதாய ஊழியர்கள், விவசாய ஊழியர்கள், விவசாயத் தொழிலாளர் சங்கங்கள் அவைகள் மூலமாகத்தான், அந்த ஸ்தாபனங்களின்பிரதிநிதிகள் மூலமாகத் தான் உபரி நிலங்கள் யாரிடத்தில் இருக்கும் என்பதைக் கண்டுபிடிப்பதற்கும் மக்களிடத்தில் அதை விநியோகிப்பதற்கும் அக்கறை கொண்டு செயல்படமுடியும். அந்த வகையில் இந்தச் செய்யவேண்டும் என்று நான் கருதுகிறேன்.





அடுத்தபடியாக, இன்றைக்கு இங்கே கொண்டு வந்து இருக்கும் திருத்தத்திலே ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து இருக்கிறீர்கள். அதாவது, இவ்வாறு இந்த 1958-60 ஆம் ஆண்டுக்கு இடையே நிலமாற்றங்கள் செய்யப்பட்டு இருக்கு மானால், அவ்வாறு செய்யப்பட்டு இருக்கக்கூடிய நில மாற்றங் கள் ஒரு யூனிட் லான்ட் அளவிற்கு அதிகமாக இல்லாமல் போனால் அதைப்பற்றி இந்தச் சட்டம் பாதிக்காது என்ற திருத்தத்தை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கிறார்கள். இதிலே அடங்கி இருக்கும் மற்றொரு பிரச்னை. அவ்வாறு அந்த நிலத்தைப் பெற்று இருக்கக்கூடியவர்கள் என்று சொல்லி, அதற்கு வரம்பு வைத்து $1\frac{1}{2}$ யூனிட் அல்லது 1 யூனிட் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கத்தின் நோக்கம் அவ்வாறு நிலத்தை மாறுதல் பெற்றவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் நிலம் வைத்து இருக்கக்கூடாது என்ற நோக்கத்தைக்கொண்டும், அதே நேரத்தில் இந்தச் சட்டத்தினாலே பல சாதாரணமானவர்கள் பாதிக்கப் படுவார்கள் என்ற ஒரு பிரச்சனைக்கு ஒரு தீர்வை காணக் கூடிய வகையிலும் இந்த முயற்சியை அரசாங்கம் செய்து இருக்கிறது என்று கருதுகிறேன்.

அதே நேரத்தில் நான் என்ன சொல்கிறேன் என்றால்—எல்லாப் பிரச்சனைகளுக்கும் இதைக் கருதிவிடக்கூடாது. அதிலே உண்மையான விற்பனை என்பதற்கு மட்டும்தான் இந்தப் பிரிவின் மூலம், இந்தத் திருத்தத்தின் மூலம் பாதுகாப்பு அளிக்க வேண்டுமே தவிர, எல்லா நில மாற்றங்களுக்கும் அந்தப் பாதுகாப்பு அளித்தால் அங்கேதான் பிரச்சனை வருகிறது.

இன்றைக்கு ஒருவர் அதிகப்படியாக நிலம் வைத்து இருப்பாரானால், அல்லது அதிகமான நிலம் வைத்து இருப்ப தாகக் கருதப்படக்கூடியவராக இருப்பாரானால், அவர் உண்மையிலேயே ஒரு மாற்றம் செய்து இருந்தால், உண்மை யாகவே சாதாரணமாக ஒரு நபருக்கு அந்த நிலத்தை விற்று இருந்தால், அந்த நிலத்தை வாங்கியவருக்கு பாதகம் ஏற்பட்டு விடக்கூடாது. அவரைப் பொறுத்தவரையில், இன்றைக்கு இந்தத் திருத்தத்திலே கொண்டு வந்து இருக்கும் அளவிற்கு அவர்கள் ஒரு யூனிட் என்று சொன்னால், 5 ஏக்கர் புஞ்செய் அல்லது $2\frac{1}{2}$ ஏக்கர் நஞ்செய் என்ற அளவிற்கு அவர்கள் உண்மை யிலேயே வாங்கி இருந்தால் அப்படிப்பட்ட சாதாரண நில மாற்றங்களுக்கு இந்தச் சட்டம் பாதிக்க வேண்டாம் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

ஆனால் உண்மையிலேயே வாங்காமல், நான் ஒரு ஏற்பாடு செய்கிறேன், என்னுடைய உபரி நிலம் 100 ஏக்கர் வருகிறது. என்னுடைய பல உறுப்பினர்களுக்கு பல நபர்களுக்கு நான் அதை வேறுவிதத்தில் மாற்றுகிறேன் ட்ரான்ஸ்பர் செய்கிறேன்,

கிப்ட் செய்கிறேன், சரண்டர் செய்கிறேன், அல்லது வேறு பல முறைகளில் அதை மாற்றம் செய்கிறேன் என்று சொல்கிறார்கள் என்று சொன்னால், அப்படிப்பட்டவைகளுக்கு இந்தத் திருத்தமானது உதவிகரமாக இருக்ககூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆனால் அந்த நிலத்தை அதிகமாக வைத்து இருந்தவர்கள் உண்மையிலே விற்று இருந்தால், உண்மையிலேயே வாங்கி இருந்தால், அந்த டிரான்ஸ்பர் அல்லது விற்பனை பாதிக்கக் கூடாது. ஆனால் பினாமியாக செய்யப்பட்டு இருந்தால் அத்தகைய மாற்றங்களுக்கு இத் திருத்தச் சட்டம் பாதுகாப்பு கொடுக்கக்கூடாது.

இல்லாவிட்டால் என்னவாகும் என்று சொன்னால், 100 ஏக்கர் வைத்து இருப்பவர்கள் இப்படிப்பட்ட முறையில் ஒரு நபருக்கு ஒரு யூனிட் என்று எழுதி 20 பேருக்கு பிரித்து வைத்து விடுவார்கள். அதனால் இந்தச் சட்டம் நிறைவேற்றிய பிறகும் நிலைமையில் மாற்றம் இருக்காது. ஆகவேதான் நான் கேட்கிறேன். இங்கே கூட விவாதம் வந்தது. திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேசும்போது கூட குறிப்பிட்டார்கள். இவ்வாறு உண்மையிலேயே வாங்கி இருக்கக்கூடியவர்களை பாதுகாக்கவேண்டும். மற்றவகையான நில மாற்றங்களுக்கு அளிக்கக்கூடாது, அப்படி பாதுகாப்பு கொடுத்தால் எந்த நோக்கத்திற்காக நாம் இந்தச் சட்டத்தைக்கொண்டு வருகிறோமோ அந்த நோக்கம் தோற்கடிக்கக்கூடிய நிலை ஏற்படும் என்பதை உங்கள் மூலமாக அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொன்று, இன்றைக்கு யாரும் பினாமியாக நிலம் மாற்றம் செய்வதை விரும்பமாட்டார்கள், ஆகவே நம்முடைய நோக்கம் எல்லாம் உண்மையிலேயே அவர்களிடமிருந்து வாங்கியிருப்பவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும். அந்த நிலத்தை வைத்து இருந்தவர்கள் சட்டத்தில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக வேறு வகையில் செய்து இருக்கும் நில மாற்றங்களை ஏற்றுக்கொள்ளக்கூடாது. அதற்குப் பாதுகாப்புத் தரக்கூடாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இங்கே சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால் "பெனல்டி". இந்தத் தண்டனை மிகவும் குறைவானது. 5,000 ரூபாய்க்கு மேற்படாத தொகை அபராதமாக விதிக்கப்படும் என்று இருக்கிறது. ஒரு நிலப்பிரபு, அதிகாரி அறிவிப்பு கொடுத்த பின்னால் தகவல் சரியாக [illegible]காமல் உண்மையான தகவலை மறைக்கின்ற மோசடி [illegible]



அந்த நிலப்பிரபுவுக்கு 5,000 ரூபாய்க்கு மேற்படாத அபராதம் என்பது மிகச் சாதாரணமானது, மிகக் குறைவானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதனால் அவர்களுக்கு எந்தவிதமான பயமும் ஏற்படாது. மாட்டிக்கொண்டால் 5,000 ரூபாயோடு நிற்கும், அவ்வளவுதான் என்ற முடிவுக்கு வந்துவிடுவார்கள். இதற்கு முன்னால் மிசா வந்தபோது 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை என்று இருந்தது. அதை நாங்கள் அதிகம் என்று சொன்னோம். ஆனால், இதிலே அத்தகைய தண்டனை இல்லை. இங்கே அந்த மாதிரியான தண்டனை வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். பிற சட்டங்களில் தண்டனை குறைவாக இருந்தாலும் இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில் நிச்சயமாக தண்டனை அதிகமாக இருக்க வேண்டும்; கடுமையான தண்டனையாக இருக்க வேண்டும். குறைந்தது ஓராண்டுக்காவது கடுந்தண்டனை என்று இருக்க வேண்டும்; அப்படிச் சொல்லிவிட வேண்டும். இல்லாவிட்டால் இந்தச் சட்டத்தினால் நாம் எதிர்பார்க்கும் எந்தப் பயனும் கிடைக்காது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல, இந்த அதிகாரம் பெற்ற அதிகாரிக்குக் கொடுக்கப்படும் தகவலை "டேக்கன் இன்டு கன்சிடரேஷன்" கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இருக்கிறது. ஒரு குழு நியமிக்கிறோம். அதிலே இரண்டு விவசாயத் தொழிலாளர்களைப் போடுகிறோம்; மலைஜாதி மக்களைப் போடுகிறோம்; மற்றும் தனிப்பட்டவர்களையும் போடுகிறோம். அவ்வாறு அமைக்கப்பட்ட குழு சிரமப்பட்டு தகவல்களைச் சேகரித்து தவறு செய்திருப்பவர்களைச் சுட்டிக்காட்டிச் சொல்லும்போது அவர்கள் சொல்வது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்றால் எடுத்துக்கொள்ளாமல் கூட விட்டுவிடக்கூடிய நிலைமையும் ஏற்படும். அப்படியானால் அது பிரச்சனையைத் தீர்க்காது. அந்தக் குழுவின் பரிந்துரையை அதிகாரம் பெற்ற அதிகாரி ஏற்று தன்னுடைய தீர்ப்பை வழங்குவதாக இருக்க வேண்டும். அந்த வகையில் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு இந்தச் சட்டத்தைக் கொண்டு வரும்போது நாம் வேறு சில விஷயங்களைப் பற்றியும் கவனிக்க வேண்டும். ஏற்கெனவே வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் ஒரு கோடி ஏக்கர் சாகுபடி செய்கின்ற இந்த தமிழ்நாட்டில் 75,000 ஏக்கர் தான் இதுவரை விநியோகிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். நில உச்சவரம்புச் சட்டம் எல்லாம் வந்து, இத்தனை ஆண்டுக் காலம் ஆனபிறகும் நிலப்பிரபுக்களை எந்தச் சட்டமும் ஒன்றும் செய்யவில்லை. இதுவரை 50,000 பேர்களுக்குத்தான் 75,000 ஏக்கர் நிலத்தைக் கொடுத்திருக்கிறார்கள். விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் எண்ணிக்கையைப் பார்த்தால் நாம் எவ்வளவு குறைந்த அளவில் இதைச் செய்திருக்கிறோம் என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

[திரு என். சங்கரய்யா] [1980 ஆகஸ்ட் 11

எனக்கு முன்னாலே மாண்புமிகு திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்
பலவிஷயங்களை இங்கே குறிப்பிட்டார்கள். இவ்வளவு சட்டங்கள்
போட்டும் உபரியாகக் கிடைத்தது 75,000 ஏக்கர்தான். மற்றவை
எல்லாம் நிலப்பிரபுக்கள் கையிலேதான் பினாமி முறையில்
இருக்கிறது. இன்னமும் நாம் தீவிரமாக இதிலே கவனம் செலுத்
தாமல் முன்போலவே விட்டுவிட்டால் இந்த நாட்டிலே கிளர்ச்சி
வரும், பெரிய போராட்டம் வரும். அதை யாரும் தடுக்க முடி
யாது. "வசதி படைத்தவன் தர மாட்டான், வயிறு பசித்தவன்
விடமாட்டான்" என்று ஒரு கவிஞன் சொன்னதைப்போல
இந்தச் சட்டத்தை நல்ல முறையிலே நிறைவேற்றாவிட்டால்
நிலம் இல்லாத மக்கள் உரிமை போராட்டம் நடத்தி, அந்த
உரிமைப் போராட்டத்தின் மூலம் நிலத்தை எடுத்துக்கொள்வார்
கள் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இங்கு வேறு சில விஷயங்களைப் பற்றியும் பேசினார்கள்.
இன்று காலையிலேகூட தோழர் உமாநாத் அவர்கள் திருவாடு
துறை ஆதீனத்தில் நடைபெறும் ஊழல்கள்பற்றிச் சொன்னார்
கள். இத்தகைய தவறுகள், பினாமி, முறைகேடுகள் நடைபெறா
மல் இருக்க நாம் இதைத் தீவிரமாகச் சிந்தித்துச் செய்ய வேண்டி
யிருக்கிறது. இதிலே நீங்கள் உரிய கவனம் செலுத்த வேண்டும்.

கேரளத்தில் மத ஸ்தாபனங்களுக்குச் சொந்தமான நிலங்களை
யெல்லாம் நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் எடுத்துவிட்டார்கள்;
விலக்கு அளிக்கவில்லை. எந்த ஒரு மத ஸ்தாபனத்திற்கும்
சொந்தமாக ஒரு ஏக்கர் நிலம் கூட இன்றைக்கு இடையாது.
யாருக்கு அந்த நிலத்தை குத்தகைக்கு விட்டிருந்தார்களோ அவர்
களிடமிருந்து ஈட்டுத்தொகையைப் பெற்று அரசாங்கம் வருஷா
வருஷம் அந்த மத ஸ்தாபனங்களுக்கு பணம் கொடுத்து வருகிறது.
நிலத்தின் உரிமை உழுபவனுக்குப் போய்விட்டது.

பொதுத்தன்மை வாய்ந்த அல்லது மத ஸ்தாபனங்களுக்கு
1961 ஆம் ஆண்டுச் சட்டத்தில் செக்ஷன் 2 பொருந்தாது என்று
போட்டுவிட்டோம். எக்சம்ஷன் என்று கூட அல்ல, பொருந்
தாது என்று போட்டுவிட்டோம். ஆனால், இப்போது வந்திருக்
கிற சட்டத்தில் அவைகளுக்கும் பொருந்தும் என்று சொல்லி
யிருக்கிறோம். கணிசமான நிலத்தை கையகப்படுத்த வேண்டு
மென்றால் இந்தச் சட்டத்தின் கீழ் எடுக்கப்படுகின்ற நிலங்களுக்கு
அரசாங்கம் உரிய தொகையை ஈட்டுத்தொகையாக ஆண்டு
தோறும் கொடுக்கலாம். நிலத்தை யாருக்கு கொடுக்கிறோமோ
அவர்களிடமிருந்து அரசாங்கம் பணத்தை வசூல் செய்து கொள்ள
லாம். அதுதான் ஒரு செக்குலர் ஸ்டேட் என்பதற்கு பொருத்த
மாக இருக்கும். வேறு மாநிலங்களில் இதற்கு முன்உதாரணம
இருக்கிறது.



1980 ஆகஸ்ட் 11] [திரு என். சங்கரய்யா]

[முற்பகல் 11–40]

1970 ஆம் ஆண்டு ஒரு சட்டம் வந்தது. அப்படி வந்த அந்த
17-ஆவது சட்டத்திலே, செக்ஷன் 21-ன்படி என்ன செய்திருக்
கிறார்கள் தெரியுமா? 1970 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15 ஆம்
தேதிக்குப் பிறகும் 1970 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 8 ஆம்
தேதிக்கு முன்பும் ஆஸ்பத்திரிகளுக்கோ அல்லது பொதுத்தன்மை
வாய்ந்த கல்வி நிறுவனங்களுக்கோ எழுதி வைத்திருந்தால் அவற்
றிற்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. இது ஏன்? கல்வி
நிறுவனங்களாக இருந்தால் அரசாங்கம் மானியம் கொடுக்கின்
றது. அப்படிக் கொடுக்கட்டும். ஆஸ்பத்திரிகளாக இருந்தால்
அவை முறையாக மக்களுக்குப் பயன்படுகிற வகையிலே நடந்து
கொண்டிருந்தால் அது அரசாங்கத்தினுடைய பொறுப்பிலே நடக்
கட்டும். எதற்காக விதிவிலக்கு கொடுக்க வேண்டும். இது வேறு
ஒன்றும் அல்ல. மற்ற பெயர்களிலே எழுதி வைத்துவிட்டு, தங்
களுடைய குடும்பங்களின் கைகளிலே அந்த நிலங்களை வைத்துக்
கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இவைகளை எடுத்துக்கொள்ள
வேண்டும்.

அடுத்து, இன்றைக்கும் கூட பழத்தோட்டங்களுக்கு விதி
விலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. 15 ஸ்டாண்டர்ட் ஏக்க
ருக்குள்ளே பழத்தோட்டம் போட்டால் உற்பத்தி செய்ய முடி
யாதா? ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் என்றால்தான் பழத்
தோட்டம் போட முடியுமா? ஒருவர் போடுவதை இன்னொரு
வர் போடக் கூடாதா? ஆகவே, பழத்தோட்டங்களுக்குக்
கொடுக்கப்பட்டுள்ள இன்றைக்கு வரை நீட்டிக்கப்படுகின்ற அந்த
விதிவிலக்கு ரத்து செய்யப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து, விறகாக எரிக்கக்கூடிய மரங்களை உற்பத்தி பண்ணக்
கூடியவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. ஏன்
அவ்வாறு அளிக்கப்பட வேண்டும்? ஆயிரக்கணக்கான பேர்
நிலங்களை வைத்துக்கொண்டு அவ்வாறு மரங்களை உண்டாக்கி
னால் அந்த மரங்கள் வளர்வதற்கு மறுத்துவிடுமா? ஆகவே,
இப்படி பழத்தோட்டங்களுக்கும், விறகுக்காக எரிக்கக்கூடிய
மரங்களுக்கும் விதிவிலக்கு கொடுப்பதைப் பயன்படுத்தி
கொண்டு நிலப்பிரபுக்கள் தங்களுடைய கைகளிலே நிலங்களை
வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே நிலச்சீர்திருத்தம் என்பது
உண்மையிலேயே பயன் உள்ளதாக இருக்க வேண்டும் என்றால்
நில உச்சவரம்புச் சட்டத்திலே இருக்கின்ற இந்தமாதிரி விதி
விலக்குகளை ரத்து செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, வேறு ஒரு பிரச்சினை வருகின்றது. இந்த உபரி
நிலங்களை விநியோகம் செய்வதைப் பொறுத்த வரையில் தாசில்
தார்களுக்குக் கொடுத்திருக்கக்கூடிய பொறுப்பு சரிவர நிர்வகிக்

கப்படவில்லை என்ற புகார்கள் வருகின்றன. ஆகவே, அதை
ஆர். டி. ஓ. மட்டத்திலே வைத்து ஏழை விவசாயிகளுடைய
சங்கங்களின் பிரதிநிதிகளையும் வைத்துக்கொண்டு இந்த உபரி
நிலங்களை விநியோகிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்து இன்னொன்று. 1979 ஆம் ஆண்டு இந்தச் சட்
டத்தை நிறைவேற்றுகின்றபோது குத்தகை விவசாயிகளைப்
பொறுத்தவரையில் ஒரு விதி கொடுத்திருந்தார்கள். அதாவது
அவர்கள் சொந்தமாக உற்பத்தி செய்யக்கூடிய நிலமும் குத்தகை
நிலமும் சேர்த்து 1½ ஏக்கருக்கு மேல் இருக்கக்கூடாது என்று
விதி போட்டிருந்தார்கள். ஆனால், இன்றைக்கு நீங்களே ஒன்
றைக் கூறுகிறீர்கள். அதாவது, நிலமற்றவர் ஒருவர் அதிகப்
படியான நிலம் வைத்திருக்கின்றவரிடமிருந்து நிலத்தை வாங்கி
இருந்தால் இரண்டரை ஏக்கர் வரைக்கும் நன்செய் நிலமும், 5
ஏக்கர் வரைக்கும்சாதாரண புன்செய் நிலமும் வைத்துக்கொள்ளக்
கூடிய அளவிலே திருத்தத்தைக் கொண்டு வந்து ஒத்துக்கொண்
டிருக்கிறீர்கள். மேலும், குத்தகைக்கு விடப்பட்டிருக்கக்கூடிய
நிலங்களை அவர்கள் உபரி நிலங்கள் என்று காட்டக்கூடாது.
அதுவே தவறானது. அவர்களின் சொந்தப் பராமரிப்பிலே உள்ள
வைகளைத்தான் உபரி நிலம் என்று காட்ட வேண்டுமே தவிர,
குத்தகை விவசாயிகளின் கையிலே இருக்கின்ற நிலத்தை உபரி
நிலம் என்று காட்டக்கூடாது. அப்படி குத்தகை விவசாயிகள்
வைத்திருக்கக்கூடிய நிலத்தை அரசாங்கம் தன்னுடைய பொறுப்
பிலே எடுத்துக் கொள்வது சரியாக இருக்காது. அந்தக் குத்
தகை விவசாயிகளுடைய வயிற்றிலே அடித்துவிட்டு இதர ஏழை
களுக்கு நாங்கள் நிலம் கொடுக்கிறோம் என்று சொல்வது சரியான
தல்ல. அவர்களும் ஏழைகள்தான். ஆகவே, 1979 ஆம் வரு
ஷத்திலே போடப்பட்ட சொந்த நிலமாகவோ அல்லது குத்
தகை நிலமாகவோ 1½ ஏக்கருக்கு மேல் வைத்திருக்கக்கூடிய
நிலம் உபரி நிலம் என்ற அந்த விதியைத் திருத்த வேண்டும்
என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே,
அந்த குத்தகை விவசாயிகளைப் பொறுத்த வரையில் அர
சாங்கம் மறுபரிசீலனை செய்து இந்த உபரி நில விநியோகத்
திலே குத்தகை விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பாதிப்பை
நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்
இங்கே ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதாவது,
அரசாங்கம் கொடுத்திருக்கின்ற திருத்தத்திலே 2½ ஏக்கர் நன்
செய், 5 ஏக்கர் புன்செய் வரைக்கும் இவர்கள் நிலமாற்றம்
செய்திருந்தால், அவர்கள் வேறு எதும் நிலம் இல்லாதவர்களாக
இருந்தால் அவர்கள் வைத்துக்கொள்ளலாம் என்று இருப்பதை
5 ஏக்கர் நன்செய் என்றும் 10 ஏக்கர் புன்செய் என்றும் உயர்த்த





வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்
கிறார்கள். இது இந்தத் திருத்தச் சட்டத்தினுடைய நோக்
கத்தை நிறைவேற்ற விடாமல் செய்யக்கூடிய ஒரு திருத்தமாகும்.
அதிகப்படியான நிலங்களை அதாவது உபரி நிலங்களை விவசாயி
களுக்கு விநியோகிப்பதே நமது நோக்கமாகும். ஆகவே, மாண்பு
மிகு திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய திருத்
தங்களை நாங்கள் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று கூறி என்
னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*<u>திரு. ப. நெடுமாறன் :</u> மதிப்பிற்குரிய உதவித் தலைவர்
அவர்களே, இன்றைக்கு இந்த மாமன்றத்தில் சரித்திரப்பிரசித்தி
பெற்ற ஒரு சட்ட திருத்த முன்வடிவை ஆதரித்துப் பேசுவது
குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஏறத்தாழ இந்த நிலச்
சீர்திருத்தம் என்பது, ஒரு அரை நூற்றாண்டுக் காலத்திற்கு
முன்பாக, நம் இந்தியா பூராவிலும், தமிழகத்திலும் இதைப்
பற்றி எல்லாக் கட்சியினராலும் பேசப்பட்டு வந்திருக்கின்றது.
பல்வேறு கட்சிகளின் ஆட்சிகள் நடந்தபோதிலும், அமல் செய்
யப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த நில உச்ச வரம்பின் அடிப்
படை நோக்கம் எந்த அளவுக்கு நிறைவேறி இருக்கிறது என்
பதைப் பார்த்தால், எதிர்பார்த்த அளவுக்கு இல்லை என்பது
தான் அனைவரும் கண்டிருக்கும் முடிவாகும். இதிலே மதிப்பிற்
குரிய ரெவின்யூ அமைச்சர் அவர்கள் சோழ வள நாட்டைச்
சேர்ந்தவர்கள். அதே சோழ வள நாட்டிலே இராஜராஜ சோழ
மன்னர் ஆண்டபோதுதான் முதன்முதலாக அங்கே நிலத்தை
அளந்து யார் யாருக்கு எவ்வளவு நிலம் என்று பங்கீடு
செய்யப்பட்டிருக்கிறது. அதனால் அந்த மன்னருக்கு 'உலகு
அளந்தான்' என்ற பட்டம் உண்டு. அதே சோழ வள நாட்டைச்
சேர்ந்த ரெவின்யூ அமைச்சர் அவர்கள் இன்றைக்கு நிலத்திற்கு
உச்சவரம்பு கட்டி, அதை நிலமற்ற ஏழைகளுக்கு பங்கீடு
செய்வதன் மூலம் அவர்களும் சரித்திரத்திலே இடம் பெறத்தக்க
சாதனை செய்திருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்பு
கிறேன்.

இங்கே இந்த மாமன்றத்தின் பட்ஜெட் பொது விவாதத்தின்
போது பினாமி நிலங்கள் ஒழிக்கப்படுவது பற்றியும், அதற்காக
மக்கள் கமிட்டி அமைக்கப்பட வேண்டுமென்றும் நான் அன்றைக்கு
சொன்னேன். இன்றைக்கு அவற்றை ஏற்றுக் கொண்டு, இந்த
அரசு செயல்படுவதற்கு முன்வந்ததைக் கண்டு நான் மகிழ்ச்சி
அடைகிறேன்.

இந்த லேண்ட் சீலிங் ஆக்ட் என்று சொல்லப்படுகிற நில
உச்சவரம்புச் சட்டம் முதல் முதலாக எந்த நோக்கத்தோடு
கொண்டுவரப்பட்டதோ, அந்த நோக்கம் சரிவர நிறைவேற்றப்
படாமல் இருந்ததால்தான் இப்போது இந்தத் திருத்தச் சட்ட

[திரு ப. நெடுமாறன்] [1980 ஆகஸ்ட் 11

முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. 1960-ம் ஆண்டிலே முதல்முதலாக இந்த நில உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது, அன்றைக்கு இருந்த அரசு 1960-ஆண்டு ஏப்ரல் திங்கள் 14-ம் நாளிலே தந்த புள்ளி விவரங்களை இந்த மாமன்றத்தின் முன்னாலே வைக்க விரும்புகிறேன்.

30 ஸ்டாண்டர்டு ஏக்கர்களுக்கு மேலே எத்தனை பேருக்கு நிலம் இருக்கிறது என்பதைப்பற்றிய விவரத்தை அன்றைக்கு அரசு அளித்திருக்கிறது. அதன்படி 9,671 பேர்கள் இடத்திலே 30 ஸ்டாண்டர்டு ஏக்கர்களுக்கு மேலே 1960-ம் ஆண்டில் நிலம் இருந்தது. இந்த 9,671 பேர்கள் வைத்திருந்த மொத்த நிலம் அதாவது நன்செய் புன்செய் தோட்டம்எல்லாம் சேர்ந்து 5,72,235 ஏக்கர்கள். இதிலே உச்சவரம்பு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர்கள் என்று ஆன பின்னர், மிஞ்சக் கூடிய உபரி நிலம் 2,82,105 ஏக்கர்கள் என்று மதிப்பிடப்பட்டது. இந்த 2,82,105 ஏக்கர் நிலத்தை ஏழைகளுக்கு வழங்கலாம் என்று அன்றைக்கு அரசு நினைத்தது. ஆனாலும், 1960-லே இந்த நில உச்சவரம்புச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட நாளிலிருந்து, 11 ஆண்டுகள் கழிந்த பின்னரும், மலையைக் கெல்லி எலியைப் பிடித்ததுபோல் அரசுக்கு உபரியாக 38,043 ஏக்கர்கள்தான் கிடைக்கும் என்று கூறப்பட்டது. 11 ஆண்டுகள் முயற்சிக்குப் பின்னால் கிடைக்கும் என்று எதிர்பார்க்கக்கூடிய நிலம் 38,043 ஏக்கர்கள். அதிலே அரசே ஆர்ஜிதம் செய்ய முடிந்தது 28,104 ஏக்கர்கள். மற்றவைகள் இன்னும் டிஸ்ப்யூட்டில் இருந்து கொண்டிருக்கின்றன. ஆக நில உச்சவரம்புச் சட்டம் கொண்டுவந்ததன் அடிப்படை நோக்கம் நிறைவேறவில்லை. ஆகவேதான் 1958-ம் ஆண்டிலிருந்து 1960-ம் ஆண்டு வரை இடையிலே நடைபெற்ற நில மாற்றங்கள் செல்லாது என்று ஆக்குகின்ற வகையிலே இந்த சட்டத் திருத்தம் இங்கே கொண்டுவரப்பட இருப்பதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

1970-ம் ஆண்டிலே டெல்லியிலே முதலமைச்சர்கள் மாநாட்டை மத்திய அரசு கூட்டி, அந்த மாநாடு நிலச் சீர் திருத்தத்தைப் பற்றி ஆராய்ந்தது. மத்திய நிலச் சீர்திருத்தக் குழு அதாவது சென்ட்ரல் லேண்ட் ரிபார்ம்ஸ் கமிட்டி என்ற அமைப்பின் கீழ் பல்வேறு மாநிலங்களிலே இன்றைக்கு செய்யப் பட்டிருக்கின்ற நிலச் சீர்திருத்தங்களைப் பற்றி ஆராய்ந்து, முடிவெடுக்கப்பட்டு, இந்தக் கமிட்டி ஒரு ரிப்போர்ட் கொடுத்தது.

[முற்பகல் 11–50]

அந்தக் கமிட்டி சொன்ன பரிந்துரைகளிலே நில உச்சவரம்புக் குடும்பம் என்பது ஒரு கணக்காக எடுத்துச்கொள்ளப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டது. உச்சபட்சமாக 18 ஸ்டாண்



1980 ஆகஸ்ட 11] [திரு ப. நெடுமாறன்]

டர்டு ஏக்கருக்கு மேல் ஒரு குடும்பத்திற்கு இருக்கக்கூடாது என்று பரிந்துரை செய்தது. சில முக்கியமான பரிந்துரைகளை மத்திய நிலச் சீர்திருத்தக் கமிட்டி செய்து கொடுத்தது. இந்தப் பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு இதற்குத் தக்கபடி அந்தந்த மாநிலங்களில் இருக்கக்கூடிய நிலச் சீர்திருத்தச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று மத்திய அரசு ஆலோசனை கூறியது. 1971, 1972-ல் தமிழகத்தில் ஆட்சியில் இருந்த அரசு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சட்டத்தைக் கொண்டு வந்தது. முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் உச்சவரம்பு கட்டப்பட்ட நேரத்திலே எப்படி நிலம் எதிர்பார்த்த அளவுக்கு மிஞ்சவில்லையோ, கிடைக்கவில்லையோ அதைப்போலவே அப்போதும் கிடைக்காமல் போயிற்று.

ஒரு கதை சொல்வார்கள். ஒரு மன்னன் தன்னுடைய அவையில் மந்திரி பிரதானிகளைப் பார்த்துக் கேட்டான். நாம் மக்களுக்குச் செய்கிற நன்மைகள் மக்களுக்கு முழுமையாகக் கிடைக்கின்றனவா? என்று அந்த மன்னன் மந்திரியைப் பார்த்துக் கேட்டபோது அந்த மந்திரி 'மன்னா, அதற்குச் சொல்ல வேண்டிய பதிலை செயல்முறையில் விளக்க விரும்புகிறேன்' என்று சொல்லி ஒரு பெரிய ஐஸ் கட்டியை வாங்கி வரச் சொல்லி அதை மன்னன் கையில் கொடுத்தான். பிறகு தான் வாங்கி அவையில் உள்ள ஒவ்வொருவரிடமும் கொடுத்து இறுதியாக மீண்டும் மன்னனின் கைக்கு அந்த ஐஸ்கட்டி வரும்போது ஒரு சொட்டுத் தண்ணீர் இருந்தது. [illegible]போல் மிகப்பெரிய விளம்பரங்கள் செய்யப்பட்டு [illegible] கொண்டுவரப்பட்ட உச்ச வரம்புச் [illegible] விளைவாக ஏழை எளிய மக்களுக்கு என்ன கிடைக்க [illegible] போது அந்த [illegible] அது கிடைக்க வில்லை. ஆகவேதான் இன்றைக்கு [illegible] இங்கே இந்த மாமன்றத்தில் கொண்டு வரப்[illegible] இப்போதாவது இலட்சக்கணக்[illegible] ஏழை எளிய மக்கள் தமிழகம் [illegible] அவர்களுக்கு உபரிநிலம் இந்தச் சட்ட[illegible]க் கிடைப்பதற்கான வழிமுறைகளை [illegible]டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன்.

இந்தத் திருத்தச் சட்ட [illegible] மாற்றம் என்பதிலே பாகப்பிரிவினை [illegible] சொல்லப்பட்டிருக்கிறது. இது அவ்வளவு [illegible]ரகப்படவில்லை. [illegible]கித்தான் சட்டம் பாகப் பிரிவினை என்பதையும் [illegible] பினாமி நிலங்களை நிச்சய செய்ய வேண்டும். அப்போதுதான் பாகப்பிரிவினை என்ற பெயரால் மாகக் கண்டு பிடிக்க முடியும். ஏராளமான அளவில் தமிழகம் பூராவும் பெரிய நில மோசடிகள் நடைபெற்றிருக்கிறது. தங்களுடைய பங்காளிகளுக்குள்ளே பாகப்பிரிவினை செய்த பினாமியாக நிலத்தை எழுதி வைத்து ரெக்கார்டு செய்திருக்கிறார்கள். கணவன் மனைவியே தாக

பாகப்பிரிவினை செய்ததாக ரெக்கார்டுகள் செய்யப்பட்டிருக் கின்றன. கணவன் மனைவி விவாகரத்து செய்து கொண்டதாக போலியாக ஏற்பாடு செய்து மனைவியின் பெயரால் நிலம் என்ற வகையில் எல்லாம் பாகப்பிரிவினை செய்யப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் செல்லாது என்று அறிவிப்பது பற்றி அமைச் சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வலி யுறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் சொன்னது போல் விதிவிலக்கு அனைத்தையும் ரத்து செய்தாக வேண்டும். தோட்டமாக இருந்தாலும் அல்லது வேறு எந்த நிலமாக இருந்தாலும் விதிவிலக்கை ரத்து செய்ய அரசு நிச்சய மாக முன்வரவேண்டுமென்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். நல்ல விளைச்சல் நிலத்தில் 50 மரங்களை நட்டுவிட்டு தோப்பு என்று ரெக்கார்டு செய்கிறார்கள். அதற்கு ரெவின்யூ அதிகாரி கள் உடந்தையாக இருக்கும் நிலைமை சில இடங்களில் இருக் கிறது. அதையும் ரத்து செய்ய அரசு முன் வரவேண்டும். அந்த வகையிலும் விதிவிலக்கு என்பது நிச்சயமாக இருக்கக்கூடாது.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அன்றைக்குப் பேசும்போது ஏழைகள் உண்மையாகவே நிலங்களை வாங்கியிருக்கிறார்கள், அப்படி அவர்கள் வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி வாங்கிய நிலத்தைச் செல்லாது என்று சொல்வார்களானா[illegible]ர்கள் கதி என்ன என்று கேட்டார்கள். மாண்புமிகு திரு. கிரு[illegible]தி அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள வி[illegible]. இ[illegible]றைக்கு மிகப் பெரும்பாலான நிலப் பிரபுக்கள் [illegible] ஊழியம் செய்கிறவர்கள், வேலையா[illegible]வர்கள் பெயரிலே எல்லாம் பினாமி [illegible]தி வைத்திருக்கிறார்கள். ஒரு கால[illegible] கொண்டால் என்ன செய்வது [illegible]மாக 20 ஆயிரம், 30 ஆயிரம், 40 [illegible]க்கு நிலப் பிரபுக்கள் அவர்களி[illegible]க்கள் எழுதி வாங்கி யிருக்கிறார்கள் [illegible] கட்டி வாயைக் கட்டி நிலங்களை வாங்கியிருக்கிறார்கள். எனவே முதலாளியிடமோ, நிலப்பிரபுவிடமோ 40 [illegible] ரூபாய் எப்படி பணம் வாங்க முடியும், எப்[illegible]ி எழுதிக் கொடுக்க முடியும். ஆகவே இந்த [illegible]க்கள் யார் யாரிடம் இருக்கின் றனவோ, எந்த [illegible] பொய்யாகத் தயாரித்து இருக் கிறார்களோ அதை[illegible]த அரசு கவனித்து அந்த பிராமிசரி நோட்டுக்களை செல்லாதி ஆக்கும்படியான சட்டம் இயற்றினால் ஒழிய உண்மையிலேயே ஏழைகளுக்கு அளிக்கப்படுகின்ற சலுகை கள் அந்த ஏழைகளுக்குக் கிடைக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உண்மையான நில மாற்றங்கள் இருக்கின்றன அல்லது உண்மையான ஏழைகள் நிலத்தை விலைக்கு வாங்கி யிருப்பார்கள் என்றால் அதை மக்கள் கமிட்டிக்கு முன்னாலே





தெரிவித்து அவர்களுடைய உரிமையைப் பெற்றுக் கொள்ள முடியும். அதைப் போன்ற காரியங்களில் என்னைப் போன்ற வர்கள் அந்த ஏழைகளுக்கு நிச்சயமாக உதவியாக இருப்போம் என்பதை நான் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழைகளிடம் நிலப் பிரபுக்கள் பெற்றிருக்கிற—நான் மீண்டும் இதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்—பிராமிசரி நோட் டுக்கள் பூராவும் மக்கள் கமிட்டிக்கு முன் வந்தால் அவையெல்லாம் உண்மையான நில மாற்றங்களா அல்லது பினாமியான நில மாற்றங்களா என்பது தெரியும். கோயில்கள், மடங்கள், அறக் கட்டளைகள் என்ற பெயரால் இன்னொரு வகையான பினாமி இருக்கிறது. பினாமி பெயரால் ஏராளமானவர்கள் குத்தகை செய்கிறார்கள். ஒரு ஆலயத்திற்கோ அல்லது மடத்திற்கோ அல்லது அறக்கட்டளைக்கோ ஒரு கிராமத்திலே 200, 300 400 ஏக்கர் நிலம் இருக்கிறது என்றால் அந்தக் கிராமத்திலே இருக்கிற மிகப் பெரிய நிலப்பிரபு யாரோ அவர்தான் அந்த குத்தகைக்கு வைத்திருக்கிறார். அவரை மீறி எதுவும் செய்ய முடியாது. எந்த ஒரு ஆலயமும், ஒரு மடமும் அவரைத் தழுவித் தான் கிராமங்களிலே செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட பினாமி குத்தகைதாரர்களையும் கண்டுபிடித்து அவர்களுடைய கையிலே இருக்கிற குத்தகை நிலங்கள், அவை எதற்குச் சொந்தமாக இருக்கிறது. என்பதைக் கண்டுபிடித்து. அந்த நிலங்களிலே உண்மையாகவே உழுது கொண்டு இருக்கிற வர்களுக்குக் கொடுக்கக்கூடிய வழிவகைகளை நம்முடைய அரசு செய்ய வேண்டும் என்பதைத் தெரி[illegible]கொள்கிறேன்.

உதாரணத்திற்குச் சுட்டிக் காட்ட விரும்பு[illegible]. தஞ்சா வூரிலே பெரிய கோவில் இருக்கிறது. [illegible] 7-ம் நூற் றாண்டைச் சேர்ந்த அந்தக் [illegible]ராஜராஜன். அதனால் அதற்கு இராஜரா[illegible]இருக்கிறது அதற்குப் பின்னாலே இரா[illegible]ய முதல்வர் கள், தளபதிகள், மந்திரிகள் [illegible]வேலி நிலங் களை அந்தக் கோயிலுக்கு எழு[illegible]கள் என்று கல்வெட்டு சொல்லுகிறது. [illegible]யிரம் வேலி நிலம் இராஜராஜன் கட்டிய கோ[illegible]பட்டிருப்பதாக அந்தக் கல்வெட்டுக்களிலே எழுதப்பட்டு இருக்கிறது. ஆனால் இன்றைக்கு அந்த ஆலயத்தின் நிலைமை என்ன? அந்த ஆலயத்திற்கு ஒரு அங்குலம்கூட நிலம் இல்லை. அந்த நிலங்கள் என்ன ஆயிற்று? அவை யாரிடம் போயிற்று? இன்றைக்கு அந்தக் கோவில் இழுத்துப் பூட்டப்பெற்று, பூஜைகள் நடை பெறாமல், விளக்குகள் இல்லாமல் அடைக்கப்பட்ட நிலைமை யிலே இருந்து, பின்னாலே மத்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித்துறை பரிபாலிக்கக்கூடிய பரிதாபமான நிலைமை

ஏற்பட்டிருக்கிறது. இராஜராஜன் கட்டிய இந்தக் கோவிலுக்கே
இந்தக் கதி ஏற்பட்டது என்றால், பினாமி என்ற பெயரால்
இராஜராஜன் கட்டிய ஆலயத்திற்குச் சொந்தமான நிலங்களையே
எடுக்கத் துணிந்தார்கள் என்றால் இறைவனுக்கே துரோகம்
செய்கிறார்கள் என்றால் வேறு யாருக்குத்தான் துரோகம் செய்ய
மாட்டார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அது மட்டுமல்ல, இங்கே மாண்புமிகு உறுப்பினர்
திரு. சங்கரய்யா அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள்.
பினாமி மோசடி செய்கிறவர்களுக்கு அபராதம் சட்டத்திலேவகை
செய்யப்பட்டிருக்கிறது, ஐயாயிரம் ரூபாய் அபராதம் போடலாம்
என்று இருக்கிறது, அது போதாது.

[நண்பகல் 12–00]

வெறும் அபராதம் கட்ட அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.
5,000 அல்ல, 10,000 அல்ல, 20,000 ரூபாய் கூட அவர்களே
கட்டிவிடுவார்கள். அவர்களிடம் ஏராளமான பணம் இருக்
கிறது. பணத்தால் எல்லோரையும் விலைக்கு வாங்கும்
சக்தியும் இருக்கிறது. இப்படிப்பட்டவர்களிடம், இவை பினாமி
நிலங்கள் என்பது நிருபிக்கப்படுமேயானால் அந்தப் பினாமி
நிலங்களை நஷ்டஈடு இன்றியே எடுத்துக் கொள்வதற்கு
கொள்வதற்கு அரசாங்கம் முன் வர வேண்டுமென்று இந்த
நேரத்திலே நான் வற்புறுத்த விரும்புகிறேன். பினாமி
மோசடியைச் செய்து மக்களையும், அரசாங்கத்தையும்
ஏமாற்றியவர்களுக்கு [illegible]டு எதையும் நிச்சயமாகக் கொடுக்
கக்கூடாது. இதன்மூலம், நிலப்பிரபுக்களிடம் சிக்கிக் கிடக்
கின்ற தமிழக அரசியலை விடுவிக்க முடியும் என்பதையும்
இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

இன்னொன்று [illegible] செவின்யூ அமைச்சரவர்கள்
கவனிக்கவேண்டும். [illegible]ற்ற ஏழைகளுக்கு பட்டா
கொடுக்கிறீர்கள் [illegible]தாலும், வீட்டு மனைப்பட்டா
வாக இருந்தாலும் [illegible]ந்து கொடுக்கிறீர்கள். ஆனால்
வில்லேஜ் ரிக்கார்டிலே [illegible] பதிவு செய்யப்படுவதில்லை.
நீங்கள் என்னதான் [illegible]களுக்கு உதவி செய்தாலும்
வில்லேஜ் ரிக்கார்டிலே [illegible]கள் எழுதப்பெற்றால்தான் அவர்
களுக்கு அது போய்ச் சேரும். ஏனென்றால் கிராமங்களிலே
இன்றைக்கிருக்கின்ற நிலைமை, கிராமக் கணக்குப்
பிள்ளைகள் அதைப் பதிவு செய்ய வேண்டும்.
ஆனால் இந்த பினாமி மோசடி செய்யும் நிலப்பிரபுக்கள்.
கிராமக் கணக்குப்பிள்ளைக்கு 2 ஏக்கரா, 5 ஏக்கரா நிலத்
தைக்கூட எழுதி வைத்து விடுகிறார்கள் பினாமியாக. எனவே
அந்த நிலப்பிரபுக்கள் சொன்னபடிதான் பதிவு செய்கிறார்களே





தவிர மற்றபடி எதுவும் செய்வது இல்லை. ஆகவே, இதைச்
சீர் செய்தால் பெருமளவிற்கு பினாமி டிரான்ஸாக்ஷன்களை
நாம் கண்டுபிடிக்க முடியும். எனவே முதலிலே வில்லேஜ்
ரிக்கார்ட்களைச் சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். அப்பொழுதுதான் இந்த பினாமி நிலங்களை
ஒழிக்கின்ற நோக்கம் முழுவதும் நிறைவேற முடியும் என்பதை
இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மக்கள் கமிட்டி அமைப்பதுபற்றியும் இந்தச் சட்ட முன்
வடிவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது நல்ல, வரவேற்கத்
தகுந்த யோசனை. மக்கள் கமிட்டியிலே யார் யார் இடம்
பெறுகிறார்கள் என்பதைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது.
குறிப்பாக, நிலமற்ற வேளாண்மை தொழிலாளர்கள் இருவர்.
இவர்களில் ஒருவர் அரிசன வகுப்பை அல்லது பழங்குடி
யினர் வகுப்பைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்று
சொல்லப்பட்டிருக்கிறது. அமைச்சரவர்கள் இதிலே ஒரு திருத்
தத்தைச் செய்ய வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்
கிறேன். தமிழகத்திலே நிலத்திலே இறங்கி பாடுபடக்
கூடியவர்கள் பெரும்பாலும் அரிசன சமுதாயத்தைச்
சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அதேபோல நிலமற்ற
ஏழைகள் பெரும் ாலும் அரிசன சமுதாயத்தைச் சேந்தவர்கள்.
ஆகவே, எந்த நோக்கத்திற்காக இந்தச் சட்டத்
திருத்தம் வருகிறதோ அந்த நோக்கம் முற்றிலுமாக நிறைவே
வேண்டுமென்றால், யாருக்கு இந்த நிலம் போய்ச் சேர
வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தத் திருத்தச் சட்ட முன்
வடிவு இங்கே அளிக்கப்பட்டிருக்கிறதோ அந்த அரிசன
மக்களுக்கு, நிலமற்ற ஏழை எளியவர்களுக்கு இந்த நிலம்
போய்ச் சேர வேண்டுமென்றால் இந்தக் குழுவிலே
அவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டுமென்று
வற்புறுத்தி, இப்பொழுது இருவர் என்பதை மூன்று பேர்
என்று ஆக்கி, அந்த மூன்றிலே இரண்டு பேர் அரிசன
சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக நியமிக்கப்பட வேண்டு
மென்று வற்புறுத்த விரும்புகிறேன்.

அதைப்போல, சமூகத் தொண்டர்கள் மூவர் நியமிக்கப்
படுவார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்கான விளக்
கம் இல்லை. இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்
திரு. இளையபெருமாள் அவர்கள், பேசும்போது ஒரு
நல்ல யோசனையைச் சொன்னார்கள். சர்வோதயச் சங்கத்
தைச் சேர்ந்தவர்கள் முழுமையாக இந்தப் பணியிலே
தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள், அவர்களை
இதிலே ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள்.
அதை நான் வரவேற்கிறேன். அதையே நானும் வற்புறுத்த
விரும்புகிறேன்.

[திரு. ப. நெடுமாறன்] [1980 ஆகஸ்ட் 11

கிசான் இயக்கங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.
நான் விவசாய இயக்கங்கள் என்று குறிப்பிடுவது எதை
என்றால் விவசாயத் தொழிலாளர்கள் நடத்துகின்ற
இயக்கங்களைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன்.
அந்த விவசாயத் தொழிலாளர்கள் இயக்கங்களில் ஈடுபட்டிருப்
பவர்களை இந்தக் குழுவிலே சேர்க்க அரசு முன் வர வேண்டு
மென்று வற்புறுத்த விரும்புகிறேன்.

செலக்ட் கமிட்டி தேவையா என்ற வாதத்தை இங்கே சில
உறுப்பினர்கள் எழுப்பினார்கள். நான் இங்கே குறிப்பிட
விரும்புவது எல்லாம், செலக்ட் கமிட்டிக்கு இந்தச் சட்ட
முன்வடிவை அனுப்பக் கூடாது என்பதுதான். எதற்காகச்
செலக்ட் கமிட்டிக்கு அனுப்புவது? இங்கே ஆட்சிப் பொறுப்பை
ஏற்றுக்கொண்டிருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, அல்லது எதிர்கட்சி
வரிசையிலே வீற்றிருக்கின்ற இந்திரா காங்கிரஸ் கட்சியாக
இருநதாலும், சி. பி. எம்., சி. பி. ஐ. கட்சிகளாக
இருந்தாலும் அல்லது காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ்
கட்சியாக இருந்தாலும், அல்லது எங்களுடைய தமிழ்நாடு
காமராஜ் காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி, யாராக
இருந்தாலும் சென்ற தேர்தலிலே நம்முடைய தேர்தல்
அறிக்கைகளிலே பினாமிநிலங்களை ஒழிப்பதுபற்றி வலியுறுத்தி
யிருக்கிறோம். குறிப்பாக ஆளும் பொறுப்பை ஏற்றிருக்கின்ற
கட்சி தங்களது தேர்தல் அறிக்கையிலே இதை வைத்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் அறிக்கையிலே
அதைச் சொல்லாவிட்டாலும் அவர்கள் அதை இலட்சியப்பூர்வ
மாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி எல்லோரும்
ஏற்றுக் கொண்டிருக்கிற ஒன்றை மீண்டும் எதற்காக செலக்ட்
கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்று எனக்குத் தெரிய
வில்லை. செலக்ட் கமிட்டிக்கு அனுப்புவது என்றால், ஊர்
ஊராகப் போய், மாவட்டம் மாவட்டமாக மக்களைச் சந்தித்து
கருத்தறிந்து கொண்டு வரவேண்டும். அதற்குப் பிறகு பரிந்
துரை செய்ய வேண்டும்.

ஏற்கனவே மக்கள் மத்தியிலே, சென்ற தேர்தல் நேரத்தில்
அதைப் பிரச்னையாக வைத்து, அதை மக்கள் ஏற்றுக்
கொண்டதன் விளைவாகத்தான் நீங்கள் ஆட்சிப் பொறுப்பிலே
அமர்த்தப்பட்டிருக்கிறீர்கள். அப்படி மக்களின் ஆதரவு
பெற்ற ஒன்றினை நீங்கள் உடனடியாகச் செயல்படுத்த
வேண்டுமே தவிர, அதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்புகிற
ஆலோசனையை மட்டும் ஏற்றுக் கொள்ளக்
கூடாது என்று சொல்லிக் கொள்கிறேன். இதேபோல்
நிலச்சீர்திருத்த சட்டங்கள் 1960-ம், அதற்கு



1980 ஆகஸ்ட் 11] [திரு. ப. நெடுமாறன்]

பிறகு 1972லும் நிறைவேற்றப்பட்ட பல சீர்திருத்தச் சட்டங்கள் எதிர்பார்த்த அளவிற்கு பலனை அளிக்கவில்லை என்றும் அந்தச் சட்டங்களில் இருந்த விதிவிலக்குகளை உபயோகப்படுத்தி நிறைய நிலங்கள் பினாமியாக மாற்றப்பட்டன என்றும் அந்த நிலைமைகள் தமிழகம் பூராவும் இருப்பதாக வும் எனக்கு முன்னாலே பேசிய பல உறுப்பினர்கள் எடுத்துக் காட்டினார்கள். ஆகவே அப்படிப்பட்ட விதிமுறைகளில் நழுவி விடாதபடி தக்க முறையில் வழிவகைகளைச் செய்ய வேண்டும், அதற்கான நடவடிக்கைகளை விரைந்து எடுத்து அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு, இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து என் உரையை முடிக்கிறேன், வணக்கம்.

<u>திரு. குமரி அனந்தன் :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அவையிலே வைத்திருக்கிற சட்ட முன்வடிவினையும், அதிலே யுள்ள நல்ல தன்மைகளையும் ஆதரித்துப் பேசுகிற வாய்ப் பினை அளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ரெவின்யூ போர்டை மிகத் துணிச்சலாக அகற்றி மாபெரும் சாதனை செய்த அதே அமைச்சர் இன்று பொய்ப் பெயர் களை வைத்து பினாமி நிலங்களை வைத்திருப்பவர்களை எதிர்த்து இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அவர்களுடைய சட்டவிரோதமான போக்கைத் தடுத்து நிறுத்து கிற வகையில், அந்த நிலங்களை ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கிற ஒரு முயற்சியிலே ஈடுபடுவது பாராட்டுதற்குரியது.

அதிலே காங்கிரஸ் ஒன்றாக இருந்த நேரத்தில், தமிழகத் தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த நேரத்தில், இதே பிரச்சினையை கருத்தில் கொண்டு முதன் முறையாக இந்த புரட்சிகரமான சாதனையைக் கொண்டுவந்த போதிலும், அவர்கள் அதிலே ஏற்படுத்தியிருந்த சில விதி விலக்குகளை வைத்துக்கொண்டு ஏராளமான பேர்கள் நில்ங்களை பிரித்து வைத்துக் கொண்டார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எடுத்துக் கூறினார்கள்.

அப்படிப்பட்ட ஓட்டைகளை விட்டு வைக்காமல், ஓட்டாண்டி களாக இருக்கிறவர்களுக்கு நிலங்களை அதிகமான அளவில் கொடுக்கிற வகையில் கொண்டுவரப்பட்டிருப்பதுதான் இந்தச் சட்ட முன்வடிவாகும். காங்கிரஸ் கொண்டுவந்த உச்ச வரம்புச் சட்டத்தைப் போல்வே, அதற்குப் பின்னாலே வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு சில சீர்திருத்தங் களை, சில முற்போக்குகளைக் கொண்ட திருத்தங்களை வைத்து 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று சொல்கிற வரம்பு கொண்டு

வந்து ஒரு சட்டத்தை நிறைவேற்றினார்கள். அவைகளை ஆழ்ந்து கவனித்து அதிகமான அளவு நிலங்களைக் கைப்பற்று கிற ஒரு சூழ்நிலைக்கு இந்த அரசு கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அரசு கொண்டுவருகிற சட்டங்களிலெல்லாம், அதிலிருக் கிற சில விதிமுறைகளைப் பயன்படுத்தி ஏராளமானவர்கள் தங்கள் நிலங்களை பிரித்து வேறு பெயர்களில் எழுதிவைத்து விட்டார்கள். மிச்சம் இருக்கும் நிலங்களை பங்கிட்டுக் கொடுத்து விட்டோம் என்று காட்டுவதுபோல அவர்கள் பங்கீடு செய்திருக் கிறார்கள். அப்படி மிச்ச நிலங்களைபங்கீடு செய்தவர்கள் கோயில் நிலங்களை குத்தகைக்கு எடுத்து சாகுபடி செய்து கொண் டிருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் எப்படிப்பட்ட வர்களாக இருப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அரசு உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டுவந்துவிட்டதன் காரணமாக ஒருவருக்கு அறச் சிந்தனைகள் ஏற்பட்டு ஏறத் தாழ 16 அறக்கட்டளைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவைகளிலே, கால்நடை பராமரிப்புக்கு என்று ஒரு அறக் கட்டளை கால்நடைகளின் பேரிலே அவருக்கு திடீரென்று பக்தி. இரண்டாவது, கோசாலா என்ற பெயரில் பசுக்களின் மேலே ஏற்பட்டதின் பாசத்தின் விளைவாக ஒரு அறக்கட்டளை. மூன்றாவது, நாட்டிலே மக்கள் தொகை அதிகமாகப் பெருகி வருகிறதே என்ற கவலையால் குடும்பக் கட்டுப்பாட்டிற்கு ஒரு அறக் கட்டளை, இப்படி 16 அறக்கட்டளைகளை ஏற்படுத்தி, ஏறத்தாழ 528 ஏக்கர் நிலங்களை மாற்றி வைத் திருக்கிறார்கள் என்பதை நாம் சில நகல்களிலிருந்து தெரிந் துக் கொள்கிறோம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 12·10)

இன்னொரு பெருமகனார் யாழ்ப்பாணத்தில் இருக்கிற கோயிலுக்கு இங்கே நிலங்களை எழுதி வைத்திருக்கிறார். கடல் கடந்த நிலையில் இருந்தாலும், கடவுள் எல்லா இடங்களுக்கும் பொது என்ற எண்ணமோ என்னமோ, அவர் இங்கேயிருக்கிற நிலத்தை, அங்கேயிருக்கிற கோயிலுக்கு எழுதி வைத்து, இறைவனுக்கு நாம் கொடுத்தாலும் நான் பெரியவன் அல்லவா என்கிற எண்ணம் வந்திருக்குமோ என்னமோ ஒரு தானிய மணியைக் கூட இங்கே இருந்து அனுப்புவதில்லை. அந்த வகை யிலே இறைவன் பெயராலே அறக்கட்டளைகள் ஏற்படுத்தி, இங்கே இருப்பவர்கள் உழுவதற்குத் தவிக்கின்ற நிலையிலே, அவர்கள் ஊரை ஏய்த்துக் கொண்டிருப்பதையும் அரசாங்கம் கண்காணித்திருக்கும். இல்லையென்றால் கண்காணிக்கும் என்பது





நமக்குத் தெரியும். கண்காணிக்கிறது என்பதற்கு அடையாளம் தான் இந்தச் சட்ட முன்வடிவு. அதிலே திருத்தங்கள் கொண்டு வந்திருப்பதை நான் வரவேற்கிறேன்.

அரசு சார்பிலே கொண்டுவந்திருக்கிற திருத்தம் சிறு நிலத்தை வைத்திருக்கிறவன், உண்மையாகவே அவன் அதை விலைக்கு வாங்கி வைத்திருப்பானேயானால் அவன் பாதிக்கப் படக் கூடாதே என்ற வகையில் திருத்தம் வந்திருக்கிறது—வர வேற்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கொண்டு வந்திருக்கிற திருத்தம் சற்று அதிக அளவு நிலம் வேண்டுமென்று கூறுவதாக இருக்கிற காரணத்தாலே, அந்த அளவுக்குப் போகவேண்டியதில்லை. அரசு கொண்டுவந் திருக்கிற திருத்தங்களே போதும் என்பதுதான் காந்தி காமராஜ் தேசீய காங்கிரசினுடைய கருத்தாக இருக்கிறது என் பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆனால், ஒன்று. இந்தத் திருத்தங்களினால் மட்டுமே அந்த ஏழைக்கு நிலம் கிடைத் துவிடுமா ? நிலம் அவனுடைய பெயரிலே இருந்தாலும் கூட அந்த நிலத்தினுடைய வருமானம், அதனுடைய விளைவு அவ னுக்குக் கிடைக்குமா என்பது ஐயப்பாட்டிற்கு உரியதுதான். ஏனென்றால், ஒரு சம்பவம் எனக்கு நினைவுக்கு வருகிறது. ஒரு பெரிய பண்ணையாரிடத்து வேலை செய்த பண்ணை யாட்கள், அதிலே கூட பண்ணையார் என்று சொல்கிற பொழுது மரியாதைக்குரிய ஆர் விகுதியும், பண்ணையாள் என்று சொல் கிறபொழுது அதனுடைய ஒருமை விகுதியும் எப்படியோ வந்து விடுகிறது. ஆக, அந்தப் பண்ணையாரிடம் வேலை செய்து கொண்டிருக்கிற பண்ணையாட்களுக்கு பூதான கமிட்டியினர் நிலம் கொடுத்த நேரத்தில், அவர்களுக்கு அந்த நிலத்தை பூதான கமிட்டி கொடுத்த பிறகு, அந்த நேரத்திலே அவர்கள் பாடுபடப் போகின்ற நேரத்தில் நீங்கள் அந்த நிலத்திலே எப்படி பாடு படுவீர்கள் ? என்னுடைய நிலத்திலேதான் நீங்கள் தொடர்ந்து உழவேண்டுமென்று சொல்கிற அளவுக்கு அவர்களை வலியுறுத்தி அவர்களைக் குனியச் செய்கின்ற அளவுக்கு சக்தி படைத்தவர்க ளாக தஞ்சை மாவட்டத்திலே எத்தனையோ மிட்டாதார்கள், மிராசுதார்கள் இருக்கின்றார்கள். எனவே, அவர்களுக்கும் உரியதுதான் அந்த நிலம் என்று சொல்கின்ற எண்ணம் எப் பொழுது வரும்? இங்கே ஒருவர் 2— ஏக்கர் நிலம்தான் வைத் திருக்கிறார் அல்லது 2½ ஏக்கர் நிலம்தான் வைத்திருகிறார். அந்தப் பெருநிலச்சுவாந்தாரிடமிருந்து அவர் வாங்கியிருக் கிறார் என்று சொன்னாலுங்கூட. அவர் வாங்கினாரா. வாங்க வில்லையா, அது வெறும் பட்டாதான் எழுதி வைக்கப்பட்டதா அல்லது அவர் பணம் கொடுத்து வாங்கியிருக்கின்றாரா என்று தெரியாத நிலையில் நமது நாட்டில் இருக்கிற மக்கள் மனச் சாட்சி என்ற ஒன்றுக்குப் பயந்து இருக்கிற காரணத்தாலே, உண்மையிலேயே அவர்கள் வாங்காமல் இருந்திருப்பார்களானால் அந்த நிலம் அவர்கள் பெயரிலே எழுதி வைக்கப்பட்டிருந்தாலுங் கூட, என் பெயரிலேதானே, இந்த நிலம் எழுதி வைக்கப்பட்டிருக்

கிறது. மிச்ச நிலத்தை வைத்திருப்பதற்கு உரிமை இல்லை அல்லவா ? எனவே, இந்த நாட்டிலே பிறந்த எனக்கு இந்த நிலத்தை ஆள்வதற்கு உரிமை உண்டு என்று எண்ணுகிற எண்ணம் பெரும்பாலான பேருக்கு வருவதே இல்லை. இது நமது நிலம் தான், நமக்குக் கொடுக்கப்பட்டிருந்தது என எடுத்துச் சொல்லுகின்ற எண்ணம் பெரும்பாலான மக்களுக்கு வருவது இல்லை. வராத காரணத்தினாலேதான் நீண்ட நாட்களாக கொத்தடிமைகளாகப் பழக்கப்பட்டவர்களானாலும் சரி, அல்லது அப்படி பழக்கிவைக்கப்பட்டவர்களானாலும் சரி, அவர் களுக்கு அந்த நெஞ்சத் துணிவு வருவதில்லை.

இந்தத் தேசம் நமக்குரியது என்று தெரிந்த பிறகும்கூட, பாரதி வந்து பாட வேண்டியிருந்தது.

'நாமிருக்கும் நாடுநமது என்பதறிந்தோம்—இது
நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம்' என்று

சொன்னதற்கு என்ன காரணம்? இந்த நாடு நமக்கில்லையோ என்று எண்ணுகின்ற அளவுக்கு நமது நாட்டில் இருக்கிற மக்கள் கூன் வளர்ந்துபோய் கிடந்தார்கள். முதுகெலும்பு போய் பதராக இருந்த காரணத்தாலே, அவர்களுக்கு அதைச் சொல்லி ஊக்கம் ஊட்ட வேண்டி வந்தது. அதைப் போலத்தான் பண்ணையாள் என்ற பெயரிலே எழுதி வைக்கப்பட்டாலும் அது எனக்குத்தான் சொந்தம் என்ற எண்ணம் அவனுக்கு வராத நிலையிலே, ஐயோ, இது அவனுடைய நிலம்தான், தனக்கு வந்திருக்கிறது என்ற எண்ணம் அவனுக்கு வந்து விடும் ஆதலினாலே, என்னதான் நிலத்தை அவன் பேரிலே எழுதி வைத்திருந்தாலும், பட்டுக் கோட்டையிலேயிருந்து வெற்றிபெற்று வந்திருக்கிற நமது அமைச்சர் சொல்கிற நேரத்தில், அவனுடைய செயலற்ற நிலை —அவன் உழைப்பைக் கொடுக்கின்றான், ஆனால் விளைவை வேறொருவன் எடுத்துப் போகின்ற நேரத்தில், அவன் தடுத்து நிறுத்த மறுக்கிறான், அல்லது தடுத்து நிறுத்த அவன் முயலு தில்லை, என்றார். பட்டுக்கோட்டையிலேயிருந்து வெற்றி பெற்றவர் என்ற காரணத்திற்காக, பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் மிக அழகாகச் சொல்லியதை இங்கே சொல்கிறேன்.

சும்மா கிடந்த நிலத்தைக் கொத்தி
சோம்பலில்லாமல் ஏர் நடத்தி
கம்மா கரையை உசத்திக்கட்டி
கரும்புக் கொல்லையில் வாய்க்கால் வெட்டி
சம்பாப் பயிரை பிடுங்கி நட்டு
தகுந்த முறையில் தண்ணீர் விட்டு
நெல்லு விளைஞ்சிருக்கு,
**வரப்பு உள்ளே மறைஞ்சிருக்கு—**





ஆண் சொல்கிறான்

நெல்லு விளைஞ்சிருக்கு,
வரப்பு உள்ளே மறைஞ்சிருக்கு.

அதற்கு மனைவி சொல்கிறாள் :

காடு விளைஞ்சி என்ன மச்சான்
கையும் காலும் தானே நமக்கு மிச்சம் என்று,

ஆக, காடு விளைஞ்சு என்ன மச்சான், கையும் காலும் தானே நமக்கு மிச்சம் என்று சொல்கின்ற வகையிலே, அவன் பேரிலே பட்டா இருந்தாலுங்கூட, அந்த நிலச்சுவாந்தார் அதை எழுதிக் கொடுத்திருந்தாலுங்கூட, உங்கள் முன்னாலே இருக்கிற குருவின் முன்னால் அவர்களுக்கு எழுதிக் கொடுத்தார் என்று சொன்னாலுங்கூட, அவன் அது அவருக்கு உரியது என்று நினைத்துக் கொண்டிருக்கிறானே தவிர, தனக்குரியது என்று அவன் நினைக்க மாட்டான். அவன் தனக்குரியது என்று நினைக் கின்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், மிச்சமாக இருந்த நிலம் அத்தனையையும், அது ஒருவர் கையிலே இரண்டு ஏக்கராக இருந்தாலும் சரிதான், 1 ஏக்கராக இருந் தாலும் சரிதான், அந்த உச்சத்திற்கு மேல் இருக்கிற மிச்சம் அத்தனையையும் அரசாங்கம் முதலிலே கைப்பற்ற வேண்டும்.

அது இரண்டு ஏக்கராக இருந்தாலும் சரி, இந்தக் குறிப்பிட்ட சட்டம் நிறைவேற்றியதற்குப் பின்னால் அல்லது நீங்கள் வகுத்திருக்கின்ற வரம்புகளுக்குப் பின்னால், ஒதுக்கப்பட்ட, மாற்றப்பட்ட, விற்கப்பட்ட, பட்டா போடப்பட்ட அது எந்த நிலமாக இருந்தாலும், அது ஒரு ஏக்கர் நிலமாக இருந்தாலும், அந்த நிலங்களை அத்தனையையும் அரசாங்கமே எடுத்து, முதலிலேயே கைப்பற்றி, கைப்பற்றியதற்குப் பிறகு அது உண்மையாக வாங்கப்பட்டது என்றால் அரசாங்கம் அதை உறுதி செய்து திருப்பிக் கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுத் தால்தான் அரசே எனக்குக் கொடுத்துவிட்டது, எவன் என்னை எதிர்த்துக் கேட்பது என்ற எண்ணம் அந்த ஏழைக்கு வருமே தவிர, இல்லை என்றால் வராது. எனவே அந்தச் சூழ்நிலையை முதலிலே இந்த அரசு செய்வதற்கு உரிய திருத்தத்தை இப் போதே கொண்டு வரவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் பிறகு காலம் கடத்தி செலக்ட் கமிட்டி என்று எல்லாம் போவதிலே எனக்கு விருப்பம் இல்லை என்கிற காரணத்தினால்தான் முதலிலேயே அவைகளைக் கையகப்படுத்துங்கள். நீங்கள் கையகப்படுத்திவிட்டு, அதன் பிறகு ஆராய்ந்து பார்த்து நியாயம் என்று தெரிந்தவைகளை நீங்கள் கொடுங்கள். அப்படிக் கொடுக்கின்ற நேரத்திலேதான் அவன் அரசிடம் இருந்தே பெற்றிருக்கிறேன் என்ற உணர்வேற்படு

எதிர்க்கின்ற துணிவைப் பெறுவான் என்று எண்ணுகின்ற கார
ணத்தினால், இந்த ஆலோசனையை நீங்கள் மேற்கொள்ள
வேண்டும் என்று பணிவோடு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நான் பத்திரிகையிலே பார்த்து மிகவும் மகிழ்ச்சி
அடைந்தேன். திரு. இளையபெருமாள் அவர்கள் பட்டியலைக்
கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பட்டியலிலே நாய்க்கும்
பூனைக்கும் எழுதி வைத்தவர்களின் பெயர்கள் எல்லாம்
இருக்கும் என்று கருதுகிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே,
அமைச்சரிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் பட்டியல்
கொடுப்பேன் என்றும் சொல்லிக்கொள்ளுகிறேன்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, அமைச்சர்
அவர்கள் பூனைக்கும், நாய்க்கும் எழுதி வைத்தவர்களுடைய
பட்டியலை நீங்கள் கொடுக்கவில்லை என்று சொல்லுகிறார்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே,
சர்வோதயத் தலைவர்களிடம் கொடுத்து அனுப்பி விட்டேன்.
அதைத்தான் சொல்லுகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அருமை
நண்பர் மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் எழுப்பிய
பிரச்சினை மிகவும் முக்கியமானது. ஏடுகளிலே கூட வந்
திருக்கின்றது. அதைத்தான் அவர் சொல்லுகிறார். அமைச்சர்
உட்கார்ந்தவாறே தலையை அசைத்தால் எங்களுக்கு எதுவும்
புரியவில்லை. உண்மையை விளக்க எழுந்து பேச வேண்டு
கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர்
அவர்களே, சர்வோதயத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள்
நாடு பூராவும் நில மாற்றங்கள் தகுதி அற்ற முறையில் எங்
கெங்கு நடைபெற்றிருக்கின்றன என்பதை நீண்டகாலமாக
சர்வே செய்து, அவர்களிடத்திலே பல பேர்கள் இருந்தது.
நாங்கள் எங்களால் முடிந்த வரையிலும் அரசு அதிகாரிகளை
வைத்து இந்தக் காரியத்தைச் செய்தோம். ஒரே இடத்தில்
இரண்டு பேர்கள் அகப்பட்டால், அது நிச்சயமாக இருக்கும்
என்பதை உறுதி செய்வதற்காக அவர்களிடத்திலே இந்தப்
பெயர்களைக் கேட்டு, அவர்களும் சில பேர்களைக் கொடுத்
திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான்



அனுப்பியிருக்கிறேன் வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொன்
னார்கள். அது சர்வோதயத்தினர் தயாரித்தது என்பதைத் தெரி
வித்துக் கொள்ளுகிறேன்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, அமைச்சர்
அவர்களுடைய விளக்கம் தெளிவாக இருக்கிறது. இப்போது
கொடுக்கப்பட்டிருக்கிற பட்டியல் சர்வோதயத்தினரால்
தயாரித்ததாகும். சர்வோதய சங்கத்தினரால் அநேகமாக
அது நிறைவாகத் தயாரிக்கப்பட்ட பட்டியல், அது நாகப்
பட்டினம் தாலுகாவுக்கு மட்டுமே. இப்போது செங்கல்பட்டி
லும் தமிழகத்தின் பிற பகுதிகளிலும் அவர்கள் இந்தப் பட்டி
யலைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்
னாலும், கும்பகோணம் பகுதிக்கு எல்லாம் அவர்கள்
இன்னும் வரவில்லை என்று நமக்குத் தெரிகிறது. எனவே
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவையிலே சொன்ன,
பூனைக்கும், நாய்க்கும் எழுதி வைத்தவர்கள் பட்டியல் இன்
னும் கொடுக்கவில்லை என்று கருதுகிறேன். அவர், அன்று
கொடுப்பேன் என்று சொன்ன காரணத்தினாலே, மாண்புமிகு
உறுப்பினர் இளையபெருமாள் அதனை கொடுப்பார் என்று
நம்பி, விளக்கத்தை அவரிடம் எதிர்பார்க்கலாமா ?

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே,
சகோதரர் குமரி அனந்தன் சொன்னதைப் போல நிச்சயமாக
என்னிடம் இருப்பதை கொடுப்பேன் என்று உறுதி கூறுகிறேன்.
நான் கடந்த 10 ஆண்டுகளாக சர்வோதயத் தலைவர்களோடு
இருந்து இந்த வேலையைத்தான் முதன் முதலாக செய்து
இருக்கிறேன் என்பதையும், சர்வோதயத் தொண்டர்கள் மூலம்
தான் அதை நம்முடைய அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கச்
சொன்னேன் என்பதை அமைச்சர் சொன்னதும் உங்களுக்குத்
தெரியும். நிச்சயமாக தேசிய விவசாயத் தொழிலாளர்
சங்கத்தின் மூலம் தமிழகம் பூராவிலும் அவைகளை எடுத்துக்
கொண்டிருக்கிறோம். நிச்சயமாகக் கொடுப்பேன் என்பதை
உறுதியாக மாண்புமிகு சகோதரர் அனந்தன் அவர்களுக்குச்
சொல்லிக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-20]

திரு. குமரி அனந்தன் : எனவே மாண்புமிகு உறுப்பினர்
இளையபெருமாள் அவர்கள் பூனைக்கும், நாய்க்கும் எழுதி
வைத்து இருப்பவர்கள் பட்டியலை நிச்சயமாகக் கொடுப்
பேன் என்று சொன்னபோது நான் மீண்டும் மகிழ்ச்சி அடை
கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே,
பூனைக்கும், நாய்க்கும் என்று நான் சொன்னது, வசதி படைத்
தவர்கள் தங்கள் நிலங்களை எழுதி வைப்பதற்கு, நாய்க்கும்,

[திரு. எல். இளையபெருமாள்] [1980 ஆகஸ்ட் 11

பூனைக்கும், கிருஷ்ணன் என்றும் லல்லி என்றும், லீலா
என்றும் ராதா என்றும் எழுதி வைத்திருக்கிறார்கள்.
பட்ட பெயர் வைத்து இருந்ததன் காரணமாக மிகச் சுலபமாக அப்படிப்
அதைப் பயன் படுத்தி லில்லி, ராதா, கிருஷ்ணா என்று
எழுதி இருக்கிறார்கள். நேரடியாக அவர்கள் பூனைக்கும்,
நாய்க்கும் எழுதி வைத்தால் திரும்ப வாங்கவும் முடியாது,
குத்தகை வாங்கவும், முடியாது அது மிகக் கடினம் என்று அவர்
களுக்கும் தெரியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. குமரி அனந்தன் :</u> இரண்டும் ஏறத்தாழ ஒன்றுதான்.
நாய்க்கும், பூனைக்கும், கிருஷ்ணன் என்றும், லீலா என்றும்,
பெயர் வைத்து எழுதி வைத்தவர்களின் கிருஷ்ண லீலா என்ன
என்று தெரிந்து கொள்ள ஒரு வாய்ப்பு இருக்கும் அல்லவா ?
எனவேதான் கிருஷ்ணா, லீலா, லல்லி, ராதா என்று எழுதி
வைத்து இருப்பவர்கள் யார் யார் என்று தெரிந்து கொண்டால்
போதுமானது என்பதால் உறுப்பினர்கள் அதைத் தருவார்கள்
என்கிற நம்பிக்கை எனக்கு உண்டு என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அதைப் போலவே உண்மைக்குப்புறம்பான வகையில்
காரியங்களைச் செய்துகொண்டு இருப்பவர்களுக்கு இப்போது
அரசாங்கம் கொண்டு வந்து இருக்கும் சட்ட முன்வடிவு
நிச்சயமாக ஒரு பேரிடியாக இருக்கும். அதே நேரத்தில்
ஏழை விவசாயிகளுக்கு பெரும் பேறாக இருக்கும் என்பதால்
இதை நான் வரவேற்கிறேன்.

இன்னும் சிலர் வேறு வகைகளில் பினாமியாக நிலம்
வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அரசாங்கத்தின் கவனத்
திற்கு நான் அதைக் கொண்டு வரவேண்டும் என்று விரும்பு
கிறேன். ஏனெனில் முடிந்தால் இந்த நேரத்திலேயே அந்தத்
திருத்தத்தைக் கொண்டுவர முடியுமா என்பதையும் அரசாங்கம்
ஆலோசனை செய்ய வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

சில மில் சொந்தக்காரர்கள், அவர்களுடைய மில் ஒரு
பக்கத்தில் இருக்கும். ஆனால் எக்ஸ்பான்ஷன் என்ற பெய
ரிலே அதை விரிவுபடுத்த வேண்டும் என்ற பெயரிலே பற்பல
இடங்களில் அவர்கள் நிலத்தை வாங்கி வைத்து இருப்பதைப்
பார்க்கிறோம். அதிலே எந்தவிதத்திலும் யாரும் தலையிட
முடியாதவாறு அவர்கள் பண்ணைகளை அமைத்துக் கொண்டு
இருக்கிறார்கள், பெரும் பண்ணைகளை நடத்திக் கொண்டு
இருக்கிறார்கள். அப்படி பண்ணையை நடத்திக் கொண்டு
அரசாங்கத்தின் உச்சவரம்புச் சட்டத்தினை அவர்கள் எளிதில்
ஏமாற்றிக் கொண்டு இருப்பதையும் அரசாங்கத்தின் கவனத்
திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.



1980 ஆகஸ்ட் 11] [திரு. குமரி அனந்தன்]

எனவே, இந்தச் சட்ட முன்வடிவை நான் வரவேற்று,
ஏழைகள் பலன் பெறத்தக்க வகையில் சில திருத்தங்களைக்
கொண்டுவர வேண்டும் என்று கேட்டு, இறுதியாக நான்
தெரிவிக்க விரும்புவது—மிச்சம் இருக்கின்ற நிலங்கள் எத்தனை
எத்தனை ஏக்கர், யார் யார் எப்படி என்பதை எல்லாம் பற்றிக்
கவலைப்படாமல் மிச்ச நிலங்கள் அத்தனையையும் முதலில்
அரசாங்கம் கையகப்படுத்த வேண்டும். அப்படிக் கையகப்
படுத்தி நியாயமான வகையில்மாற்றம் செய்து இருப்பவர்களுக்கு
நியாயமான முறையில் ஏழைகள் உழைத்து வாங்கியதைத்
திருப்பி கொடுத்து விட்டு, மற்றவற்றையெல்லாம் அரசே எடுத்து
ஏழைகளுக்கு விநியோகம் செய்கிற வகையில் நீ[illegible] திருத்த
களைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டு இ[illegible]
முன்வடிவில் உள்ள மற்ற செய்திகளையெல்[illegible] வரவேற்று
என் கட்சியின் சார்பில் என் ஆதரவினைத் [illegible]
கிறேன், வணக்கம்.

23095

<u>திரு. சோ. அழகர்சாமி :</u> பேரவை [illegible]லைவர்
அவர்களே, நம்முடைய வருவாய்த் துறை [illegible]வர்கள்
கொண்டு வந்து இருக்கிற இந்த நிலச் சீர்திருத்[illegible]ட
களுக்குக் கூடுதலாகக் கொண்டு வந்து இருக்கு[illegible]
முன்வடிவை ஆதரித்து இந்திய கம்யூனிஸ்ட் க[illegible]
சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். எனக்கு [illegible]
பேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்
இளையபெருமாள் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி
யைச் சேர்ந்த சங்கரய்யா அவர்களும், மாண்புமிகு உறுப்பினர்
நெடுமாறன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன்
அவர்களும், இந்தச் சட்டம் தொண்டுவரப்பட்ட ஆரம்ப
காலத்தில் எவ்வளவு ஏக்கர் நமக்கு உபரியாக கிடைக்கும்
என்று கணக்கிட்டு, அந்த அளவிற்கு ஏன் நமக்குக் கிடைக்க
வில்லை என்பதற்கான பல காரணங்களையும் இங்கே எடுத்துச்
சொல்லி இருக்கிறார்கள்.

ஆரம்ப காலத்தில் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேலே
உள்ளவர்கள் 9,470 பேர்கள். அவர்களிடம் இருந்த மொத்த
நிலம் 5,72,295 ஏக்கர். அதில் உபரியாக சுமார் ஏறத்தாழ
3 இலட்சம் ஏக்கர் வரையில் கிடைக்கலாம் என்ற எதிர்பார்ப்பு
இல்லாமல் போய்விட்டதற்கான காரண காரியங்களை
நான் இப்போது சொல்ல வேண்டாம். இங்கே ஏற்கனவே
இந்த மன்றத்தில் பல தடவை நான் சொல்லியிருக்கிறேன்.
அதிலும் குறிப்பாக, நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் சம்பந்த
மாக வரும் ஒவ்வொரு திருத்தத்தின் மீதும் அல்லது சாகுபடி
யாளர்கள் சம்பந்தமாக வரும் ஒவ்வொரு திருத்தத்தின் மீது
பேசும்போதும் நான் சொல்லியிருக்கிறேன்.

V211,31 N80
N81-801

[திரு. சோ. அழகர்சாமி] [1980 ஆகஸ்ட் 11

தொடர்ந்து இந்தச் சட்டங்கள் கொண்டுவரப்பட்ட நேரத்திலே,
உண்மையிலே இந்த உச்சவரம்புச் சட்டங்களின் மூலம் அதிக
மான நிலத்தை எடுத்து நிலம் இல்லாதவர்களுக்கு கொடுக்க
வேண்டுமென்ற நல்ல இருதயசுத்தியோடுதான் கொண்டுவந்
தார்கள். ஆனால் கடைசியில் நிலப்பிரபுக்களிடமே பெரும்
பகுதி நிலம் இருந்துவிட்டது. நிலப்பிரபுக்களுக்குச் சாதகமாக
சட்டத்திலே திருத்தங்கள் என்ற பெயரால் சில ஓட்டைகள்
போடப்பட்டன. இந்த விதிவிலக்கு கொடுத்ததன் காரணமாக
நிலம் கிடைக்கவில்லை ; இன்றுவரையில் அவர்கள் கையில்தான்
இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் 30 ஸ்டாண்
டர்டு ஏக்கர் என்பதை 15 ஸ்டாண்டர்டு ஏக்கராகக் குறைத்து
1970-லே ஒரு நிலச்சீர்திருத்தச்சட்டத்தைக்கொண்டுவந்தார்கள்.
அப்படியும் பெரிய, பெரிய பண்ணைகள் எல்லாம் அப்படியே
தான் இருந்தன. பினாமி முறையில் தனித்தனியாக எழுதி
வைத்திருப்பதால் அவர்களிடம் இருப்பதை எடுக்க முடிய
வில்லை ; அந்தச் சட்டம்கூட செல்லுபடி அற்றதாகிவிட்டது.
அந்த நிலத்தை எல்லாம் எடுக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்
தோடு, தைரியமாக இன்றைக்கு நம்முடைய வருவாய்த் துறை
அமைச்சர் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார் ; அவ
ருக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கி
றேன்.

அது மட்டுமல்ல. 1-1-58 முதல் 6-4-60 வரையில் நிலத்தை
விற்றிருந்தால், பாகப்பிரிவினை செய்திருந்தால் அது செல்
லாது என்று சொல்லுகிற அதேநேரத்தில் பலவிதமான ட்ரஸ்டு
கள் பெயரால் பலவிதமான காரியங்களுக்காக என்று சொல்லி
எழுதிவைத்துவிட்டு பினாமி முறையில் அனுபவித்துக் கொண்
டிருக்கிற நிலத்தையும் விட்டுவிடக்கூடாது. ஒரு இடத்தில்
கோவிலுக்குப் போகிறவர்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்ய,
தண்ணீர் பந்தல் வைக்க கொஞ்சம் நிலம் எழுதி வைக்கப்பட்டி
ருக்கிறது. அதேமாதிரி சில கல்லூரிகளுக்கு நிலம் எழுதி வைத்தி
ருக்கிறார்கள் ; மருத்துவ மனைகளுக்கு நிலம் எழுதி வைத்தி
ருக்கிறார்கள். இருந்தாலும் எழுதி வைத்திருக்கி
றவர்களே அனுபவித்துக்
கொண்டிருக்கிறார்கள். சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்
வதற்காக இப்படி பினாமியாக நிலத்தை எழுதி வைத்திருக்கி
றார்கள். இந்தச் சட்டத்தின்கீழ் அவையெல்லாம் விட்டு
விடாமல் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்னால் இதேமாதிரியான சட்டம் கொண்டுவந்தபோது
அந்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக முன்படி
வாண்டையார் பினாமியாக எழுதி வைத்ததாக கோர்ட்டிலே



1980 ஆகஸ்ட் 11] [திரு. சோ. அழகர்சாமி]

கூட சொல்லியிருக்கிறார்கள். அவர் யார் பெயருக்கு எழுதி வைத்தாரோ அவர் அந்த நிலம் எனக்குத்தான் சொந்தம் என்று சொல்லிவிட்டார். அதனால் வாண்டையார் கோர்ட்டுக்குப் போய், சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்ளத்தான் அவர் பெயரில் எழுதி வைத்தேன் ; நிலம் எனக்குத்தான் சொந்தம் என்று கோர்ட்டிலே வாதாடியது உங்களுக்கு நினைவு இருக்கும் என்று கருதுகிறேன். இதையெல்லாம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தின்கீழ் அதிகாரம் உள்ள ஒரு கமிட்டி போடப்பட்டிருக்கிறது. அந்தந்த கிராமத்தில் பினாமியாக, தவறாக எழுதி வைத்திருக்கிற நிலத்தைக் கண்டுபிடித்துச் சொல்வதற்காக நியமிக்கப்படும் அந்தக் கமிட்டி சொல்வதைக் கேட்டு அதன்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1970-ல் 30 ஸ்டாண்டர்டு ஏக்கரை 15 ஸ்டாண்டர்டு ஏக்கராகக் குறைத்து திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டுவந்த நிலச்சீர்திருத்தச் சட்டம் ஒரு முற்போக்கான சட்டம். எல்லோரும் வரவேற்றார்கள். நிறைய உபரி நிலம் கிடைக்கும் என்று நாங்கள் எல்லாம் எதிர்பார்த்தோம். ஆனால், சட்டத்தில் பல ஓட்டைகள் போட்டு, பிரயோஜனம் இல்லாமல் போய் விட்டது. அப்போது நானும் உறுப்பினராக இருந்தேன். அந்தச் சட்டம் எப்படி நிறைவேற்றப்பட்டது என்பதை குறிப்பிட விரும்புகிறேன். அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட தேதி 26-2-1970 ; அங்கீகாரம் பெற்றது 20-6-1970-ல் ; கெசட்டில் பிரசுரம் செய்யப்பட்டது 23-6-1970-ல் ; ஆனால் அமுலுக்கு வந்தது 2-10-1970-ல். இப்படி 6 மாதத்திற்குப் பின்னால் அந்தச் சட்டம் அமுலுக்கு வரும்போது பல விதிகள் சேர்க்கப்பட்டு, அதன் காரணமாக சட்டத்திலே ஓட்டைகள் விழுந்து பயனற்றுப் போயிற்று. அந்தச் சட்டத்தின் விதி 21-ஏ என்பதில் அந்தச் சட்டத்தில் தற்காலிகமாக என்ன சொல்லியிருந்தாலும் இந்த அறிக்கைக்கு முன்னால் பதிவான ஆவணங்கள் மூலம் நிலத்தை பாகப்பிரிவினை செய்திருந்தாலும், பொதுப் பாங்கோடு கல்வி ஸ்தாபனங்கள், மருத்துவ மனைகள் போன்றவைகளுக்கு மாற்றியிருந்தாலும் அந்தப் பாகப்பிரிவினை, சொத்து மாற்றம் செல்திறன் உள்ளதாகும் என்று சொன்னதன் காரணமாக அதற்கேற்ப மாற்றம் நடந்திருக்கிறது. அதற்கான தஸ்தாவேஜுகள் எல்லாம் என்னிடம் இருக்கின்றன. அப்போது நடந்த பாகப்பிரிவினையை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். இதை ஏன் சொல்கிறேன் என்றால் இந்தச் சட்டத்தில் அந்த ஷரத்து கிடையாது. 1970 ஆம் ஆண்டு உச்சவரம்புச் சட்டத்தில் விடுபட்டுப்போன நிலங்களை எல்லாம் இதில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். 

[திரு. சோ, அழகர்சாமி] [1980 ஆகஸ்ட் 11
[பிற்பகல் 12-30.]

அந்தச் சட்டத்திலிருந்து தப்பிப்பதற்காக வடபாதிமங்கலம் தியாகராஜ முதலியார் அவர்களும், ஆதித்தனார் அவர்களும் எழுதி வைத்த ரிகார்டுகள் இருக்கின்றன. அந்த ஏற்பாடுகள் எல்லாம் எப்படி செய்யப்பட்டது என்று சொன்னால், முந்தைய தேதியுள்ள பத்திரங்களை வாங்கி 30-9-70-லே எழுதப்பட்டு, 4-10-70-ல் பதிவு செய்யப்பட்டன. அதை நான் நம்பர் வாரியாகச் சொல்ல முடியும். பதிவு செய்தது கூட பிராட்வே ரிஜிஸ்திரார் ஆபீசில்தான்.

நீலா சுந்தரராஜன் தன்னுடைய மைனர் மகன் வி. எஸ். டி. வெங்கடேஸ்வரன் சொத்தை கார்டியன் என்ற முறையில் சாமியப்பன் என்பவருக்கு 43,535 ரூபாய்க்கு 19 ஏக்கர் 60 சென்ட் நன்செய் நிலத்தை கிரயம் செய்து 30-9-70-லே எழுதி 4-10-70ல் பதிவு செய்திருக்கிறார்கள். அதேமாதிரி நுங்கம்பாக்கத்தில் உள்ள கண் ஆஸ்பத்திரி பெயரால், வி. எஸ். டி. சோமசுந்தரம், சன் ஆப் தியாகராஜன் முதலியார் அவர்கள் வி. எஸ். டி.க்கு 24·69 ஏக்கர் நன்செய் நிலத்தை 1,11,105 ரூபாய்க்கு கிரயம் செய்து கண்ணாடிகள் வழங்க என்ற பெயரில் எழுதி வைத்திருக்கிறார்கள்.

இவையெல்லாம் 70 ஆம் ஆண்டு செய்யப்பட்டவை. 70 ஆம் ஆண்டிலே அக்டோபர் மாதத்திற்கு முன்னால் எழுதப்பட்டு, அக்டோபர் மாதத்திலே பதிவு செய்யப்பட்டது. அதேமாதிரி ரங்கநாத முதலியார் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு, பி. டி. நாகலிங்கம் சன் ஆப் வி. எஸ். டி. 24 ஏக்கர், 55 சென்ட் நிலத்தை 1,10,000 ரூபாய் மதிப்பீடு செய்து எழுதி வைத்து, அதிலிருந்து ஏக்கருக்கு 180 ரூபாயாக சர்க்கரை ஆலைக்கு கொடுக்கப்படவேண்டும் என்றும் கண்டிஷன் போட்டு எழுதப்பட்டிருக்கிறது. அதேமாதிரி ராஜம் என்பவர் மீனாட்சி என்பவருக்கு எழுதியதாக பத்திரங்கள் இருக்கின்றன. இப்படி பல ரிகார்டுகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் சொன்னால் நேரம் ஆகும்.

அதேமாதிரி நம்முடைய மதிப்பிற்குரிய ஆதித்தனார் அவர்கள் 1970 ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி தாலுக்காவில் 140 ஏக்கர் நிலத்தை. அது எஜுகேஷனல் டிரஸ்டுக்குச் சொந்தமானது—ஆனால் டிரஸ்டுக்கு சொந்தம் என்று சொன்னால் விலக்கு என்று வந்து விடும் என்று கருதி, சி. வீ. காத்தான்பட்டி தங்கவேலு மற்றும் 42 பேர்களுக்கு எழுதி வைத்து இருக்கிறார்கள். அதுவும் அதேமாதிரி 9 ஆம் மாதம் எழுதப் பட்டு, 4-10-70-ல் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.



1980 ஆகஸ்ட் 11] [திரு. சோ. அழகர்சாமி]

திருச்சி மாவட்டத்தில் குளித்தலை தாலுக்காவில் எங்களுடைய கட்சியைச் சேர்ந்த மியான் என்பவரும், எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்களும் நங்கவரம் பகுதியில் நடத்திய பெரிய போராட்டம் பற்றி அனேகமாக அனைவரும் தெரிந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். அங்கே இன்றையதினம் வரையில் உச்சவரம்பு என்ற சட்டம் கொண்டு வந்த பின்னாலும், அந்தச் சட்டத்தின் அடிப்படையில் நிலங்கள் தரப்பட்டதாகச் சொல்லப்பட்டிருந்தபோதிலும், அந்த நிலத்திலே அவர்களை இறங்கவிடாமல், இன்னும் பண்ணைக்குச் சொந்தமானவர்களே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். நிலம் பிரித்துக் கொடுக்கப்பட்டவர்கள் அதற்கான பணத்தைக் கட்டிய போதிலும் இன்றைய தினம் வரையிலும் அது அவர்களுக்கு ஆர்ஜிதம் செய்யப்படவில்லை, அவர்கள் அந்த நிலத்தில் இறங்க முடியவில்லை. எதற்குச் சொல்கிறேன் என்றால் 58 ஜனவரியிலிருந்து 6-4-60 வரை செய்யப்பட்ட மாற்றங்கள் மட்டும் செல்லுபடியாகாது என்று சொல்வது போதாது. அதற்குப் பின்னாலே 70 ஆம் ஆண்டு கொண்டு வந்த 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொல்லப்பட்ட உச்சவரம்புச் சட்டத்திலும் சில விதிமுறைகள் இருந்ததன் விளைவாக, மைனர் என்ற பெயரால், கல்வி ஸ்தாபனங்கள் என்ற பெயரால் எழுதி வைக்கப்பட்டன. உச்சவரம்பிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக எழுதி வைக்கப்பட்டவை. ஆகவே அவைகளையும் செல்திறன் இல்லாததாக ஆக்கவேண்டும், அதற்கான முறையிலே திருத்தங்களை இந்தச் சட்டத்திலேயே கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

60 ஆம் வருஷத்து பினாமியை மட்டும் சேர்த்துக் கொண்டு அதற்குப் பின்னாலே செய்யப்பட்ட பினாமி பதிவுகளையும் விட்டு விடாமல் செல்லாது என்ற வகையில் இந்தச் சட்டத்தில் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமாத்திரம் அல்லாமல், கோயில்களுக்கும், தர்ம ஸ்தாபனங்களுக்கும் சொந்தமான நிலங்களை சாகுபடி செய்பவர்களுக்கு அந்த நிலங்களைச் சொந்தமாக்க வேண்டும் என்ற வகையிலும் இதில் ஒரு திருத்தத்தைக் கொண்டுவரவேண்டும்.

எத்தனையோ சட்டங்கள் கொண்டு வந்தாலும் கூட, ஏதோ சட்டங்கள் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லிவிட்டுப் போகாமல், உண்மையாக இதயசுத்தியோடு, சட்டம் என்ன நோக்கத்திற்காகக் கொண்டுவரப்பட்டதோ அந்த நோக்கம் உண்மையாக அமுல் நடத்தப்பட அக்கறை செலுத்தவேண்டும். அப்படி கடந்த காலத்திலே கடைபிடிக்கப்படவில்லை என்பது நிரூபணம் ஆகிவிட்டது. ஆகவே அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தை அமுல் நடத்துகையில் மக்கள் கமிட்டி போட்டு, ஆங்காங்கே சென்று மக்களைக்கேட்டு, யார் யாருக்கு பினாமி நிலங்கள் இருக்கின்றன என்று கண்டு பிடித்து அவைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சோ. அழகர்சாமி] [1980 ஆகஸ்ட் 11

அதுபோலவே சட்டத்தை அமுல்படுத்துகிற காலத்திலே,
அவைகளுக்கான திருத்தங்களைச் செய்வதற்கான காரியங்
களை மேற்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் அவர்களைக்
கேட்டுக் கொள்கிறேன். அது மட்டும் அல்லாமல் நான் சொன்ன
70-ம் வருஷத்திய பினாமி மாற்றங்களை செல்திறன் அற்றவை
என்று ஆக்கும் வகையில் வகை செய்ய வேண்டும் என்று
அமைச் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மற்றபடி இந்த
மசோதாவை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

<u>திரு. பி. முகமது இஸ்மாயில் :</u> மாண்புமிகு மாற்றுத் தலை
வர் அவர்களே, பினாமி நிலங்களை அரசு எடுத்துக் கொள்ள
வேண்டுமென்று எந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவந்தாலும்,
அதற்காக எந்த முயற்சிகள் மேற்கொண்டாலும், ஜனதா அதற்கு
நிச்சயமாக ஆதரவு தரும். இங்கே கொண்டு வரப்படுகின்ற
சட்டத் திருத்தத்தின் மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள்
பினாமியாக நிலத்தை சொந்தக்காரர்களுக்கு எழுதி வைத்திருந்
தால் அந்த நிலத்தைக் கட்டாயம் எடுக்க வேண்டுமென்று
சொல்லப்பட்டது. கொண்டு வரப்பட்ட நிலச் சீர்திருத்தச்
சட்டத்தை நான் துருவித் துருவிப் பார்க்கிறபோது பினாமி
யாக நிலங்கள் மாற்றம் செய்யப்படுகின்றபோது எதற்காக
அரசு இந்தச் சட்டம் கொண்டு வந்திருக்கிறது என்பதை என்
னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்தச் சட்டத்தைப்
படித்தபோது, எந்தவிதமான மாற்றமும் அது விலையாகவோ,
இனாமாகவோ அல்லது செட்டில்மென்டாகவோ எந்த
வழியில் நிலம் மாற்றம் செய்யப்பட்டிருந்தாலும்,
1—1—1958-க்கும், 6—4—1960-க்கும் இடையில் இந்த நில
மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தால் அத்தனையும் செல்லுபடி
ஆகாது என்பது திருத்தச் சட்டத்தில் அமைந்திருக்கிறது. குறிப்பாக

இதை ஆராய்ந்து பார்க்கிறபோது, சாதாரணமாக நில
மற்ற ஒருவன் உச்சவரம்புக்கு அதிகமாக நிலத்தை வைத்து
உள்ள ஒருவனிடம் வெறும் 5 ஏக்கராவை எழுதி வாங்கி வைத்
துக் கொண்டிருந்தால் அதுவும் உச்சவரம்புக்கு மேற்பட்ட
நிலமாக வைத்திருக்கிறார்கள். ஒன்றும் தெரியாத ஒரு நபர்
வேறொரு நபரிடம் இப்படி 5 ஏக்கர் நிலம் வாங்கினாலும்கூட
அது செல்லுபடியாகாது என்று இந்தத் திருத்தச் சட்டம் கொண்டு
வரப்பட்டிருக்கிறது. குறுகிய நிலத்தை தெரியாமல் வாங்கினால்,
வந்த நிலத்தை விற்றவன் பாதிக்கப்படாமல் நிலத்தை வாங்கிய
தன் பாதிக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது என்பதை
அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



1980 ஆகஸ்ட் 11] [திரு. பி. முகமது இஸ்மாயில்]

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். இதிலே, நிலத்தை
வாங்கியவர் தண்டனைக்கு உள்ளாகிறார். உச்சவரம்புக்குமேல்
நிலத்தை வைத்துக் கொண்டிருக்கும் ஒருவருடைய நிலத்தை
தெரிந்தோ தெரியாமலோ அல்லது ஏமாந்தோ, அவரிடம் உள்ள
ஒரு பகுதி நிலத்தை வாங்கிவிட்டால், அப்படி ஏமாந்து வாங்கிய
வரைத் தண்டிக்கின்ற வகையிலேதான் இந்தச் சட்டம் இருக்கின்
றதே தவிர, ஏமாற்றியவரை தண்டிக்கின்ற வகையிலே இந்தச்
சட்டம் இல்லை. தெரியாமல் ஏமாந்து ஒரு குறுகிய நிலத்தை
வாங்கியிருந்தால் அவர்தான் தண்டிக்கப்படுகின்ற சூழ்நிலை
இந்தச் சட்டத்திலே உருவாகியிருக்கின்றது என்பதை நான்
அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்னொரு உதாரணத்தையும் சொல்ல விரும்புகிறேன். 40
ஏக்கரா நிலம் வைத்துள்ளார் ஒருவர். அவர் இந்தச் சட்டத்
தாலே பாதுகாக்கப்படுகிறார். நில உச்சவரம்பிலிருந்து தப்பித்
துக் கொள்ள, தான் பெற்றிருந்த 40 ஏக்கர் நிலத்தில் 10 ஏக்கர்
நிலத்தை விற்பனை செய்திருந்தால் அந்த 10 ஏக்கர் நிலத்தை
வாங்கியவர் தண்டிக்கப்படுகிறார். மேற்கொண்டு எஞ்சியுள்ள
30 ஏக்கர் நிலத்தை வைத்திருப்பவர் இந்த நில உச்சவரம்பிலே
இருந்து தப்பித்துக் கொள்ள இந்தச் சட்டம் வகை செய்கிறது.
எனவே, ஏமாற்றியவர் தண்டனைக்குள்ளாவதற்குப் பதிலாக,
தெரியாமல், ஏமாந்து வாங்கியவர் தண்டனைக்குள்ளாகின்ற
சூழ்நிலை இந்தச் சட்டத்தால் ஏற்பட்டு விடுமென்ற ஐயப்
பாட்டையும், அச்சத்தையும் நான் உங்கள் கவனத்திற்குக்
கொண்டுவர விரும்புகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்தச் சட்டத்தைக் காண்கின்றபோது, வேறொரு குறை
பாட்டை, விளக்க உரை என்று தந்திருக்கிறார்கள் அதாவது
எக்ஸ்பிளனேஷன். அந்த விளக்க உரையில் டிரான்ஸ்பரின்
கீழோ அல்லது செட்டில்மெண்ட்டின்கீழோ செய்தால் அது
பாகப்பிரிவினைக்குப் பொருந்தாது என்று சொல்லப்பட்டிருக்கிற
விளக்க உரை சூபர்ப்ளுவஸாக இருக்கிறது; தேவையற்றது.
காரணம், சட்டத்தின் அடிப்படையிலே பார்த்தாலும்
மியர் டிரான்ஸ்பர் பார்டிஷன் ஆகாது. அல்லது பார்டிஷன்
டிரான்ஸ்பர் ஆகாது. பார்டிஷன் என்று சொல்வது ஏற்கெனவே
உரிமை பெற்றிருக்கிற நபர் கூட்டாக வைத்திருக்கின்ற சொத்தை
பங்கீடு செய்து, அதன் உரிமைகளைத் தனித்தனியாகப் பெற
வேண்டும் என்பதற்காகச் செய்துகொள்ளப்படுகிறது. ஆக,
பார்டிஷன் வாயிலாக அந்த நிலத்தின் உரிமைகள் மாற்றம்
செய்யப்பட்டிருந்தால், அது டிரான்ஸ்பர் ஆகாது என்பதை
நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

[திரு. பி. முகமது இஸ்மாயில்] [1980 ஆகஸ்ட் 11

[பிற்பகல் 12-40]

நான் சொன்னதுபோல் உரிமை பெற்றிருக்கக்கூடியவர்கள்
'ஏ', 'பி' என்ற இரண்டு பேர் இருக்கிறார்கள். கூட்டாக
சொத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு பேர்களுக்
கும் உரிமை பெற்ற சொத்து. அனுபவத்தில் வைத்துக்
கொண்டிருப்பவர்கள் சௌகரியத்திற்காக பிரிவினை செய்து
கொள்கிறார்கள் என்ற பொருளே தவிர அது டிரான்ஸ்பர் ஆகாது.
டிரான்ஸ்பர் என்பது பார்டிஷன் ஆகாது. அங்கே தரப்
பட்டிருக்கும் விளக்க உரை தேவையற்றது. அதன் காரணமாக
பலவிதமான சந்தேகங்களுக்கு இந்தச் சட்டம் இடம் வகுத்து
விடும் என்று கருதுகிறேன்.

ஒரு இந்து குடும்பம் இருக்கிறது. ஐந்து நபர்கள்—தந்தை
யும் நான்கு பிள்ளைகளும் இருக்கிறார்கள். பார்ட்டிஷனில்
டிரான்ஸ்பர் வராது என்ற விளக்கம் வரும்போது தந்தையும்
நான்கு பிள்ளைகளும் இந்து குடும்பம் என்ற காரணத்தால்
மகன் பிறந்த உடனே குடும்பச் சொத்தில் பாத்தியதை வந்து
விடுகிற காரணத்தால், பாத்தியதை உடையவர்கள் பாகப்
பிரிவினை செய்கிறபோது அது நில உச்சவரம்புக்கு அதிகமான
நிலமாக இருந்தாலும் 100 ஏக்கராக இருந்தாலும் ஐந்து நபர்கள்
எடுக்கும்போது 20 ஏக்கருக்குச் சொந்தக்காரர் ஆகிறார்.
அத்தகைய பாகமும் டிரான்ஸ்பர் நிலைக்கு வராது என்ற
விளக்கம் சொல்லுவதாக இருந்தால் நில உச்சவரம்புச்சட்டத்தின்
முக்கிய நோக்கத்திற்கே அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.
அந்த எக்ஸ்பிளனேஷன் சூப்பர்ஃப்ளுவஸ், தேவையற்றது.
அதை மாற்ற வேண்டுமென்ற கருத்தை மாண்புமிகு அமைச்சர்
அவர்களின் கவனத்திற்கும் இந்த மாமன்றத்தின் கவனத்திற்கும்
கொண்டு வருகிறேன்.

எனவே, கொண்டுவரப்பட்டிருக்கிற திருத்தச் சட்டம்
நல்லெண்ணத்தோடு கொண்டுவரப்பட்டிருப்பதற்காக அரசைப்
பாராட்டுகிறேன். அதே நேரத்தில் நான் இங்கே சுட்டிக்
காட்டியது போன்ற சில சந்தேகங்களுக்கு இடம் அளிக்கும்
காரணத்தால் இன்னும் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி
போன்றவர்கள் தந்திருக்கிற திருத்தங்களையும் கவனத்தில் எடுத்
துக்கொள்ளவேண்டுமென்பதோடு சில தோழர்கள் இதை செலக்ட்
கமிட்டிக்கு விட வேண்டுமென்று திருத்தம் தந்திருக்கிறார்கள்—
இந்தச் சட்டம் நேர்மையான முறையில், நல்ல முறையில்
[illegible]கப்படுவதற்கு செலக்ட் கமிட்டியின் பரிசீலனை தேவை என்று



1980 ஆகஸ்ட் 11] [திரு. பி. முகமது இஸ்மாயில்]

முழுமையாக உணருகிற காரணத்தால் செலக்ட் கமிட்டிக்கு
இந்தத் திருத்தச் சட்டம் விடப்பட வேண்டுமென்ற கருத்தைக்
கூறி, அமர்கிறேன்.

*டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால்
இந்த அவையின் முன்னால் வைக்கப்பட்டுள்ள பினாமி நிலங்களை
ஒழிக்கின்ற உயரிய நோக்கம் கொண்ட இந்த மசோதா அரசின்
திருத்தங்களோடு இன்றைக்கு வந்துள்ள நிலையில் மிகச் சிறிய
விவசாயிகள் இந்தத் திருத்தங்களின் வாயிலாக பாதிப்பில்
இருந்து பாதுகாக்கப்படுகிறார்கள் என்ற வகையில் இந்த
மசோதாவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக
நான் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நல்ல வேளையாக
8ஆம் தேதியன்று இந்த மசோதாவினுடைய விவாதங்கள்
முடிவுற்று அமைச்சர் அதற்கான விளக்கங்களை அளித்து
அன்றைக்கு இது நிறைவேறாமல் இடையிலே மூன்று நாட்கள்
இடைவெளி கொடுத்து ஒத்திவைக்கப்பட்டதும் நல்லதாகத்தான்
போயிற்று என்பதை அரசின் சார்பில் அளிக்கப்பெற்றுள்ள
திருத்தங்களில் இருந்து என்னால் உணர்ந்து கொள்ள முடிகிறது.
சில நேரங்களில் சில காலதாமதங்கள் கூட நல்லவைகளைச்
செய்து விடுகிறது. 'விரைவு', 'அவசரம்' என்ற இந்த இரண்டு
சொற்களுக்கிடையே பலத்த வேறுபாடு இருக்கிறது. விரைவான
முடிவுகளை எடுப்பது என்பது 'quick decision' என்பதையும்,
அவசரமான முடிவுகளை எடுப்பது என்பது 'hasty decisions'
என்பதையும் குறிப்பிடும். எட்டாம் தேதி எடுத்துச் சொல்லப்
பட்ட கருத்துக்கள் பற்றிக் கவலை இல்லை, எங்களிடத்தில்
இருக்கிற பெரும்பான்மையைக் கொண்டு நிறைவேற்றிவிடு
வோம் என்று அரசு முடிவுக்கு வந்திருக்குமானால்
இன்று ஏழை எளிய சிறிய விவசாயிகளுடைய வாழ்வு பாதிக்கப்
படாத அளவுக்கு கொண்டுவந்துள்ள இந்தத் திருத்தங்கள்
இன்றைக்கு இடம் பெறாமலே போய் மறுபடியும் அந்தத் திருத்
தத்தைச் செய்வதற்கு பல சங்கடங்களும் சிக்கல்களும் ஏற்
பட்டுவிடக் கூடும். எனினும் இந்தத் திருத்தங்கள் இன்று அரசின்
சார்பாகத் தரப்பட்டிருப்பதற்கு நான் உள்ளபடியே என்
வரவேற்பை, பாராட்டுதலை, ஆதரவைத் தெரிவித்துக்கொள்
கிறேன். கழக உறுப்பினர் மாண்புமிகு நண்பர் திரு. கிருஷ்ண
மூர்த்தி அவர்கள் இந்த மசோதா பற்றிப் பேசுகின்ற நேரத்திலே
பினாமி நிலங்களை ஒழிக்கவேண்டுமென்கின்ற நோக்கத்தை
திராவிட முன்னேற்றக் கழகம் முழுமையாக ஆதரிக்கிறது என்பதை
யும் ஆனால் சட்டமாக இருக்கிற இந்த மசோதாவிலே இருக்கிற
சில சந்தேகங்கள் போக்கப்பட வேண்டும் என்பதையும் சுட்டிக்
காட்டி, 5 ஏக்கர் என்ற அளவுக்கு நன்செய்க்கும், 10 ஏக்கர் என்ற
அளவுக்கு புன்செய்க்கும் விதிவிலக்கு வேண்டுமென்று திருத்தங்கள்
கொடுத்திருந்தாலும் கூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்
நண்பர் திரு. சங்கரய்யா போன்றவர்கள் எல்லாம் அதை நாங்கள்

ஆதரிப்பதற்குத் தயாராக இல்லை என்று கூறினாலும்கூட
எதிர்க்கட்சி என்ற முறையில் பொறுப்போடு ஒரு
தருவது, 10 கேட்டால் 5-வது கிடைக்கும் என்ற திருத்தங்கள்
திருத்தங்கள்தரப்படுகின்றன என்பதையும், அளவிலேதான்
அதுபற்றிய விமர்சனங்களும் இந்தத்திருத்தங்களும்
மூர்த்தி அவர்களால் அன்றைக்கு நண்பர் திரு. கிருஷ்ண
பற்றி அரசு ஆலோசித்து விரிவாகத் தரப்பட்ட காரணத்தால் அதைப்
அளவிலே ஏக்கர் 2½ இத்தகைய நல்ல திருத்தத்தை அது
நன்செய், புன்செய்க்கு அல்லது 5 என்ற அளவிலே முறையே
திருத்தத்தை இங்கே என்று இருந்தாலும்கூட வரவேற்கத்தக்க
வழங்கியிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவை இந்த
அவையின் முன்னால் வைத்து உரையாற்றியபோது சில சாட்சி
யங்களை எல்லாம் தனக்கு சார்பாக அழைத்தார்கள். இந்த
அவையைப் பொறுத்தவரையில் அவ்வளவு சாட்சியங்களை
அழைத்து இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்ற
நிலை ஆளுங்கட்சிக்கு இல்லை. காரணம் நிலம் ஆதிக்கபுரியி
டத்திலே அடங்கிப்போய் நிலப்பிரபுக்கள், நிலத் திமிங்கிலங்
கள் கொடிகட்டி வாழ்கின்ற காலம் மாற்றப்பட்டு நிலச் சீர்
திருத்தங்கள், நிலமுறையிலே புரட்சிகள் மேவிட வேண்டுமென்கிற
கொள்கை படைத்தவர்கள்தான் இந்த மன்றத்திலே ஆளுங்
கட்சியானாலும் சரி, எதிர்க்கட்சி வரிசையானாலும் சரி, நிரம்பப்
பேர் இருக்கிறார்கள். இருந்தாலும் இந்த நிலச் சீர்திருத்தச்
சட்டம்—இதுபற்றிய வரலாற்றை நாம் ஒரு முறை திரும்பிப்
பார்க்கிற நேரத்திலே சில வரலாற்று உண்மைகளை மறந்துவிடக்
கூடாது. நம்முடைய அமைச்சர் பல சாட்சிகளை அன்றைக்கு
அழைத்தபோது நான் கேட்டேன், என்னை ஏன் சாட்சிக்கு
அழைக்கவில்லை என்று. அவர் என்னிடத்திலே அப்போது
சொன்னார். "1960 ஆம் ஆண்டு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர்
என்கின்ற உச்சவரம்புச் சட்டம் வந்தபோது நீங்கள் என்ன
பேசினீர்கள் என்று தேடித் தேடிப் பார்த்தேன், எனக்கு சட்ட
மன்ற நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எதுவும் கிடைக்கவில்லை.
எனவே உங்களை சாட்சிக்கு அழைக்கவில்லை" என்று அமைச்சர்
சொன்னார். அண்ணா அவர்கள் சொன்ன கருத்துக்களை,
பேராசிரியர் அன்றைக்கு சொன்ன கருத்துக்களை அவர்கள் மேற்
கோள் காட்டினார்கள். இந்த அவையில் அண்ணா அவர்
களுடைய தலைமையிலே 1957 தொடங்கி சட்டமன்ற உறுப்
பினர்களாகப் பணியாற்றிய நாங்கள்—நானும் பேராசிரியர்
அவர்களும் மற்றும் கழக உறுப்பினர்களும் அன்றைக்கு எடுத்து
வைத்த கருத்துக்களுடைய தொகுப்பு நம்முடைய சட்டமன்ற
நாள் குறிப்புகளிலே இடம் பெற்றிருக்கின்றன. நான் ஆகஸ்ட்
29 ஆம் தேதி, 1961 ஆம் ஆண்டு அந்த மசோதா பற்றி பேசிய



போது குறிப்பிட்டதை இங்கே நினைவுபடுத்துவது அமைச்சர் அவர்களுக்கு மேலும் நல்ல சாட்சியமாக, சான்றாக, ஆதாரமாக இருக்கும் என்பதற்காகத்தான் அப்போது பேசியதைக் குறிப்பிடுகிறேன்.

'இந்த மசோதா எப்படி தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று நான் யூகிக்கிறேன் என்றால் நாட்டிலே உள்ள மிராசுதார்கள் அத்தனை பேரையும் அழைத்து, இம்மாதிரி ஒரு மசோதா கொண்டு வரப் போகிறோம், அதற்குள் பிரிக்க வேண்டிய நிலத்தைப் பிரித்துவிடுங்கள், உங்களுடைய வீட்டிலுள்ள உற்றார், உறவினர்கள், பேரன் பேத்திகள், சுற்றத்தார்கள், நம்பிக்கைக்கு உரியவர்கள், வேண்டியவர்களுக்கு எழுதி வைத்துவிடுங்கள். அதற்குப் பிறகு இந்த மசோதாவைக் கொண்டுவரப்போகிறோம் என்று சொல்லி மறுபடியும் இறுதியாக இந்த மசோதாவைத் தயாரிக்கிறபோது அவர்களைக் கூப்பிட்டு சொன்னபடி செய்து விட்டீர்களா இந்த மசோதாவைக் கொண்டுவரலாமா என்று அவர்களிடம் உத்திரவு கேட்டுவிட்டு இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருப்பதாக நான் யூகிக்கிறேன்.'

[பிற்பகல் 12-50]

"அசல் மசோதாவில் இருந்த ஒரு சில நல்ல விஷயங்கள்கூட 'திருத்தம்' என்கிற பெயரால் பொறுக்குக் குழுவில் சேதப் படுத்தப்பட்டிருக்கின்றன — சீரழிக்கப்பட்டிருக்கின்றன" என்றும், "ஆகவேதான், இந்த மசோதாவை 'ஏட்டுச் சர்க்கரை, தாகத்தைத் தீர்க்காத தண்ணீர், அரும் பசிக்கு உதவாத அன்னம், என்று விமர்சிக்க விரும்புகிறேன்." என்றும் நான் குறிப் பிட்டேன்.

அது மாத்திரம் அல்ல, அப்பொழுது வருவாய்த்துறை அமைச் சராக இருந்த பெரியவர் மாணிக்கவேலர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள், அதையும் நான் என்னுடைய பேச்சிலே குறிப் பிட்டேன்.

"ஏற்கனவே நிலங்களை மிராசுதார்கள் தங்களுக்குள் பிரித்துக் கொண்டுவிட்டார்கள் என்கின்ற குற்றச்சாட்டை இந்த மாமன்றத்திலுள்ள திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் களும், கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்களும், ஏனைய முற்போக்கு உறுப்பினர்களும் எடுத்துச் சொன்ன நேரத்தில், நம்முடைய அமைச்சர் மாணிக்கவேலு அவர்கள் அதைக் கேலியான பதிலாகக் கருதினார்களோ அல்லது உண்மையான பதிலாகக் கருதினார் களோ பிரிக்க வேண்டும் என்றுதானே எதிர்பார்த்தோம்? அதன் படி பிரிக்கப்பட்டுவிட்டது, என்று அடிக்கடி சொல்லிவந்திருக் கிறார்கள். ஆளும் கட்சி நண்பர்களும் அதே கருத்தை திருப்பித்

[டாக்டர் மு. கருணாநிதி] [1980 ஆகஸ்ட் 11

திருப்பி, 'பிரிக்க வேண்டுமென்று எண்ணினோம், பிரிந்துவிட்
டோம்', என்று குறிப்பிட்டார்கள். அந்த வாதத்தை எண்ணிப்
பார்க்கும்பொழுது, நான் சிறுவனாக இருந்த காலத்தில் பார்த்த
ஒரு சினிமாப் படம் எனக்கு நினைவுக்கு வருகிறது.
'சபாபதி' என்ற படம்; அந்தப் படத்தில் வேலைக்காரனைக்
கூப்பிட்டு, 'சோடா உடைத்துக்கொண்டு வா?' என்று எசமான்
சொன்னபோது, அந்த வேலைக்காரர், சோடா பாட்டிலை
ஹாலில் போட்டு 'படார்' என்று உடைத்து விட்டார்; 'ஏனடா
உடைத்தாய்?' என்று எசமான் கேட்டபொழுது, வேலைக்காரன்
'சோடாவை உடைக்கத்தானே சொன்னீர்கள், உடைத்துவிட்
டேன்' என்று சொன்னான். அப்படி, 'சோடாவை உடைக்கச்
சொன்னீர் உடைத்தேன்', என்று கூறிய வேலைக்காரன் பேச்
சுக்கும், 'பிரிக்கத்தானே சொன்னீர்கள், மிராசுதாரர்களுக்குள்ளே
பிரித்து விட்டோம்' என்று வாதமிடுகிறவர்களுக்கும் என்ன வித்தி
யாசம் இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை.''
என்றும் அன்றைக்கு நான்—1961ஆம் ஆண்டு இந்த மா
மன்றத்திலே பேசியிருக்கிறேன். எனவே, எப்படியோ பிரித்து
விட்டோம் என்கின்ற ஒரு வாசகத்தை மாத்திரம் பயன்படுத்தி
ஏராளமான நிலங்கள், 1960ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட
30 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்கின்ற உச்சவரம்புச் சட்டத்தில்
தப்பித்துக் கொண்டு விட்டன; அதன் காரணமாகத்தான்
தொடர்ந்து இருந்து வந்த மக்களுடைய எண்ணத்திற்கேற்பவும்,
விவசாயத்தை நம்பி வாழ்கின்ற மக்களுடைய விருப்பத்திற்
கேற்பவும் முற்போக்கு எண்ணம் படைத்த ஓர் ஆட்சி, பேரறிஞர்
அண்ணா அவர்களுடைய தலைமையிலே உருவாகி, அண்ணா அவர்
கள் மறைந்த பிறகும் அவர்களுடைய எண்ணத்தை ஈடேற்ற
வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு 1970 ஆம் ஆண்டில் 15
ஸ்டாண்டர்ட் ஏக்கரா உச்சவரம்பு என்ற சட்டத்தைக் கொண்டு
வந்தது.

அதிலேகூட சில குறைபாடுகள் இருந்தன, இன்னமும் அந்தக்
குறைபாடுகள் சரி செய்யப்பட வேண்டுமென்ற கருத்தை இங்கே
பேசிய அருமை கம்யூனிஸ்ட் கட்சிகளினுடைய நண்பர்கள்
எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட குறைபாடு
களைத் திருத்துவதற்கு அரசு எத்தகைய மசோதாக்களைக்
கொண்டு வந்தாலும் அவைகள் தொடக்கத்திலே, அன்றைக்
கிருந்த ஆட்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட முடியாமல் போய்,
அவைகள் இன்றைக்குக் கண்டுபிடிக்கக்கூடிய சூழ்நிலையிலே
எந்த மசோதாக்கள் வந்தாலும் அவைகளை ஏற்றுக் கொள்ள
அவைகளை இந்த மன்றத்திலே விவாதித்து நல்ல முடிவுக்கு வர
திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இருக்கிறது என்பதை
நான் இந்த அரசுக்குத் தெரிவித்துக் கொள்வேன்.



1980 ஆகஸ்ட் 11] [டாக்டர் மு. கருணாநிதி]

ஆனால் அமைச்சரானாலும் சரி அல்லது பேசிய மற்றக்
கட்சிகளினுடைய தலைவர்களானாலும், உறுப்பினர்களானாலும்
தொடர்ந்த வரலாற்றில் சில உண்மைகளை, வேண்டுமென்று
அல்ல, ஒருவேளை அலட்சியமாகவும் இருக்கலாம் அல்லது தேவை
யில்லை என்று கருதியிருக்கலாம்; விட்டு விட்டமைக்காக நான்
உள்ளபடியே வருத்தப்படுகிறேன்.

6—4—1960-ல் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்ற நில உச்ச
வரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டபொழுது 60 முதல்
67ஆம் ஆண்டு வரையில் உபரி நிலம் என்று அறிவிக்கப்பட்ட
மொத்த நிலத்தினுடைய பரப்பளவு 24,194 ஏக்கரா. அதாவது
''நோட்டிபிகேஷன்'', அறிவிக்கப்பட்டது. ஆனால் அதிலே
அரசு கைப்பற்றியது 16,330 ஏக்கரா. 60-லிருந்து 67 வரை
யில் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கரா உச்சவரம்புச் சட்டம் கொண்டு
வரப்பட்ட பிறகு, 24,194 ஏக்கராதான் உபரி நிலம் என்று
அறிவிக்கப்பட்டு, அதிலே அரசு 16,330 ஏக்கராதான் கைப்
பற்றியது. மற்றவர்களுக்கு, நிலமில்லாத ஏழை விவசாயி
களுக்கு ஏதாவது ஒப்படை செய்த நிலத்தின் பரப்பளவு
உண்டா என்றால் இல்லை. 67 வரையிலும் யாருக்கும் ஒப்படை
செய்யப்படவில்லை. ஆனால் 1970-ல் 15 ஸ்டாண்டர்ட்
ஏக்கர் என்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில்
சட்டம் கொண்டுவரப்பட்டதன் விளைவாக—நான் 75 வரை
யிலே உள்ள கணக்கைச் சொல்கிறேன்.

அதற்குப் பிறகுள்ள கணக்கு என்னிடத்திலே இல்லை.
1975ஆம் ஆண்டு இறுதி வரையிலே உள்ள கணக்கின்படி
திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் 15 ஸ்டாண்டர்ட்
ஏக்கர் உச்சவரம்பிற்குப் பிறகு, உபரி நிலமாக அறிவிக்கப்
பட்டது, 1,08,068 ஏக்கரா. இப்படி அறிவிக்கப்பட்ட 1
இலட்சத்திற்கு மேற்பட்ட ஏக்கரா பரப்பளவில் அரசாங்கம்
கைப்பற்றியது 88,146 ஏக்கரா. அப்படி அரசு கைப்பற்றிய
88,000 ஏக்கராவில் நிலம் அற்றவர்களுக்கு ஒப்படை செய்யப்
பட்டது 62,682 ஏக்கரா. இந்த 62,682 ஏக்கராவில், பயன்
அடைந்த உழவர் பெருமக்கள் 38,504 பேர். எனவே,
என்னுடைய அருமை நண்பர் திரு. நெடுமாறன் அவர்கள் இங்கே
குறிப்பிட்டார்கள். 1960ஆம் ஆண்டு 9,000 பேர்கள்தான்
நிலமுடையவர்கள் தமிழ்நாட்டில் இருந்தார்கள் என்பதற்கு
மாறாக 1975ஆம் ஆண்டில் 38,504 பேர்களுக்கு—அவைக்களை
அன்னியில் அரசாங்கம் கைப்பற்றிய நிலத்தை, உபரி நிலத்தை,
வழங்குகிற ஒரு ஏற்றமான தன்மை ஏற்பட்டது என்பதை
நான் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது.

அதுமாத்திரமல்ல, பல விதிவிலக்குகளையும் ரத்து
செய்திருக்கிறோம், நாம் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா உச்சவரம்பு
கொண்டு வந்த அந்தக் காலகட்டத்தில்,

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் [1980 ஆகஸ்ட் 11
தலைவர் இங்கே சொன்ன இந்தப் புள்ளிவிவரத்திற்கு நன்றி.
1960-லே மிஞ்சுகின்ற உபரி நிலம் என்று எதிர்பார்க்கப்பட்டது
2,82,105 ஏக்கரா. ஆனால் கிடைத்தது, 28,104 ஏக்கரா—
அரசு கைப்பற்றியது. இதே நேரத்திலே, 1970-லே அவர்கள்
குறிப்பிட்டது, 88,000 ஏக்கரா. எல்லாம் சேர்த்தாலும்
1 இலட்சத்து சொச்சம் ஏக்கராதான், 1960-லேயும், 1971-லே
யும் கிடைத்த ஏக்கரா. மீதம் 1,82,000 ஏக்கரா என்ன ஆயிற்று
என்பது இதுவரையில் தெரியவில்லை. அதையும் எதிர்க்
கட்சித் தலைவர் கவனத்திலே எடுத்துக்கொள்ளவேண்டுமென்று
நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : என்ன ஆயிற்று என்று பார்ப்பதற்கு
த்தான் இந்த மசோதாவே கொண்டு வரப்பட்டிருக்கிறது.
இந்த மசோதாவைக் கொண்டு வந்த பிறகு எந்த அளவிற்கு
நிலம் கிடைக்கிறது—எவ்வளவு பரப்பளவு கிடைத்தது என்ற
புள்ளிவிவரங்களை ஆளுங்கட்சியினர் அல்லது அமைச்சர்கள்
நமக்கு அறிவிக்காமல் இருக்க மாட்டார்கள். எவ்வளவு
கிடைக்கக் கூடும் என்ற விவரத்தைக் கூட நம்முடைய அமைச்சர்
தன்னுடைய பதில் உரையிலே தருவார் என்று நான் நம்பிக்
கொண்டிருக்கிறேன், இந்த மசோதாவின் மூலமாக எவ்வளவு
நிலத்தை எடுக்க முடியும் என்கிற விவரங்களைத் தெரிவிக்க
வேண்டியது அவசியம் என்கிற காரணத்தால்.

விதிவிலக்குகள் கரும்பாலை—நிலத்திற்கு கழக ஆட்சியில்
1970ஆம் ஆண்டு, உச்சவரம்பு சட்டம் 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா
என்று கொண்டுவரப்பட்டபொழுது ரத்து செய்யப்பட்டது.
மேய்ச்சல் நிலத்திற்கு இருந்த விதிவிலக்கு ரத்து செய்யப்பட்டது.
பால் பண்ணைக்கு இருந்த விதிவிலக்கு ரத்து செய்யப்பட்டது.
அது மாத்திரமல்ல. பொது அறக்கட்டளைகள் இவ்வளவுதான்
வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் அதிலே வருகின்ற
வருமானம் அதற்கே செலவிடப்பட வேண்டுமென்றும் சட்டம்
செய்தது மாத்திரம் அல்ல, அதைக் கூட 1-3-1972-ல் என்ன
என்ன அறக்கட்டளைகள் இருந்தனவோ, அவைகளுக்குத்தான்
அது பொருந்தும் என்றும் குறிப்பிடப்பட்டது. அதற்குப்
பிறகு, புதிய அறக்கட்டளைகள்—அவைகளுக்கு இந்தச்
சட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என்றும்
அன்றைக்கே சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தப்
பொது அறக்கட்டளைகளில் கல்லூரி என்றால் 40 ஸ்டாண்டர்ட்
ஏக்கராக்களுக்கு மேல் வைத்துக்கொள்ளக்கூடாது என்றும்,
உயர்நிலைப் பள்ளிக்கு 20 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்றும்,
ஆரம்பப் பள்ளி என்றால் 10 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்றும்,
மாணவர் விடுதி என்றால் 25 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்றும்,





தொழில் கல்விக்கு என்றால் 25 ஸ்டாண்டர்ட் ஏக்கரா
என்றும், விவசாயப் பள்ளிக்கு என்றால் 25 ஸ்டாண்டர்ட்
ஏக்கரா, மற்ற அறக்கட்டளைகள் என்றால் 5 ஸ்டாண்டர்ட்
ஏக்கர் என்றும் அதற்குமேல் வைத்துக்கொள்ளக் கூடாது
என்றும் நிர்ணயித்திருந்தோம். எனவே, 15 ஸ்டாண்டர்ட்
ஏக்கரா உச்சவரம்பு கொண்டுவரப்பட்ட அந்தக் காலக்கட்டத்தி
லிருந்து நமக்கு இந்த நிலச் சீர்த்திருத்தக் கொள்கையில் ஒரு
கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை மறைப்
பதற்கில்லை. அதைத் தொடர்ந்து மேலும் முற்போக்
கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்கிறது
என்கிறபொழுது, அதை ஆதரிக்க நாங்கள் கடமைப்பட்டிருக்
கிறோம். எங்களுக்கு இதுநாள் வரையிலே இருந்த கவலை
யெல்லாம் நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முதல்நாள்
அவருடைய உரையிலே எடுத்துக்காட்டியதுபோல், 2 ஏக்கர்,
3 ஏக்கர், 4 ஏக்கர், 5 ஏக்கர் என்று உண்மையிலேயே—
போனஃபைடி—அப்படி பினாமி அல்லாமல் வாங்கி இருக்கிறவர்
கள்—வைத்திருக்கிறவர்கள் இந்த மசோதாவால் அல்லது
சட்டத்தால் பாதிக்கப்பட்டுவிடக் கூடாதே என்பதுதான்
எங்களுக்கிருக்கிற கவலை.

[பிற்பகல் 1-00]

களை எடுக்கிறோம் என்று சொல்லி பயிரையே அழித்து
விடக்கூடாது என்கிற கவலையைத்தான் சுட்டிக்காட்டி இருக்
கிறேனே தவிர, வேறல்ல. இப்போது இந்த மசோதா சட்ட
மான பிறகு, அந்தச் சட்டத்தின் மூலம் எவ்வளவு நிலங்களை
நாம் கைப்பற்ற இருக்கிறோம் என்கின்ற ஒரு கணக்கை
போட்டுக்கொண்டு, அப்படிக் கைப்பற்றுவதற்கு உதவிகரமாக
இருக்கிற குழுவும் அமைக்கப்படும் என்றும் இந்த மசோதாவிலே
சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அதிகாரம் பெற்ற அதிகாரி
ஒருவர் விசாரணை நடத்துவார் என்றும் சொல்லப்பட்டிருக்
கிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு.
சங்கரய்யா அவர்கள் எடுத்துக்காட்டியதைப்போல அப்படி
விசாரணை நடைபெறுகிற நேரத்தில் அதிகார துஷ்பிரயோகம்
இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதையும், அமைக்கப்
படுகின்ற குழுக்கள் கூட அரசியல் நோக்கத்தோடு தங்க
ளுடைய பணிகளை ஆற்றாமல் உண்மையிலேயே நிலச் சீர்
திருத்தத்துக்கு ஆற்ற வேண்டிய பணிகளை மேற்கொள்ள
வேண்டும் என்பதையும், அதிலே அரசு மிக உன்னிப்பாக கவனம்
செலுத்த வேண்டும் என்றும் சுட்டிக்காட்ட வேண்டியது என்
னுடைய கடமையாகும். இந்தக் குழுவிலே சமூக நலத்
தொண்டர்கள் 3 பேர்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும்,
ஆளுங்கட்சியிலே உள்ளவர்கள் சமூக நலத் தொண்டு ஆற்ற
வில்லையா என்று நிச்சயமாக கேட்கக் கூடிய ஆற்றல் நம்
முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்கு உண்டு.

என்று எனக்குத் தெரியும். வலிவலத்தில், தஞ்சை மாவட்டத்
தில் கடந்த 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு, சர்வோதயத் தலைவர்கள்,
மாவட்டத்தில் உள்ள எல்லாக் கட்சித் தலைவர்கள்,
போது ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தி
னுடைய மாவட்டத் தலைவர்கள், அதைப்போல
கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், வேறு பல கட்சித் தலைவர்கள்
அத்தனை பேர்களும் இணைந்து நின்று வலிவலம் போன்ற
பெரிய பண்ணைகளில் பினாமி நிலங்கள் இருந்ததை எல்லாம்
கைப்பற்றி அங்கே உள்ள நிலமற்ற ஏழை வ்வசாயிகள் பெற்றுக்
கொள்ளத் தக்க வழிமுறைகளை நடத்திக் காட்டி இருப்பதை
தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த வருவாய்த் துறை அமைச்சர்
அவர்கள் நன்கு அறிவார்கள். எனவே இந்தக் குழுக்கள் அமை
கிற நேரத்தில் இந்தக் குழுக்களில் அனைத்துக் கட்சிகளைச்
சேர்ந்தவர்களும் இடம் பெறுவதற்கான வகைகளைச் செய்திட
வேண்டும். ஏனென்றால் எந்தக் கட்சிக்கும் இதிலே மாறான
கருத்து கிடையாது. நிலங்கள் ஒரு சிலரிடத்திலே குவிந்து
கிடப்பது மாற்றப்பட்டு அது பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்,
ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்பதிலே முரண்
பாடான கருத்து யாருக்கும் கிடையாது. ஆகவேதான் இதிலே
அரசியல் புகுந்து விடக்கூடாது. அனைத்துக் கட்சியைச்
சேர்ந்தவர்களும், அனைத்துக் கட்சிகள் என்றால் பல கட்சிகள்
இருக்கின்றன. எல்லாக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடம்
அளிக்க முடியுமா என்று அரசு கேட்குமானால், அங்கீகாரம்
பெற்ற கட்சிகள், சட்டமன்றத்திலே இருக்கின்ற கட்சிகள்
என்று இதிலே வடித்தெடுத்து, எல்லாக் கட்சியினுடைய பிரதி
நிதிகளும அந்தக் குழுவிலே அமைகின்ற அளவுக்கு இருந்திடுமே
யானால் நல்ல முறையிலே அந்த பினாமி நிலங்களைக் கைப்
பற்றுவதற்கும், அறிவிப்பதற்கும், அதிகாரிகளிடத்தில் விசார
ணைக்கு உட்படுத்துவதற்கும், நம்முடைய நோக்கம் நிறைவேறுவ
தற்கும் ஏதுவாக இருக்கும் என்று கருத்தினையும் நான் இந்த
மாமன்றத்தில் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு,
இத்தகைய பணிகளை அவர்கள் நிறைவேற்ற ஏற்றுக் கொள்வார்
கள் என்றும் நம்புகிறேன்.

ஒன்றை நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஒரு 50
ஆண்டுகளுக்கு முன்பு, 60 ஆண்டுகளுக்கு முன்பு, நம்முடைய
நாட்டில் ஆதிக்கக்காரர்களாக நிலப்பிரபுக்கள் இருந்தார்கள்.
ஆனால் இன்றைக்கு அந்த ஆதிக்கம் நிலப்பிரபுக்களிடம் இருந்து
பிரிந்து, அவர்களிடமிருந்து எடுக்கப்பட்டு தொழில் அதிபர்கள்,
வட்டிக்கடை வேந்தர்கள் என்று இப்படி வேறு பக்கம் அந்த
ஆதிக்கம் திரும்பி இருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக்
கூடாது. எனவே, அரசாங்கத்தின் முற்போக்குத் திட்டங்
களுக்கான கணைகள் கிராமப்புறங்களிலே இருக்கிற விவசாயிகள்
மீது பாய்ந்து கொண்டிருக்கிறது என்பதற்கு மாறாக, நகர்ப்
புறங்களில் இருக்கிற கோடீஸ்வரர்கள் மீதும் பாய்ந்திடவேண்டும்.
நகர்ப்புறத்தில் இன்றைக்கு 100 வீடுகள் 200 வீடுகள் என்று



வைத்துக் கொண்டு இருக்கின்றவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்
பட்ட வீடுகள் உச்சவரம்புக்கு ஆட்படுத்தப்பட்டு கோடீஸ்வரர்
களாக வாழ்கின்றவர்கள் நகர்ப்புறத்திலே பெரிய பெரிய ஆலை
அரசர்களாகவும் வாழ்கின்றார்கள். அப்படிப்பட்ட ஆதிக்க
பிரியினர் பக்கமும் நம்முடைய கவனம் திரும்பவேண்டும்.

பஸ் தேசியமயமாக ஆக்கப்படவேண்டும் என்ற முற்போக்கு
திட்டத்தை கழக அரசு காலத்திலே கொண்டு வந்து இன்னமும்
உச்ச நீதி மன்றத்தில் அது உறங்கிக் கொண்டிருக்கிறது. அதனு
டைய உறக்கத்தைத் தட்டி எழுப்பி பஸ்களை தேசியமயமாக்க
வேண்டும் என்ற அந்த முற்போக்கான கொள்கையை நிறை
வேற்றுவதற்கு இந்த அரசு தன்னுடைய முழு முயற்சியையும்
மேற்கொள்ளவேண்டும். சட்டங்களைக் கொண்டு வருவது
மசோதாக்களை நிறைவேற்றுவது மாத்திரம் பெரிதல்ல.

ரெவின்யூ போர்டு கூட கலைக்கப்பட்டிருக்கிறது. புரட்சி
கரமான திட்டம்தான். ஆனால் இன்றைக்கு ரெவன்யூபோர்டு
மெம்பர் என்ற பெயர் மாற்றப்பட்டு கமிஷனர் என்ற பெயர்
பிறப்பிக்கப்பட்டிருக்கிறதே அல்லாமல், மாவட்டத்தில் இருந்து
வருகின்ற வழக்குகளினுடைய அப்பீல் போர்டு மெம்பர் என்ற
ஒருவருக்குப் போகாமல், கமிஷனர் என்று சொல்கிற ஒருவருக்கு
செல்லுகிற நிலைமைதான் இருக்கிறது.

எனவே சட்டங்களை, மசோதாக்களைக் கொண்டு வருவது
மாத்திரம் பெரிதல்ல. அவைகளை நடைமுறைப்படுத்துவது
தான் பெரிது. அவைகளை ஒழுங்காக, செம்மையாக நடை
முறைப்படுத்த அரசு முன்வருமானால், திராவிட முன்னேற்றக்
கழகம் அத்தகைய நடவடிக்கைகளுக்கு தனது ஒத்துழைப்பைத்
தரத் தயாராக இருக்கிறது என்பதை எடுத்துக் கூறி, திருத்தத்
தோடு வந்திருக்கிற இந்த மசோதாவை வரவேற்று அமைகிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே,
இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 15 ஸ்டாண்டர்ட்
ஏக்கர் ஒரு குடும்பத்திற்கு என்று செய்ததாகச் சொன்னார்கள்.
குடும்பத்திற்கு மேற்பட்ட தனி நபருக்கு 5 ஏக்கர் கொடுக்க
வேண்டும் என்ற நிலை இருந்தது உண்மைதானா?

டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள்
இருக்கின்ற அல்லது இருந்த கட்சி 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று
கொண்டுவந்தபோது எதுவுமே எடுக்க முடியாது இருந்த நிலைக்கு
மாறாக 38,000 விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய அளவிற்கு
நிலத்தை அரசாங்கம் கையகப்படுத்தி வழங்கியிருக்கிறது என்பதை
நான் குறிப்பிட்டு இருக்கிறேன். ஏதோ சட்டத்தில் ஓட்டை
உடைசல்கள் இருந்தன என்பதை நான் ஏற்றுக்கொள்ள

தயாராக இருக்கிறேன். அப்படிப்பட்ட ஓட்டை உடைசல்களை இந்தச் சட்ட முன்வடிவு அடைக்குமானால் நான் வரவேற்கிறேன் என்று முன்பே குறிப்பிட்டு இருக்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய எல்லாக் கட்சித் தலைவர் களும், அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் இதை முழுமை யாகப் பாராட்டி இருக்கிறார்கள். இந்தச் சட்டத்தைக்கொண்டு வந்து நான் முன்மொழிந்தபோது, நிலச் சீர்திருத்தத்தைப் பற்றி இந்த அரசு கொண்டு வருவதை எல்லாம் இந்த மாமன்றம் ஏகமனதாய் ஏற்றுக்கொண்டு இருக்கிறது, இப்போதும் ஏற்றுக் கொள்ளும் என்பதை நான் முன்கூட்டியே சொன்னேன் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்ல. இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறபோது, நான் முன்னுரையாக பேசியதற்குக் காரணமே, சட்டத்தை ஆதரித்துப் பேசுகிற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசி விட்டதற்குப் பிறகு பின்னுரையில் தொடுவதற்கு எதுவும் இல்லாது போய்விடும் என்று தெரிந்த காரணத்தால் முன்னுரையில் நீண்டநேரம் நான் பேசினேன்.

அது மட்டுமல்ல, இங்கே சொல்கிறபோது நான் பல சாட்சி களை அழைத்ததும், எதிர்க்கட்சித் தலைவர் என்னை ஏன் சாட்சி யாக அழைக்கவில்லை என்று உங்களிடத்தில் சொன்னார்கள் ஆனால் அவர்களுடைய சாட்சி எத்தகைய அளவிற்கு எனக்கு அதிகமாகத் தேவைப்படும் என்பதை அவர்கள் அறிவார்கள். நான் அந்த சட்டமன்ற நிகழ்ச்சிகளையெல்லாம் பார்த்து விட்டு, நீங்கள் பேசிய தேதியைச் சொல்லுங்கள், அதை எடுத்து சாட்சி யாகச் சொல்கிறேன் என்று நான் அப்போதே சொன்னேன். ஆனால் இங்கே நான் கொண்டுவராததற்குக் காரணம், அவரே இங்கே இருந்து விட்டார்கள் நேரடியாக, ஆகவே, அந்தச் சாட்சி களை நான் படிக்கவேண்டியதில்லை, அவரே இருக்கிற காரணத் தால் தான் நான் சொல்லவில்லை. அது மட்டுமல்ல அவரைச் சொல்லாவிட்டாலும், மற்ற திராவிட முன்னேற்றக் கழகத் தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அத்தனை பேரையும் நான் குறிப்பிட்டேன். பேராசிரியர் பேசியதைக் குறிப்பிட்டேன். பேராசிரியர் 2–3 இடங்களில் பேசியதை படித்துக் காண்பித் தேன். அப்போது இருந்த சட்டமன்ற உறுப்பினர்கள் 15 பேர் பேசியிருக்கிறார்கள். அந்த 15 பேரும் பலமுறை பேசியிருக் கிறார்கள். பல இடங்களில் பேசியிருக்கிறார்கள். இன்றைக்கு காங்கிரஸ் கட்சித் தலைவராக இருக்கும் திரு. சுப்பிரமணியம் அவர்களும், முன்னாள் அமைச்சர் கோவிந்தசாமி அவர்களும் வெட்டுப் பிரேரணையில் பேசியிருக்கிறார்கள். அதனால்தான், நான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சாட்சியாகக் கொண்டு வருவதற்குக் காரணம், திராவிட முன்னேற்றக் கழகம் அதை ஆதரிக்கும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும், நான் இதை இங்கே சொல்கிறபோது நீங்கள் எல்லாம் வரவேற்ற பிறகு நான்





சொல்வதாக நீங்கள் கருதக்கூடாது. வெளியிலே நான் பேசிய போதும், எல்லோரிடத்திலும் பேசியபோதும், இதை எல்லாக் கட்சிகளும் ஆதரிக்கும் என்பதை விளக்கமாகச் சொன்னேன். இதை நான் சொல்கிறபோது, இங்கே நாங்கள் மெஜாரிட்டியை வைத்து இதை நிறைவேற்றுகிற எண்ணம் எங்களுக்கு இல்லை.

(பிற்பகல் 1-10).

நான் இங்கே சொன்னேன். மெஜாரிட்டி பலத்தை வைத்து நிறைவேற்றி விடுவார்கள் என்று ஒருமுறை மாண்புமிகு உறுப் பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னபோது அப்படி அல்ல என்று நான் சொல்லக் காரணம், அறிஞர் அண்ணா அவர்கள் மெஜாரிட்டியைவிட, ஆள் பலத்தைவிட கருத்துக்கள் பலம் வேண்டுமென்று சொன்னார்கள். இங்கே சொல்லுகிற போது, இந்த குழுக்களைப் போடும் போது நீங்கள் பார்த்துப் போட வேண்டும் ; உங்கள் கட்சியிலே உள்ளவர்களை மட்டும் போடக் கூடாது என்று சொன்னார்கள். இந்தத் தீர்மானத்தை நான் கொண்டு வருகிற போது, இந்த சட்ட முன் வடிவில் முன்புரையாக பேசிய பிறகு, நான் எந்த அளவுக்கு இதில் அக்கறை காட்டி யிருக்கிறேன் என்றால், ஒரு திருத்தத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறேன் என்றால் எல்லோரும் ஒத்துக் கொள்ள வேண்டும் ; எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும்; எல்லோருக்கும் நன்மை இருக்க வேண்டும் என்ற முறையிலே கொண்டு வந்திருக்கிறேன்.

அது மட்டுமல்ல, அந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்து, இப்போது நான் பேசும்வரையில்—நீங்கள் நம்ப வேண்டு மென்று சொல்லவில்லை — துலாக்கோலைப் பிடித்துக் கொண்டு, அதைப் பார்த்துக் கொண்டிருக்கும் நிலையில் இந்த அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நானும் இருந்தோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். துலாக் கோலைப் பார்த்துக் கொண்டு இருந்தோம் என்றால் அத்தனை பேருக்கும் நன்மை அளிக்க வேண்டும் என்பதற்காகத்தான். சில சமயங் களில் பலருக்கு நன்மை ஏற்படும் ; சிலருக்கு கெடுதல் ஏற்பட்டு விடும். எப்படியும் சிலருக்கு கெடுதல் ஏற்பட்டு விடும் என்று தெரிந்தால் நன்மை எத்தனை பேருக்கு ஏற்படும், கெடுதல் எத்தனை பேருக்கு ஏற்படும் என்பதை எண்ணிப் பார்த்து, கெடுதல் ஏற்படுகிறவர்கள் எண்ணிக்கையும் மிகவும் குறைய வேண்டும் ; அந்த எண்ணிக்கையே இல்லாதிருந்தால் நல்லது ; அந்த வகையில் செய்ய வேண்டும்.

களை எடுக்கிற போது ஒரு பயிர் கூட போகாது களை எடுப்பது களை எடுப்பவர் திறமையைப் பொறுத்து இருக்கிறது. ஆனால் மொத்தத்திலே பார்த்தால் களை எடுப்பவர் திறமையைப் பொறுத்தது மட்டுமல்ல ; சில நேரத்தில் களையும்

பயிரும் ஒன்றாக பின்னி, பிணைக்கப்பட்டிருந்தால் பல பயிர்
களைக் காப்பதற்காக ஒரு பயிரை களையோடு எடுக்க வேண்டு
மென்ற நிலைமை ஏற்பட்டாலும் துணிந்து அதை எடுத்துவிட
வேண்டுமே தவிர அந்தக் களையை விட்டுவிடக் கூடாது.
எவ்வளவு கஷ்டமாக துலாக் கோலை பார்த்துக் கொண்
டிருந்தோம் என்பதற்காக இதைச் சொல்லுகிறேன்.

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர், ஆகவே நிலங்
களைப் பற்றி நன்றாகத் தெரிந்திருப்பார் என்று மாண்புமிகு
உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் சொன்னார்கள்.
ஆனால் உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்றால் எனக்கு விவரம்
தெரிவதற்கு முன்பிருந்து, விவரம் தெரிகிற வரையில் நான்
தென்னாற்காடு மாவட்டத்தில் தான் இருந்தேன். நான்
தென்னாற்காடு மாவட்டத்தில் இருந்த காரணத்தால் தஞ்சை
மாவட்டத்தைப் பற்றி முன்பெல்லாம் அதிகமாகத் தெரியாமல்
இருந்தது. அப்படியானால் தென்னாற்காடு மாவட்ட விவ
சாயத்தை வைத்து தெரிந்திருக்கலாமே என்று நீங்கள் நினைக்க
லாம். அது மட்டுமல்ல. நான் இன்றைக்கு இந்த சட்ட முன்
வடிவில் ஒரு திருத்த தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்
கிறேன். இந்தத் தீர்மானத்தை கொண்டு வருவது பற்றி
எனக்கு இரவு 10 மணிக்கு தமிழக முதலமைச்சர் அவர்கள்
குறிப்புகளை எழுதி அனுப்பினார்கள்.
எப்படி இந்த திருத்தத்திலே அவர்களுக்கு
என்றால் அவர்கள் தான் தஞ்சை ஆற்றல் வந்தது
கள். அவருக்கு விவரம் தெரிவதற்கு முன்னால், சிறு பிள்ளை
யாக இருக்கும் போது தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்
நிலைமையை என்னை விட நன்கு தெரிந்த காரணத்தால்
இரவு 10 மணிக்கு எனக்கு குறிப்பு அனுப்பினார்கள். நான்
அந்தக் குறிப்புகளை வைத்துக் கொண்டு, அதிகாரிகளை
அழைத்துப் பேசி, இன்றைக்கு சட்டத்திலே திருத்தத்தைக்
கொண்டு வந்திருக்கிறேன் என்றால் அந்த அளவுக்கு இதை
நல்ல முறையிலே மக்களுக்கு பயன் படுத்த வேண்டுமென்பதற்
காகத்தான் அக்கறை காட்டுகிறோம் என்பது உங்களுக்கு
நன்றாகத் தெரியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் இங்கே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் பேசிய
பிறகு எனக்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி
அவர்கள் சொன்னதற்கு எல்லாம் பதில் சொல்லத் தேவையில்லை
என்று கருதுகிறேன். ஏனென்றால் அவர்கள் சொல்லுகிற
போது மிகக் கடினமாக சிலவற்றைச் சொன்னார்கள்.

இதிலே ஒன்றைச் சொல்ல வேண்டுமானால், எப்படி அந்த
நில மாற்றம், முறையற்ற முறையிலே நடந்திருக்கிறது என்பதை
இங்கே சொன்ன நேரத்தில், அதைக் கொண்டு வந்த இரு
அமைச்சர்களும் சொல்லிய பிறகு, மாற்றங்களை செய்துக்



கொண்டவர்களே, நாங்கள் மாற்றம் செய்துக் கொண்டோம்
என்று சொன்னதற்குப் பிறகு, அதிலே இங்கே இருக்கிற,
இருந்த 15 அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற
உறுப்பினர்கள் எதிர்த்தப் பிறகு, ஆம் என்று சொன்ன பிறகு,
பேச்சோடு பேச்சாக சொல்லியிருந்தால் பாதகம் இல்லை,
திரு. இளையபெருமாள் அவர்கள் பேசுகிற போது, பாயிண்ட்
ஆப் ஆர்டர் என்று சொல்லி, எப்படி நில மாற்றம் ஏற்பட்
டிருக்கும், நில மாற்றம் ஏற்படவே இல்லை என்று சொன்னது
அனைவருக்கும் தெரிந்து இருக்கும். நான் ஒன்றை தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன், அவர் பேசுகிற வேகத்திலே அவ்வாறு
பேசுகிறாரோ என்று கூட எண்ணினேன்.

ஆனால் அமைச்சர்கள் இருவரும் அதை ஏற்றுக் கொண்ட
பிறகு, நிலம் மாற்றம் செய்தவர்கள். அப்படிச் செய்துக்
கொண்டதாக அவர்களே ஏற்றுக் கொண்ட பிறகு, திராவிட
முன்னேற்றக் கழகம் அதை எதிர்க்கிறது என்று கூறி, அதன்
பிறகு பேராசிரியருடைய பேச்சை நான் படித்துக் காட்டிய
பிறகு, அவரும் பேசிய பிறகு, இளையபெருமாள் பேசுகிற
போது, பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி 60லே சட்டம்
வருகிறபோது, 57, 58-லே எவன் மாற்றுவான் ? ஆகவே நில
மாற்றம் இல்லை என்று சொல்லுகிற போது, உங்களுக்கெல்லாம்
தெரியும், உங்களையெல்லாம் நீதிபதிகளாக்கி நான் வழக்
காடிக் கொண்டிருந்த போது, நீதி தேவன்களுக்கு வருகிற,
வரவேண்டிய மயக்கம் வழக்காடிக் கொண்டிருந்த எனக்கே
வந்து விட்டது. இவர் எப்படி எந்த ஆதாரத்திலே சொன்
னார்கள் என்று. ஆனால் இன்றைக்கு அந்த மயக்கம் எல்லாம்
நீங்கி விட்டது. இந்த அவையிலே உள்ள அனைவரும் ஆதரித்
திருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே ஆதரித்
திருக்கிறார்கள். அதற்காக நன்றி.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிற போது
ஒன்றைச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக
ஆட்சியிலே இன்னின்ன காரியங்களை செய்திருக்கிறோம்
என்று ஏன் சொல்லவில்லை என்று சொன்னார்கள். நான்
இங்கே எதிர்க் கட்சித் தலைவருக்கு பணிவோடு தெரிவித்துக்
கொள்கிறேன். நான் இந்த அவையில் குத்தகை வாரத்தை
தள்ள வேண்டும் என்று கொண்டு வந்த போது, தள்ளியது
போதாது இன்னும் அதிகமாக தள்ள வேண்டும் என்று, அப்
போதிருந்த காங்கிரஸ் கட்சிக்காரர்கள், எதிர்க்கட்சிக்காரர்கள்
பேசுகிற போது, நான் பதில் சொல்கையில் சொன்னேன், 52
லிருந்து 78 வரைக்கும் புயல் அடித்தது. வெள்ளம் வந்தது.
முதல் முதல் இந்த வாரத்தை தள்ளுபடி செய்து கொடுக்க
வேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தது நான் சேர்ந்
திருக்கிற கட்சி தான் —சேர்ந்திருந்த கட்சி தான் என்று சொன்
னேன். 1972—லே நான் சேர்ந்திருந்த கட்சிதான் கொண்டு

வந்தது. 55—லே கொண்டு வரவில்லை. 56—லே கொண்டு
வரவில்லை, 52—லே கொண்டு வரவில்லை. கொண்டு வந்த
கட்சியும் நான் சேர்ந்திருந்த கட்சிதான் என்று அப்போது
சொன்னேன். ஆகவே நீங்கள் எதைச் செய்ததாகச் சொன்
னாலும் அதிலே நானும் இருந்தேன், நாமும் இருந்தோம் என்று
சொல்வதில் எனக்கு மகிழ்ச்சி. அது உண்மையும் தான்.
திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் எந்த நன்மை
களை மக்களுக்காகச் செய்திருந்தாலும், செய்கின்ற இடத்திலே
நாங்கள் இல்லாவிட்டாலும், செய்வதற்கு ஆதரவாக இருந்
தோம் என்று நான் சொல்வதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்
ஏற்றுக் கொள்வார்கள் என்று கருதுகிறேன்.....

<u>திரு. எல். இளையபெருமாள் :</u> பேரவைத் தலைவர்
அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்
கிற போது, 60—லே சட்டம் என்று வந்தபோது எப்படி நில
மாற்றம் செய்ய முடியும் என்று இளையபெருமாள் சொன்ன
தாகச் சொன்னார்கள். நான் சொன்னதன் கருத்து 52—லே
இருந்தும் கூட இது போன்ற தவறுகள் ஏற்பட்டிருக்குமேயானால்
அதை எப்படி நிலச் சீர்திருத்தச் சட்டத்திலே செய்ய முடியும் ?
அது காங்கிரஸ் ஆட்சியாயிருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக்
கழக ஆட்சியானாலும் சரி........

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> தலைவர்
அவர்களே, நான் சொன்னது, இளையபெருமாள் அவர்கள்
பேசுகிற போது பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி கிருஷ்ண
மூர்த்தி அவர்கள் சொன்னார்கள் என்று சொன்னேன். வேறு
ஒன்றும் இல்லை.

<u>திரு. எல். இளையபெருமாள் :</u> தலைவர் அவர்களே,
அந்த விஷயத்திலே விளக்கம் சொன்னதற்காக அமைச்சர் அவர்
களுக்கு நன்றி. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூட
பேசுகிற போது அன்றிருந்த காங்கிரஸ் கட்சி, இன்றிருந்த
காங்கிரஸ் கட்சி என்றெல்லாம் சொன்னார்கள். தலைவர்
காமராஜ் உயிரோடு இருந்த வரையிலும் அவர் உயிர்போகிற
வரைக்கும் ஒரே கட்சிதான். தலைவர் காமராஜ் அவர்கள்
மறைந்த பிறகும் அந்த காங்கிரஸ் லட்சியத்திலேதான் இருக்
கிறேன் என்பதை எதிர்க் கட்சித் தலைவருக்கு தெரிவித்துக்
கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இப்போது நடப்பது
பினாமி நிலங்களைப் பற்றிய விவாதம். இதில் காங்கிரஸ்
கட்சியின் உறுப்பினருடைய தனிப்பட்ட கொள்கைகளைப் பற்றி
எதற்காக விவாதிக்க வேண்டும் . . .





<u>திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :</u> மிஸ்டர் ஸ்பீக்கர் சார் மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற சமயத்தில் நம்முடைய
காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர், இளையபெரு
மாள் அவர்கள் பேசுகிற நேரத்தில், பாயின்ட்ர் ஆப் ஆர்டர்
என்று எழுப்பி நான் ஒரு கருத்தை வலியுறுத்தினேன் என்று
அவர்கள் கோடிட்டுக் காட்டி என்னைக் கொண்டு வந்ததற்
காகத்தான் இந்த விளக்கத்தை நான் தருகிறேன்.

[பிற்பகல் 1—20.]

நிலச் சட்டம் வருமென்று தெரிந்த பிறகு, மைனர் பேரிலே
இருக்கக்கூடிய நிலத்தை சட்டத்திற்கு உட்படாமல் போதுமான
பணம் கிடைக்காது என்று கருதி, மைனர்களுக்கு கார்டியன்
என்ற முறையில் ஒரு அனுமதியைக் கோரி வழக்கு மன்றத்திற்கு
செல்கிறது. அந்த அனுமதி கொடுக்கப்படவில்லை. அந்த
வழக்கு உயர்நீதி மன்றத்திற்கு வருகிற சமயத்தில் ஜஸ்டிஸ்
அனந்தநாராயணன் அவர்கள் ஒரு தீர்ப்பை அளித்திருக்கிறார்
கள். அந்த தீர்ப்பை வைத்துத் தான் நான் சொல்கிறேன்.
அந்த கேஸ் சக்தி வர்சஸ் குப்பத்தம்மாள். அந்த வழக்கில்
மைனருடைய சொத்து நில சீர்திருத்தச் சட்டத்தில் வந்தால்,
அந்த மைனருக்கு பணம் கிடைக்காமல் செய்வதற்கு வாய்ப்பு
ஏற்பட்டு விடுமோ என்பதற்காக அனுமதி கோரி, அந்த வழக்கு
நீதிமன்றத்திற்கு வந்தபோது, நீதிபதி அனந்தநாராயணன் அவர்
கள் சொன்ன அந்த ஜட்ஜ்மென்டை மட்டும் நான் இங்கே சொல்
கிறேன்

JUSTICE ANANTHANARAYANAN said : "Sales by private owners of land of surplus areas above the probable ceilings are by themselves an effective instrumentation of the reform. This is a mode by which a more equitable distribution of landed property is effected even before the enactment comes into force. Had it been otherwise, the State would have declared prohibition similar to a moratorium upon the sales of land which it has advisedly refrained from. To anticipate a law and to take certain measures dictated by Prudence which are legally permitted is not at all in contravention to public policy." This law, I still assert has to pass, this test.

அதை வைத்துத்தான் நான் சொன்னேன். 1958-ல் போடப்
பட்ட சட்டத்தில், 1962, 1963-ல் அவர்கள் அந்த சட்டத்திற்கு
ஒரு ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுத்திருந்தால் இப்படிப்
பட்ட சங்கடம் அமைச்சர் அவர்களுக்கு இப்போது, அமென்
மென்ட் கொண்டுவரக்கூடிய சூழ்நிலை வந்திருக்காது. 20
ஆண்டுகள் கழித்து இந்தச் சட்டம் செல்லாது என்று சொல்வது,
இந்த நீதிபதியின் தீர்ப்புக்கு உகந்ததாக இல்லை என்பதற்காகத்
தான் நான் அன்றைய தினம் பாயின்ட் ஆப் ஆர்டரில் எடுத்து

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1980 ஆகஸ்ட் 11

விளக்கினேன். இந்தச் சட்டம் நிறைவேற்றுவது குறித்து,
எத்தனையோ சோதனைகளைக் கடந்து செல்ல வேண்டும்
என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலை
வர் அவர்களே, நான் விவாதத்தை நீண்ட நேரம் நீட்டிக்க
விரும்பவில்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்பி,
சொன்னார்கள் என்பதைச் சொன்னேன். அன்றைக்கு அவ
ருடைய எண்ணங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் எண்
ணங்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். உங்களுக்கு
எப்படித் தெரியும் என்று கேட்க மாட்டீர்கள். கேட்டால்
சொல்லி விடுகிறேன். ஆனால், சிறிய விவசாயிகளுக்கு எல்
லாம் பாதுகாப்பு கொடுக்கவேண்டும். சிறிய விவசாயிகள்
இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதால் அவர்கள் பாதுகாப்பு
இழந்து கஷ்டப்படக் கூடாது என்பதுதான் ஒட்டுமொத்தமான
கருத்து என்பது நன்கு தெரியும். ஆனால், ரெட்ராஸ்பெக்
டிவ் எபெக்டாக சட்டம் வரக்கூடாது என்கிற அந்த எண்ணம்
அவர்களுக்கு இல்லை என்பதை அவர்கள் சார்பாக இங்கே
வாதாடுகிறேன். அவர்கள் சொல்வதற்குக் காரணம், நண்பர்
கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்பி,
பேசியதை வைத்துத்தான் நான் சொல்கிறேன். அவர் சொல்கி
றார், அதனால்தான் எழுந்திருக்கிறேன்; இல்லாவிட்டால் எழுந்
திருக்க வேண்டிய அவசியம் இல்லை. நில சீர்திருத்தச் சட்டம்
இந்த அவையில் 6—4-60-ல் வந்தது. 6—4—60-ல் வருவதை
ஏமாற்ற வேண்டுமென்பதற்காக 1958, 1959-ல் ஒருவன் செய்ய
முடியும். அன்றையதினம் யாராவது ஏமாற்ற வேண்டுமென்
றால், எப்படியும் செய்ய முடியும் என்று பயந்துதான் இத்தனை
சாட்சியங்களை, உதாரணங்களை காட்டிய பிறகு இங்கே
பேசியபோது எடுத்துச் சொன்னேனே ஒழிய, வேறல்ல.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அமைச்சர்
அவர்கள் இம்மாதிரி கிருஷ்ணமூர்த்தி அவர்களை கார்னர் செய்ய
வேண்டாம். கிருஷ்ணமூர்த்தி அவர்களையும் சேர்த்துத் தான்,
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகத்தான் இந்த மசோ
தாவை வரவேற்று இருக்கிறேன். ஒருவேளை நாங்கள் வர
வேற்றது அமைச்சர் அவர்களுக்கு பிடிக்கவில்லையோ, என்னமோ
எனக்குப் புரியவில்லை.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே,
கிருஷ்ணமூர்த்தி அவர்கள் விளக்கம் குறித்து எதிர்க் கட்சித்
தலைவர் அவர்களுக்கு ஒன்றைக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கட்சிகளின் தலைவர்
கள் எல்லாம் பேசியாகிவிட்டது. எல்லோரும் ஏற்றுக்கொண்ட
பிறகு, இப்போது என்ன விளக்கம்.



1980 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இதை ரெட்
ராஸ்பெக்டிவ் என்று போட்டால் செல்லுபடியாகாது என்று தெரி
விக்கப்பட்டது. 1961 ஆம் ஆண்டு இந்த சட்டம்கூட செல்லு
படி ஆகவில்லை.

உயர்நீதிமன்றத்தில் இதைத் தள்ளுபடி செய்து விட்டார்கள்.
அதற்குப் பிறகு 9 ஆம் தேதி ஷெட்யூலில் சேர்த்துத்தான் செல்லு
படி ஆக்கினார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. முகமது இஸ்மாயில் : மாண்புமிகு உறுப்பினர்
திரு. இளையபெருமாள் அவர்கள் பேசுகின்றபோது நான் அன்
றும் காமராஜ் காங்கிரஸில் இருந்தேன், இன்றும் அதிலேதான்
இருக்கிறேன்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கட்சி விவகாரங்கள்
பற்றிய விவாதங்கள் தற்போது வேண்டாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : சட்டப்படி
செல்லுபடியாக வேண்டுமென்றால் 9-வது ஷெட்யூலில் சேர்க்க
வேண்டும். அதற்கு வேண்டிய முயற்சிகளை இந்த அரசு
எடுத்துக் கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இருபது ஆண்டுகளுக்கு முன்னால் செய்யப்பெற்ற நில மாற்
றங்களையும் இது கட்டுப்படுத்தும் என்ற வகையிலே போடக்
கூடாது என்றார்கள். 1955 ஆம் ஆண்டு என்று போட வேண்டு
மென்று அன்றைக்கு நான் சார்ந்திருந்த கட்சியைச் சார்ந்த
சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா
அவர்கள் சொன்னார்கள். கம்யூனிஸ்டு கட்சி திரு. கல்யாண
சுந்தரம் அவர்கள் கூட 1955 என்று போட வேண்டுமென்று
சொன்னார்கள். ஆனால் இன்று 1955 என்று போட்டால்
சில சிறிய விவசாயிகள், உண்மையாகவே நில மாற்றம் செய்த
வர்கள் சங்கடப்படுவார்கள் என்பதை எண்ணித்தான் யோசித்து
யோசித்துப் பார்த்து 1955 என்று போடாமல் 1958 என்று
போட்டிருக்கிறோம். ஒன்பதாவது ஷெட்யூலில் சேர்த்தால்
இது செல்லும்.

நான் ஒன்றை உங்களுக்குச் சொல்வேன்—1910 ஆம் ஆண்டு
உத்திரப் பிரதேசத்தில் போட்ட எக்ஸைஸ் சட்டம், 1976-ல்
1910 முதல் சட்டம் செல்லுபடியாகாது
ஒரு திருத்தம் வந்தது.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1980 ஆகஸ்ட் 11

என்று சொன்னபோது சுப்ரீம் கோர்ட்டில் 1976-ல் திருத்தம் கொண்டு வந்தாலும் 60 வருஷத்திற்கு முன்னாலேயே அது செல் லும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. பின்னாலே தள்ளி தேதிகளைப் போடுவது என்னும்போது சொல்லுகிற காரணங் கள் சரியாக இருக்குமானால், நியாயம் இருக்கிறது என்று உணர்ந்தால் அது செல்லும் என்ற நிலை உண்டாகிறது. அதன் படி 1976-ல் திருத்தம் வந்தாலும் அது 1910 ஆம் ஆண்டில் இருந்தே செல்லும் என்று போட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு 22 ஆண்டுகளுக்கு முன்பு இருந்து இது செல்லும் என்று தனி ஷரத்தாக, தனி அத்தியாயத்தைச் செய்தாலும் ' Retro active ' என்ற முறையிலே கொண்டு வந்திருக்கி றோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறபோது சில விவரங் களைச் சொல்ல விரும்புகிறேன். 1956–57-ல் விற்பனையான நிலங்கள் நபர் எண்ணிக்கையில் 7,058 ஆக இருக்கிறது. அதா வது அத்தனை பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. 1957–58-ல் 8,802 ; 1958–59-ல் 8,976.

[பிற்பகல் 1-30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும்? மீண்டும் இன்று மாலை இந்த அவை கூட இருக்கின்றது. ஆகவே மாலை 4 மணிக்குப் பேசுகிறீர்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தாங்கள் அனு மதித்தால் 5 நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். மாலையில் எடுத்துக் கொள்ளலாம் என்று தாங்கள் சொன்னால் அதற்கும் நான் தயார்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாலை 4 மணிக்கு மேலவையில் இந்த மசோதா வர வேண்டியிருக்கிறது. மேலவை யிலே விவாதிப்பதற்கு மசோதாக்கள் இல்லை. ஆகவே இப் போதே முடித்துவிடுவது நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி யோடு சபையின் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இருப்பவர்கள் உடனே முடிக்க வேண்டுமென்று விருப்பம் தெரிவித்து இருக்கிறார்கள். நான்



1980 ஆகஸ்ட் 11] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

விரைவிலே முடிக்கத்தான் இருக்கிறேன் என்பது உங்களுக்குத் நன்றாகத் தெரியும். அதற்குக் காரணம் பேசிய உறுப்பினர்கள் யாரும் எங்களுக்குப் பதில் தேவையில்லை, நாங்கள் எல்லாம் ஆதரிக்கிறோம் என்று சொன்னது. ஆனால் இந்த விவரங்களை நான் அவைக்கு தெரிவித்தாக வேண்டும். இந்த விவரத்தினுடைய முக்கியத்துவத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் யாராவது உணர வில்லையோ என்பதை நான் வருத்தத்துடன் தெரிவிக்கிறேன்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. டைம் பேக்டார் தான். தாங்கள் உறுப்பினர்கள் பேரில் வருத்தம் தெரிவிக்க வேண்டியதில்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : ஏன் 1958 என்பதற்கு கணக்குச் சொல்கிறேன், நான். விற்பனையான பத்திரங்கள் 1956-57-இல் 7,058 ; 1957-58-இல் 8,082 ; 1958-59-இல் 8,975 ; 1959-60-இல் 9,108 ; இது விற்பனை யான பத்திரங்கள். வேறு ஒன்று சொல்லவேண்டுமென்றால் தானம் செட்டில்மெண்ட் போன்ற நிலமாற்றங்கள், இதில்தான் அதிகமாக மாறி இருக்கும் என்று அரசு கருதுகின்றது. தானம் செட்டில்மெண்ட் போன்ற நில மாற்றங்கள், 1956-57-இல் 1,189 1957-58:ஆல் 1,714 ; 1958-59-இல் 1,642 ; 1959-60-இல் 2,351 ; என்று ஆகியிருக்கின்றது. ஆனால் 100 ஏக்கருக்கும் அதற்குக் கீழும் உள்ள பாகப் பிரிவினைகள், 1956-57-இல் 7,497 1957-58-ல் 7,815 ; 1958-59-இல் 8,809 ; ஆனால் 1959-60ல் 11,117. இப்படி பல நில மாற்றங்களும் இப்படி பல தானங் கள் செய்யப்பட்டதனால் இதை எண்ணிப் பார்க்கின்றபோது 1955-லிருந்து கொண்டுவரப்பட வேண்டுமென்றாலும் இன் றைக்கு இருக்கின்ற நெருக்கடியான நிலைமையிலே கொண்டு வந்து நிறைவேற்றவேண்டுமென்பது தான் அரசினுடைய எண்ண மாக இருந்தாலும் அதிலே இருக்கின்ற சங்கடங்களைக் கருதித் தான் இன்றைக்கு 1—1—1958-க்கு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று கூறி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் வரவேற்றதற்காக, முக்கியமாக எதிர்க்கட்சித் தலைவர் வரவேற் றிருப்பதற்காக நான் ஆளுங்கட்சியின் சார்பிலே நன்றி கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இதிலே எதிர்ப்பார்க்கப்படுகின்ற நிலத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்ப தைச் சொல்ல இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, எதிர்பார்க்கப்பட்ட நிலம் மூலச்சட்டத்தின்படி 1 இலட்சம்தான் வந்திருக்கின்றது. ஆனால் இதிலே கிட்டத்தட்ட

1 இலட்சம் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் பல இடங்களைக் கணக்கிட வேண்டி இருப்பதால் சரியாகச் சொல்ல முடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் திருத்தம் வலியுறுத்தப்பெறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—'' தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 26/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவுற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 4.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—'' பிரிவு 4 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும் ''.

The Hon. Thiru S. D. Somasundaram : Sir, I move—*Renumber* clause 4 as clause 5 and before Clause 5 as so renumbered *insert* the following clause, namely :—

"4. *Modification of Section* 2 *of Principal Act* : The Principal Act shall have effect as if in sub-section *(1)* of section 2 of that Act. for the expression "and of Section 6" the expression ' and of section 6 and 23-*A*" had been substituted."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 4, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

திருத்தப்பட்ட எண்ணுள்ள பிரிவு 5.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி '' பிரிவு 5 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும் ''



Hon. Thiru S. D. Somasundaram : I move that

In clause 4, renumbered as clause 5,

(1) In the proposed new section 23-A—

(*a*) in sub-section (1), in the opening portion,—

(i) *for* the expression "Where", *substitute* the expression "subject to the provisions of sub-section (2), where":

(ii) *for* the expression "such transfer", *substitute* the expression "such transfer, in so far as it relates to surplus land referred to in clause (i) or clause (ii)".

(*b*) *for* sub-section (2), *substitute* the followings sub-section, namely —

"(2) (i) Notwithstanding anything contained in sub-section (1), the provisions of the said sub-section shall not apply to any transfer to any person (other than a trust) of land not exceeding one unit of land effected by the transferor referred to in sub-section (1) in one transaction on or after the 1st January 1958 and before the 6th April 1960 ;

Provided that in any case where the transferee already held no land other than the land obtained by one or more such transfers, then the provisions of sub-section (1) shall apply only to the extent of the land which is in excess of one unit of land:

Provided further that in any case where the transferee already held any land other than the land obtained by one or more such transfers, then,—

(*a*) Where the extent of the other land already held by the transferee is not less than one and a half units of land, than the provision of sub-section (1) shall apply to the entire extent of the land obtained by such transfer or transfers ;

(*b*) where the extent of the other land already held by transferee is not less than one half of unit of land, then of sub-section (1) shall apply to the extent of the land obtained by such transfer or transferee which is in excess of the difference between one an and a half units of land and the extent of the land already held by him.

(c) where the extent of the other land already held by the transferee is less than one half of unit of land, then the provisions of sub-section (1) shall apply to the extent of the land obtained by such transfer or transfers which is in excess of one unit of land

*Explanation.*—For the purpose of this sub-section, one unit of land shall mean five ordinary acres of dry land or two and a half ordinary acres of wet land. Where any person held, both dry and wet land, than, for the purpose of calculating the extent of his holdings under this sub-section, one ordinary acre of wet land shall be deemed to be equal to two ordinary acres of dry land.

(ii) The question as to whether any land is surplus or which land shall be declared as surplus land under this sub-section shall be determined by the authorized officer "

(2) in the proposed new section 25-E, in sub-section (3), *renumber* clauses (ii) and (iii) as clauses (iii) and (iv) respectively, and before clause (iii) as so renumbered, *insert* the following clause, namely:—

"(ii) to gather information and particulars for purposes of sub-section (2) of section 23-A ".

(3) *after* the proposed new section 23-F, *add* the following section, namely :—

" 23-G. *Disposal of surplus lands acquired under this Chapter.*—The Government may take rules providing for the manner in which any land acquired by the Government under this Chapter shall be disposed of ".

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இந்த அமெண்மெண்டின் மூலமாக 2½ ஏக்கர் நன்செய் நிலத்திற்கும் 5 ஏக்கர் புன்செய் நிலத்திற்கும் இந்த சட்டத்திலே இருந்து பாதுகாப்பு கொடுப்பதாக உறுதி மொழியை அவர்கள் அளித்திருக்கிறார்கள். அது நான் கேட்ட அளவிலே அதாவது 5 ஏக்கர் என்ற அளவிலே இல்லாவிட்டாலும் ஓரளவிற்கு என்னுடைய கோரிக்கையை ஏற்றுக் கொண்ட காரணத்தால் அவர்களுடைய திருத்தத்தை நான் வரவேற்கிறேன். ஆனால் இரவு 12 மணி, 1 மணி அளவில் முடிவு எடுத்ததாகவும் அவ்வாறு அவசரம் அவசரமாக முடிவெடுத்து அமெண்ட்மெண்ட் கொண்டுவந்ததாலும் சில தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன. அவ்வதை மட்டும் நான் எடுத்துக் காட்டுவதற்காகத்தான் அமெண்ட்மெண்ட் கொடுத்திருக்கிறேனே தவிர, கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள் சொல்வதைப் போல 5 ஏக்கர், 10 ஏக்கர்



என்று அதிகமாகக் கேட்கிறேன் என்று அர்த்தம் அல்ல. மூலச் சட்டத்திலே ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பது தஞ்சை மாவட்டத்திலேயும் இன்னும் பல இடங்களிலேயும் 80 சென்ட் நிலம் என்று இருக்கிறது. அந்த நிலையில் 2½ ஏக்கர் நன்செய் என்று சொன்னால் அது குறைந்தபட்சம் 3 ஸ்டாண்டர்டு ஏக்கராக மாறுகிறது. ஏதாவது ஒன்றை வைத்துக் கொள்ளவேண்டும். ஒன்று ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று வைத்துக் கொள்ளுங்கள் அல்லது மூலச்சட்டத்திலே இருப்பதைப் போல வைத்துக்கொள்ளுங்கள். ஒரு யூனிட் என்று வைத்துக் கொண்டு ஒரு ஏக்கர் நன்செய் 2 ஏக்கர் புன்செய் என்று வைத்திருப்பது குழப்பமாக இருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால் ஏற்கனவே இருக்கக் கூடிய அந்த டெஃபினிஷனுக்கு மாறுபாடாக இருக்கின்றது. ஆகவேதான் 2½ ஏக்கர் நன்செய் என்று இருப்பதை 3 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று மாறுகின்றது. தஞ்சை மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் அல்லது பரமத்தி, வேலூர் போன்ற காவிரிக் கரையிலே உள்ள நன்செய் நிலத்தைப் பொறுத்தவரையிலே 2½ ஏக்கர் நன்செய் என்று சொல்வது 3 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இருக்கின்றது. அதன் பிரகாரம் பார்த்தால் 12 ஏக்கர் புன்செய் வரையிலே எக்சப்ஷன் கொடுத்ததாகத்தான் அர்த்தம். அவசரம் அவசரமாக நீங்கள் சட்டம் கொண்டு வந்த காரணத்தால் இந்த நிலைமை. ஒன்று நீங்கள் மூன்று ஸ்டாண்டர்டு ஏக்கர் வரையிலே இது பொருந்தும் என்று சொல்லி இருப்பீர்களேயானால் இதிலே எந்தவிதமான குழப்பமும் இருக்காது. ஆனால் 80 சென்ட் இருக்கக்கூடிய நன்செய் நிலம் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர். அதேபோல் 2 ஏக்கர் நன்செய் இருந்தாலும் அதுவும் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று மூலச் சட்டத்திலே எஃப் என்ற பிரிவிலே இருக்கின்றது. 4 ஏக்கர் புன்செய் நிலமாக இருப்பது ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இருக்கின்றது.

[பிற்பகல் 1-40]

ஆகவே நீங்கள் பொதுவாக, 2½ ஏக்கர் நஞ்சை, 5 ஏக்கர் புஞ்சை என்று சொன்னால் ஒரு ஏக்கர் நஞ்சை என்றால் பரமத்தி வேலூரிலே இருக்கக்கூடிய ஒரு ஏக்கர் நஞ்சையிலே இருந்து 6,000 ரூபாய், 7,000 ரூபாய் வருமானம் வரும். அதே நேரத்தில் புதுக்கோட்டையிலே இருக்கக்கூடிய நஞ்சையிலே இருந்து ஒரு ஏக்கருக்கு 800 ரூபாய், 500 ரூபாய்கூட வருமானம் வராது. ஆகையினால் நஞ்சை என்றால் எல்லா நஞ்சையும் ஒன்று; அதைப்போல புஞ்சை என்றால் எல்லாப் புஞ்சையும் ஒன்று என்று அவசரக் கோலத்திலே இந்த அமெண்ட்மெண்டைக் கொடுத்திருக்கின்ற காரணத்தினால்தான் இதை 5 ஏக்கர் நஞ்சையாகவும், 10 ஏக்கர் புஞ்சை என்றும் நீங்கள் வைத்துவிடுங்கள். இல்லை என்றால் 3 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று எக்ஸெம்ப்ஷன் கொடுக்கின்ற அளவிலே நீங்கள் கொடுத்திருப்பீர்களேயானால் நான் வரவேற்றிருப்பேன். அதைத்தான் சொன்னேனே தவிர வேறல்ல. இந்தத் திருத்தத்தை அரசாங்கமே

கொண்டு வந்தால் நன்றாக இருக்கும். அதற்குத் தயாராக இருந்தால் நான் இந்தத் திருத்தத்தை முன் மொழிய வேண்டிய அவசியமில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, நாங்கள் இரவு 12 மணி வரைக்கும் இதைப் பார்த்துச் செய்தோம் என்றால் நிதானம் இல்லாமல் கொண்டு வந்து விட்டார்கள் என்ற வார்த்தைச் சொன்னார்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: அவசரம் என்று சொன்னேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இரண்டு வார்த்தைகளும் வந்தன. ஆனால் எப்பொழுது வேண்டுமானாலும் நாங்கள் நிதானத்தோடுதான் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல அவசரக் கோலத்திலே கொண்டு வந்ததாகச் சொல்கிறார்கள். நாங்கள் நீண்ட நேரம் இதைப்பற்றியெல்லாம் யோசிக்கிறோம் என்று சொன்னதை, அவசரக் கோலம் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனக்கே உரிய முறையிலே அதை எடுத்துக்கொண்டதாகக் கருதுகிறேன்.

நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன், நாங்கள் எவ்வளவோ சங்கடப்பட்டு, இதை எண்ணிப் பார்த்து, துலாக் கோலிலே பார்த்துச் செய்கிறோம் என்று சொல்கிறபொழுது அதற்கு உங்களிடமிருந்து மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து பாராட்டு வரும் என்று நிச்சயமாக நான் எதிர்பார்க்கவில்லை. நான் இதைச் சொல்வதற்குக் காரணம் அது எந்த அளவிற்கு நாங்கள் இதிலே கவனம் செலுத்தினோம்; எந்த அளவிற்கு இரவு வரை சிந்தித்துப் பார்த்தோம் என்று சொல்வதற்காகத் தான் அதை நான் குறிப்பிட்டேன்.

அவசரக் கோலத்தில் அள்ளித் தெளிக்கவில்லை; கோலம் நன்றாக இருக்கிறது என்றுதான் இங்கே எல்லோரும் பேசிய பொழுது சொன்னார்கள். கோலம் நன்றாக இருக்கிறது என்று தான் பேசினார்கள். அவர்களுடைய கட்சித் தலைவரவர்கள் பேசுகிறபொழுது கோலம் நன்றாக இப்பொழுது வந்து விட்டது; ஆனால் அன்றைக்குத் கோலம் தெரியவில்லை என்ற கருத்தைத்தான் சொன்னார்கள். அவர்கள், கட்சித் தலைவர் சொல்வதையே மாறுகிறார்களோ என்னவோ தெரியாது. கட்சித் தலைவர் சொல்கிறார், நீங்கள் கிருஷ்ணமூர்த்தியை மட்டும் கார்னர் செய்கிறீர்களே, அப்படிப் பார்க்கக்கூடாது என்ற கருத்தைச் சொன்னார்கள். நான் இதைப் பேசுவதற்குக் காரணம், திராவிட முன்னேற்றக் கழகத்திலே பேசியவர்களிலே சிலர் மாறுபட்ட கருத்திலே வந்து விட வேண்டுமென்று — நானும் அந்தக் கட்சியிலே இருந்தவன் என்ற காரணத்தால், அவைகளிலே சிலர் மாறுபட்டு வர வேண்டுமென்ற காரணத்தால் எடுத்துக் காண்பித்தேன்.





அது மட்டும் அல்ல, இது அவசரக் கோலத்திலே கொண்டு வரப்பட்டது அல்ல. நிதானத்தோடு கொண்டு வந்திருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு ஒரு யூனிட் என்பதைப்பற்றிக் கூட என்னைச் செய்தியாளர்கள் கேட்டார்கள். ஒரு யூனிட் என்று போட்டிருப்பது; $2\frac{1}{2}$ ஏக்கர் நஞ்சை அல்லது 5 ஏக்கர் புஞ்சை அல்லது இரண்டும் சேர்ந்து $2\frac{1}{2}$ ஏக்கர் நஞ்சைக்குச் சமமானதுதான். அதாவது ஒரு ஏக்கர் நஞ்சை, இரண்டு ஏக்கர் புஞ்சைக்கு ஏற்றதாக எடுத்துக் கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, $2\frac{1}{2}$ ஏக்கர் மட்டுமல்ல. ஆனால் முதலிலே நிலம் வைத்திருப்பார்களேயானால் அவர்களுக்கு அரை யூனிட். அப்படியானால் அவர்களுக்கு எவ்வளவு என்றால் $2\frac{1}{2}$, அதற்குப் பிறகு $1\frac{1}{4}$ ஆக மூன்றே முக்கால் ஏக்கர் நஞ்சை உண்டு. அல்லது $7\frac{1}{2}$ ஏக்கர் புஞ்சை உண்டு. ஆனால் $7\frac{1}{2}$ ஏக்கர் புஞ்சை என்றால் எவ்வளவு மா என்றால் உங்களுக்குத் தெரியும். மூவேழு இருபத்தொன்று, மூவரை ஒன்றரை, ஆக $22\frac{1}{2}$ மா ஆகும். ஆகையினால் $7\frac{1}{2}$ ஏக்கர் புஞ்சை, மூன்றே முக்கால் ஏக்கர் நஞ்சை, இன்றைக்கு இந்த அரசு போதும் என்று கருதித் தான் செய்கிறது.

அதுமட்டுமல்லாமல் இதைப்பற்றியெல்லாம் நாங்கள் யோசித்து இந்தக் கொண்டு வந்திருக்கிறோம். இதைப் பேசுகிற பொழுது எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் பேசுகிறபொழுது இன்றைக்கு இந்தத் திருத் தத்தைக் கொண்டு வந்த பிறகு இது நன்றாக அமைந்து இருக் கிறது; கோலம் நன்றாகப் போட்டிருக்கிறார்கள் என்று இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் கோலம் நன்றாகப் போட்ட தாக அவர் சொல்லியபிறகு கோலத்திலே கோணல் இருக்கிறது என்று நீங்கள் சொல்கிறீர்கள். இதை அவர் இருக்கிறபொழுதே சொல்கிறீர்கள், போன பிறகு சொல்லலாமே.

அது மட்டுமல்ல, நான் இங்கே ஒன்றைக் தெரிவித்துக் கொள் கிறேன். உங்களிடத்திலே நான் எங்களுடைய உணர்வுகளை தெரிவிக்கிறேன். இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தால் யார், நிலத்தைத் தேவையற்ற முறையில் இந்தச் சட்டத்திலே யிருந்து காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்பதற்காக யார் யார் இதைச் செய்தார்களோ, அவர்கள்தான் இதிலே அகப் பட்டுக் கொள்கிறார்கள்; ஆனால் இதிலே யார் உண்மையாக ஏழைய எளியவர்களாக இருந்து இதை வாங்கியிருந்து, அவர்கள் கஷ்டப்படுவார்களேயானால், ஏழைகள் கஷ்டப்பட, ஒருவனை அழித்து ஒருவனை வாழ வைக்க இந்த அரசு விரும்பவில்லை.

[திரு எஸ். டி. சோமசுந்தரம்] [1980 ஆகஸ்ட் 11

ஆனால், அப்படிப்பட்டவர்களையெல்லாம் காப்பாற்றுவதற்
காக அரசு உங்களிடத்தில் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது.
அதிகாரத்தைப் பெற்றிருக்கும்போது, சர்ப்ளஸ் லாண்ட்
அக்கொயர் பண்ணும்போது, அதை எப்படி கொடுப்போம்,
என்பதற்கு நாங்கள் ரூல் போடுவதற்கு, நாங்களே அமைத்துக்
கொள்வதற்கு உங்களிடத்திலே அனுமதி கோருகிறேன். அதை
யும் நீங்கள் நிறைவேற்றித் தருவீர்கள். அதையும் வைத்துக்
கொண்டு, இப்படி எடுக்கப்பட்ட நிலத்தை, கொடுக்கிறபொழுது
கவனித்து செய்வோம். எடுக்கிறபொழுது, ஏழை எளிய
விவசாயி, உண்மையாக வாங்கியிருக்கிறவன், பணம் கொடுத்து
வாங்கியிருக்கிறவன், அந்த நிலத்தை விட்டால், அவனுக்கு
ஆபத்து வரும், கஷ்டம் வரும் என்றால், எடுக்கிறபொழுது அதை
யோசிப்போம். அப்படி யோசிப்பதற்கு ஆதரமாக, உறுதுணை
யாக, எல்லா கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் இதிலே இருப்
பார்கள். நான் முதலில் சொல்லவில்லையென்று எதிர்க்கட்சித்
தலைவர் கேட்டதற்கு, இப்பொழுது சொல்லிவிடுகிறேன். எல்லா
கட்சியைச் சேர்ந்தவர்களும் அதிலே உறுப்பினர்களாக இருப்பார்
கள். இன்றைக்கே நான் உங்களுக்குச் சொல்வேன், எதுவுமே
"பர்மெனென்ட் இல்லை. நத்திங் இஸ் பர்மனென்ட், எதை
எப்பொழுது வேண்டுமானாலும் மாற்றலாம். நத்திங் இஸ்
பர்மனென்ட். இதுதான் நிலையான சட்டம், கடைசி சட்டம்,
இதை யார் வந்தாலும், எப்பொழுது வந்தாலும், யாரும் மாற்ற
முடியாது என்ற நோக்கத்திலே கொண்டு வரவில்லை. தேவைப்
பட்டால், இதிலே குறை ஏற்படும் என்றால், அப்பொழுது
மாற்றலாம். மேலவையிலே நான் பதில் சொல்லும்போது
சொன்னேன்; போன தடவை நீங்கள் ஒன்று சொன்னீர்
கள், இப்பொழுது ஒன்று சொல்கிறீர்களே, என்று கேட்டார்கள்.
நான், அவைக்கு வெளியே சென்று விட்டு, உள்ளே வருகிற
பொழுது, அந்த நேரத்திற்குள் அதைவிடச் சிறந்தது என்று
ஒரு கருத்து பட்டால், அதைச் சொல்வதற்குத் தயங்க மாட்டேன்
என்று சொல்லியிருக்கிறேன். அவைக்கு வெளியே சென்று உள்ளே
வருவதற்குள், உள்ளே சென்றுவிட்டு, வெளியே போய் வருகிற
பொழுது, சிறந்த கருத்து என்று பட்டால், நிச்சயமாகச் சொல்
வேன், இந்த அரசு செய்யும். முதலமைச்சர் செய்வதற்குத்
தயாராக இருக்கிறார் என்று சொல்லி, இதை நிறைவேற்றித் தர
வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: ஆன் எ பாயின்ட் ஆஃப் பர்சனல்
எக்ஸ்பிளனேஷன். நான் ஒன்றும் இங்கே பேசுகிற சமயத்தில்
நிதானம் இல்லாமல் அமைச்சர் கொண்டு வந்து விட்டார் என்று
சொல்லவில்லை. சொல்லாத வார்த்தையைக் கற்பனையாக
எடுத்துக் கொண்டு, அதிலேயே தன்னுடைய திறமையை எல்லாம்
காட்ட வேண்டிய அவசியம் இல்லை என்றுதான் நான் சொல்
கிறேன்.



1980 ஆகஸ்ட் 11] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

அடுத்து நீங்கள் கொண்டு வந்திருக்கிற இந்த அமென்ட்
மென்ட்டை நான் வரவேற்றிருக்கிறேன். It meets to some extent
my requirements. நான் 5 ஏக்கர் என்று கேட்டதற்கு $2\frac{1}{2}$ ஏக்கர்
அளவிற்காவது நீங்கள் அமென்ட்மென்ட் கொடுத்திருக்கிறீர்களே,
அதையே கூட இரண்டு நாளைக்கு முன்னதாகவே கொடுத்
திருந்தால், இன்னும் சற்று விவரமாகப் பேசுவதற்கு
வாய்ப்பிருக்கும். ஆனால், இன்று 9 மணிக்கு சட்ட சபை
கூடிய பிறகு, 10 மணிக்கு இந்த அமென்ட்மென்ட்டை
எங்கள் கையிலே கொடுக்கக்கூடிய அளவுக்கு அரசாங்கம் தந்
திருக்கிற காரணத்தாலே தான் அதைச் சொன்னேன். இந்த
டிஸ்கிரிப்ஷனிலே, 1 ஏக்கர் நஞ்சை என்று சொல்கிற நேரத்திலே
2 ஏக்கர் நஞ்சையும் ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கராவாக ஒரு சில
இடங்களிலே கருதப்படுகிறது. 80 சென்ட் நஞ்சையும் ஒரு ஸ்டாண்
டர்ட் ஏக்கராவாக இருக்கிறது சில இடங்களிலே. ஆகவே
பொதுவாக $2\frac{1}{2}$ ஏக்கர் நஞ்சை, 5 ஏக்கர் புஞ்சை என்று சொல்லு
வது, அது சாதாரணமாக எல்லா பகுதிகளுக்கும் ஏற்ற நியாயத்
தைச் செய்யாது என்ற காரணத்தாலே, இந்த அமென்ட்மென்ட்
டைக் கொண்டு வர விரும்பினேன். அமைச்சர் அவர்கள் பிடி
வாதமாக இருக்கிற காரணத்தால், நான் மொழியவில்லை.

MR. SPEAKER: The question is: "In clause 4, renumbered as clause 5,—

(1) In the proposed new section 23-A,—

(a) in sub-section (1), in the opening portion,—

(i) *for* the expression "Where", *substitute* the expression "Subject to the provisions of sub-section (2), where,

(ii) *for* the expression "such transfer", *substitute* the expression "such transfer, in so far as it relates to surplus land referred to in clause (i) or clause (ii)";

(b) *for* sub-section (2), *substitute* the following sub-section, namely:—

"(2) (i) Notwithstanding anything contained in sub-section (1), the provisions of the said sub-section shall not apply to any transfer to any person (other than a trust) of land not exceeding one unit of land effected by the transferor referred to in sub-section (1) in one transaction, on or after the 1st January 1958 and before the 6th April 1960;

Provided that in any case where the transferee already held no land other than the land obtained by one or more such transfers, then the provisions of sub-section (1) shall apply only to the extent of the land which is in excess of one unit of land ;

Provided further that in any case where the transferee already held any land other than the land obtained by one or more such transfers, then,—

(a) Where the extent of the other land already held by the transferee is notless than one and a half units of land, then the provisions of sub-section (1) shall apply to the extent of the entire land obtained by such transfer or transfers:

(*b*) where the extent of the other land already held by the transferee is not less than one half of unit of land, then the provisions of sub-section (1) shall apply to the extent of the land obtained by such transfer or transfers which is in excess of the difference between one and a half units of land and the extent of the land already held by him.

(*c*) where the extent of the other land already held by the transferee is less than one half of unit of land, then the provisions of sub-section (1) shall apply to the extent of the land obtained by such transfer or transfers which is in excess of one unit of land.

*Explanation.*—For the purpose of this sub-section, one unit of land shall mean five ordinary acres of dry land or two and a half ordinary acres of wet land. Where any person held both dry and wet land, then, for the purpose of calculating the extent of his holdings under this sub-section, one ordinary acre of wet-land shall be deemed to be equal to two ordinary acres of dry land.

(ii) The question as to whether any land is surplus or which land shall be declared as surplus land under this sub-section shall be determined by the authorized officer.".

(2) in the proposed new section 23-E, in sub-section (3), *renumber* clauses (ii) and (iii) as clauses (iii) and (iv) respectively, and before clause (iii) as so renumbered, *insert* the following clause, namely :—



"(ii) to gather information and particulars for purposes of sub-section (2) of section 23-A ; " ;

(3) *after* the proposed new section 23-F, *add* the following section, namely :—

"23-G. *Disposal of surplus lands acquired under this Chapter.*—The Government may make rules providing for the manner in which any land acquired by the Government under this Chapter shall be disposed of."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 5 திருத்தப் பெற்றவாறு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு—6

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன்னுள்ள கேள்வி:— "பிரிவு 6 இச் சட்ட முன்வடிவு பின் உரிய பகுதியாக ஆக்கப்பெறவேண்டும்".

THE HON. THIRU S. D. SOMASUNDARAM : Sir, I move, that 'After clause 5 as so renumberd, *add* the following clause, namely :—

"6. *Modification of Section 73 of principal Act.*—The principal Act shall have effect, as if, in section 73 of that Act, in the opening portion for the expression "and in section 6", the expression "and in sections 6 and 23-A" had been substituted".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 6 திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

“ தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன் வடிவு, (சட்டமன்றப்பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1980), திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு, திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, மாலை 4-30 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பிற்பகல் 1-50 மணிக்குப் பேரவை ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4-30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

(6) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) உள்ளாட்சி அதிகார மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1980 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1980.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

“தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 42/80)” ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.

தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சட்ட முடிவின் மீது பேசும் போதே, மற்றுமுள்ள ஐந்து சட்ட முன்வடிவுகளின் மீதும் தங்கள் கருத்துக்களை சொல்லும்படியாக கேட்டுக் கொள்கிறேன். காரணம் சப்ஜெக்ட் மாட்டர் எல்லாவற்றுக்கும் ஒன்று தான். நான் எல்லாவற்றிற்கு

1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 5 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



மாக பதிலும் சொல்ல முடியும். பின்னர் தனித்தனியே அவற்றை விவாதமின்றி நிறைவேற்ற வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு அ. ரகுமான்கான் : கடந்த முறை இந்த மன்றத்தில் இந்த மாதிரியான ஒரு பிரச்சினை வந்த நேரத்தில் திரு சாதிக் பாட்சா அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு தனித்தனியாக விவாதித்து, நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லப்பெற்று இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு ப. நெடுமாறன் : ஒவ்வொரு சட்ட முன்வடிவாக எடுத்துக் கொண்டால், எல்லாவற்றிலும் எல்லோரும் பேசுவது என்பது முடியாது. யார் யாருக்கு சந்தர்ப்பம் கிடைக்கிறதோ அவர்கள் தான் பேசமுடியும். எனவே மொத்தமாக எல்லாக் கருத்துக்களையும் கூறியதற்குப் பிறகு, ஒவ்வொரு சட்ட முன்வடிவாக நிறைவேற்றலாம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு வி. கிருஷ்ணமூர்த்தி : ஒரேமாதிரியான சட்டமாக இருந்தாலும் பொதுவான கருத்துடைய சட்டமாக இருந்தாலும் ஒவ்வொரு சட்டமும் தனித்தனியாகத்தான் சட்டமாக ஆக்கப்படுகிறது. ஆகவே, தனித்தனியாக எடுத்துக் கொள்வது நல்லது. சில சட்டங்கள் விவாதம் இல்லாமல் கூட நிறைவேற்றப் படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. அதே சமயத்தில் ஜெனரல் டிஸ்கஷன் செய்து, ஒவ்வொரு சட்ட முடிவிற்கும் தனித்தனியாக பின்னர் அமென்ட்மென்ட் கொண்டு வருவது சரியாக இருக்காது.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, 18 வயது வந்தோருக்கு வாக்குரிமை என்பதை பெரும்பாலான கட்சிகள் ஏற்றுக்கொண்டு இருக்கின்றன. அதை ஏற்றுக்கொள்கிற காரணத்தால், 6 மாத காலத்திற்கு தனி அதிகாரிகள் நியமனம் குறித்தும் ஆதரவு தெரிவிப்பார்கள் என்பதால் தான் ஒட்டு மொத்தமாக எல்லா சட்ட முன் வடிவுகளையும் எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னேன்.

திரு அ. ரகுமான்கான் : மாண்புமிகு அமைச்சர் சொல்வதைப்போல், கொண்டுவரப்படுகின்ற அத்தனை மசோதாக்களும் ஒரே கருத்துக்களைக் கொண்டதாகத்தான் இருக்கின்றன. மாநகராட்சி சம்பந்தமாக உள்ள சட்ட முன்வடிவு கொஞ்சம் வித்தியாசமாக இருக்கிறது. சப்ஜெக்ட் மேட்டர் ஒன்று என்று இருந்தாலும், நடைமுறையில் சட்டரீதியாக ஒவ்வொரு மசோதாக்களையும் தனித்தனியாக எடுத்துக் கொண்டு விடுவதுதான் வழக்கமாக இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1980 ஆகஸ்ட் 11

மாண் மிகு பேரவைத் துணைத்தலைவர் : இதிலே விவாதம் செய்வதில் நேரம் வீணாக்கப்படவேண்டாம். எல்லாத் தேர் தல்களையும் 6 மாத காலத்திற்குத் தள்ளிப் போடுவதைப்பற்றி இருப்பதால், விவாதங்களை ஒன்றாக வைத்துக் கொண்டு விட்டு தனித்தனியாக சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றலாம் என்று குறிப்பிடுகிறேன்.

திரு வி. கிருஷ்ணமூர்த்தி : துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் நடக்கும் நிகழ்ச்சிகள் நாடு பூராவும் கவனிக்கும் நிலை இருக்கிறது. சில நேரங்களில் இங்கே தெரிவிக்கிற கருத்துக்கள் நீதிமன்றத்தில் எதிர்காலத்தில் பார்ப்பதற்கான சூழ்நிலை வரலாம். ஆகவே ஒவ்வொரு சட்ட முன் வடிவின் மீதும் கருத்துக்களைச் சொல்லி, பிறகு அவற்றை நிறை வேற்றுவதுதான் சிறந்ததாக இருக்கும். கும்பலாக வைத்துக் கொள்வது சரியல்ல.

திரு கு. ரமணி : எல்லாவற்றையும் தனியாக எடுத்துகொள்ள வேண்டும் என்பது கூட அல்ல. 18 வயது ஓட்டுரிமையைச் சட்டத்தை மட்டும் முதலில் நிறைவேற்றிவிட்டு பின்னர் எல்லாச் சட்ட முன் வடிவுகளையும் ஒன்றாக எடுத்துக் கொள்ளலாம். ஏனெனில் பாக்கி சட்ட முன்வடிவுகள் அனைத்தும் தனி அதிகாரி கள் நியமனம் குறித்து இருக்கிறது. அவற்றையெல்லாம் ஒன்றாக எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தனித்தனியாக நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டுள்ளவாறு எடுத்துக் கொள்ளப்படும்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே நான் மொழிந்துள்ள சட்டத் திருத்த மசோதாவில் ஒரு சில கருத்துக்களை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். இதைப் பொறுத்த வரையில், 18 வயது வந்தோ ருக்கு எல்லாம் வாக்குரிமை அளிக்கப்பட வேண்டுமா வேண்டாமா என்ற கருத்தை அடிப்படையாக வைத்து கடந்த 11-7-80-ம் நாளன்று அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் இங்கே நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பெரும்பான்மையான அரசியல் கட்சிகளினுடைய தலைவர்கள் எல்லாம் 18 வயது வந்தோர்களுக்கு எல்லாம் ஓட்டுரிமை அளிக்கலாம் என்பதை ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள்.

மேலும் இந்திய உபகண்டத்தில் 4 மாநிலங்களில் கேரளம், ராஜஸ்தான், மேற்கு வங்கம், ஆந்திரா போன்ற மாநிலங்களில் 18 வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டு இருக்கிறது. அந்த அடிப்படையில் இங்கே தமிழகத்தில் 18 வயது வந்தவர்க ளுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்





எல்லோருமே இருக்கிற காரணத்தால், இந்தச் சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு, இதை சட்டமாக நிறைவேற்றி தர வண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, தமிழ்நாடு உள்ளாட்சித் அதிகார மன்றங்கள் திருத்த சட்டத்தை நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வரவேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தில் உள்ளாட்சி மன்றங்களில் நடைபெற இருக்கிற தேர்தலுக்கு வாக்களிக்க வயது 18 என்றும், அதிலே அங்கத்தினர் களாக வருவதற்குப் போட்டியிடுகின்றவர்களுக்கு வயது 21 என்றும், அதிலே ஒன்றியத் தலைவராக போட்டியிடுகின்ற வருக்கு தமிழில் எழுதப்படிக்கத் தெரிந்து இருக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறீர்கள். நாங்கள் இதை வரவேற் கிறோம்.

இளைஞர்கள், இளம் தலைமுறையினர் வாக்களிக்கும் உரிமை பெறுவதையும், அப்படிப்பட்டவர்கள் பொறுப்பிலே வருவதையும், திராவிட முன்னேற்றக்கழகம் எதிர்க்காது. ஆகவே, இதை நான் திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பில் வரவேற்று, என்னுடைய கருத்துக்களை இங்கே சொல்லிக் கொள்ள விழைகிறேன்.

உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடந்து 10 ஆண்டுகள் ஆகிவிட்டன. 1977-ல் ஒன்றியங்கள், உள்ளாட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டன. சென்ற ஆண்டு உள்ளாட்சி மன்றங்களில் இருந்து தலைவர்களையும், உறுப்பினர்களையும் கலைத்தார் கள். இன்றையதினம் ஏறக்குறைய தமிழ் நாட்டில் இருக்கின்ற 375 ஒன்றியங்களிலும், 13,000 உள்ளாட்சி மன்றங்களிலும் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத ஒரு நிலை இருந்து வருகிறது என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

[மாலை 4-40]

பல்வேறு நேரங்களில் இந்த மாமன்றத்திலே தேர்தலை நடத்த வேண்டும், நடத்த வேண்டும் என்று கேட்ட போது எல்லாம் அரசின் சார்பிலே 6 மாத காலத்திலே தேர்தல் நடைபெறும். பல்வேறு காரணத்திற்காக தேர்தலை ஒத்திவைக்கிறோம் என்று சொல்லி வந்தார்கள். ஆனால் இன்றையதினம் இந்த மசோதா நிறைவேறிய பின்னதாவது தேர்தலை நடத்துவதற்கு நீங்கள் வழிவகைகள் காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1980 ஆகஸ்ட் 11

ஏற்கெனவே உள்ளாட்சி மன்ற தேர்தல்கள் நடைபெறும் என்று 1976-ஆம் ஆண்டிலிருந்தே சொல்லி, வாக்காளர் ஜாபிதா தயாரிக்கப்பட வேண்டும் என்ற காரணத்தைச் சொல்லி, 5 முறைக்குமேல் தேர்தலை தள்ளி வைத்துவிட்டார்கள். இப்போது இந்த மசோதா நிறைவேற்றப் பட்ட பின்னால் 18 வயது வந்தவர்களுக்கு எல்லாம் வாக்குரிமை அளிக்கின்ற புதிய வாக்காளர் ஜாபிதாவில் அரசாங்கம் தயாரித் தாக வேண்டும். பொதுவாக நாடாளுமன்ற, சட்டமன்ற தேர்தல்களின் போது பல்வேறு வாக்காளர் ஜாபிதாக்கள் தயா ரிக்கப்பட்டு மக்களை ஒரு குழப்பத்தில் ஆழ்த்திவிட்டார்கள். காரணம், 1975-ல் தயாரிக்கப்பட்ட ஜாபிதாவோடு புதிதாகச் சேர்க்கப்பட்டவர்கள் பட்டியலையும் தனியாகக் கொடுத்தார்கள். சிலபேர் இரண்டையும் சேர்த்து பார்த்தார்கள். சில பேர் இணைக்கப்பட்ட பகுதியை விட்டுவிட்டு பார்த்தார்கள். இப்படிப்பட்ட நிலைமை இந்த இரண்டு தேர்தல்களிலும் நடந்தது. எதிர்காலத்தில் நாம் வாக்காளர் ஜாபிதா தயாரிக்கும்போது ஏற்கெனவே தயாரித்திருக்கிற அந்த பட்டி யலை வைத்துக்கொண்டு, 18 வயதுடையவர்களுக்கு மட்டும் தனியாக ஜாபிதா எடுத்து, அதையும் இதையும் சேர்த்து ஏற் கெனவே ஏற்பட்ட குழப்ப நிலை மீண்டும் ஏற்படாமல் புதி தாகவே கராரான முறையில் 18 வயது என்று சொல்லும்போது மொத்த பேருக்கும் சேர்த்து ஒரே வாக்காளர் ஜாபிதாவை தயாரிக்க வேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கும் சட்ட மன்றத் தேர்தலுக் கும் வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படும்போதே 18 வயதான பெண்கள் பெயரும் அதிலே வந்துவிடுமது. காரணம் கிராமங் களில் வாக்காளர் பட்டியல் தயாரிக்கும்போது 15, 16 வயது பெண்களுக்கு எல்லாம் சாதாரணமாகவே திருமணம் ஆகி விடுகிறது—அரசு அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று கணக்கு எடுக்கும்போது திருமணமான பெண்கள் என்றால் 21 வயது இருக்கும் என்று அவர்கள் பெயரையும் சேர்த்துவிடுகிறார்கள். இனிமேல் வாக்காளர் ஜாபிதா தயாரிக்கும்போது மொத்தமாகவும் செலுத்தி, நியாயமான முறையில் தயாரிக்க வேண்டும். ஏனென்றால் நடைபெற இருப்பது உள்ளாட்சிமன்றத் தேர்தல். அந்த அந்த கிராமத்தில் பெயர் விடுபட்டு விட்டால், பெரும் தகராறு வரும். வேண்டுமென்றே விட்டுவிட்டதாகச் சொல் வார்கள். ஆகவே, நல்லமுறையில் வாக்காளர் ஜாபிதாவைத் தயாரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே இந்த மன்றத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்களும், ஏற்கெனவே உள்ளாட்சித் துறை



1980 ஆகஸ்ட் 11] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

அமைச்சராக இருந்த அமைச்சரும் இங்கே அறிவிக்கும்போது 18 வயதானவர்களுக்கு எல்லாம் வாக்குரிமை அளிக்கப்படும் என்று சொன்னார்கள். அதைப்போல வாக்காளர்களுக்கு போட்டோ தரப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, ஊராட்சிமன்றத் தேர்தல் நடக்கும்போது பெண் களுக்கு தனித் தொகுதி ஒதுக்கப்படும்; அதைப் போல தாழ்த்தப் பட்டவர்களுக்கு தனியாக தொகுதி ஒதுக்கப்படும் என்று சொல்லி யிருக்கிறார்கள்.

எனக்கு இருக்கிற சந்தேகம், 18 வயது உடையவர்கள் ஜாபிதா தயாரிக்கப்பட்ட பிறகு ஏன் தேர்தல் நடைபெறவில்லை என்றால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனியாகத் தொகுதி ஒதுக்க வேண்டும்; பெண்களுக்கு தனியாக ஒதுக்க வேண்டும்; அதனால் இன்னும் 6 மாதம் அரசாங்கத்திற்குப் அவகாசம் தேவை என்று சொல்வார்களோ என்பது. அந்த சந்தேகத்திற்கு இடம் இல்லாமல், இப்போது இல்லாவிட்டாலும்—இந்த மசோதாவில் அதெல்லாம் வந்திருக்கும் என்று ஆவலோடு பார்த்தேன், ஒன்றும் சொல்லப்படவில்லை—தனியாகக்கூட கொண்டுவரலாம் சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களிலே அரிசன மக்களுக்கு தனித் தொகுதி இருப்பதால்தான் அந்த மக்கள் உறுப்பினராக முடிகிறது; இந்த மன்றத்திலே கூட பெரும்பாலான அரிசன மக்கள் உறுப்பினர்களாக வர முடிந்திருக்கிறது. அவர்களுக்கு என்று தனித் தொகுதி இல்லை என்றால் ஊராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு வர அவர்களுக்கு மெத்த சிரமமாக இருக்கும். அதனால் அரிசனங்களுக்கும், பெண்களுக்கும் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் தனித் தொகுதி ஒதுக்கி தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல இங்கே நம்முடைய மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்டோம்.

ஊராட்சி மன்றங்களுக்கு படிப்படியாக இருந்த அதிகாரமே குறைக்கப்பட்டு வந்துவிட்டன. இப்போது நம்முடைய உள் ளாட்சித்துறை அமைச்சரவர்கள் இந்தத் தேர்தலுக்கு முன்ன தாகவே தேர்தல் தனிப்பட்ட முறையிலே நடைபெற்றாலும் ஊராட்சி மன்றங்களுக்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு நகராட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்க வழிவகை காண வேண்டும். தனியாக வேண்டுமானால் அதற்கு ஒரு குழுவை அமைத்து என்னென்ன அதிகாரங்கள் தரலாம் என்று யோசித்து அதற்குண்டான சட்டத்தை நீங்கள் இங்கே கொண்டுவர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள் கூட இதைக் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தேர்தல் நடைபெறாத காலத்திலே

வர இருக்கிறது. கிராமப் பஞ்சாயத்துத் தேர்தல்கள் வர இருக்கின்றது. நகரப் பஞ்சாயத்திலே தலைவராக இருக்கின்ற வாக்காளர்களும் நகரப் பஞ்சாயத்திலே உறுப்பினர்களாக இருக்கின்ற வாக்காளர்களும் தனித்தனியாக வாக்களித்துவிடுகிறார்கள். ஆனால் கிராமப் பஞ்சாயத்து என்று வருகின்றபோது ஒரே நேரத்திலே ஊராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு வாக்களிக்க வேண்டும். தலைவருக்கு வாக்களிக்க வேண்டும், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவருக்கும் வாக்களிக்க வேண்டும். இப்படி ஒரே வாக்காளருக்கு 3 சந்தர்ப்பங்கள் வருகின்றன. கிராமப் பஞ்சாயத்திலே ஒரு வார்டிலே 3 உறுப்பினர்கள், 4 உறுப்பினர்கள் இருக்கின்றனர். ஆனால் 14 பேர் 12 பேர் போட்டியிடுகின்றபோது வாக்காளர்கள் அவர்களிலே 4 பேர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டி இருக்கின்றது. உள்ளே வருகின்ற வாக்காளர் இந்தப் 12 பேரில் ஒரு 4 பேர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டி இருக்கின்றது. இந்த முறை தவறு என்று சொல்லி இருக்கின்றேன். ஆகவே கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு இன்னும் 6 மாதத்திலே தேர்தல் நடத்த இருப்பதாகச் சொல்லப்படுகின்ற நேரத்திலே அதற்குள்ளாக கிராமப் பஞ்சாயத்திலே தனித்தனி வார்டுகளாகப் பிரித்து அதற்கும் தேர்தலுக்கு முன்னதாகவே சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு கிராமங்களிலே மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் மக்களுடைய குறைகள் கேட்பாரற்று கிடக்கின்றன, ஆகவே விரைவாகத் தேர்தலை நடத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு இந்த சட்டத்தை வரவேற்று அமைகிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அதிகார மன்றங்களுக்கான சட்டத்தைத் திருத்தக் கூடிய முறையிலே மசோதா கொண்டு வரப்பட்டிருக்கின்றது. அதிலேயும் குறிப்பாக 21 வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை என்று இருக்கக்கூடிய வயது வரம்பை வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை என்று குறிப்பிடுகின்ற வகையிலே 18 வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை என்ற அந்த அடிப்படையிலே உள்ளாட்சி மன்றத் தேர்தல்களையும் நகராட்சி மன்றத்தேர்தல்களையும் நடத்துவது என்கிற அடிப்படையிலே இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் முழுமையாக இந்த மசோதாவை வரவேற்கிறேன். வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை என்று கூறும்போது 18 வயது வந்தவர்கள் அனைவரும் வயது வந்தவர்கள் என்று கருதப்பட்டு சமுதாயத்திலே இருக்கக்கூடிய அனைத்து கஷ்ட நஷ்டங்களிலேயும் பங்குகொள்ளக் கூடிய வயதைப் பெற்றவர்களாக இருக்கிறார்கள். நம்முடைய நாட்டிலே நடைபெறுகின்ற தேர்தலிலே அவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு மசோதா





கொண்டுவரப்பட்டிருக்கின்றது. கேரள மாநிலத்திலும், ஆந்திர மாநிலத்திலும், இராஜஸ்தான் மாநிலத்திலும், மேற்கு வங்காளத்திலேயும் இம்மாதிரியான சட்டத்தைக் கொண்டு வந்து 18 வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டு அந்த அடிப்படையிலே அந்த மாநிலங்களிலே தேர்தல்களும் நடைபெற்றிருக்கின்றன. ஆகவே, அதைப்பற்றி நம்முடைய தமிழகத்திலேயும் தேர்தல் நடைபெறுதவதற்கான முறையிலே, தமிழக அரசு முடிவு செய்திருக்கின்றது. அனைத்து அரசியல் கட்சிகளும் இதை வரவேற்றிருக்கின்றன. இதிலே ஒன்றிரண்டு கட்சிகள் விதிவிலக்கு இருக்கலாம். பெரும்பாலும் தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து அரசியல் கட்சிகளும் இதை ஏற்றுக் கொண்டு நம்முடைய நாட்டின் ஜனநாயக மரபில் ஒரு புதிய வழிமுறையை ஏற்படுத்தக்கூடிய முறையில் இந்த மாற்றம் செய்யப்படுகின்றது. இந்த மாற்றத்தை உடனடியாக அங்கீகாரம் செய்து இந்த மாற்றத்தின் அடிப்படையிலே தேர்தலை நடத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஏற்கனவே நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் ஒன்றை அறிவித்திருக்கிறார்கள். அதாவது இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு 6 மாத காலத்திற்குள்ளாக தேர்தலை நடத்தி முடிப்போம் என்ற முறையிலே வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கிறது.

[மாலை 4-50]

ஆகவே, அந்த அடிப்படையில் அந்த சட்டத்தை உடனடியாக நிறைவேற்றி 6 மாத காலத்திற்குள் தேர்தல்களை நடத்துவதற்கு ஏற்பாடுகளை துரிதமாக செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதே மாதிரி 18 வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அளிக்கிற அதே நேரத்தில் தேர்தல்களில் பங்கு கொள்ளக் கூடியவர்கள் யார் யார் நிற்கலாம் என்று கேட்க வருகிறபோது அது ஊராட்சி மன்றங்களானாலும் நகராட்சி மன்றங்களானாலும் யார் நிற்க தகுதி பெற்றவர்கள் என்று குறிப்பிடுகிறபோது, அவர்களுக்கு வயது 21 என்று நிர்ணயித்திருக்கிறது. 18 வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை, ஆனால் தேர்தல்களில் நிற்க வேண்டும் என்றால் 21 வயது ஆகியிருக்க வேண்டும் என்று சொல்லியிருப்பது மிக மிக நல்ல முறை; அதை நான் வரவேற்கிறேன்.

அதேமாதிரி அவர்கள் குறைந்த பட்சம் தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நமது தமிழகத்திலே கல்வி அறிவைப்பார்த்தோமேயானால், 60 சதவிகிதம் தான் கற்றவர்கள் இருப்பார்கள், மீதி 40 சதவிகிதம் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாகத்தான் இருப்பார்கள் என்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே இப்படி குறைந்த பட்சம் எழுதப்படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்

என்று குறிப்பிடுவது, அவர்களுக்கு இருக்கக்கூடிய உரிமையை
பறிப்பதாக ஆகிறது என்று என்னுடைய கருத்தைச் சொல்லி
அவர்கள் இந்தத் தேர்தலிலே நிற்கலாம் அதன் பிறகு ஒரு
குறிப்பிட்ட காலத்திற்குள் அந்தத் தகுதியைப் பெற்றாக வேண்
டும் என்று மாறுதல் செய்தால்கூட நலமாக இருக்கும் என்பது
என்னுடைய கருத்து. ஏனென்றால் டிஸ்கிரிமினேஷன் என்று
சொல்வார்களே, அந்த முறையிலே இது இருக்கிறது என்று
சொல்லி, அதை நீக்குவதற்கு அமைச்சர் அவர்கள் பரிசீலித்து
மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்
கள், நகராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடத்தப்படும்
போது, தனி அதிகாரிகளின் நிர்வாகம் மாற்றப்படும்.
மாதிரி சில இடங்களில் நகரியங்கள் என்ற முறையில் அமைக்கப்
பட்டிருக்கிறது. குறிப்பாக வால்பரையில் ஒரு நகரியக் குழு
அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இவைகளுக்கெல்லாமும்
தேர்தல் நடத்தி, தனி அதிகாரிகளின் நிர்வாகம் மாற்றப்படும்
போது, அதே மாதிரி இந்த நகரியங்களையும் மாற்றியமைக்கும்
வண்ணம் தேர்தல்கள் நடத்த வழிவகை செய்ய வேண்டும் என்று
தெரிவித்துக் கொண்டு இந்த மசோதாவை கம்யூனிஸ்ட் கட்சியின்
சார்பிலே முழுமையாக ஆதரித்து வரவேற்று உரையை முடித்துக்
கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, 18 வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை
கொடுக்கப்பட வேண்டும் என்று நீண்ட நாட்களாக மக்கள்
கேட்டுக் கொண்டு வந்த, குறிப்பாக இளைஞர்கள் சமுதாயம்
வாதாடி வந்த ஒரு முக்கியமான கோரிக்கை இன்றைக்கு நிறை
வேற்றப்பட்டு, அதை அரசாங்கம் சட்டமாக்க கொண்டு வந்
திருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வர
வேற்கிறேன்.

அரசியல் கட்சித் தலைவர்களையெல்லாம் அழைத்து, நம்
முடைய அரசு ஒரு மாநாடு கூட்டி, அவர்களுடைய அபிப்பிராயங்
களையும் கருத்துக்களையும் கேட்டார்கள். இந்த விஷயத்திலே
ஒருமித்த கருத்தோடு 18 வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரி
மை அளிக்க வேண்டும் என்று அனைவரும் ஒப்புக்கொண்டார்கள்.
அதன்படி இப்போது இந்தச் சட்ட முன்வடிவினை கொண்டு
வந்திருக்கிறார்கள். ஏதோ ஒன்றிரண்டு கட்சியைச் சேர்ந்தவர்கள்
சந்தேகங்களைக் கிளப்பி, சில விவரங்களைச் சொன்னார்கள்.

18 வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமை என்று
ஓட்டுரிமை கொடுக்கிற நேரத்தில் 16 வயது வந்தவர்கள், 15
வயது வந்தவர்கள் எல்லாம் 18 வயது என்று சொல்லிக்கொண்டு
ஓட்டுப் போட்டு விட மாட்டார்களா என்ற சந்தேகத்தையும்





கிளப்பினார்கள். இந்த மாதிரி சந்தேகங்கள் கிளப்பப்பட்டு
அந்த முறையிலேயே போனால், 18 வயது வந்தவர்களுக்கு
ஓட்டுரிமை கொடுக்கக்கூடாது என்ற நிலைமைக்குத்தான் அது
போய்ச்சேரும். அந்த நிலைமை சரியல்ல என்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

18 வயதானவர்களுக்கு சமுதாயத்திலே சொத்து வாங்குவ
தற்கு பத்திரத்திலே கையெழுத்துப் போட்டு வாங்குவதற்கு
உரிமை இருக்கிறது. அதேமாதிரி ஒரு குடும்பத்தின் தலைவனாக
வாழ்க்கை நடத்துவதற்கும் உரிமை இருக்கிறது. இந்தமாதிரி
சமுதாயத்திலே முக்கியமான அரசியல் பொருளாதார நடவடிக்
கைகளிலும் குடும்ப வாழ்க்கை நடத்துகின்ற நிலைமைக்கு வந்த
பிறகு ஓட்டுரிமை கொடுக்கக்கூடாது என்று எந்தக் காரணத்தைக்
காட்டிச் சொன்னாலும் அது நியாயமான ஏற்பாடல்ல.
நம்முடைய நாட்டுச் சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் இதைப்
பற்றி தெளிவான விளக்கக்குறிப்புக்கள் உள்ளன.

நாம் அடிமைகளாக இருந்த காலத்தில் நமக்கு 18 வயது,
30 வயது, 40 வயது என்று பார்க்கவில்லை. அதோடு அப்போது
நமக்கு ஓட்டுரிமை கொடுக்கப்படவில்லை. அன்றைக்கு பிரிட்டிஷ்
காரர்கள் ஆட்சிக் காலத்தில் குறிப்பிட்ட காலம்வரைக்கும்,
சுதந்திரம் கிடைக்கின்ற காலம் நெருங்குகின்ற வரைக்கும்
இந்த நாட்டில் சொத்து வைத்திருப்பவர்களுக்குத்தான் ஓட்டுரிமை
என்றிருந்தது. சொத்து, பணம் வைத்துக்கொண்டு சர்க்காருக்கு
வரி கட்டுகின்றவர்களுக்குத்தான் ஓட்டுரிமை என்றிருந்தது.
அந்த நிலையிலே போராடினோம் நாட்டிலே. 100-த்துக்கு
90 பேர்களுக்கு மேல் சொத்து கிடையாது, அவர்கள் எல்லாம்
தேர்தலிலே பங்கெடுத்துக் கொள்ள முடியாது என்று சொன்
னால், அது என்ன ஜனநாயகம் என்று போராட்டம் நடந்தது.
இந்தப் போராட்டத்தில் மக்கள் வெற்றி அடைந்தார்கள்.
அடுத்த கட்டத்தில், படித்தவர்களுக்குத்தான் ஓட்டுரிமை
என்று சொல்லப்பட்டது. அப்போது வயது வரம்பு 21 என்று
சொல்லப்பட்டது. ஆகவே, படிக்க, எழுதத் தெரிந்தவர்கள்
தான் ஓட்டுரிமை என்ற நிலை வந்தது. அதையும் எதிர்த்து
நம் நாட்டிலே தேசீய இயக்கத்தைச் சார்ந்தவர்களும், சகல
இயக்கத்தைச் சார்ந்தவர்களும் எதிர்த்துப் போராடினார்கள்.
சுதந்திரம் பெற்ற நமக்கு, அதை நடத்திச் செல்வதற்கும் அதி
காரம் வேண்டுமென்று போராடினார்கள். எழுதப் படிக்கத்
தெரிந்தவர்களுக்கு மட்டும்தான் ஓட்டுரிமை என்று சொல்வது
சரியல்ல என்றும் போராடினார்கள். அதைத் தொடர்ந்து
எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்தான் திறமைசாலிகள், அனுபவ
சாலிகள், அறிவாளிகள், அவர்கள்தான் நிர்வாகத்தை நடத்த
வேண்டுமென்று சொல்வது சரியல்ல என்று போராடினார்கள்.
அப்படித் தொடர்ந்து போராடியதின் விளைவாக, இன்றைக்கு
நாம் பெருமிதமாகச் சொல்கிறோம், 21 வயது வந்தவர்களுக்கு

[திரு. கு. ரமணி] [1980 ஆகஸ்ட் 11

எல்லாம் ஓட்டுரிமை அளிக்கப்பட்டது மட்டுமல்ல, எல்லோரும்
தேர்தலிலே கலந்துகொள்ளலாம் என்ற நிலைமை உருவாயிற்று.
இந்த நிலையையும் தாண்டி இன்றையதினம், பிரமாதமாகச்
சொல்கிறார்கள். இளைஞர் சமுதாயமே முன்னே வாருங்கள்,
நீங்கள் இந்த நாட்டின் சகலவிதமான காரியங்களிலும் ஈடுபடுங்
கள், அரசியலிலே தீவிரமாக நீங்கள் பங்கெடுத்துப் பணியாற்ற
வேண்டும், சோஷலிசம் தேவை, கம்யூனிசம் தேவை என்று
எழுப்பப்பட்ட கோஷத்தின் விளைவாக, உண்மையான ஜனநாயக
சோஷலிசம் இந்த நாட்டிலே உருவாவதற்கு முன்வாருங்கள்,
பழைய பத்தாம் பசலிக்கு சீட்டுக் கொடுத்துவிட்டு, ஒரு புதிய
சமுதாயத்தை உருவாக்குங்கள் என்று அனைத்துக் கட்சித் தலை
வர்களும், அனைத்துக் கட்சிகளும் மேடையிலே அறிவித்ததன்
விளைவாக, இளைஞர் சமுதாயம் 18 வயதானவர்களுக்கெல்
லாம் ஓட்டுரிமை கொடுக்க வேண்டும் என்று முன்வந்தது. அப்
படி வரும்போது உங்களுக்கு 21 வயதாகவில்லை, இது எப்படி
சரியாகும் என்றெல்லாம் சொல்லி சந்தேகக் கண் கொண்டு பார்ப்
பது சரியல்ல; முறை அல்ல; நியாயம் அல்ல. 18 வய
தானவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை கொடுக்க வேண்டுமென்று
இளைஞர் சமுதாயம் போராடியது. எங்கள் கட்சியில் இருக்கும்
படியான தமிழ் நாடு முழுவதும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்
கள் அங்கத்தினர்களாக சோஷியலிஸ்ட் யுனைடெட் பிரண்டிலே
இருக்கக்கூடியவர்கள், கன்னியாகுமரி, கோவை ஆகிய இடங்
களிலிருந்து ஊர்வலமாக சென்னை நகருக்கு வந்து, அரசாங்
கத்திலே மனு கொடுத்துச் சென்றார்கள். எங்களுக்கு 18 வய
தானவுடன் ஓட்டுரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள்.
இந்த ஓட்டுரிமை இன்றைக்கு எல்லோருக்கும் கொடுக்கப்பட்டு,
21 வயதானவர்கள் தேர்தலிலே தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற
நிலை வந்திருக்கிறது. இன்னும் காலப் போக்கில் இந்த நிலை
மாறக்கூடும். காலம் மாற மாற கூடியவிரைவிலே மாற்றக்கூடிய
அந்த நிலைமையும் வருமென்று எதிர்பார்க்கிறோம்.
இன்றைக்கு உள்ள நிலைமையில் 21 வயதானவர்கள்தான் தேர்ந்
தெடுக்கப்படலாம், அதாவது 'டு பி எலெக்டட்' என்று சொல்
லப்படுகிறது. இது இளைஞர் சமுதாயத்திற்கு கிடைத்திருக்கக்
கூடிய வெற்றியாகும். ஆகவே, இந்தச் சட்டத்தை, 18 வய
தானவர்களுக்கு ஓட்டுரிமை வழங்கப்படும் இந்தச் சட்டத்தை
பரிபூரணமாக வரவேற்கிறோம். எல்லோரும் வரவேற்கக்கூடிய
ஒரு மிகமிக அவசியமானது என்று வற்புறுத்திக் கூறிக் கொள்கி
றேன்.

காலதாமதம் இல்லாமல் தேர்தலை நடத்த வேண்டும். 18
வயதானவர்களுக்கு ஓட்டர்கள் ஜாபிதா தயாரிப்பதிலே
நீண்ட நாட்கள் ஆகும் என்று சொல்லி, தேர்தலை நடத்துவதிலே
காலதாமதம் இருக்கக்கூடாது.



1980 ஆகஸ்ட் 11] [திரு. கு. ரமணி]

(மாலை 5-00.)

நகராட்சிகளுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து
யூனியன்களுக்கும் தேர்தல் நடத்தி ஐந்து ஆண்டுகளுக்கு
மேலாகிவிட்டது. ஏற்கனவே சட்டமன்றத் தேர்தலுக்காக 21
வயது அடைந்தவர்களுடைய ஓட்டர் பட்டியல் தயாரிக்கப்
பட்டிருக்கிறது. அதை அப்படியே வைத்துக் கொண்டு இப்
போது 18 வயது அடைந்தவர்களின் பட்டியலைத் தயாரித்து
இரண்டு பட்டியல்களையும் ஒன்றாக இணைத்தால் முழுப் பட்டி
யல் தயாராகிவிடும். பதினெட்டு வயதடைந்த ஒரு நபர்கூட
விட்டுப் போகக் கூடாது. பாராளுமன்றத் தேர்தலின்போது
இலட்சக்கணக்கான மக்கள் ஓட்டர்களாகச் சேர்க்கப்படுவது விட்
டுப் போனது போன்று விடப்படக்கூடாது. இந்த ஓட்டர்
பட்டியலைத் தயாரித்து வெளியிட்டு சரி பார்ப்பதற்கும், திருத்து
வதற்கும், சேர்ப்பதற்கும் இடம் கொடுக்க வேண்டும். அந்த
வகையில் இந்தச் சட்ட முன்வடிவு மிக மிக முக்கியமானது.

அதுமட்டுமல்லாமல் நகரியங்கள் என்று சொல்லக்கூடிய டவுன்
ஷிப் கமிட்டிகளுக்கும் தேர்தல் இல்லை. மதுக்கரை டவுன்ஷிப்
கமிட்டிக்குத் தேர்தல் நடைபெறவில்லை, பவானிசாகர் டவுன்
ஷிப் கமிட்டிக்குத் தேர்தல் நடக்கவில்லை. இவற்றுக்கு உறுப்
பினர்கள் நியமிக்கப்படாமல் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட
வேண்டும்.

இன்னொரு விஷயத்தை நான் கூற விரும்புகிறேன். இதனை
அமைச்சர் அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். இந்த
வளர்ச்சிப் போக்கு அங்குதான் போகிறது. விகிதாசாரப் பிரதி
நிதித்துவத்தை இந்த நாட்டில் ஏற்படுத்தியாக வேண்டும். அப்
போதுதான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பஞ்சாயத்து யூனியன்
களில், நகராட்சிகளில் இடம் கிடைக்கும். தனியாக ஓட்டுப்
போட்டு தலைவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால்
தனித் தொகுதி அவர்களுக்கு ஒதுக்கப்படவில்லை. அவர்கள்
இந்தப் பொறுப்புக்களிலே வருவது கஷ்டம் என்று பயப்படுகி
றார்கள். உண்மையிலேயே சந்தேகமும் பயமும் இருக்கிறது.
இந்த நிலைமை மாறவேண்டும். இளைஞர்கள் 18 வயதுடைய
வர்கள் ஓட்டுரிமை பெறவேண்டுமென்பதிலே வெற்றி பெற்றது
போன்று விகிதாசாரப் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்
பதிலும் வெற்றி பெறவேண்டும். அதுதான் உண்மையான
ஜனநாயகமாகும். இன்றைக்கு இருக்கிற மெஜாரிட்டி, மைனா
ரிட்டி என்பதெல்லாம் உண்மையான ஜனநாயகம் அல்ல. இதே
போல அப்படிப்பட்ட விகிதாசாரப் பிரதிநிதித்துவம் கொடுக்கும்
சட்டத்தைக் கொண்டு வரவேண்டிய நிலை ஏற்படலாம், ஏற்பட
வேண்டும் என்று எதிர்பார்த்து இந்தச் சட்ட முன்வடிவை பரி
பூரணமாக வரவேற்று முடிக்கிறேன்.

***திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு சகோதரர் ரமணி அவர்கள் தெளிவாகச் சொன்னது போல் இந்தச் சட்ட முன்வடிவை நாம் ஒரு பக்கம் வரவேற்றாலும் மறு பக்கத்தில் வேதனையடைகிறேன், வருந்துகிறேன். காரணம், ஒரு குறிப்பிட்ட சமுதாய மக்களுக்கு பிரதிநிதித்துவம் கிடைக்காத நிலையை எப்படி அரசு தாங்கிக் கொண்டிருக்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இன்றைய முதல்வர் அவர்கள் 1977 ஆம் ஆண்டு முதல்வராக இருந்தபோது நான் இதுபற்றிச் சொன்னேன். அவர்கள் இதுபற்றி நிச்சயமாகக் கவனிக்கிறேன், அது அவசியந்தான் என்று சொன்னார்கள். நிச்சயமாக அதனை நினைவுகூர்ந்து நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

1919 ஆம் ஆண்டு வெள்ளையனால் ஆளப்பட்டபோது கூட கார்ப்பரேஷன் ஏற்படுத்தப்பட்டபோது ஒரு நியதியை அந்நியர்களே செய்தார்கள். மாநகராட்சிகளிலே ஒரு சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் வரமுடியாது என்பது மட்டுமல்ல, எல்லா சமுதாய மக்களும் வரக்கூடிய முறையிலே ஒரு கன்வென்ஷன் வைத்து ஒவ்வொரு சமுதாயத்தைச் சேர்ந்தவரும் மேயராக வரலாம் என்று பொருளாதாரத்திலே தாழ்ந்தவர்கள், சமுதாயத்தால் அவதிப்பட்டவர்கள், சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டவர்கள் மேயராக வர முடிந்தது. ஆனால் சுதந்திரம் வந்ததற்குப் பிறகு மதுரை மாநகராட்சி ஏற்பட்டபோது அதற்காக கொண்டுவரப்பட்ட சட்டத்திலே அந்த சமுதாய மக்களுடைய நலன்களைப்பற்றி எண்ணாமல் போய்விட்டார்கள். தமிழகத்திலே 12,650 பஞ்சாயத்து போர்டுகள் இருக்கின்றன. அவர்களுக்கு பிரதிநிதித்துவம் கிடைக்கவேண்டுமென்றால் மற்றவர்களுடைய ஒத்தாசையோடு, கருணையைக் கொண்டுதான் வரமுடியுமே தவிர அரசியல் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கின்ற கண்ணோட்டப்படி வரமுடியாத நிலைமை இருக்கிறது.

1958 ஆம் ஆண்டிலே பஞ்சாயத்து ராஜ்ய முறை வந்தபோது அப்போது ஆட்சியிலிருந்த திரு. பக்தவத்சலம் அவர்களிடம் நான் அதை எடுத்துச் சொன்னேன். அவர்கள் நிச்சயமாகக் கொண்டு வருகிறேன் என்று சொன்னார்கள். ஆனால் கொண்டுவராமல் அவர்கள் போய்விட்டார்கள். அதற்குப் பிறகு திராவிட [illegible] னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டபோது கலைஞர் அவர் [illegible] திலே சொன்னேன். செய்வேன் என்றார்கள். ஆனால் [illegible] வில்லை. அதைப்போலவே அண்ணா தி. மு. [illegible] போது 1977 ஆம் ஆண்டிலே நான் நம்முடைய [illegible]





களிடம் சொன்னேன். செய்வதாக அவர்களும் சொன்னார்கள். ஒருவேளை வேறு ஒரு சிக்கலால் விட்டுவிட்டார்களோ தெரியவில்லை. பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் என்று சொல்லி, பெண்களா ஆண்களா என்று யோசித்த காரணத்தால் விட்டுவிட்டார்களோ என்னவோ தெரியவில்லை. மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் தீவினையான நிலைமைகள் இருக்கக்கூடாது என்ற முறையிலே எண்ணுகின்ற உரம் படைத்தவர்கள். அறத்தின் பேரால், தர்மத்தின் பேரால் அவர்களை நான் கேட்கிறேன், இதற்கு ஒரு முடிவு செய்யவேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறது. தமிழகத்திலே 375 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. ஒரு யூனியனிலே கூட இதுவரையிலே அவர்கள் வரமுடியவில்லை. ஒரு யூனியனிலே மூன்றில் ஒரு பங்கு அல்லது நான்கில் ஒரு பங்கு, அல்லது ஐந்தில் ஒரு பங்கு, இருக்கிறார்கள். இப்படி இருந்த போதிலும் அந்தச் சமுதாயத்தினர் வரமுடியவில்லை. சட்டத்திலே இருக்கிறதே இப்படிக் கேட்கிறாரே இளையபெருமாள் என்று கூட நீங்கள் நினைக்கலாம். நாங்கள் செய்யவில்லையா என்று கேட்கலாம். இப்போது 18 வயது உடையவர்களுக்கு ஓட்டுரிமை என்று கொடுத்திருப்பது எல்லோருக்கும் தானே என்று கூட கேட்கலாம். அதேபோல அறநிலையத் துறையிலே கொடுத்திருக்கிறோம், அந்தத் துறையிலே எக்ஸிகியூடிவ் ஆபீஸராக போடவில்லையா என்று கேட்கலாம். நான் சொல்கிறேன், அது உங்கள் கையிலே இருக்கிறது நீங்கள் போடலாம், ஆனால் மக்கள் வாக்கெடுப்பின் மூலமாக வருகிறபோது அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. அதனால்தான் 1936-இல் அண்ணல் அம்பேத்கார் அவர்கள் சொன்னார்கள், ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மீதான கொடுமைகள் நிறுத்தப்படாத வரையினும், மனமாற்றம் ஏற்படாத வரையிலும் அவர்களுக்கு செப்பரேட் எல்க்ட்ரேட் வேண்டும் அல்லது செபரேட் செட்டில்மெண்ட் கொடுங்கள் என்று கேட்டார்கள். 1934 அல்லது 1938 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். அப்போது சொன்னதை நினைவுபடுத்தினேன். அப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதற்காக அந்த நிலையை இருக்க வேண்டுமென்று நினைக்கிறீர்களா என்று கேட்டார்கள். அப்போதும் நான் இதைத்தான் சொன்னேன். நான் கேட்பது, அனுபவ ரீதியால், விரக்தியால் எங்களுடைய உரிமைக்காக யாரும் போராடாததால் எங்களுக்காக நாங்கள் தான் போராடவேண்டுமென்ற நிலைமையே இருப்பதால் தான் இவ்வாறு கேட்பதை ஜாதி காரணமாகக் கேட்கிறார் அல்லது வகுப்பு காரணமாகக் கேட்கிறார் என்று நினைப்பார்களானால் அவர்களுடைய மனம் இன்னும் மாறவில்லை என்பதுதான். வெள்ளைக்காரன் கொடுத்த உரிமையை சொந்த நாட்டில் ஒரு சகோதரர் இன்

னொரு சகோதரருக்குக் கொடுக்கவில்லை என்பதைத்தான்
வேதனையோடு சொல்ல வேண்டியிருக்கிறது. ஜூலை மாதம்
11 ஆம் தேதி கூட்டம் கூடியது. அதிலே

"An All Party Leaders' meeting was held on 11th July 1980 to discuss about reducing the voting age from 21 to 18 for the elections to the Local Bodies. Most of the Leaders of the Parties welcomed reducing the voting age as 18 from 21 years. Government accordingly decided to reduce the voting age to the elections to local bodies as 18 years."

என்று முடிவு எடுத்திருக்கிறார்கள், இவ்வளவு திறமையாக
இருந்தவர்கள் அவர்களுடன் பிறந்த சகோதரர்களுக்கு ஒரு பஞ்
சாயத்து யூனியனிலோ அல்லது மேஜர் பஞ்சாயத்திலோ அல்லது
கிராம பஞ்சாயத்து போர்டிலோ வருவதற்குத் தகுதியற்ற
மக்களாக அவர்கள் வாழ்கிறபோது அரசியல் தலைவர்கள்
அவர்களை மறந்துவிட்டார்களோ என்று நான் அஞ்சுகிறேன்.
நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், அந்தக் கூட்டத்
திலே மாண்புமிகு அன்பில் தர்மலிங்கம் ஐயா அவர்கள் கூட
அதை நினைவு படுத்தியாகக் கேள்விப்பட்டேன், ஆனால்
எதனால் அது விடப்பட்டது என்று தெரியவில்லை. மாண்புமிகு
அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்
ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், தற்காலிக அவை
முன்னவர் அவர்களும் இங்கே இருக்கிறார்கள். யாருமே
செய்யவில்லை, எங்களை ஏன் தொல்லைப் படுத்த
வேண்டுமென்று நினைப்பார்களானால் [illegible]

[மாலை 5-10]

செய்த தவற்றை நாமும் செய்ய வேண்டுமென்று
எண்ணினால் அரசியல் சட்டத்திற்கு, மனச்சாட்சிக்கு இடம்
கொடுக்காத நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள் என்பதற்கு
நீங்கள் உங்களைச் சாட்சியாகக் கொண்டதாக இருக்கும்.
ஒரு சமுதாய நிலை என்பதால் விட்டு வைக்கக்கூடாது.

டவுன்ஷிப் என்று எடுத்துக்கொண்டால் பவானிசாகர்,
மதுரை, மத்தூர், கொடைக்கானல், இராமேஸ்வரம், நெய்வேலி,
அண்ணாமலை நகர் இதுபோன்று இத்தனை டவுன்ஷிப்புகள்
இருக்கின்றன. இத்தகைய டவுன்ஷிப்புகளில் [illegible]
கூட வரவில்லை. 375 யூனியன்களில் ஓரிடத்தில்
17,680 பஞ்சாயத்து போர்டுகளில் ஒரு இடத்தில் கூட அவர்கள் வரவில்லை,
வரவில்லை. ஆகவே, உங்களை வேண்டுவதெல்லாம் இப்
பொழுது உள்ள நிலையை நீங்கள் எண்ண வேண்டும்.
இதைச் செய்யத் தவறினால் உங்களோடு பிறந்த சகோதரர்
களுக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யத் தவறி
விட்டீர்கள் என்றுதான் அர்த்தம். அப்படிக் குறை கூறுகின்ற
அந்த இடத்திற்குப் போக மாட்டீர்கள் என்று நான் நம்பு
கிறேன்.





கொடுப்பதால் சந்தேகம் என்றார்கள்.
இளைஞர்களுக்குக் யாரும் பயப்படத்
சந்தேகப்படத் தேவையில்லை. அதனால் தலைவர்கள் அவர்
தேவையில்லை. ஏனென்றால் வருங்காலத் தலைவர்
கள்தான். அவர்களுக்கு அரசும், எல்லாக் கட்சித் வயதாக
களும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள், 21 வயதை 18 முன்
ஆக்குவதற்கு எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் அரசும்
வந்ததற்காக அவர்களை நான் பாராட்டுகிறேன்.
அதை ஏற்றுக் கொண்டதற்காக நான் பாராட்டுகிறேன்.

ஆனால் வருகின்ற ஆறு மாத காலத்திற்குள்ளாக இந்தத்
தேர்தலை நடத்தி விட வேண்டும். நாம் எவ்வளவுக்கெவ்
வளவு தேர்தலை ஒத்திப் போடுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு
அரசு தன் பளுவை அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்றுதான்
பொருள்.

குறிப்பாக இந்த நகரத்தில் அமைச்சர் பெருமக்கள் எல்
லோரும் இருக்கிறார்கள் ; உயர்ந்த அதிகாரிகள் எல்லோரும்
இருக்கிறார்கள். ஆனால் நகரத்திலே வாழாது
நரகத்தில் வாழ்கின்ற நிலையாக இருக்கிறது. இன்னும்
மூன்று மாதங்கள் சென்றால் சென்னையில் காலரா
நோய் வருகின்ற நிலை இருக்கிறது. வர வேண்டுமென்று நான்
விரும்பவில்லை. இன்றைக்கு அந்த நிலை இருக்கிறது என்
பதற்காகச் சொல்கிறேன். ஆகவே தேர்தல் நடத்துகின்ற
இந்தக் காரியத்தை ஒத்திப்போடக் கூடாது என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

சட்டத்திலே இருந்தாலும்,

Representation of Peoples, Act 1950

என்று இருப்பதிலே நிச்சயமாகப் பங்கெடுத்துச் செய்ய வேண்டு
மென்று கேட்டுக் கொண்டு, இந்த நல்ல சந்தர்ப்பத்திலே
நான் கேட்டுக் கொள்வது, ஆறு மாதங்களுக்குள் தேர்தலை
நடத்துவதற்கு முன்னால், இன்று முடியவில்லை என்றாலும்
கூட, தேர்தலுக்கு முன் அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து,
திருத்தச் சட்டமாகக் கொண்டு வந்து தனித் தொகுதி முறை
நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்தச் சந்தர்ப்
பத்தைத் தந்தமைக்காக நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்,
வணக்கம்.

<u>திரு. வி. கிருஷ்ணமூர்த்தி</u> : அவையிலே தவறான தகவலைக்
கொடுக்கக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். பஞ்
சாயத்து போர்டிலே தலைவர்களாக அரிசனங்கள் இல்லை
என்று சொல்கிறார்கள், நிறையபேர்......

[1980 ஆகஸ்ட் 11

திரு. எல். இளையபெருமாள் : பஞ்சாயத்து யூனியனைச் சொன்னேன். பஞ்சாயத்து போர்டு தலைவருக்கும்

There is no reservation for the Scheduled Tribes and Scheduled Castes People for contesting the election.

திரு. கோ. விஸ்வநாதன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் மீது என்னுடைய சில கருத்துக் களைச் சொல்ல விரும்புகிறேன். அரசியல் சட்டத்தில் 25 வயது இருந்தால்தான் தேர்தலிலே போட்டியிட முடியும் என்று எழுதப் பட்டிருக்கிறது. நாம் இதை 21 வயதாகக் குறைக்கப் போகிறோம். இப்பொழுது ஓட்டுப் போடும் வயது 21-ஆக இருப்பதை 18 வயதாகவும் குறைக்க இருக்கிறோம். இதை ஒரு புரட்சிச் சட்டம் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இளைஞர்களின் சக்தி ஒரு மாபெரும் சக்தியாகும். இதை இன்னும் பலர் உணராமல் இருக்கிறார்கள் என்று நான் கருது கிறேன். தமிழ்நாட்டிலேகூட அதை எதிர்த்து, இளைஞர்களுக்கு 18 வயதில் ஓட்டுரிமை அளிக்கலாமா என்று பேசினார்கள். ஆனால் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் பேசியபொழுது அனைத்துக் கட்சிகளும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன்.

உலகெங்கும் அங்கீகரிக்கப்பட்ட சக்தி இளைஞர் சக்தி. சமுதாயத்தில் மாற்றங்கள் ஏற்பட வேண்டுமென்றால், எந்த நாட்டிலே புரட்சி ஏற்பட்டிருக்கிறது என்று பார்த்தால், எந்த நாட்டிலே இளைஞர்கள் சம்பந்தப்பட்டிருந்தார்களோ அந்தப் புரட்சி வெற்றி பெற்றிருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட பெரு மையை அந்த இளைஞர்களுக்கு அளிப்பது மிகப் பெரிய காரியம் என்று நான் கருதுகிறேன்.

இதிலே, மாணவர்களே பெரும்பகுதி ஓட்டுரிமை பெறவிருக் கிறார்கள். ஹையர் செகண்டரி படிக்கும் பருவத்திலே 18 வயது வந்து விடுகின்ற காரணத்தால், அவர்கள் ஓட்டுரிமை பெறுகிறார்கள். அவர்களுக்கு இந்த உரிமையை கொடுக்கிறோம். அதனால் அவர்களுக்குப் பொறுப்பும் அதிகம் ஆகிறது.

இங்கே தேர்தல் விரைவிலே நடத்தப்பட வேண்டுமென்பதில் யாருக்குமே கருத்து வேறுபாடில்லை. எல்லா கட்சித் தலைவர் களும் அதைத்தான் குறிப்பிட்டார்கள். ஆனால், ஒன்றை நான் சந்தேகக் கண்ணோடு பார்க்கிறேன். மத்திய அரசு இன்னும் அதைப்பற்றிய முடிவை எடுக்கவில்லை. பதினெட்டு வயதுடையவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட வேண்டுமா, வேண்டாமா என்பதில் மத்திய அரசு இன்னும் முடிவெடுக்காமல் அப்படியே இருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவை இங்கு நிறைவேற்றியபின், அது சட்டமாக ஆக, குடியரசுத் தலைவர்



980 ஆகஸ்ட் 11] [திரு. கோ. விஸ்வநாதன்]

அங்கீகாரத்தைப் பெற்றாக வேண்டும். மத்திய சர்க்கார் இது ற்றி முடிவெடுக்காத நிலையில், குடியரசுத் தலைவருடைய அங்கீகாரத்துக்கு இது அனுப்பப் பெற்றால், உடனடியாக டியரசுத் தலைவருடைய அங்கீகாரத்தை அது பெறுமா என்ற த்தேகம், அச்சம் எனக்கிருக்கிறது. காரணம், இந்தியா முழுவதும், 3, 4 மாநிலங்களைத் தவிர, மற்ற மாநிலங்களிலே ஆளுங்கட்சியாக இருக்கிற இந்திரா காங்கிரசினர் இதிலே ஒரு முடிவெடுக்கவில்லை —மத்திய சர்க்கார் முடிவெடுக்கவில்லை. ஆகவே, காலம் தாழ்த்துகின்ற நிலையை மேற்கொண்டாலும் மேற்கொள்ளப்படும் என்ற அச்சத்தை இந்த நேரத்திலே மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, அப்படி டியரசுத் தலைவருடைய அங்கீகாரம் பெறுவதற்குக் காலதாமத மானால், தேர்தல் நடைபெறுவது தள்ளிப் போடப்படும். எனவே டனடியாக குடியரசுத் தலைவருடைய அங்கீகாரத்தைப் பெறுவதற்கான முயற்சிகளை இங்கே இருக்கிற இந்திரா காங்கிரஸ் தலைவர்களும் நண்பர்களும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசு வந்து தேர்தலைத் தள்ளிப் போட்டுக் கொண்டே இருக்கிறது என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். இது எல்லா அரசாங்கங்களுக்கும் பொருந்தும். 1970ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்ற பிறகு, தேர்தலே நடைபெறவில்லை. தேர்தல் நடைபெற்ற பிறகு, தேர்தலே நடைபெறவில்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் நடத்தப்படவில்லை. அதற்குப் பின்னாலே ஒன்றரை ஆண்டு காலமிருந்த ஆளுநர் ஆட்சியிலும் தேர்தல் நடைபெறவில்லை. அதற்குப் பின்னாலே, இப்பொழுது இரண்டு காலமாக ஆட்சிப் பீடத்திலிருக்கிற இந்த அரசிலும் தேர்தல் நடைபெறவில்லை. தேர்தல் நடைபெறாத காரணத்தினால், அதிகாரிகள் ராஜ்யம் இப்பொழுது எந்தக் கொடி கட்டிப் பறந்து கொண்டிருக்கிறது. அங்கே கொடி கட்டிப் பறந்து கொண்டிருக்கிறது. ஆட்சிப் பிரதிநிதிகளாக இருந்தாலும், பரவாயில்லை. தேர்ந் தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அங்கே இருக்க வேண்டும். மக்கள் கோரிக்கைகள் அங்கே உதாசீனப்படுத்தப்படுகின்றன. மக்கள் பிரதிநிதிகள் இல்லாததால், எந்த வேலையும் நடைபெறுவதில்லை. பாதைகளும் சரி செய்யப்படவில்லை, விளக்குகள் எரியவில்லை. இப்படிப்பட்ட நிலையை விரைவிலே போக்க வேண்டுமானால், விரைவிலே தேர்தலை நடத்த வேண்டுமென்ற கோரிக்கையை அரசாங்கம் நிச்சயம் ஏற்றுக் கொண்டு செயல்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

இங்கே பேசிய காங்கிரஸ் தலைவர் திரு. இளைய பெருமாள் அவர்கள் ரிசர்வேஷனைப்பற்றி குறிப்பிட்டார்கள். தாழ்த்தப் பட்டவர்களுக்கு ரிசர்வேஷன் இல்லையென்றால், அவர்கள் போட்டி போட முடியாதுதான். பஞ்சாயத்து தேர்தல்களிலே யாருவர் வெற்றி பெற முடியுமே தவிர, நகராட்சிகளைப் பொறுத்தவரையில், ஒன்றியங்களைப் பொறுத்த வரையில், அவர்கள் மற்றவர்களோடு போட்டியிட்டு, வெற்றி பெறவே

[கோ. விஸ்வநாதன்] [1980 ஆகஸ்ட் 11

முடியாது. கல்லூரி தேர்தலிலேயே, ரூ. 4,000, ரூ. 10,000வரை
செலவழிக்கின்ற நிலைமை தமிழ்நாட்டிலே வந்தாகிவிட்டது.
அப்படிப்பட்ட சூழ்நிலையில், அரிசனங்கள், ஒன்றிய, நகராட்சித்
தேர்தல்களில் மற்றவர்களோடு போட்டிபோட்டு வெற்றி பெற
முடியாது. ஆகவே, அவர்களுக்கு ஒதுக்கீடு செய்து, பிறகு இந்த
அரசாங்கம் தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

இன்னும் ஒரே ஒரு கருத்து, இந்தத் தேர்தலை தள்ளிப்
போடாமல் இருக்க வேண்டுமானால், மத்திய அரசாங்கம்
தன்னுடைய கருத்தை அறிவிக்க வேண்டும். அவர்கள்
முடிவெடுக்கவில்லையானாலும் உடனடியாக முடிவெடுக்க
வலியுறுத்த வேண்டும். ஏற்கனவே, இரண்டு மாநிலங்கள்
கோரிக்கைகள் வைத்திருக்கின்றன. மத்திய அரசு உடனடியாக
முடிவெடுத்து இந்த மசோதாவுக்கு அவர்கள் அங்கீகாரம்
அளிப்பார்களானால், விரைவிலே தேர்தலை நடத்த ஏதுவாக
இருக்கும் என்று தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன்.
நன்றி.

*திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவிலே பேசுகின்ற ஒரு
வாய்ப்பைக் கொடுத்தமைக்கு நான் உங்களுக்கும் என் நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறேன். பதினெட்டு வயதைத் தாண்டி
யவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட வேண்டுமென்பது
அனைத்துக் கட்சியினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற
ஒன்று. அது ஒரு புரட்சிகரமான முன்னேற்றம் என்பதை நாம்
நினைத்துப் பார்க்க வேண்டும். எந்த பிரிட்டிஷ் பாராளுமன்ற
சமுதாயத்தை ஒட்டி, இங்கே நம்முடைய சட்டமன்றத்தையும்,
அதைப் போலவே, அங்கே டெல்லியில் நாடாளுமன்றத்தையும்
நடத்திக் கொண்டிருக்கிறோமோ, அந்தப் பிரிட்டனிலே 21
வயதடைந்தவர்கள் ஓட்டுரிமை வாங்குவதற்கு எவ்வளவு பெரிய
போராட்டங்களை நடத்த வேண்டியிருந்தது என்பதையும், அதே
நேரத்திலே, பெண்களுக்கு ஓட்டுரிமை வாங்குவதற்கு 1935ஆம்
ஆண்டுவரை அங்கே பிரிட்டனிலே மிகப் பெரிய போராட்டங்கள்
நடைபெற்றதையும் இன்றைக்கு இங்கே ஆணானாலும்,
பெண்ணானாலும் 18 வயதானவர்கள் யாரானாலும், அத்தனை
பேருக்கும் ஓட்டுரிமை அளிக்கப்படுகிற நிலை வந்திருப்பதை
நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது எவ்வளவு பெரிய முன்னேற்றப்
பாதையிலே நாம் சென்று கொண்டிருக்கிறோம் என்பது
தெளிவாகப் புரியும்.

(மாலை 5·20.)

இந்தியா சுதந்திரம் பெற்றபோது கூட ஆணானாலும்
பெண்ணானாலும் 21 வயது வந்த அத்தனை பேர்களுக்கும்
வாக்குரிமை அளிக்கப்பட வேண்டும் என்று அன்றைக்குப் பிரதம



1980 ஆகஸ்ட் 11] [திரு ப. நெடுமாறன்]

ராக இருந்த ஜவகர்லால் நேரு அவர்கள் வற்புறுத்தினா
நேரத்தில், கவர்னர் ஜெனரலாக இருந்த லார்டு மவுண்ட்பாட்டன்
அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அவருடைய ஐயத்தை
சந்தேகத்தை தெளிவாக எடுத்துச் சொன்னார். இந்தியா
விவரம் அறியாத பாமர மக்களையும் நிறைய கொண்ட நாடு.
அப்படிப்பட்ட இந்த நாட்டிலே 21 வயதான ஆணானாலும்,
பெண்ணானாலும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக இருந்
தாலும் தெரியாதவர்களாக இருந்தாலும் அனைவருக்கும்
ஓட்டுரிமை கொடுப்பது விஷப் பரிசோதனை என்று அவர்கள்
சொன்னார்கள். ஆனால் நேருஜி அவர்கள் அதை ஏற்றுக்
கொள்ளவில்லை. இந்த ஜனநாயக சோதனையை இந்தியாவில்
நடத்தி அதிலே வெற்றி காண முடியும் என்று திடமான
நம்பிக்கையை அவர் தெரிவித்தார். அவருடைய தீர்க்க
தரிசனம் இன்றைக்குப் பலித்திருக்கிறது. அதுபோல 18 வயதா
னவர்களுக்கு, இளைஞர்களுக்கு வாக்குரிமை கொடுப்போமே
யானால் அது சரியாக இருக்குமா, அது முறையாக இருக்குமா,
அரசியல் பக்குவம் இல்லாத இளைஞர்களுக்கு அந்த ஆயுதம்
வழங்கப்படுமானால் அது சரியாக இருக்குமா என்ற சந்தேகம்
சிலருக்கு இருந்தது. ஆனால் இளைய சமுதாயத்தை நம்பி இந்த
ஆயுதத்தை இந்த அரசு அவர்களுக்கு வழங்கியிருப்பதற்கு முன்
வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

அதேபோல ஊராட்சி ஒன்றியத் தலைவராக வருகின்றவர்
களும் மற்றப் பொறுப்புகளுக்கு வருகின்றவர்களும் தமிழிலே
எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும் என்ற
திருத்தம் மற்றொரு புரட்சிகரமான திருத்தமாகும். தமிழ்
ஆட்சி மொழியாக வேண்டும். எல்லா மாவட்டங்களிலும் தமிழ்
ஆட்சி செலுத்த வேண்டும் என்று இந்தக் காலத்திலே
சொல்லுகிறோம். அப்படிச் சொல்லும்போது தமிழில் எழுதப்
படிக்கத் தெரியாதவர்கள் இந்தப் பதவிகளிலே அமருவார்க
ளானால் தமிழ் ஆட்சி மொழியாவதற்குப் குந்தகம் விளையும்
என்று சுட்டிக் காட்டி, வரவேற்கிறேன்.

அதைப் போலவே, இங்கே ஊராட்சி ஒன்றியத் தலைவர்
களாக இருப்பவர்களுக்கு என்ன தகுதி வேண்டும் என்று இந்த
சட்ட முன்வடிவிலே சொல்லப்பட்டிருக்கிறது. பிற்காலச்
சோழர்கால ஆட்சியில் இருந்ததை நினைவு படுத்துகிறேன்.
'குடவோலை' முறை என்பது, 5 வாரியங்களுக்கு, அதாவது
பஞ்சவாரியம் போன்றவைகளுக்கு யாரைப் போடவேண்டும்
என்று பார்ப்பதைவிட யார் அந்தப் பொறுப்புகளிலே அமர்த்
தப்படவேண்டும் என்பதற்கான தேர்தல் நடத்துவதைவிட, யார்
அமர்த்தப்படக்கூடாது என்பதை பிற்காலச் சோழர் ஆட்சியிலே
வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். உதாரணமாக ஏரி வாரியத்துக்கு
தேர்தல் நடத்துகிறார்கள் என்றால், அதிலே அங்கம் வகிக்கிற
வர்கள் அவர்கள் பதவி வகித்த காலத்திலே ஊழல் செய்திருந்தால்,
அவரோடு ... போல இல்லை. ... அவரோடு ... இரத்த ... அம்

பந்தம் உடையவர்கள் யாரும் பதவிக்கு வரக்கூடாது என்று கடுமையான சட்டம் குடவோலை முறையிலே வைத்திருந்தார்கள். அவரோடு ரத்த சம்பந்தம் உடையவர்கள் என்றால், அவர்களுடைய அண்ணன் தம்பிகள் மட்டுமல்ல, மாமன் மைத்துனர்கள் போன்றவர்களும் அந்த வாரியத்திலே அங்கம் வகிக்கக் கூடாது என்று ஏறத்தாழ 1,300 ஆண்டு காலத்திற்கு முன்பே வைத்திருந்தார்கள்.

நான் இன்றைக்குச் சொல்லுகிறேன். நம்முடைய நகர சபை ஊராட்சி ஒன்றியங்கள் போன்றவைகளில் அங்கம் வகிக்கின்றவர்கள் ஊழல் செய்திருப்பார்களானால், அவர்கள் இந்தப் பொறுப்புகளுக்கு வரக்கூடாது என்ற வகையிலே அரசாங்கம் ஒரு திருத்தம் கொண்டு வந்தால் அது நன்றாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள் அரிசனங்கள் பிரதிநிதிகள் பற்றி இங்கே பேசினார்கள். எல்லா இடங்களிலும் அரிசனங்களுக்கு என்று ரிசர்வ் தொகுதிகள் ஊராட்சி ஒன்றியங்களில் இல்லை. ஊராட்சிகளிலும் இன்றைக்கு இல்லை. இதை சட்டப்படி செய்யாவிட்டாலும் கூட, இந்த சென்னை மாநகராட்சியிலே எப்படி ஒரு சம்பிரதாயப்படி ஆண்டுக்கு ஒரு முறை, சட்டமாக இல்லாவிட்டாலும் கூட, சம்பிரதாயமாக, ஒவ்வொரு வகுப்பினரும் மாநகராட்சித் தலைவராக வருவது என்பதை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போல செய்தால் அனைத்துக் கட்சியிலும் யாருக்கும் ஆட்சேபணை இல்லை, இருக்கவும் முடியாது.

எல்லாக் கட்சிகளும் அரிசன சமுதாயத்திற்குப் பிரதிநித்துவம் இருக்கவேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலனை செய்து இங்கே சட்டமாக அதை நிறைவேற்றாவிட்டாலும், சம்பிரதாயமாக 374 பஞ்சாயத்து யூனியன்களில் குறைந்தது 10 சதவீதம் — அதாவது 35 அல்லது 37 பஞ்சாயத்து யூனியன்களில்—ஊராட்சி ஒன்றியங்களில்—அரிசன சமுதாயத்தினர் தலைவர்களாக வருவதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் எல்லா அரசியல் கட்சிகளும் ஒப்புக்கொண்டு ஒரு சம்பிரதாயத்தை உருவாக்குவோமானால், அந்தச் சமுதாயம் முன்னேறவும், அந்தச் சமுதாயம் அரசியல் விழிப்புணர்ச்சி அடையவும் உதவிகரமாக இருக்கும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சட்ட மன்றத்திற்கு என்று ஏற்கெனவே ரிசர்வ் தொகுதிகள் இருக்கின்றன. ஒரு சட்டமன்றத் தொகுதியில் இரண்டு யூனியன்கள் இருக்கின்றன. அல்லது 1½ யூனியன்கள் இருக்கின்றன. ஆகவே, அரிசனங்களுக்கு என்று ஒதுக்கப்படுகின்ற ஒன்றியங்கள் அந்த ரிசர்வ் தொகுதியில் வருகின்ற ஒன்றியங்களாக இருக்க



கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேறு 37 ஒன்றியங்கள் அவர்களுக்காகத் தனியாக ஒதுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் கொடுத்தால் அவர்கள் பரவலான முறையில் பிரதிநிதித்துவம் பெற்று, மற்ற வகைகளிலும் அவர்கள் முன்னேறுவதற்கு உதவிகரமாக இருக்கும் என்று அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டி, அதற்கான வகையில் எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி, ஒரு நல்ல சம்பிரதாயத்தை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தேர்தலுக்கே அதைச் செய்ய வேண்டும்.

அதைப்போல், மதுரை மாநகராட்சியில் சென்னை மாநகராட்சியில் இருப்பதைப்போல் இன்றைக்கு இல்லை. இரண்டு ஆண்டுகாலம் மேயர் பதவியில் ஒருவர் இருக்கலாம் என்று மதுரை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் இருக்கிறது. மேயர் பதவி என்பது ஒரு அலங்காரப் பதவி. ஆகவே, சென்னை நகரில் இருப்பதைப் போலவே, மதுரை மாநகராட்சியிலும் ஆண்டுக்கு ஒரு முறை பதவி வகிப்பவர்களை மாற்றி, எல்லா வகுப்பினரும் அதிலே பிரதிநிதித்துவம் பெறும் வகையில் செய்தால் அது வரவேற்கத்தக்கது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, சட்ட முன்வடிவை வரவேற்று என் உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்த சட்டமுன்வடிவின் மீது பல்வேறு உறுப்பினர்கள் பேசினார்கள். 18 வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அளிக்கின்ற இந்தச் சட்டத் திருத்தத்தை வரவேற்று இருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். அண்மையில், கேரளம், ஆந்திரப் பிரதேசம், ராஜஸ்தான், மேற்கு வங்கம் போன்ற சில மாநிலங்களில் உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தலில் வாக்களிப்பதற்கான வயது 18 என்று குறைத்துள்ளார்கள். உள்ளாட்சி மன்றங்களில் தேர்தலுக்காக வாக்களிக்கும் வயதை 21-ல் இருந்து 18 ஆகக்குறைப்பது குறித்து கடந்த 1980 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 11 ஆம் நாளன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அந்தக் கூட்டத்தில் பெரும்பாலான கட்சித் தலைவர்கள் வாக்களிக்கும் வயதை 21-ல் இருந்து 18- ஆகக் குறைக்க ஆதரவு தெரிவித்து இருக்கிறார்கள். அக்கூட்டத்தில் கூறிய கருத்துக்களைப் பரிசீலனை செய்த பின்னால்தான் இம்மன்றத்தில் உள்ளாட்சி மன்றங்களில் தேர்தலுக்கு வாக்கு அளிக்கும் வயதை 18-என்று குறைக்க அரசு முடிவு செய்து உள்ளது. அதற்காகத்தான் இந்தச் சட்டமுன்வடிவு இந்த மாமன்றத்தின் முன்னால் உங்கள் ஆய்விற்குக் கொண்டு வரப்பட்டது.

[திரு. ப. குழந்தைவேலு] [1980 ஆகஸ்ட் 11

உள்ளாட்சி மன்றங்களில் தேர்தலில் போட்டியிடுகின்றவர் களுக்கான வயதுத்தகுதி 21 ஆண்டுகள் என நிர்ணயிக்க முடிவு செய்யப்பட்டது. இதை எல்லோரும் வரவேற்று இருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி சொல்லக்கடமைப்பட்டு இருக்கிறேன். மேலும் குறிப்பாக இங்கே வரவேற்றுப் பேசிய இந்தியக் கம் யூனிஸ்ட் கட்சியின் துணைத் தலைவர் திரு.கருப்பையா அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களில் தலைவருக்குப் போட்டி இடுகின்றவர் களுக்கு தமிழில் எழுதப்படிக்கத் தெரியவேண்டும் என்று இங்கே கொண்டு வந்து இருப்பதை ஆட்சேபணை செய்தார்கள். நான்

(மாலை 5-30).

அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். யூனியன் தலைவராக வருகின்றவர்களுக்கு 'செக் டிராயிங் பவர்' உண்டு. He is an administrator பாக்கி இருக்கக்கூடிய, எம்.எல்.ஏ., எம்.பி.க்களுக்கு அந்த அதிகாரம் இல்லை. அதிலும் குறிப்பாக தமிழில்தான் எழுத, படிக்கத் தெரிந்திருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். மற்றவர்கள் அவரை ஏமாற்றிவிடக் கூடாது என்ற காரணத்தாலும் தமிழிலே எழுதப் படிக்கத் தெரிந் திருக்க வேண்டுமென்று ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்திருக் கிறோம். அதிலும் குறிப்பாக தாய்மொழியாகிய தமிழிலே எழு தப் படிக்கத் தெரிந்துகொள்வது, அந்த மொழியைக் கற்றுக் கொள்வது மிகவும் முக்கியம், நல்லது என்று கருதுகிறேன்.

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவரவர்களே, எம்.எல்.ஏ., எம்.பி.,க்கள் மாதிரி அல்லாமல் யூனியன் தலைவர் அட்மினிஸ்ட்ரேட்டர், செக் டிராயிங் பவர் இருக்கிறது. அதனால் இப்படி ஒரு ஷரத்தைச் சேர்த்திருக்கிறோம் என்று அமைச்சர் சொன்னார். அவர்கள் ஃபைலும் போட வேண்டும். ஆனால் 21 வயது உள்ளவர்களுக்குத்தான் வாக்குரிமை என்று இருந்த போதும் யூனியன் செயர்மென் இருந்தாரே, அப்போது இந்த நிபந்தனை இல்லையே, அப்போதும் செக் டிராயிங் பவர் இருந் தது. யூனியன் நன்றாகத்தான் 'பங்ஷன்' பண்ணியது. இப் போது மட்டும் ஏன் இந்த நிபந்தனை? On the basis of language discrimination கை ரேகைப் போடத் தெரிந்தவரும், கையெழுத்துப் போடத் தெரிந்தவரும் முன்னால் இருந்திருக் கிறார்கள். ஏன் இப்போது இருக்கக்கூடாது?

திரு. துரை முருகன் : இல்லாத ஒன்றைப் புதிதாகச் செய்ய வரும்போது ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை ஆதரிக்க வேண்டும். எழுத, படிக்க என்று சொல்லும் போது அ, யோ, த், தி என்று ஒருவர் எழுத்தை ஒவ்வொன்றாகக் கூட்டிப் படிப்பார். ஒருவர் அயோத்தி என்று பார்த்த உடனே படித்துவிடுவார். அதைப்போல வேகமாக எழுதினாலும் மெது



1980 ஆகஸ்ட் 11] [திரு. துரை. முருகன்]

வாக எழுதினாலும் அது எழுத்துதான். ஆகவே, எழுத படிக்கத் தெரிந்தவர்கள் என்றால் இப்படியும் இருக்கலாம், அப்படியும் இருக்கலாம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : படிப்பது என்பது அவரவர் சக்தியைப் பொறுத்தது. திரு. துரை முருகன் அவர்கள் அப்படித்தான் எழுத்துக் கூட்டிப் படிப்பார் என்றால் அதைக் கூடாது என்று சொல்ல யாருக்கும் அதிகாரம் இல்லை. யூனியன் தலைவருக்குக் கையெழுத்துப்போடத் தெரிந்திருக்கவேண்டும்; எழுதப்படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். It is a Presumption that he knows to read and write, எப்போதும் கையெழுத்துப்போடத் தெரிந்திருக்க வேண்டும்.

திரு. துரை முருகன் : நான் படிக்கிறேன் என்றல்ல. படிக்க வேண்டும் என்றால் இப்படியும் படிக்கலாம், அப்படியும் படிக்கலாம். இரண்டுமே படிப்பதுதான். அதற்காகச் சொன் னேன். கையெழுத்து போடுவது என்றாலும் முழுப் பெயரையும் எழுத வேண்டும் என்பதல்ல. முதல் எழுத்தைப்போட்டுவிட்டு அப்படியே ஒரு கிறுக்கு கிறுக்கிவிட்டாலும், அதுவும் கையெழுத்து தான்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : எழுத்துக்கூட்டிப் படித்தாலும் அவர் படிக்கத் தெரிந்தவர் என்ற விதிமுறையின்கீழ் தான் வருகிறார். ஆகவே, பஞ்சாயத்துத் தேர்தலைப் பொறுத்தவரையில், It is a State subject மாநிலங்களிலே அரசாங்கங்கள் இருக்கின்றன. அந்த அரசுதான் இவைகளைச் செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே, இவைகளை உடனடியாக நடத்த வேண்டுமென்று நாம் முடிவு செய்திருக்கி றோம். 21 வயதிலிருந்து 18 வயதாக குறைக்கும்போது, 18 வயதானவர்களுக்கு எல்லாம் வாக்குரிமை அளிக்க வாக்காளர் பட்டியல் தயாரிக்க வேண்டும். அதற்கு ஏறத்தாழ 4 மாதங்கள் ஆகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதன் பிறகு தேர்தல் கள் நடத்த ஏறத்தாழ 2 மாதங்கள் ஆகும். ஆகவே 6 மாத காலத்தில் தேர்தல்களை முடிக்க வேண்டுமென்ற காரணத்தால் தான் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறோம்.

இங்கே இருக்கிற எல்லா உறுப்பினர்களும் 18 வயதானவர் களுக்கு வாக்குரிமை அளிப்பதை வரவேற்றிருக்கிறார்கள். குறிப் பாக இளைஞர் சமுதாயத்திற்கு எழுச்சியை ஏற்படுத்துவதை இந்தப் புரட்சித் தலைவர் அரசுதான் ஏற்றிருக்கிறது. ஆகவே இந்தச் சட்டத் திருத்த மசோதாவை நீங்கள் எல்லாம் ஏற்றிருக் கிறீர்கள். என்பதற்கு நன்றி தெரிவித்து, இந்த மசோதாவை சட்டமாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : துணைத் தலைவரவர்களே, ஆந்திர மாநிலத்திலே ஷெட்யூல்டு வகுப்பினருக்கு இந்த மாதிரி பஞ்சாயத்து சமிதியிலும் ஜில்லா சமிதியிலும் ரிசர்வேஷன் ஒதுக்கி இருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படித் தெரிந்தால் அந்த மாதிரி இங்கேயும் 6 மாத காலத்திற்குள்ளாகச் செய்வதற்கு அரசு உறுதி எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, ஆந்திர மாநிலத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் ஆந்திர மாநிலத்திலும் 1976-ஆம் ஆண்டிலே இருந்து பஞ்சாயத்து தேர்தல்கள் கடந்த வரையிலும் நடத்தப்படவில்லை. அதைப்போன்று ஹைதராபாத் மாநகராட்சியினுடைய தேர்தல் 64-லே இருந்து நடத்தப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் உங்களுடைய கட்சிதான் அங்கேயும் இருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் உங்களுடைய எண்ணத்தை இந்த அரசு ஆராயும் என்று தெரிவித்துக் கொள்கிறேன.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர வர்களிடத்திலே ஒரு விளக்கத்தைக் கேட்க நான் விரும்பு கிறேன். வாக்குரிமை வயது 21 என்பதை 18 ஆக ஆக்கி இருப்பது வரவேற்கத்தக்கது. இளைஞர் சமுதாயத்தின் சார்பாக இதற்காக மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 18 வயது வாக்குரிமை வயது என்று சொல்கின்றபோது அவர்கள் எல்லாத் தகுதியும் பெற்று வருகிறார்கள், ஆகவே வேட்பாளராக இருப்பதற்கும் அதே வயதை நிர்ணயிக்கலாமே அது பற்றி இந்தச் சர்க்கார் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே 18 வயது வந்தவர்களுக்குத்தான் வாக்குரிமை அளிக்கிறோம் ஆனால் போட்டியிடுவதற்கு 21 வயது இருக்க வேண்டுமென்று நிபந்தனை குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதே போல் சட்ட மன்றத் தேர்தலில் 21 வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை உண்டு. ஆனால் 21 வயது வந்தவர்கள் சட்டமன்றத்திற்கு வரமுடியாது என்ற நிபந்தனை இருப்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்கு தெரியும்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் னுள்ள கேள்வி — "தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 42/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 21 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு.ப. குழந்தைவேலு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான், கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :— "தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 42/1980) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

## 7. அறிக்கை அளித்தல்.

### (விதி 107 (1) ன் கீழ்.)

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : பேரவையின் விதி 107 (1) ன் ஒரு கீழ் திருத்த அறிக்கையை மாண்புமிகு செய்தித் அறநிலையத் துறை அமைச்சரவர்கள் அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே இன்று (11—8—80) காலை வினா எண் 148-க்கு திரு. என் வரதராஜன் அவர்களின் துணை வினாவிற்கு விடையளிக்கையில் ஏறத்தாழ 33 இலட்சம் ஏக்கர் நிலங்களைச் சொந்தமாகவும் ஆண்டு ஒன்றுக்கு 36½ இலட்சம் ரூபாய் இன்றைய கணக்குப்படி வருமானத்தைக் கொண்டிருக்கிற இந்த ஆதீனத் திற்கு . . . . . . . . . ." என்று குறிப்பிட்டுள்ளேன். அதில் 33 இலட்சம் ஏக்கர் நிலங்கள் என்பதற்கு பதிலாக 33 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் என்று மாற்றிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[1980 ஆகஸ்ட் 1

## 6. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

### இ. நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல் திருத்தச் சட்ட முன்வடிவு 1980 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 37/1980).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் துணைத் தலை
வரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.—
'தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள்(தனி அதிகாரி
நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை
சட்ட முன்வடிவு எண். 37/1980) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்
பெற வேண்டும்''.

[மாலை 5-40.]

திரு. பாபு ஜனார்த்தனம்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, தனி அலுவலர்கள் நியமனம் பற்றிய ஒரு
மசோதாவினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு
வந்திருக்கிறார்கள். தனி அலுவலர்கள் நிர்வாகம் செய்கிற
ஒவ்வொரு நகராட்சியிலும் தற்போது இருக்கிற நிலைமை
களைக் கூர்ந்து பார்த்தால், அவைகள் சொல்லத் திறனற்றுப்
போகின்றன. அந்த அளவிற்கு ஆதிக்கம் செலுத்துகிறார்கள்.
சாதாரணமாக கடந்த 2½, 3 ஆண்டுகளாக எந்த நகராட்சி
யிலும் ஒரு தனி அதிகாரிக்குத் தனிப்பட்ட உரிமம் ஏதாவது
வேண்டும் என்று சொன்னால், அதற்காக அவர் செய்கிற பல்
வேறு அதிகாரங்கள் சாதாரணமானவை அல்ல. லஞ்ச
லாவண்யத்திலிருந்து எல்லாவிதமான அக்கிரம முறைகளையும்
அவர்கள் கையாளுகிறார்கள். ஊழல்கள் நடைபெற்றுக்
கொண்டிருக்கின்றன. அதை நாட்டு மக்கள் உணர்ந்து கொண்டும்
வருகிறார்கள்.

சாதராணமாக தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சி அமைப்பு
அங்கே இருந்தது என்றால், ஆளும் கட்சி எதிர்க்கட்சி என்ற
நிலைமை ஏற்பட்டு நகராட்சிகளில் ஜனநாயகம் நிலவும்.
ஆனால் எந்தக் கட்சியும் இல்லாத நகராட்சிகளின் தனி
அதிகாரிகளின் ஆட்சியில் லஞ்ச லாவண்யம் முதல் எல்லாவித
குற்றங்களும் தலைவிரித்தாடுகின்றன. அவர்களைக் கேட்
பதற்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லை. யாரும் இல்லை
என்ற நிலைமை இருக்கிறது. சாதாரணமாக என்.ஓ.சி. போடு
கிறோம் என்று சொன்னால், மீட்டிங் வைத்து முடிவு செய்ய
வேண்டும்.

*1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1-ம் தேதியிட்ட தமிழ்நாடு
அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





ஆனால், இந்தத் தனி அதிகாரி எப்படிச் செய்வார் என்று
தெரியவில்லை. அவரே உட்கார்ந்து தீர்மானம் போட்டு
அதை அவரே ஏகமனதாக நிறைவேற்றிக் கொண்டு, ஏக்
தீன் கா சுல்தான் என்று சொல்வார்களே அந்த வகையில்
முடிவு எடுக்கிறாரோ என்னவோ தெரியவில்லை. இன்றைய
தினம் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கூட 9 பேர்களைப் போட
வேண்டும்-நாமினேட் செய்ய வேண்டும் என்று சொல்கிறோம்.
ஆனால், நகராட்சிகளுக்குத் தனி அதிகாரியை மட்டும் நியமிக்
கிறோம்.

இன்றைய தினம் எந்த நகராட்சியை எடுத்துக் கொண்டா
லும், குடி தண்ணீர் கிடையாது சாலை வசதிகள் கிடையாது,
சுகாதார வசதிகள் படுமோசமாக இருக்கின்றன என்பதை இங்
குள்ள அனைவரும் அறிவார்கள். பல நகரங்களிலே குடிதண்
ணீர் இல்லாத நிலைமை இருக்கிறது. கோவை நகரத்திலே,
சிறுவாணி அணையிலே 5 டாங்குகளை மட்டும் கட்டிவிட்டு,
மற்ற 4 டாங்குகள் கட்டப்படாமல் இருக்கின்றன. கட்டப்பட்
டிருக்கிற அந்த 5 டாங்குகளிலும் கூட குடிதண்ணீர் இல்லாமல்
இருக்கிற நிலைமைதான் இருக்கிறது. இதைப் பலமுறை இந்த
மன்றத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் கவலையோடு
எடுத்து வைத்திருக்கிறார்கள். ஆனால், அந்தத் தனி அதிகாரி
களுக்கு மட்டும் அதைப்பற்றி எந்தவிதமான கவலையும் கிடை
யாது. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்க
விரைவில் தேர்தல் நடத்த வேண்டும் அந்தத் தனி அதிகாரிகளின்
ஆட்சியை ஒழிக்க வேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் அவர்கள் கூட விரைவில் தேர்தல் நடத்தப்படும்
என்று சொன்னார்கள். ஆனால் 18 வயது உடையவர்களுக்கு
வாக்குரிமை என்ற புதிய சட்டம் கொண்டு வந்திருக்கிறோம்.
அதன்படி அது ஜனாதிபதிக்கு அனுப்பப்பெற்று அவருடைய
அனுமதி பெற்று, அதற்குப் பிறகு தேர்தல் நடத்தப்பட
வேண்டும் என்று சொன்னால் அது 6 மாதத்தில் முடிகிற காரிய
மாக எதிர்க்கட்சிகளுக்குத் தெரியவில்லை. நிச்சயமாக
ஆறுமாத காலத்தில் தேர்தல் நடக்குமா அல்லது காலம் மேலும்
நீட்டிக்கப்படுமா என்ற எண்ணம் எங்கள் கருத்தில் உலவுகிறது.
ஆகவே, உடனடியாக தேர்தலை நடத்தி, இந்தத் தனி அதிகாரி
களின் ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

கடந்த 2½, 3 ஆண்டுகளாகக் கிராமங்களிலே, அதாவது
உள்ளாட்சியிலே கிராம சேவிக்குகள்தாம், தீர்மானங்களை நிறை
வேற்றுகிற நிலைமை இருக்கிறது. ஊராட்சிகளிலே ஆணையரு
டைய ஆதிக்கம் இருக்கிறது. பேரூராட்சிகளிலே நிர்வாக அதிகாரி
யினுடைய ஆதிக்கம் இருக்கிறது. நகராட்சியிலே தனி அதிகாரி
யினுடைய ஆதிக்கம் இருக்கிறது. மாநகராட்சியிலே கமிஷன
ருடைய

ருடைய ஆதிக்கம் ஆட்சி செலுத்துகிறது.
களின் ஆட்சிதான் நடக்கிறதே தவிர, ஜனநாயகம்
தில் நடக்கவில்லை. அவர்களுடைய ஆட்சியின் நிலைமைகளைப்
பார்க்கும்போது, அதை எடுத்துச் சொல்லத் திறன் இல்லை
என்றுதான் சொல்லவேண்டும். அப்படி நடக்கிறது. நான்
நேற்று கூட உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்தில்
சொன்னேன், திருவொற்றியூரில் இருக்கிற தனி அலுவலரின்
நிர்வாகம் சரியில்லை, தாங்கள் அதைக் கவனிக்க வேண்டும்
என்று அவரைக் கேட்டுக் கொண்டேன்.

ஏனென்று சொன்னால் தனி அலுவல்கள்
அவரைக் கேள்வி கேட்க ஆள் இல்லாத நிலைமை இருப்பதால்
கிறது. அவர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் கூட, ஆர்.டி.ஓ.
கூட தட்டிக் கேட்க முடியாமல் இருக்கிற காரணத்தால், உடனடி
யாக அந்தத் தனி அதிகாரிகளின் ஆதிக்கத்தை ஒழித்து ஜனநாயக
முறையில் நடத்தப்பட்ட தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்
பட்டவர்களைக் கொண்டு அங்கே நிர்வாகம் நடத்த வழிமுறை
களையும், விதி முறைகளையும் நாம் உருவாக்க வேண்டும்.

இப்போது நடைபெறுகின்ற இந்த நிலைமையைப் பார்க்
கின்றபோது, 18 வயதானவர்களுக்கு அங்கீகாரம் கொடுத்து
அவர்களுக்கெல்லாம் வாக்குரிமை கொடுத்து ஜனநாயகமுறை
படி தேர்தலை நடத்த இருக்கின்ற இந்த நேரத்தில், அ
எந்தக் கட்சியாக இருந்தாலும், ஆளும் கட்சியான அண்ணா
தி.மு.க. வாக இருந்தாலும், தி.மு.க. வாக இருந்தாலும், அ
லது கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும் சரி ஜனநாயக முறை
படி அங்கே தேர்தல் நடைபெற வேண்டும். இப்படியே செ
றால் இன்னும் கொஞ்ச காலத்தில் இந்த தனி அதிகாரிகளுடை
ஊழல்கள் அதிகமாகி விடும். இன்றைய தினம் ஒரு கட்
இருக்கின்றது என்று சொன்னால், அதை மற்ற எதிர்க்கட்சிகள்
உன்னிப்பாகக் கவனிக்கும், ஆனால், அலுவலர்கள், ஆபீசர்கள்
பற்றி அதிகமாக எந்தக் கட்சியும் கவனிப்பதில்லை, தி.மு.க.
நகராட்சியிலே இருக்கின்றது என்றால், எதிர்க் கட்சியிலே
இருக்கின்றவர்கள் அது என்ன செய்கிறது என்பதைக் கவனிப்
பார்கள். அதேபோல், அண்ணா தி.மு.க. ஆட்சி செய்கின்றது
என்று சொன்னால், மற்ற எதிர்க்கட்சிகள் அது என்ன செய்
கின்றது என்பதைக் கவனிப்பார்கள். ஆனால், இன்றைக்கு
அங்கே இருக்கின்ற அலுவலர்கள் தங்கள் அதிகாரத்தைப்
பயன்படுத்திக் கொண்டு, எந்த அளவுக்கு ஊழல் சாம்ராஜ்யத்தை
நடத்த முடியுமோ அந்த அளவுக்கு நடத்தி வருகிறார்கள்.
குறிப்பாக, வட ஆற்காடு மாவட்டத்தை எடுத்துக் கொண்
டால், அங்கே இருக்கின்ற அலுவலர்களும், ஆணையாளர்
களும் எந்த அளவுக்கு அக்கிரமங்கள் புரிகின்றார்கள், லஞ்ச
லாவண்யத்திலே ஈடுபடுகின்றார்கள் என்று சொல்ல முடியாது.
அந்த அளவுக்கு அங்கே அக்கிரமங்கள் நடக்கின்றன. இதற்





வேண்டும். ஆளுங் கட்சி
ஒரு முடிவு கட்டியாக
செல்லாம்
அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. எனவே, அங்கே எல்லாம்
ஜனநாயக முறைப்படி தேர்தல் நடப்பதற்கு உடனடியாக நாம்
ஏற்பாடுகள் செய்தாக வேண்டும். அந்த நிலையிலே இங்கே
இருக்கின்ற ஆட்சி உடனடியாக அதற்கான முயற்சிகளை
மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்
டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.
நன்றி, வணக்கம்.

* திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்
அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற தனி அதிகாரிகள் திருத்த
மசோதாவை வரவேற்று ஒரு சில கருத்துக்களை இங்கே முன்
வைக்கிறேன். நடந்து முடிந்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு
நாட்டு மக்கள் எதிர் நோக்கி இருக்கின்ற நகரசபைத் தேர்தல்,
ஊராட்சித் தேர்தல், ஒன்றியத் தேர்தல் வெகு வேகமாக நடப்
பதற்கு 18 வயது நிரம்பப் பெற்றவர்களுக்கு வாக்குரிமை
அளிப்பது என்ற அடிப்படையிலே, 6 மாதங்களுக்குள் தேர்தலை
வைக்க, அதுவரை தனி அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டு
மென்ற இந்த மசோதாவை நடந்து முடிந்த சட்டமன்றத்
தேர்தலுக்குப் பிறகு, இந்த மாமன்றத்திற்கு வந்திருக்கின்ற
சட்டமன்ற உறுப்பினர்கள் நகராட்சி, ஊராட்சி, ஒன்றியப்
பணிகளில் அங்கம் வகித்து செயலாற்றுகின்ற நிலையிலே இருக்
கிறார்கள் என்பதையும், தனி அதிகாரிகள் தனிப்பட்ட முறையில்
செயலாற்றுகின்ற அடிப்படையிலே சில நல்ல முடிவுகளை எடுத்து
இருந்தாலும், ஜனநாயகத்திற்கு முரண்பட்டதாக இருப்பதை
மாற்ற வேண்டுமென்று மக்கள் அதை விரும்பாத காரணத்தினால்,
ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்
பினர்கள் அந்த முடிவுகளை மக்கள் மன்றத்திலே விளக்குவதற்கு
வாய்ப்பில்லாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு இந்த நேரத்தில்
கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே கோவை நகராட்சியில் தனி அதிகாரி நியமிக்க
வேண்டுமென்ற ஒரு தனித் தீர்மானத்தை, மசோதாவை அமைச்
சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இரண்டு ஆண்டு
களுக்கு முன்பு, கோவை நகராட்சியை மாநகராட்சியாக ஆக்க
வேண்டுமென்று சட்டமன்றத்தில் கூறி, இரண்டு ஆண்டுகளுக்கு
முன்பு அரசு முயற்சி எடுத்து, குடியரசுத் தலைவரின் கையெழுத்
திற்குச் சென்றதாகச் சொல்லப்பட்டது. அது எந்த நிலையில்
இருக்கின்றது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த
மசோதாவிற்குப் பதில் சொல்கின்ற போது கூறுவார்களானால்,
கோவை நகராட்சிப் பணிக்குச் செல்ல வேண்டுமென்று புதிதாக
வந்திருக்கின்ற என்னைப் போன்றவர்கள் அதை விரும்பி வர
வேற்பார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. கோ[illegible]வத்தம்பி) [1980 ஆகஸ்ட் 11

மாநகராட்சி அந்தஸ்து வழங்கப்பட்ட பிறகு, மாநகராட்சிப் பணிகள் திட்டமிட்டு எல்லை வகுக்கப்பட்ட பிறகு, இன்றைக்கு அங்கு பணியாட்கள் பற்றாக்குறை, சுகாதார வசதி பற்றாக் குறை, நிர்வாகத்தில் குறைபாடுகள், தேவையான ஆட்கள், தேவைக்குரிய எந்திரங்கள் இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப் பட்டிருக்கிறேன். தனி அதிகாரி என்ற பணியை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், அந்த தனி அதிகாரியின் கீழ் பணியாற்றுகின்ற நகரசபை ஆணையரும் இந்த மாநகராட்சி [illegible]லே என்ன நல்ல திட்டங்கள் போட்டாலும், மாநகராட்சி அந்தஸ்து எப்போது வரும் என்ற ஏக்கத்தில், அந்த மக்கள் நகராட்சித் திட்டங்கள் சரியாக செயல்படவில்லை என்ற குற்றச் சாட்டை அண்ணா தி. மு. க. ஆட்சியின் மீது சொல்லி வரு கிறார்கள் என்பதையும், தனி அதிகாரி எவ்வளவு வேகமாக செயல்பட முயற்சித்தாலும், நல்ல முறையிலே பணியாற்றக் கூடிய வகையிலே மனப்பக்குவத்தில் அணைத்துச் சென்றாலும், ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நிர்வாகத்தைத் தான் அங்குள்ள மக்கள் விரும்புகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

[மாலை 5-50]

வயது வரம்பை நிர்ணயித்து 18 வயதானவர்களுக்கு வாக் குரிமை கொடுத்து ஆறு மாத காலத்தில் தேர்தல் நடத்தப் படும் என்று அமைச்சர் அவர்கள் வாக்குறுதி தந்திருக்கிறார்கள். இன்னும் ஆறு மாத காலத்தில் தேர்தல் நடத்துகிற நிலை ஏற் படப் போகிறது. இந்த மசோதாவை நிறைவேற்றி ஆறு மாத காலத்தில் தேர்தல் நடைபெற உரிய முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டுகிறேன்.

சாக்கடை வசதியானாலும், பாதுகாக்கப்பட்ட குடி நீரானாலும், கழிப்பிடங்களானாலும், பொதுச் சுகாதார மானாலும் மக்கள் சட்ட மன்ற உறுப்பினர்களிடம் தங்கள் முறையீடுகளைத் தெரிவிக்கிறார்களே தவிர நியமிக்கப்பட்டு இருக்கக் கூடிய தனி அதிகாரிகளிடம் கூறுவதில்லை. சட்ட மன்ற உறுப்பினர்கள் இவற்றை எல்லாம் ஏற்படுத்தித் தருவதற்கு உரியவர்கள் என்ற முறையில் பொதுமக்கள் நினைக்கக்கூடிய கட்டாயத்தில் இருக்கிறார்கள் என்பதால் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டாலும் ஊராட்சி ஒன்றியங்களும் மற்றவைகளும் வேகமாகச் செயல்பட அவற்றிற்கு அதிக அதி காரம் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டு விடை பெறுகிறேன்.

திரு. என். வரதராஜன் : துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி மன்றங்கள் தனி அதிகாரிகள் நியமனம் பற்றிய சட்ட திருத்த முன் வடிவை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.



1980 ஆகஸ்ட் 11 [திரு. என். வரதராஜன்]

தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லாத காரணத்தினாலே [illegible] பல்வேறு விதமான வேலைகள் துரிதமாக நடைபெற முடியாத நிலைமைகள் இருக்கின்றன. சில சமயங்களில் தவறுகள் நடை பெற ஏற்ற இடமாகவும் இந்த மன்றங்கள் இப்போது [illegible] [illegible]கின்றன. நான் அரசின் கவனத்திற்கும் அந்தத் துறையைச் சேர்ந்திருக்கும் செயலாளர், மற்றவர்கள் கவனத்திற்கும் ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன்.

நகரசுத்தி செய்யும்படியான சுகாதாரத் தொழிலாளர் களுடைய தொழிற்சங்கங்களோடு ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தி சில கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அது நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதை ஆலோசிக்க வேண்டும். மனிதனுடைய மலத்தைத் தலையில் சுமந்து வயிற்றைக் கழுவும்படியான உழைப்பாளி மக்கள் கோரிக்கையை ஏன் அலட்சியப்படுத்த வேண்டும்? சமுதாயத்தின் கடைக் கோடியில் இருக்கும்படியான சுகாதாரத் தொழிலாளியின் சாதாரணக் கோரிக்கைகள் பற்றி அரசு ஆலோசிக்க வேண்டும். அவர்கள் வேலை செய்கிற போதே உயிர் நீத்தால் பத்தாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்ற நியதி இருந்தாலும்கூட நகரசபைகளின் பொருளாதார நிலையில் அவர்கள் ஓராண்டுக் காலம் காத்திருக்கக்கூடிய துயர நிலை இருக்கிறது.

திண்டுக்கல் நகராட்சியில் அப்படிப்பட்ட நிலை இருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இல்லை என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் அரசும் அதிகாரிகளும் இந்தத் துறையில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல ஆண்டுகளாகத் தேர்தல்களை ஒத்திப் போட்டு வருவதால் பல பிரச்சினைகள் சிக்கலாகிக் கொண்டு வருகின்றன. திண்டுக்கல் நகராட்சியை உதாரணமாகச் சொல்ல வேண்டும். அமைச்சர் அவர்களிடத்தில் அது பற்றித் தெளிவுபடுத்தி இருக்கி றேன். திண்டுக்கல் நகரத்தில் மேற்கு ரத வீதி என்ற ஒரு வீதி இருக்கிறது. ஆறு மாதங்களுக்கு முன்னால் ரோடு போட கற்கள் கொட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் ரோடுகள் போடப்படாமல் வண்டிகள் ஓடி அந்தக் கற்கள் தூளாகி மீண்டும் குழியுமாக ரோடுகள் இருக்கின்றன. துரிதமாக இந்தக் காரியங் களை நிறைவேற்ற இடைக் காலத்தில் இருக்கும்படியான அமைப்புகள்—ஆய்வுக் குழுக்களோ, ஆலோசனைக் குழுக்களோ கவனம் செலுத்த வேண்டும்.

திண்டுக்கல் நகரத்தில் இம்மாதம் 2—8—1980 அன்று நகர சபை ஆணையாளர் ஒரு அறிவிப்பைக் கொடுத்தார். திண்டுக் கல் நகரில் ஒரு நாள் விட்டு ஒரு நாள்தான் குடிநீர் கிடைக்கு மென்று அறிவித்திருக்கிறார். மூன்று நான்கு கோடி ரூபாய் செலவழித்து குடிநீருக்காகப் பெரிய அணையைக் கட்டி இருக்கி

றோம். பெரிய நிலப் பிரபுக்கள் அந்த அணையிலிருந்து
தண்ணீரைத் திருப்பி விட்டுக் கொள்கிறார்கள் என்று கூறப்
படுகிறது. இரண்டு லட்சம் மக்களுக்கான குடிநீர் வசதியைக்
கெடுக்கிறார்கள். ஏற்கனவே, மதுரை மாவட்ட கலெக்டர்
அவர்கள் அந்தப் பகுதியைச் சுற்றிப் பார்த்து சிலர் தவறு
செய்கிறார்கள் என்பதை உணர்ந்தார்கள். அவர்கள் அங்கு
இருந்து மாற்றப்பட்டு வந்து விட்டார்கள்.

ஆகவே துறையில் இருக்கும்படியான அதிகாரிகளைக் கேட்டுக்
கொள்வது எல்லாம் 5 கோடி ரூபாய் செலவழிக்கிறோம்.
போதுமான அளவுக்கு திண்டுக்கல் நகர மக்கள் வீட்டுவரியை
யும், தண்ணீர் வரியையும் கொடுக்கிறார்கள். ஆனால் அவர்
களுக்குப் போதுமான தண்ணீர் கொடுக்கப்படவில்லை. குறிப்
பாக பாரதபுரம், மரியநாதபுரம், மேட்டுராஜபட்டி, கோவிந்தா
புரம், சவரிராஜபுரம் ஆகிய பகுதிகளிலே உள்ளவர்கள் மாதா
மாதம் 5 ரூபாய் குழாய் இணைப்புக்காக என்று கொடுக்கிறார்
கள். ஆனால் அவர்கள் தண்ணீருக்கு இன்றைக்கு திண்டாட
வேண்டியிருக்கிறது. அங்கே வருகின்ற தண்ணீரை தடுக்கிற
வர்களை தடுத்து நிறுத்தி அந்தப் பகுதி மக்களுக்குத் தண்ணீர்
கொடுக்க அரசு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு நண்பர் கோவைத்
தம்பி அவர்கள் சொன்னார்கள். கோவையை மாநகராட்சி
யாக்க வேண்டுமென்று முடிவு செய்து நாம் மத்திய அரசிற்கு
அனுப்பி இருக்கிறோம். மத்திய அரசு அனுமதித்து விட்டதாகப்
பத்திரிகையிலே செய்தி வந்தாலும் உண்மை என்ன என்பதைப்
பார்க்க வேண்டும். இல்லை என்றால் வற்புறுத்திப் பெற்றாக
வேண்டும். இன்று சென்னை, மதுரை இவற்றிற்கு அடுத்த
படியாக இருக்கின்ற பெரிய நகரமான கோவை நகரத்திலே
தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லாத காரணத்தினால்
மிகப் பெரிய குறைபாடுகள் இருக்கின்றன. பளிச்சென்று
அரசின் மேல் கோபம் வருகின்ற நிலைமையை ஏற்படுத்தி
விடுகின்ற ஒரு சில சக்திகள் இருப்பதைப் புரிந்துகொண்டு
மக்களுடைய குறைகளைப் போக்க, மாநகராட்சியாக்கும் வேலை
களைத் துரிதப்படுத்தி, எவ்வளவு விரைவிலே மாநகராட்சியின்
தேர்தலை நடத்த முடியுமோ அவ்வளவு விரைவிலே நடத்த
வேண்டுமென்று வற்புறுத்தி இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து
விடைபெறுகிறேன்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்
களே, மாநகராட்சிகளில் தனி அதிகாரிகள் நீடித்தல் சம்பந்த
மான சட்ட முன் வடிவையொட்டி அந்த அதிகாரிகளின் பதவி
களை 6 மாத காலத்திற்கு நீட்டிப்பது சம்பந்தப்பட்டவரையில்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஒரு சில கருத்துக்களைக்
கூற விரும்புகிறேன். கோவை நகராட்சியை மாநகராட்சி



யாக்க வேண்டுமென்ற அடிப்படையிலே சிங்காநல்லூர், எஸ்.எஸ்.
குளம், பேரூர் ஆகிய பஞ்சாயத்துக்களையெல்லாம்
இணைத்திருப்பதன் காரணமாக அங்கே உள்ள அலுவல
கங்கள் எல்லாம் மாநகராட்சிக்கு வந்தவுடன் மாநகர
ராட்சியின் வேலைகள் தடைப்படுவது மட்டுமல்ல, சிங்காநல்லூர்
எஸ்.எஸ்.குளம், பேரூர் போன்றபகுதிகளிலே பஞ்சாயத்துக்கள்
இருந்த காலத்திலே செய்யப்பட்டு வந்த வேலைகள் எல்லாம்கூட
செய்யப்படாது இருக்கிற சூழ்நிலை காணப்படுகிறது. சிங்கா
நல்லூர் பகுதியிலே சாலை வசதிகள் செய்யப்படவில்லை. சிங்கா
நல்லூர் பகுதியின் மையத்திலே உள்ள குட்டையைச் சுத்தம்
செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சவரிபாளையம்
பாதையிலே ஒரு பாலம் கட்டப்படவேண்டுமென்ற கோரிக்கை
நீண்டகாலமாக இருந்தபோதிலும் மழைக்காலங்களிலே அங்கே
போக்குவரத்து செல்ல முடியாத நிலைமைதான் இன்னும்
இருக்கிறது. இப்படி சாலை வசதிகள், விளக்கு வசதிகள்
செய்ய நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஸ்பெஷல் ஆபீஸர்கள்
முன்வருவதில்லை. காலம் கடத்திக்கொண்டே வருகிறார்கள்
என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்
கொண்டுவருவதோடு தனி அதிகாரிகள் பதவிக்காலத்தை
நீட்டிப்பது சம்பந்தமாகப் பேசப்பட்டது. கோவையை மாநக
ராட்சியாக்க மத்திய அரசு அனுமதித்துவிட்டதாகப்
பத்திரிகையிலே செய்தி வந்தது, பார்த்தோம். ஆகவே,
மேலும் காலத்தினை நீட்டிக்காமல் இந்த 6 மாத காலத்திற்
குள் தேர்தலை நடத்த முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

கோவையிலே உள்ள மேம்பாலத்தைக் கட்டுவதற்குப் பல
லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்பட்டிருந்தாலும்கூட
மழைக்காலங்களிலே வாகனங்கள் செல்ல முடியவில்லை, போக்கு
வரத்துக்கு இடையூறுகள் ஏற்படுகின்றன. இது சம்பந்தமாக
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தோழர்கள் அங்கே உள்ள
அரசியல் கட்சிகளோடு சேர்ந்து பல நேரங்களிலே கவனத்திற்குக்
கொண்டுவந்தும் இன்னும் அந்த நிலைமையிலேதான்
இருந்துகொண்டிருக்கிறது. நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்று பலமுறைகள் விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டும் தனி
அதிகாரி மெத்தனப்போக்கு காரணமாக அது அப்படியே
இருந்துகொண்டிருக்கிறது.

நகராட்சிகளிலே அரசு ஊழியர்களுக்கு ஸ்வீப்பர்ஸ் போன்ற
பணியாளர்களுக்கு அரசு போடுகின்ற எந்தவிதமான உத்திரவும்
அமல் நடத்தப்படுவதில்லை. அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய
சம்பளத்தைக் கூடக் கொடுக்கவில்லை.

[திரு. எம். ஆறுமுகம்] [1980 ஆகஸ்ட் 11
[மாலை 6.00]

கோவை நகரத்தில் இருக்கக்கூடிய, அந்தத் தொழிலாளர்கள்
கொடுத்திருக்கின்ற புகார்களிலிருந்து தெரிய வருகிறது.
ஆகவே, இப்படிப்பட்ட நிலையை நீக்க வேண்டுமென்றால்
உடனடியாகத் தேர்தலை நடத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட
மக்கள் பிரதிநிதிகள் இருந்தால், இப்படிப்பட்ட பிரச்சினை
களைத் தீர்ப்பதற்கு வசதியாக இருக்கும் என்று கேட்டுக்
கொள்கிறேன். எனவே, உடனடியாகத் தேர்தலை நடத்தி,
கோவை, பேரூர், இன்னும் இருக்கக்கூடிய பல பகுதிகளிலும்
இருக்கின்ற தண்ணீர்ப் பிரச்சினை, சாலை வசதிகள், இன்னும்
இருக்கக்கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, அரசு நடவ
டிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
எனவே, தமிழக அரசு உடனடியாகத் தேர்தலை நடத்துவதற்கு
முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: துணைத் தலைவரவர்களே,
இந்தத் தனி அதிகாரிகளைப் போடுவதை நான் வரவேற்றாலும்
கூட தேர்தலை ஒத்திப் போடும் நேரத்தில் இந்த
களைப்பற்றிச் சொல்ல வேண்டும் என்றால் மீண்டும் வேலை
சொன்னதையேதான் திரும்பச் சொல்ல வேண்டிய நிலைமை
இருக்கிறது. எனவே, எவ்வளவு சீக்கிரம் மீண்டும்
முடியுமோ அவ்வளவு சீக்கிரம் தேர்தலை நடத்த
களுக்கும் நல்ல பெயர் அரசாங்கத்திற்கும் நடத்தினால் அதிகாரி
படும். மக்களின் பிரதிநிதிகளாக உள்ளூர்க்காரர்கள் நல்ல பெயர் ஏற்
செய்வார்கள். இல்லை என்றால் எம்.எல்.ஏக்கள்தான் வேலை
சென்னையைப் பொறுத்தவரையிலே (குறுக்கீடு) நண்பர் திரு.
பாலன் அவர்கள் சொல்வதைப் போல மிகுந்த தொல்லைகள்
இருக்கின்றன என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்.

நான் இரண்டு விஷயங்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.
நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு மத்திய அரசு 80 சதவீதம்
கொடுக்கிறது; 20 சதவீதத்தை முனிசிபாலிட்டியோ, கார்ப்ப
ரேஷனோ, மேஜர் பஞ்சாயத்து போர்டோ கொடுத்து வீடு
கட்டுகிறார்கள். மத்திய அரசின் ரிக்கார்டுகளிலே ஒரு
வருஷத்தில் இரண்டு இலட்சம் நகரசுத்தித் தொழி
லாளர் மக்களுக்கு வீடு கட்டிக் கொடுத்துப் புனர்வாழ்வு
கொடுத்தோம் என்று இருக்கிறது. ஆனால் உண்மையாக
முதலாளி யார்? நகர சுத்தித் தொழிலாளர்கள் வேலை நீக்கம்
செய்யப்பட்டவுடன் வயதாகி ஓய்வு பெறும் நிலையிலே
அந்த வீடுகளிலே ஒருநாள் கூடத் தங்கியிருக்க முடியாது.
ஆனால் மத்திய அரசு ரிக்கார்டுபடி மாநில அரசு,
கார்ப்பரேஷன் முனிசிபாலிட்டி, மேஜர் பஞ்சாயத்து
போர்டு சேர்ந்து இந்தத் தொழிலாளிகளின் மிசயமாகப் பரிதாப
மான தொழிலை செய்வதுகளுக்கு வீட்டு வசதிகளை இல்லை



1980 ஆகஸ்ட் 11] [திரு. எல். இளையபெருமாள்

மாக கொடுத்தோம் என்பது ரிக்கார்டு. ஆனால் உண்மை
யான முதலாளி மாநகராட்சி, கார்ப்பரேஷன், மேஜர் பஞ்சா
யத்து போர்டாக இருக்கிறது. ஆகவே, அரசு உடனடி
யாகக் கவனித்து அவர்களுக்கு அந்த இடங்களில், அவர்கள்
வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பிறகும் அவர்கள் வீடு
என்று சொல்லுகின்ற ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

மலத்தைத் தலைமேல் தூக்கிச் செல்லும் கேவலமான
நிலைமை அந்தத் தொழிலாளர்களுக்கு இருக்கிறது. மைசூரி
ரிலே பெங்களூரிலே 50 ஆண்டுகள், அல்லது 25 ஆண்டுகள்
அல்லது 12 ஆண்டுகள் என்று ஏதோ ஒரு வரையறையை
வைத்து ஒரு செப்டிக் லெட்ரின் கட்டுவதற்கு எவ்வளவு
முடியுமோ அதை அந்தக் கார்ப்பரேஷனோ அல்லது அரசாங்
கமோ தாங்களே முன் வந்து கட்டிக்கொடுத்து, கக்கூஸ்
சுத்தம் செய்யும் வேலை தவிர, இரவில் தூக்குகின்ற அவதியிலி
ருந்து அவதியில்லாமல், மனித உரிமையோடு அந்தக் காரி
யத்தைச் செய்திருக்கிறது. அதை நம்முடைய அரசும் கவனத்
திற்கொண்டு, மனிதாபிமானத்தோடு அந்த மக்களுக்குச்
செய்யும் வேலைகளை, நம்முடைய அரசு தேர்தலைப்பற்றி
எண்ணாமல், உடனடியாக உத்தரவு கொடுத்து தனி அதிகாரி
கள் செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அருந்ததியர் சமுதாயத்தைப் பொறுத்த வரையில் என்ன
நிலைமை என்பதைச் சொல்கிறேன். இப்பொழுது எங்கு
பார்த்தாலும் மோட்டார்களும், பம்பு செட்டுகளும் கொடுக்கப்
கப்பட்டிருக்கின்றன. கிராமங்களில் அருந்ததியர்கள் ஏற்றம்
இறைப்பதற்கு உண்டான அந்த ஏற்றத்திற்குத் தோலால்
தைத்துக் கொடுப்பார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் 5 குடும்பங்
கள், 3 குடும்பங்கள் என்று இருக்கும். இது உள்ளாட்சித்
துறை அமைச்சர் அவர்களுக்கு நிச்சயமாக இந்தக்கொடுமைகள்
தெரிந்திருக்கும். ஆனால் இப்பொழுது அவர்களுக்கு வேலை
யில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டு அவர்கள் நகரத்தை நோக்கி
ஓடி வருகிறார்கள். பெங்களூரிலே என்ன செய்கிறார்கள்
என்றால், முனிசிபாலிட்டி, கார்ப்பரேஷனுக்கு வசதியாக
அவர்களுடைய சொந்தச் செலவிலேயே பத்து இன்று புத்து
என்று சொல்லி பங்க் சிஸ்டம் வைத்து கட்டி வைத்திருக்கி
றார்கள். அவர்களிடமிருந்து பத்தோ இருபதோ அல்லது
ஏதோ ஒரு வாடகையை வசூலித்துக்கொண்டு, அவர்கள்
தொழிலை நடத்துவதற்கு வசதி செய்கிறார்கள். இங்கே
அவர்கள் தொழில் பரிதாபகரமாக இருக்கிறது. இன்னும்
பச்சையாகச் சொல்கிறேன். எக்மோரிலே இருக்கின்ற
நிலைமையை அமைச்சரவர்கள் திடீரென்று பரிசோதித்துப்
பார்த்தால் தெரியும். அந்த அருந்ததிய மக்கள்
தினம் காலையிலே வந்தவுடனே நான் சொல்லுதல்

[திரு. எல். இயைபெருமாள்] 1980 ஆகஸ்ட் 11

யாருக்கும் கோபித்துக்கொள்ள வேண்டாம். தினம் ஒரு ரூபாயை
அந்த அரசாங்க சிப்பந்தியிடம்—அதிலும் கடுமையான சட்
டத்தை வைத்துக் கொண்டிருப்பவர்களின் கையில் கொடுத்
தால்தான் 8 மணிக்குப் பெட்டியையும், தைக்கும் கோலையும்
எடுத்து வைக்கலாம். அப்படிக் கொடுக்கத் தவறினால்
சாயந்தரம் 75-வது பிரிவிலோ வேறு எதிலோ போட்டு
உள்ளே போட்டு விடுவார்கள். இது ரொம்பவும் பாவ
மான காரியமாக இருக்கிறது. ஆகவே, முதலிலே சென்னையி
லாவது, மதுரையிலாவது அந்தக் கார்ப்பரேஷன் அதிகாரி
களுக்குச் சொல்லி இப்படிச் செய்யச் சொல்ல வேண்டும்.
நமக்கும் வருமானம் இருக்கிறது; நகரத்தை நோக்கி ஓடி
வருகின்ற அந்த மக்களுக்கும் வாழ்வு கிடைக்க நாம் வழி
செய்தவர்களாக ஆவோம்.

முனிசிபாலிட்டிகள், கார்ப்பரேஷன்களில் உத்தியோகத்தில்
அவர்களுக்கு இவ்வளவு சதவீதம் என்று சொல்லியும்கூட,
குறிப்பாக சிதம்பரம், திண்டுக்கல், மதுரை, கோயம்புத்தூர்
இது போன்ற இடங்களில் அரசு போட்ட உத்தரவை
இதுவரையிலேயும் அவர்கள் கௌரவப்படுத்தும் அளவிற்கா
வது செய்யவில்லையானால் செய்ய வேண்டும்.

அதை அவர்கள் செய்யவில்லை. 10 ஆண்டுகள் செய்யாமல்
இருந்ததற்குக் காரணம் 10 ஆண்டுகளாக எலக்ஷன் இல்லாமல்
போய்விட்டது. அதைத் தனி அதிகாரிகள் மறந்திருக்கிறார்கள்.
ஆகவே, அதை உடனடியாகச் செய்வதற்கு வழி செய்யவேண்டும்.

அடுத்து, கடன் தொல்லைகள், அந்தக் கடன் தொல்லை
களிலும், இவ்வளவு கஷ்டப்பட்டும், நாம் ஊழியர்களுக்குச்
சம்பளம் கொடுக்கிறோம். உண்மையிலே துப்புரவு செய்கின்ற
மக்களுக்குக் கொடுக்கின்ற சம்பளம் குறைவாக இருக்கிறது.
மாநகராட்சியில் என்னிடம் ஒரு நண்பர் சொன்னார். நான்
மாநகராட்சியிலிருந்து வெளியே வருகிறேன். அப்பொழுது,
அவர், உங்கள் ஆட்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை என்கிறீர்களே
துப்புரவுத் தொழிலாளர் வேலை, நூற்றுக்கு நூறு உங்களவருக்
குத்தான் கொடுத்திருக்கிறோம், இளையபெருமாள், என்று கூறி
னார். நான் ஒரு கேள்வி கேட்டேன். இந்த வேலைக்கு அருந்
ததியர்கள், ஆதி தெலுங்கர்கள், ஆதி திராவிட மக்கள் தவிர,
வேறு யாராவது, கக்கூஸ் கழுவ வருகிறேன் என்று ஒரு ஆளாவது
மனு போட்டாரா என்று கேட்டேன். ஒருவர் கூடப் போட
வில்லையென்றுதான் அவர் சொன்னார். அங்கேதான் இருக்
கிறது விஷயம். அந்த விஷயத்தைத்தான் கவனிக்கவேண்டும்.
அவர்களுக்கும் துர்நாற்றம் தெரிகிறது, அவர்களுக்கும் மலம்
எடுக்கிறபொழுது, அருவருப்பாக இருக்கிறது.



1980 ஆகஸ்ட் 11]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாதம் ரூ. 1,000 சம்பளம்
கொடுக்கிறேன் என்றுசொன்னால், எத்தனையோ கிராஜுவேட்ஸ்
அந்த வேலையைச் செய்ய முன்வருவார்கள்.

திரு. எல். இளையபெருமாள் : ஆல்ரைட், அப்படி இருக்கு
மானால், நான் நன்றி சொல்கிறேன், அருமைச் சகோதரருக்கு.
நாளைக்கு அமைச்சர் அவர்கள் இந்தப் பெயர்களைக் கேட்டு
வாங்கி, மலம் எடுப்பதற்கு, தெரு சுத்தம் செய்வதற்கு, கிராஜு
வேட்ஸ் முன்வந்தால், நிச்சயமாக தேசம் முன்னேறி இருக்கிறது
என்பதற்காக, திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களை நான் பாராட்டு
வேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நான் என்ன சொல்கிறேன்
என்றால், ஒரு குறிப்பிட்ட ஜாதிக்காரர்கள் இதைச் செய்ய
வேண்டுமென்ற தண்டனை கிடையாது. இதுவரைக்கும் அதைச்
செய்து வந்தார்கள். அதிகமாக, அட்ராக்டிவ் சாலரி கொடுத்
தால், எல்லோரும் அந்தத் தொழிலைச் செய்ய முன்வருவார்கள்.
அன் எம்ப்ளாய்ட் கிராஜுவேட்ஸ் இருக்கிறார்களே, ரூ. 1,000
சம்பளம் கொடுக்கிறேன் என்று சொல்லுங்கள், கக்கூஸ் கிளீன்
செய்வதற்கு என்று சொன்னால், எத்தனை பேர் கியூவிலே நிற்
பார்கள் என்று பாருங்கள்.

திரு. எல். இளையபெருமாள் : துணைத் தலைவர் அவர்களே,
உங்களைத்தான் நான் நேரம் கூடுதலாகக் கொடுங்கள், என்று
கேட்க வேண்டும். அதிகச் சம்பளம் கொடுத்தாவது,
நம்முடைய அமைச்சரவர்கள் அதைக் குறிப்பாக எடுத்துக்
கொண்டு, அருந்ததியர், ஆதி ஆந்திரர், ஆதி திராவிடர் இந்தச்
சமுதாயத்தினரைத் தவிர, வேறு எந்தச் சமுதாயத்தினராவது,
இந்தத் தொழிலைச் செய்ய முன்வந்தால், அவர்களுக்கு முன்
னுரிமை கொடுப்போம். அவர்களுக்கு ரூ. 5 கூடக் கொடுப்
போம் என்று சொல்லி, அதைப் பரிசீலனை செய்தால், அப்படி
யாராவது முன்வந்தால், சகோதரர் சொல்லியதற்கு நன்றி தெரி
வித்துக் கொள்வேன். அருமைச் சகோதரர் திரு. கிருஷ்ணமூர்த்திக்
காக, ஒரு உண்மையை அவர் அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்
காகக் கூறுகிறேன். நேற்றைக்கு ஒரு தகவல் கிடைத்தது, எனக்கு.
கிருஷ்ணாம்பேட்டை சுடுகாட்டண்டைப் போயிருந்தேன். அங்கே
5 பேர்கள் குழி தோண்டிக் கொண்டிருந்தார்கள். சகோதரருக்
காக இதைச் சொல்கிறேன். அவர் பின் தங்கியவர்—நான்
அவரை விடப்பின்தங்கியவன். அந்த 5 பேரும் எங்கள் ஜில்லா
வைச் சேர்ந்தவர்கள். நான் பச்சையாகவே சொல்கிறேன்,
அந்த 5 பேரையும் கேட்ட பொழுது, அவர்களில் இரண்டு பேர்
வன்னியர், 3 பேர் ஆதி திராவிடர். நேற்றையதினம் நடந்த
விஷயம். அந்த 2 பேரைக் கேட்டேன். அதில் ஒருவர் சொல்
கிறார். என்னங்க, இளையபெருமாள், ஏதோ வேலையில்லை

[திரு. எல். இளையபெருமாள்] [1980 ஆகஸ்ட் 11

யென்று வந்தேன். வேறு வேலை கிடைக்கவில்லை. ஆனால்,
இந்த வேலையை என்னால் செய்ய முடியவில்லையென்று
குறிப்பிட்டார். பட்டினி கிடந்து சாகிறேன் என்று சொன்னார்.
அந்த 3 பேர்களைக் கேட்கும்பொழுது, ஒரு ஆதி திராவிடரிடம்
தான் வேலை செய்கிறேன். எனக்குக் கிடைக்கிற ரூ. 8-லே,
ரூ. 5-ஐ அவருக்கு கொடுத்துவிட்டு, ரூ. 3 நான் எடுத்துக் கொள்
கிறேன். ஆகவே, நான் சப் டெனன்ட். ரூ. 3-க்காக இந்த
வேலை செய்கிறேன் என்று சொன்னார். ஏன் அப்படிச் சொன்
னார் என்றால், இந்தத் தொழிலைத் தவிர வேறு எந்தத் தொழி
லையும் அந்தச் சமுதாய மக்கள் செய்வதற்கு சமூகத்தில்
சமுதாய நீதி இல்லை. சட்டம் இருக்கிறது, ஆனால் சமுதாயத்
திலே நீதி இல்லை. ஆனால், இந்த நீதியில்லாத குறையைத்
தீர்க்க வேண்டுமென்பதற்காகவே, நேற்று 4 பெரியவர்கள் படங்
களைத் திறந்தோம். உத்தமர் காந்தி படத்தைத் திறந்து வைத்
திருக்கிறோம். அந்தப் பெரியவர்கள் சொன்னவைகளை நாம்
நடைமுறைப்படுத்த வேண்டும். அமைச்சர் அவர்களே, நான்
வேண்டுவதெல்லாம், நிச்சயமாக, இந்தத் தொழிலுக்கு யாரெல்
லாம் வருகிறார்கள் என்று கேளுங்கள்—ஒரு மாதிரிக்காகவாவது.
அப்படி வருகிறார்கள் என்றால், என்னுடைய சகோதரர் சொன்
னதற்காக நான் நன்றி தெரிவிப்பேன் என்று தெரிவித்துக் கொண்டு
என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்,

(மாலை 6—10)

<u>திரு. என். பழனிவேல்</u> : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களின் தனி அதிகாரி
களுடைய கால நீட்டிப்பு மேலும் 6 மாதங்களுக்கு நீடிப்பதால்
இன்று ஏற்கனவே ஊராட்சி ஒன்றியங்களால் யாருக்கும் எந்த
விதமான ஒரு முன்னேற்றமும் செய்ய முடியாமல் மிகப் பெரிய
சிரமத்திற்கு உள்ளாகி இருப்பது உங்களுக்குத் தெரியும். உதா
ரணமாக சொல்லப் போனால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற
உறுப்பினர்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கின்றன. அவர்கள்
எங்கே போனாலும் கக்கூஸ் வசதி இல்லை குடிநீர் வசதி
இல்லை என்றால் சுகாதார வசதி இல்லை என்றால்
இப்படி எதை எடுத்தாலும் எம். எல். ஏக்கள்தான்.
தனி அதிகாரிகள் எப்போதாவது வந்து அவர்கள் இஷ்டத்துக்கு
வரிபோடுகிறார்கள். அவர்கள் இஷ்டத்துக்கு என்றால் அவர்கள்
அதிகமாக வரிகளைப் போடுகிறார்கள். குறைத்தும் போடுகிறார்
கள். என்னென்னமோ நடக்கிறது. தனி அதிகாரிகள் தங்கள்
இஷ்டத்துக்கு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தக்
குறிப்பில் சொல்லி இருக்கிறார்கள். வாய்ப்பிருந்தால் 6 மாதங்
களுக்குள்ளாக தேர்தல் நடத்தும் என்று சொல்லியிருக்கிறார்கள்.
வாய்ப்பு என்றால் என்ன? அமைச்சர் அவர்கள் தயவு செய்து
சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த
ஓராண்டில் நாடாளுமன்றத்திற்குத் தேர்தல் நடந்திருக்கின்



1980 ஆகஸ்ட் 11] [திரு. என். பழனிவேல்]

றது. சட்ட மன்றத்திற்குத் தேர்தல் நடந்து விட்டது. இந்த ஊராட்சிகளுக்கு மட்டும் என்ன வாய்ப்பை எதிர்பார்க்கிறார்கள் என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மேற்கு வங்கத்தில் தேர்தல் நடந்த ஓராண்டுக்குள்ளாக அத்தனை ஊராட்சிகளுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும் தேர்தல் நடந்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆண்டு கொண்டு இருக்கிறார்கள். அதை ஏன் நீங்கள் செய்யக்கூடாது என்று அந்தக்கோணத்தில் முயற்சிகளை உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பத்து வருடங்களுக்கு முன்பாக இருந்த வார்டுகள் போன்றவைகள் இன்றைக்கு 4, 5 ஊராட்சிகளாக இருக்கின்றன. அந்தப் பகுதியில் உள்ள மக்கள் வாக்குச் சாவடிக்குப் போக வேண்டும் என்றால் 1 மைல், 2 மைல், 3 மைல் தள்ளிப் போக வேண்டி இருக்கிறது. 100 பேர்கள் 200 பேர்கள் நடந்து சென்று வாக்கு அளிக்கும் நிலை இருக்கின்றது. எனவே 100, 200,300 பேர்கள் இருக்கும் இடங்களில் எல்லாம் வாக்குச் சாவடிகளை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குடிநீர் வசதியைப்பற்றி கூற விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர்:</u> பில்மீது பேசுங்கள். குடிநீர் வசதி போன்றவைகள் எல்லாம் மானியத்தில் பேசியாகி விட்டது.

<u>திரு. என். பழனிவேல்</u> : இதில் பல சிரமங்கள் இருக்கின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இல்லாத காரணத்தால் இப்படிப் பேச வேண்டி இருக்கிறது. இதைச் சொல்லாமல் பில் மீது பேசுவது என்றால், ஒரு வரியில் நீட்டித்துக் கொள்ளலாம் என்று பேசிவிடலாம். எங்களைப் பிய்த்து எடுத்துவிடுகிறார்கள், கக்கூஸ் வசதி, குடிநீர் வசதி சுகாதார வசதி போன்றவைகளுக்காக மக்கள் எங்களைத் தொந்தரவு செய்கிறார்கள். ஓட்டலில் நல்ல காப்பி கிடையாது. தனி அதிகாரிகள் ஓட்டல் அதிபர்களிடம் லஞ்சம் பெற்றுக் கொண்டு அந்த ஓட்டல்களைக் கவனிப்பதே கிடையாது. இது ஒவ்வொரு ஊரிலும் நடந்து கொண்டிருக்கின்றது. அதை எல்லாம் கவனத்தில் எடுத்துக் கொண்டு குறைந்த பட்சம் 3 மாத காலத்தில் தேர்தலை நடத்திவிட்டு, பின்னால் மற்ற வேலைகளைப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தெரு விளக்குகள். இந்தத் தெரு விளக்குகள் போட்டால் 4 நாட்கள்தான் எரிகிறது. 4 நாட்களுக்கு மேல் எரிவதே கிடையாது. சட்டமன்ற உறுப்பினர்கள் போய் நேரடியாகச் சொல்லிவிட்டு வந்தால் 4 நாட்கள் கழித்து லைட்

[திரு. என். பழனிவேல்] [1980 ஆகஸ்ட் 11

போடுகிறார்கள். பின்னர், 4 நாள் கழித்து அது
அந்த பல்புகள் அடிக்கடி இப்படி பீஸ் எரியாது.
காரணம் என்ன என்பதைக் கண்டறிய ஒரு கமிஷன் போவதற்கான
அவர்கள் எங்கே வாங்குகிறார்கள், அதை எப்படிப் போட்டு,
றார்கள், எந்தக் காரணத்தினால் பீஸ் போகிறது போடுகி
கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்பதைக்

வாய்ப்பு இருக்குமானால் தேர்தல் விரைவில்
என்று அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். நடத்தப்படும்
என்பது நம்மால் ஏற்படுத்தப்படுவது என்கிற வாய்ப்பு
அந்த வாய்ப்பை உடனடியாக ஏற்படுத்திக் காரணத்தால்,
நடத்த வேண்டும் என்று கேட்டு, இந்தச் கொண்டு தேர்தல்
ஆதரித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன். சட்ட முன்வடிவை

*திரு. ஏ. டி. குலசேகர் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, கோவை நகராட்சி மன்றத் (தனி அதிகாரியை
நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவுமீது என்னுடைய
கருத்துக்களை இங்கே சொல்லிக் கொள்கிறேன். கோவை
நகராட்சியையும், சிங்காநல்லூர் நகராட்சியையும் சேர்த்து
கோவை மாநகராட்சியாக்கும் திட்டம் 1975ஆம் ஆண்டு மே
திங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில்
இருந்த காலத்தில் தீர்மானிக்கப்பட்டது. 1975ஆம் ஆண்டு
ஜூலை மாதம் 1ஆம் நாள் முதல் தனி அதிகாரி மூலம் அந்த
நகராட்சி செயல்பட்டு வருகிறது. அதை மேலும் 6 மாத
காலத்திற்கு நீடிக்க வேண்டும் என்று கேட்டு, இங்கே சட்ட
முன்வடிவு கொண்டு வந்து இருக்கிறீர்கள். அதை மாநகராட்சி
யாக ஆக்குவதற்கு அனுமதி கேட்டு மத்திய அரசுக்கு எழுதி
யிருப்பதாக இங்கே குறிப்பிட்டு இருக்கிறீர்கள். மத்திய
அரசுக்கு அனுப்பியுள்ள அந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கி
றது என்பது தெரியவில்லை.

1975ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் தேதியோடு
மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் முடிந்து
விட்டது. மக்கள் தங்கள் குறைகளைச் சொல்வதற்கு மிகவும்
கஷ்டப்படுகிறார்கள். குறிப்பாக சிங்காநல்லூர் நகராட்சியில்
சாலைப் போக்குவரத்து மோசமாக இருக்கிறது. புளியங்குளம்—
சௌரிபாளையம் பாலம் கட்ட வேண்டும் அந்தப் பாலம் கட்டித்
தர வேண்டும் என்று 10 ஆண்டு காலமாக மனுப் போட்டும் அது
கட்டப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தச் சட்ட
முன்வடிவின்மீது மட்டும் பேசுங்கள். மற்ற விவரங்கள் குறித்து
பேச வேண்டும் என்று சொன்னால், அதற்கு நேரம் இல்லை.



1980 ஆகஸ்ட் 11]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : திராவிட முன்னேற்றக் கழக
உறுப்பினர் பேசுகிறபோது குறுக்கிட்டு அப்படிப் பேசக்கூடாது
என்று சொல்கிறீர்கள். மற்றவர்கள் பேசுகிறபோது அப்படிச்
சொல்லாமல் இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லோரும்
எனக்கு ஒன்று தான். சட்ட முன்வடிவின் மீதான
விவாதத்தைமீறி வேறு விவகாரங்கள் பேச அனுமதிக்கவில்லை.

திரு. ஏ. டி. குலசேகர்: தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்
இல்லாத காரணத்தால், அங்கே உள்ள மக்கள் சட்டமன்ற
உறுப்பினர்களிடத்தில் தங்கள் குறைகளைச் சொல்கிறார்கள்.
ஆகவே, நாங்கள் அதை இங்கே எடுத்துச் சொல்லி, அரசாங்
கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டி இருக்கிறது.
ஆகவே, நகராட்சி மன்றத் தேர்தலை உடனடியாக நடத்துங்கள்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கு முன்பு சட்டமன்றத்தில் பேசியபோது குறிப்பிட்டேன்,
சிங்காநல்லூர் பகுதியில் குடிநீர் கிடைக்கவில்லை. அதற்கான
நடவடிக்கைகளை எடுக்க அரசு அதிகாரிகள் கவனம் செலுத்த
வில்லை. ஆகவே, அரசாங்கம் தனி அதிகாரி மூலம் உடனடியாக
அதற்கு நடவடிக்கை எடுத்து, அதிக லாரிகள் மூலம் குடிநீர்
புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள சிங்காநல்லூர் பகுதிக்கு வழங்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிங்காநல்லூரில் பொதுக் கழிப்பிடங்கள் இல்லாமல் இருப்
பதால், தாய்மார்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்த
வசதி செய்து தரவேண்டும் என்று அவர்கள் யாரிடத்தில்
கேட்பது என்று தெரியாமல் இருக்கிறார்கள். ஆகவே, பொதுக்
கழிப்பிடங்கள் ஆங்காங்கு கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மக்களால் தேர்ந்
தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்தால், கவுன்சிலர்கள் இருந்தால்
அவர்கள் மூலம் இதை நிறைவேற்றச் செய்யலாம். ஆகவே,
உடனடியாகத் தேர்தல் நடத்த வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

சிங்காநல்லூரில் பாதாளச் சாக்கடை திட்டம் இல்லை.
ஆகவே, கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது. பொதுச்
சுகாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் பல நோய்கள்
வருகின்றன. அதைத் தடுக்க எந்தவிதமான நடவடிக்கை
எடுக்கவில்லை. சிங்காநல்லூர், பீளமேடு பகுதிகளில் கொசுத்
தொல்லை அதிகமாக இருப்பதால் 8 மணி நேரம் வேலை
செய்து விட்டு வீட்டுக்கு வரும் தொழிலாளர்கள் இரவு நேரத்தி
லும் சரி, பகல் நேரத்திலும் சரி தூங்க முடியாமல் அவஸ்தைப்
படுகிறார்கள். ஆகவே, பாதாள சாக்கடைத் திட்டம் ஏற்படுத்த

வேண்டும். எஸ். எஸ். குளம் பகுதியில் சாலைப் போக்குவரத்து
பழுதடைந்துள்ளதால் அதைச் சீரமைக்க வேண்டும். வரதராஜ
புரம், சிங்காநல்லூர், நீலிக்கோளம்பாளையம் போன்ற பகுதி
களில் குறுகிய பாதைகள் இருப்பதால் அதை பெரிதாக்க வேண்டும்
அதற்காக சீக்கிரம் தேர்தல் நடத்த வேண்டும் என்று கேட்டு
முடித்துக் கொள்கிறேன்.

(மாலை 6·20)

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, கோவை நகராட்சி தனி அதிகாரி நியமித்தல்
பில்லை வரவேற்றுப் பேசுகின்ற அதே நேரத்தில் தனி அதிகாரிகள்
பதவிக் காலத்தை நீட்டிப்பதைவிட விரைவிலே தேர்தலை
நடத்த வேண்டுமென்று இங்கே பல உறுப்பினர்களும்
சொன்னார்கள்.

பொதுவாக ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள தனி அதிகாரிகள்
தங்களுடைய பணிகளைச் செம்மையாகச் செய்வதற்கு
ஆலோசனைக் குழுக்களை ஏற்படுத்தினார்கள். அவர்கள்
கூறுகின்ற கருத்துக்களை அங்கே இருக்கிற அதிகாரிகள் கேட்டு,
வேலை செய்ய காலதாமதம் ஏற்பட்டது. பொதுவாக தேர்தலை
நடத்துவதற்குக் காலம் கடந்தாலும் பரவாயில்லை. ஒவ்வொரு
ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆலோசனைக் குழுவைப் போட்டு,
மாதம் ஒருமுறை கூட்டம் போட்டு, குழு உறுப்பினர்கள்
சொல்லும் கருத்துக்களைக் கேட்டு அந்தத் தனி அதிகாரிகள்
செயல்பட அரசாங்கம் ஆணை பிறப்பிக்க வேண்டும்.

அதே நேரத்தில் அந்த ஆலோசனைக் குழுக்களில் முன்பு
திராவிட முன்னேற்றக் கழகம், இந்திரா காங்கிரஸ், மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்தவர்கள்தான் உறுப்பினர்களாக
இடம் பெற்றிருந்தார்கள். அதனால் அவர்கள் எல்லாம்
''இருப்போர் இருக்கட்டும், போவோர் போகட்டும்'' என்று
சொல்வார்களே, அந்த முறையில் பணியாற்றிக் கொண்டிருந்
தார்கள்.

ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டம்
என்ற திட்டத்தை இப்போது அரசு அறிவித்திருக்கிறது. இந்த
நேரத்தில் தனி அதிகாரிகள் சிறப்பாகச் செயல்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தன்னிறைவுத்
திட்டம்பற்றி ஏற்கெனவே சொல்லி முடித்தாகி விட்டது.
விட்டாருங்கள். (அ த்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)



திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்
களே, இங்கே ஊராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்கள், மாநகராட்சி
இவைகளுடைய தேர்தல்களை விரைவிலே நடத்துவோம் என்ற
உறுதிமொழி இருந்தாலும் அது கால தாமதம் ஆவதற்கான
காரணத்தைச் சொல்லும்போது 21 வயதிலிருந்து வாக்குரிமை
வயதை 18 ஆகக் குறைத்திருப்பதை நீங்கள் காரணம் காட்டி
யிருக்கிறீர்கள். இந்த 18 வயதை அநேகமாக எல்லோரும்
வரவேற்றிருக்கிறார்கள். நாங்கள் முழுமனதோடு வரவேற்றி
ருக்கிறோம். காரணம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே 18 வயது
வந்த அத்தனை பேர்களுக்கும் வாக்குரிமை அளிக்க ஒரு லட்சம்
இளைஞர்களிடம் குறிப்பாக மாணவர் மாணவியர்களிடம்
கையெழுத்து பெற்று டெல்லியிலே பாராளுமன்ற சபாநாயகராக
இருந்த ஹெக்டே அவர்களிடம் சமர்ப்பித்திருக்கிறோம்.
எனவே, எங்களுடைய கோரிக்கையை நீங்கள் நிறைவேற்றி
யிருப்பதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பதினெட்டு வயது வந்தவர்களை எல்லாம் வாக்காளர்
பட்டியலில் சேர்ப்பதற்குக் காலம் ஆகும் என்பதை நாங்கள்
ஒப்புக் கொள்கிறோம். அதே நேரத்தில் விரைந்து மக்களால்
தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பொறுப்பிலே அந்த நிர்வாகங்கள்
வரவேண்டுமென்று மிகுந்த அக்கறையுடனே நாங்கள் இருக்
கிறோம். காரணம் ஸ்பெஷல் ஆபீசர் என்று ஏற்படுத்தினால்,
பஞ்சாயத்து யூனியனை எடுத்துக் கொண்டால், அவர்கள்தான்
கமிஷனர், அவர்கள்தான் ஸ்பெஷல் ஆபீசர். எல்லாம் அவர்
என்றுதான் வரும். அதைப்போல ஊராட்சியை எடுத்துக்
கொண்டால் அந்த ஊராட்சியிலே அங்கே இருக்கிற எக்சி
யூட்டிவ் ஆபீசர்தான் அங்கே ஸ்பெஷல் ஆபீசர். அவர்தான்
எல்லாம். ஆனால் சில கிராமப் பஞ்சாயத்துக்களை எடுத்துக்
கொண்டால் அந்தக் கிராமப் பஞ்சாயத்துக்கள் கலைக்கப்பட்ட
நாளிலிருந்து அநேகமாக அனாதைப் பிள்ளைகளைப் போல
காட்சியளிக்கின்றன. பார்ப்பதற்கு யாருமே இல்லை. கிராம
சேவக் எப்போதாவது அந்தப் பக்கம் வந்தால் உண்டு.
அவருக்கும் அந்த கிராமங்களுக்கும் இருக்கும் தொடர்பு ஓரளவு
நிழலாட்டம்போல் நம் நெஞ்சங்களிலே படுமே தவிர மக்களுக்கு
நல்லது நடப்பதாகத் தெரியவில்லை.

இந்தச் சூழ்நிலையிலே நாம் பார்க்கின்றபோது சகல அதி
காரங்களும் பெற்றிருக்கின்ற சில பி.டி.ஓக்கள் என்னென்ன வகை
யிலே வாழ்க்கை வசதிகளைப் பெற்றிருக்கின்றார்கள் என்பதை
யும் அரசாங்கம் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
இன்னும் எங்களுடைய கட்சியின் சார்பிலே உங்களிடத்திலே
பணிவாக ஒரு வேண்டுகோளை வைக்கின்றேன். இந்தப் பஞ்
சாயத்து யூனியன்கள் கலைக்கப்பட்ட காலத்திலே இருந்து, இந்த
முனிசிபாலிட்டிகளினுடைய நகராட்சி மன்றங்கள் கலைக்கப்
பட்ட காலத்திலே இருந்து ஸ்பெஷல் ஆஃபீஸர்கள் போடப்

பட்ட நாளிலிருந்து தொடங்கி இன்று வரை அந்தப் பொறுப்
பிலே இருந்த அதிகாரிகள் எந்தெந்த அளவுக்குத் தங்களுடைய
வாழ்க்கையிலே வசதிகளைப் பெருக்கிக்கொண்டிருக்கிறார்கள்
என்பதைப் பரிசீலனை செய்வதற்கு ஒரு கமிஷன் போட்டால்
கூட தவறு இல்லை என்பதைச் சொல்கின்ற அளவுக்கு அவர்கள்
உயர்ந்திருக்கிறார்கள். அவர்கள் எந்த வகையிலே உயர்ந்
திருக்கிறார்கள் என்பதை நாம் பார்த்தாகவேண்டும். எனவே
மக்களினுடைய பிரதிநிதிகள் அங்கே ஆளவில்லை என்று சொன்
னால் பொறுப்பு வகிக்கவில்லை என்று சொன்னால் என்னென்ன
தீங்குகள் ஏற்படும் என்பதற்குச் சான்றாக சில அதிகாரிகள்
நடந்துகொள்கிறார்கள். இன்னும் ஒரு முக்கியமான செய்தியை
நான் இங்கே சொல்ல வேண்டும் நமது மாண்பிற்குரிய திரு.
இளையபெருமாள் போன்றவர்கள் பேசியதினுடைய தொடர்
பாகச் சொல்கிறேன். நகரசுத்தித் தொழிலாளர்களாக இருக்
கின்றவர்கள், இத்தனை மக்களுக்கு ஒருவர் இருக்கவேண்டும்
ப்ரப்போர்ஷனேட்டாக அதாவது விகிதாச்சாரத்தின்படி இருக்க
வேண்டும் என்று இருக்கின்றது. அப்படி உதாரணமாக எடுத்துக்
கொண்டால் திருவொற்றியூர் நகராட்சிக்கு நான் அண்மையிலே
சென்று அங்கிருக்கக்கூடிய சூழ்நிலையைப் பார்த்த நேரத்தில்
அந்த மக்கள் தொகைக்கேற்ப இன்னும் 130 பேர் நகரசுத்தித்
தொழிலாளர்கள் தேவைப்படுகிறார்கள் என்று சொன்னால்,
அந்த வேண்டுகோளை விடுத்துப் பலநாட்கள் ஆகியும கூட அங்கு
விகிதாச்சாரத்தின் அடிப்படையில் தேவைப்படுகின்ற அந்த 130
பேர்களைக் கூட அங்கே போடுவதற்குரிய அனுமதியை விரை
விலே வழங்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன இருக்கின்றது
என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதுமட்டுமல்ல. குழி
களிலே நிறைந்து கிடக்கின்ற, தேங்கிக் கிடக்கின்ற சாக்கடைத்
தண்ணீரை அப்புறப்படுத்துவதற்கு வேண்டிய லாரி ஒன்று ரிப்
பேர் ஆகிவிட்டது என்று சொன்னால் உங்களால் அங்கீகரிக்கப்
பட்ட வொர்க் ஷாப்புக்கு போய்விட்டு வருவதற்கு 9 மாதங்கள்
ஆகின்றன. நீங்கள் சில தொழிற்சாலைகளைத்தான் அங்கீகாரம்
செய்து இருக்கிறீர்கள். திருவொற்றியூர் போன்ற நிறைய வரு
மானம் வருகின்ற நகர சபையிலே தாங்களே ரிப்பேர் செய்கின்ற
அளவுக்கு ஒரு ஓர்க் ஷாப் வைத்தால் என்ன என்பதை நாம்
சிந்தித்துப் பார்ப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம். இல்லை
என்று சொன்னால் பெரிய கம்பெனிகளுக்கு அனுப்பி வருவதற்கு
9 மாதங்கள் ஆகும்.

அதைப்போல மாடு இழுக்கின்ற வண்டிகளை எடுத்துக்கொண்
டால் வண்டி இருந்தால் மாடு இல்லை, மாடு இருந்தால் வண்டி
இல்லை என்று சொல்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. பஞ்சர்
ஆகிக் கிடக்கின்ற வண்டியை பஞ்சர் ஒட்டுவதற்குக் கூட 3 மாத
காலம் ஆகிறது. காரணம் கேட்டால் பஞ்சர் ஆகிக்கிடக்கின்றது
என்று சொல்வதும் பால் பேரிங் போய்விட்டது என்று சொல்
வதும் ஆக 3 மாத காலம் அந்த வண்டிகள் அப்படியே கிடப்





பதும், இவ்வாறு 3 மாத காலம் இந்த வண்டிகள் ஒரு பக்கத்திலே கிடக்கின்ற சூழ்நிலையிலே இங்கே சாக்கடைத் தெருவெல்லாம் வழிந்தோடுவதும் கண்கொள்ளாத காட்சியாக இருக்கின்றது. பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் யாராவது மாட்டிக்கொண்டால் அவர்களைப் பிடித்து இழுத்து என்ன இது என்று கேட்பார்கள். வார்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இல்லாத காரணத்தால் தொகுதிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாங்கள் மாட்டிக்கொண்டு விழிக்கிறோம். நாங்கள் போகின்ற போது எல்லா வார்டுகளிலே உள்ள கோபமும் எங்கள் மீது திரும்புகின்றது. எனவே இங்கிருக்கின்ற மாண்புமிகு அமைச்சரவர்களிடத்திலே நான் ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். அதாவது இப்படிப்பட்ட சூழ்நிலை அங்கு வருவதற்குக் காரணம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அங்கே இல்லை. ஆகவே அந்தத் தேர்தல் விரைவிலே வருவதற்குரிய சூழ்நிலையை நீங்கள் உருவாக்கித்தரவேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொண்டு வயதைக் குறைத்ததற்கும், அதற்காகத் தான் நீங்கள் தேர்தலைத் தள்ளிப்போடுகிறீர்கள் என்பதற்காகவும் நான் இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று அமர்கிறேன், வணக்கம்.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1980 ஆம் ஆண்டு சட்டத்திருத்த எண் 39 மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த அரசு பல முறை இந்த மாமன்றத்திலே ஊராட்சித் தேர்தல், ஊராட்சி ஒன்றியத் தேர்தல் போன்றவைகள் எல்லாம் 6 மாதத்திற்குள்ளாக மிக விரைவில் நடைபெறும் என்று பல முறை இங்கு கூறப்பட்டு இன்று வரையிலும் ஊராட்சி மன்றத் தேர்தல்களோ ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களோ நடைபெறவில்லை என்பதை நான் முதலிலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து தனி அதிகாரியின் நியமனத்தை மேலும் 6 மாத காலத்திற்கு நீட்டிப்பதற்கான இந்தச் சட்டத் திருத்தத்தை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். தற்போது ஊராட்சி மன்றங்களின் தனி அதிகாரிகளாக ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையர் இருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியத்திற்குக்கோட்ட வளர்ச்சி அதிகாரி அவர்கள் தனி அதிகாரியாக இருக்கிறார்கள். தற்போது ஊராட்சி மன்றம் கலைக்கப்பட்டதிலிருந்து நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய வேலை என்னவென்றால் ஊராட்சிகளின் நிதிநிலை எந்த அளவுக்கு இருக்கின்றது என்பதைக் கவனிக்க வேண்டும்.

ஊராட்சி மன்றத் தலைவர், ஊராட்சி மன்றத்தின் பொறுப்பிலே இருந்தபோது ஊராட்சியின் நிதி வளர்ச்சியைப் பாதுகாத்து குறைகள் என்ன என்பதை ஆராய்ந்து பணிகளைச் செய்கின்ற போது சிக்கனமாகச் செவ்வனே செய்து வந்தார்கள். ஆனால்

[திரு. த. வேணுகோபால்] [1980 ஆகஸ்ட் 11

தற்போது ஊராட்சியின் தனி அதிகாரியாக இருப்பவர்கள் எல்
லாம் ஊராட்சி மன்ற நிதிகளைக் காலி செய்கின்ற அளவில் அதா
வது கஜானாவைக் காலி செய்கின்ற அளவில்தான் நடந்திருக்
கிறார்களே தவிர கிராமங்களில் உள்ள பணிகள் வளர்ச்சி
அடைந்து இருக்கின்றதா என்று பார்த்தால் வளர்ச்சி அடைய

[மாலை 6·30]

வில்லை. எங்கு சென்றாலும் அந்தக் கிராம மக்கள் சாலை
வசதிகள் இல்லை, போக்கு வரத்து வசதிகள் இல்லை, மின்சார
வசதிகள் இல்லை, குடிதண்ணீர் வசதியில்லை என்று பல குறை
பாடுகளைக் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னொரு முக்கியமான விஷயம் இதில் என்னவென்று சொன்
னால், ஊராட்சி ஒன்றியத்தின் விஸ்தரிப்பு அதிகாரி, ஈ.ஓ.பி.
என்று சொல்லப்படுபவர்—பஞ்சாயத்து ஆபிசர், அவர்
ஆணையரின் கீழ் பணி புரிகிறார். ஆனால் ஆணையரின் செலவு
கணக்குகளை ஆடிட் செய்து, தணிக்கை செய்வது
இந்த பஞ்சாயத்து அலுவலர் தான். இப்படி ஆணையரின் கீழ்
வேலைசெய்யும் ஒருவர், ஊராட்சி ஒன்றியத்திற்கான கணக்கு
களைத் தணிக்கை செய்வது முறையானது அல்ல என்று கூறிக்
கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஆலோசனைக் கமிட்டி நியமிக்கப்
பட்டிருக்கிறது. அந்த ஆலோசனை கமிட்டியில் உள்ளவர்களோ,
அல்லது சட்டமன்ற உறுப்பினர்களோ எதையாவது எடுத்துக்
கூறினாலும் அதை அவர்கள் ஏற்றுக் கொள்வது இல்லை. அத
னால், ஊராட்சிகளின் பணிகள் செவ்வனே நடைபெறுவது
இல்லை. தனி அதிகாரிகள் பொறுப்பில் இருப்பதால், ஊராட்சி
ஆணையர்களும் பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறார்கள், கோட்ட
வளர்ச்சி அலுவலர்களும் பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறார்கள்.
இப்படி இவர்கள் பொறுப்பைத் தட்டிக் கழிப்பதால் கிராமங்
களிலே உள்ள பணிகள் நடைபெறுவது இல்லை என்று இந்த
நேரத்தில் கூறிக் கொள்கிறேன்.

பெரிய ஊராட்சி ஒன்றியங்களையும், பெரிய ஊராட்சி மன்
றங்களையும் பிரிப்பதற்கு வேண்டிய ஆவனங்கள் ஏற்கெனவே
செய்யப்பெற்று, சில ஊராட்சி ஒன்றியங்களும், சில ஊராட்சி
மன்றங்களும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மீண்டும் 6 மாத கால
அவகாசம் தற்போது நீட்டிக்கப்பட்டு இருப்பதால், 60, 58
என்ற எண்ணிக்கையில் ஊராட்சி மன்றங்களைக் கொண்ட
திருவண்ணாமலையையும், வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள
திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தையும், இந்த 6 மாத காலத்
திற்குள் இரண்டிரண்டு ஊராட்சி ஒன்றியங்களாகப் பிரிக்க
வேண்டும் என்றும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட
வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.



980 ஆகஸ்ட் 11] [திரு. த. வேணுகோபால்]

இந்த 6 மாத காலத்திற்கு அவர்களின் பதவிக் காலத்தை
ட்டிப்பதன் நோக்கமும், வாக்குரிமை கொடுப்பதில் 21 வய
லிருந்து 18 வயது என்று மாற்றியதுதான் என்று காரணம்
றிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காரணத்தை நானும் ஏற்றுக்
காள்கிறேன். ஆனால் இந்த 18 வயது ஆக்கியதுதான் காரணம்
ன்று சொல்லி மீண்டும் ஒரு முறை இன்னொரு 6 மாத காலத்
ிற்குத் தவணை கேட்காமல், இந்த 6மாத காலம் முடிந்தவுடன்
டனடியாக இந்த ஊராட்சி மன்றத் தேர்தல்களை நடத்த
வண்டும் என்று சொல்லி, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி
றி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. கே. நாராயணசாமி : "மாண்புமிகு பேரவைத் துணைத்
லைவர் அவர்களே, இந்த அவையிலே ஆளும் கட்சிக்காரர்களும்,
திர்க்கட்சிக்காரர்களும், எல்லோருமே எலெக்ஷன் வைக்
வண்டும் என்பதைத்தான் திருப்பி திருப்பி வலியுறுத்துகிறார்கள்.
கராட்சிகளிலும், பஞ்சாயத்துக்களிலும், தனி அதிகாரிகளின்
ர்வாகம் சரியாக நடைபெறவில்லை என்று சுட்டிக்காட்டி
டனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டார்கள்.
ாளைக்கே தேர்தலை வைத்தாலும் கூட அவர்கள் தயாராக
இருப்பார்கள் போல் தெரிகிறது. அவர்கள் அதைக்கூட விரும்பு
வார்கள் என்று நினைக்கிறேன்.

ஆகவே அமைச்சர் அவர்கள், வாக்குரிமை கொடுக்கும்
வயதை 21லிருந்து 18 ஆக மாற்றியதை இந்தத் தேர்தலுக்கு
த்திப் போட்டு விட்டு, தேர்தலை நடத்திவிட்டு, அடுத்த
தர்தலுக்கு வேண்டுமானால, அதை அமுலுக்கு கொண்டு வரும்
வகையில் நடவடிக்கை எடுக்கலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய ஊரானகீழ் பெண்ணாத்தூரில் ஒரு
ரி இருக்கிறது. அந்த ஏரியில் உள்ள மதகு தண்ணீர் வந்தால்
ானாகத் திறந்து கொள்கிறது. தண்ணீர் போய்விட்டால்
ானாக மூடிக்கொள்கிறது. அதை அந்த முறையில் இல்லாமல்
ண்ணீர் வந்தால் கெட்டியாக மூடிக் கொண்டு அதைத் தேக்கி,
வைத்து உபயோகப்படுத்தும் அளவிற்கு ஏற்பாடு செய்யவேண்டும்
ன்று கேட்டு, அமர்கிறேன், வணக்கம்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் துணைத் தலைவர்
வர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்
காண்டு வந்திருக்கிற, இந்தத் தனி அதிகாரிகள் பதவி நீட்டிப்பு
சோதா மீது நான் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல
ிரும்புகிறேன்.

ஆட்சிக் கட்டிடம் என்று சொன்னால், அந்தக் கட்டிடத்திற்கு
வுண்டேஷனாக இருப்பது, அடிப்படையாக இருப்பது உள்
ளாட்சி தான் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. அந்த

வகையில் உள்ளாட்சி நிர்வாகத்திற்கான தேர்தல்கள் உடனடி
யாக விரைவாக நடத்தப்பட வேண்டும் என்பதிலே யாருக்கும்
மாற்றுக் கருத்தும் கிடையாது.

இங்கே தனி அதிகாரிகளின் ஆட்சியைப் பற்றி பலரும்
எடுத்துச் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் அது
எப்படி நடைபெறுகிறது என்று சொன்னால், தெனாலிராமன்
குதிரைக்குத் தண்ணீர் காட்டிய கதையாகத்தான் இருக்கிறதே
தவிர அது சரியான, முறையான ஆட்சியாக இல்லை என்பதை
ஆட்சி கட்சியின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த வகையில் அந்த ஆலோசனைக் குழுவை, நிர்வாகக் குழு
என்று மாற்றியமைக்க வேண்டுமென்று, அதற்கான வழிவகைகள்
செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டு
மென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

அது மட்டுமல்ல. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த ஆட்சியில்
ஏன் இதுவரை தேர்தல் நடைபெறவில்லை என்று சொன்னார்கள்.
அதற்கு நான் விளக்கம் சொல்லியாக வேண்டிய கட்டாயத்தில்
இருக்கிறேன். அண்ணா தி.மு.க. கட்சி 1977-லே ஏற்பட்டிருந்
தாலும் சரி, அதற்குப் பிறகு 1980-லே ஏற்பட்டிருந்தாலும்கூட,
இந்தக் ஒரு கட்சி ஆட்சி,ஆட்சியை அதிகாரிகளிடமிருந்து வாங்கி
யிருக்கிறதே தவிர, இன்னொரு கட்சியிடமிருந்து இந்தக் கட்சிக்கு
ஆட்சி மாறவில்லை. ஏற்கெனவே இருந்த பல முதல்வர்களிடம்
இந்தக் கட்சி ஆட்சி மாற்றப்பட்டதற்கும், அதற்குப் பின்னாலே
புரட்சித் தலைவர் அவர்களுக்கு அந்த ஆட்சி மாற்றப்பட்டதற்கும்
வித்தியாசம் இருக்கிறது; இதை மிகத் தெளிவாக உணர முடியும்.
அந்தவகையில் இந்த ஆட்சி அமைவதற்கு முன்பாக, இது ஆளு
நரின் ஆட்சியாக அதிகாரிகள் செய்யக்கூடிய ஆட்சியாக இருந்தது
என்பதையும், அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஏற்கெனவே பலப்
பல தவறுகள் செய்திருப்பது ஒரு தொடர்கதையாக இருந்துவந்த
காரணத்தினால், உடனடியாக பல பிரச்சினைகளில் சிக்கல்களைத்
தீர்த்து தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயத்திற்கு வரமுடி
யாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது என்று சொன்னால் அது மிகை
யாகாது. ஆகவே, அது கலைஞராக இருந்தாலும், பேரறிஞர்
அண்ணாவாக இருந்தாலும், பக்தவத்சலம் அவர்களாக இருந்தா
லும், காமராஜ் அவர்களாக இருந்தாலும் கூட, அவர்கள் எல்லாம்
ஆட்சிக்கு வருகின்றபோது ஒரு கட்சியிடமிருந்து ஆட்சியைக்
கைப்பற்றினார்கள். ஆனால் அண்ணா தி.மு.க. ஆட்சிப் பொறுப்
பிற்கு வருகிறபோது, அதிகாரிகள் கையிலே இருந்து வாங்கிய
காரணத்தால், அதிகாரிகள் பலப்பல நேரங்களில் அவர்கள் ருசி
கண்ட பூனைகள் மாதிரி அவர்கள் ஆட்சியில் இருந்த நேரத்தில்
பலப்பல முறைகேடுகளும், சீர்கேடுகளும் நடந்து இருக்கின்றன
என்பதை என்னால் சொல்ல முடியும். ஆகவே, தேர்தலை உட
னடியாக நடத்தக் கூடிய வகையிலே நோக்கம் இருந்தாலும், ஆத்





திரம் அறிவைச் சிதற அடிக்கும்—அவ்வாறு இல்லாமல் நல்ல
முறையிலே வரக்கூடிய, இந்தத் தேர்தலை நடத்துவதற்கு அரசு
ஆயத்தமாக இருக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்
கொள்கிறேன்.

இந்த ஆட்சி வந்தபிறகு, தேர்தல் நடத்த வேண்டும் என்ற
முடிவுக்கு வந்தபிறகு, இந்த ஆட்சி கலைக்கப்பட்டது. மீண்டும்
தேர்தலைச் சந்தித்து, ஆட்சிக்கு வந்திருக்கிறது. இந்தத்தேர்தலை
நடத்தவேண்டும் என்று இந்த அரசு எவ்வளவோ முனைப்பாக
இருந்தாலும், மத்திய அரசின் கணக்கெடுப்பு நடந்து கொண்டிருக்
கிறது. காவேரிப்பட்டினத்தின் ஒரு பகுதியைத் தலைநகராக்க
வேண்டும் என்று அரசு கருதினாலும்கூட, மத்திய அரசின் இந்தக்
கணக்கெடுப்பு வேலை நடந்து கொண்டிருப்பதால், அவ்வாறு
செய்யமுடியாத ஒரு நிலை இருக்கிறது. பல பஞ்சாயத்துக்கள்,
நகராட்சியாக ஆக்கவேண்டுமென்று எண்ணினால கூட, அதைச்
செய்யமுடியாதபடி இந்திய அரசின் கணக்கெடுப்பு தடையாக
இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் இவைகளை
யெல்லாம் நீங்கள் உணர்ந்து, காலதாமதம் ஆனாலும்கூட,
தமிழக அரசு நல்ல முறையிலே ஆட்சி செய்யக்கூடிய
நிலையிலே கிராமங்களிலே உள்ள ஒளி விளக்குகள் எல்லாம் நல்ல
முறையிலே எரியவேண்டும் என்ற சூழ்நிலையை உண்டாக்குவதற்காக
மீண்டும் அந்த வேலைகளை போர்டிடமே கொடுத்து வேகமாகச்
செயலாற்றவும், 'பே அண்டு யூஸ்' என்ற வகையில் கழிப்பிடங்
களை அமைத்து நல்ல சுகாதார முறைகளைப் பேணிக் காக்கவும்,
தன்னிறைவுத் திட்டத்தை இந்த அரசு வேகமாகச் செயலாற்ற
வேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்
தில், தயவு செய்து இந்த அண்ணா தி.மு.க. அரசு சட்டமன்ற
உறுப்பினர்களுக்கு இரண்டு நாட்களுக்கு 50 லிட்டர் பெட்ரோல்
என்பதை, 100 லிட்டர் பெட்ரோலாக உயர்த்திக் கொடுத்தால்,
இந்த சேர்மன் இல்லாமலேயே அங்குள்ள பணிகளை எல்லாம்
நாங்களே வேறு யாரும் செய்ய முடியாத அளவுக்கு வழிவகைகள்
செய்துகொடுப்போம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரி
வித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கக்கூடிய பல பிரச்னைகளை
இப்போது பப்ளிக் ஒர்க்ஸ் டிப்பார்ட்மெண்ட் செய்து வருகிறது.
அந்த பப்ளிக் ஒர்க்ஸ் டிப்பார்ட்மெண்டை மூதறிஞர் ராஜாஜி
அவர்கள் சொன்னது போல், பப்ளிக் வேஸ்ட் டிப்பார்ட்மெண்ட்
என்று சொல்லக்கூடிய வகையில் சில நேரங்களில் சில இடங்களில்
இருக்கிறது. ஆகவே, அதைப் பப்ளிக் வெல்பேர் டிப்பார்ட்
மெண்டாக மாற்றியமைத்துத் தருவதுடன், மக்களுக்கு நல்ல முறை
யிலே பணியாற்ற வேண்டுமென்றால், நீங்கள் உடனடியாக அந்த
அதிகாரத்தை, தொகுதி முழுவதையும் சுற்றிப் பணியாற்றுவதற்
கான அதிகாரத்தை வழங்கவேண்டும் என்று கேட்டு, அதே
நேரத்தில் ஆலோசனைக் குழுவை நிர்வாகக் குழுவாக மாற்றி

[டாக்டர் கே. சமரசம்] [1980 ஆகஸ்ட் 11

யமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 21 வயதி
லிருந்து 18 வயதாகக் குறைக்கும் நிலையை எவ்வளவு சீக்கிரமாகச்
செய்து முடிக்கமுடியுமோ அதைச் செய்து விரைவிலே தேர்தலை
நடத்துவோம் என்று சொல்லக்கூடிய, பாராட்டத்தக்க வகையிலே
வரவேற்கத்தக்க முறையிலே இந்தத் தேர்தலை நடத்தவேண்டும்
என்று சொல்லி, இந்த மசோதாவை ஆதரித்து அமருகிறேன்.
வணக்கம்.

[மாலை 6-40]

திரு. எல். இளையபெருமாள்: பாயின்ட் ஆப் இன்பர்மேஷன்.
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடியரசுத் தலைவர்
ஆட்சியில் அதிகாரிகள் தவறு செய்தார்கள் என்று சொல்கிறார்
கள். குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தை அமல்படுத்த வேண்டு
மென்று 1977-ல் முதலமைச்சர் அவர்களிடம் சொல்லியிருக்கி
றோம். குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது யாரும் தனித்துச்
செயல்படவில்லை, தவறாக நடக்கவில்லை, அப்படி இருக்குமா
னால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வார்களானால்
திருத்திக்கொள்ள ஆட்சேபணை இல்லை.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய
தலைவர் திரு. இளையபெருமாள் அவர்கள் அப்படி ஏதாவது
சீர்கேடுகள் இருந்தால் விளக்க வேண்டுமென்று சொன்னார்கள்.
தனியாகப் பெயரை எழுதி நேராக அவர்களுக்கு அனுப்பி வைக்கி
றேன். நடவடிக்கை எடுக்க அவர்கள் உறுதுணையாக இருக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. ப. சுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி,
நகராட்சி ஆகியவற்றின் தனி அதிகாரிகளுடைய ஆயுட்காலத்தை
ஆறு மாத காலம் நீட்ட வேண்டுமென்ற சட்ட முன்வடி
வைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஊராட்சி மன்றத் தேர்தல்
நடத்தப்படும், நகராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படும் என்று
சென்ற சட்ட மன்றக் கூட்டம் நடக்கிற நேரத்தில் பல முறை
வாக்களித்திருந்தாலும் இப்போது 18 வயது வந்தவர்களுக்கு
வாக்களிக்க உரிமை தரவேண்டுமென்ற நோக்கத்தினால்
ஆறு மாத காலம் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை
நீடிக்கவேண்டுமென்று காரணத்தைச் சொல்லுகிறார்கள்.
மேலும் காலத்தை நீட்டிக்காமல் உடனடியாக ஊராட்சி மன்
றத் தேர்தல்களையும் நகராட்சி மன்றத் தேர்தல்களையும்
நடத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் என்னுடைய பகுதி
யில் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 72 ஊராட்சிகள்
இருக்கின்றன. அவற்றுக்கு ஒரே ஒரு தனி அதிகாரி இருக்கும்
காரணத்தால் எந்த ஒரு ஊராட்சி மன்றத்திலும் குடிநீர்
வசதியோ, சாலை வசதியோ, மின்சார வசதியோ, மற்ற எந்த



1980 ஆகஸ்ட் 11] [திரு. ப. சுந்தரம்]

வசதிகளுமோ இல்லாமல் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்,
வேதனைப்படுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருப்பத்தூர் பற்றி நீங்கள் எல்லாம் பத்திரிகையில் படித்
திருப்பீர்கள். அந்தப் பயங்கரமான சம்பவம் நடக்கிற
நேரத்தில் கூட கிராமங்களில் மின்சார விளக்குகள் எரியாமல்
மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்று தெரிவித்துக் கொள்
கிறேன். இந்த ஒன்றியத்தில் உள்ள ஒவ்வொரு ஊராட்சி
யிலும் ஏழாயிரம் வாக்காளர்கள், ஆறாயிரம் வாக்காளர்கள்,
ஐந்தாயிரம் வாக்காளர்கள் என்று இருக்கிறார்கள். அப்படிப்
பட்ட ஊராட்சிகளை எல்லாம் தேர்தலுக்கு முன்னால் இரண்
டாகப் பிரித்து தேர்தலை நடத்த வேண்டுமென்று தெரிவித்துக்
கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் பகுதியில் ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்
தது போல் நகரத்திலும் குண்டுகளை வீசக்கூடிய நிலை
வந்திருக்கிறது. நகரத்தின் மெயின் ரோடுகளில் கூட 50
லைட்டுகள் இருந்தாலும் இரண்டு மூன்று மின்சார விளக்குகள்
தான் எரிந்து கொண்டிருக்கின்றன. மக்கள் எல்லாம் பீதி அடைந்
திருக்கிறார்கள். மக்கள் தனி அதிகாரிகளை அணுகினாலும்
மின்சார இலாகாவை அணுகவேண்டுமென்று சொல்லுகிறார்கள்.
குடிநீர் இல்லையென்று சொன்னால் குடிநீர் வாரியத்தை அணுக
வேண்டுமென்று சொல்லுகிறார்கள். குடிநீர் வாரியத்தை
அணுகவேண்டுமென்று சொன்னால் வேலூருக்குத்தான் வர
வேண்டும். இதுபோன்ற குறைகளைப் போக்க உடனடியாக
நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்
துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. இல. பலராமன்: உதவித் தலைவர் அவர்களே,
உள்ளாட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள் தனி அதி
காரிகளின் பதவிக் காலத்தைக் கூட்டக்கூடிய மசோதாவை
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.
தனி அதிகாரிகளுடைய தினமாகவும் தனி அதிகாரிகளுடைய
நாளாகவும் இதைக் கருதக்கூடிய நிலையில் இருக்கிறோம்.
ஊராட்சி ஒன்றியங்கள் என்று கூறும்போது அண்ணல் காந்திஜி
கண்ட கனவை நனவாக்கக்கூடிய வகையில் அரசியல்வாதிகள்
ஆளும் பொறுப்பிலுள்ளவர்கள் கடமையுணர்வுடன் செய
லாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேர்தல் விரைவிலே வரவேண்டும் என்பது எல்லாத் தரப்
பிலிருந்தும் எழுப்பப்பெற்ற பிரச்சினையாக இருந்தாலும்,
இன்றைக்குக் கிராமப்புறங்களிலே ஜனநாயக அமைப்புகள்
இருக்கிறதா என்ற கேள்விதான் இருக்கிறது. இந்த நிலை
மையை எப்போது தீர்க்கப்போகிறார்கள் என்று தெரியவில்லை.

[திரு. இல. பலராமன்] [1980 ஆகஸ்ட் 11

இந்த நிலைமையில் மேலும் மேலும் தனி அதிகாரிகள் ஆட்சியை
நீட்டித்துக்கொண்டே சென்றால் ஜனநாயகம் செத்துவிடும்
என்ற குறைபாட்டைத்தான் நாம் கூறமுடியும்.

நாம் மத்தியிலிருந்து அதிகமான உரிமைகளைக் கூறக்
கூடிய நேரத்திலே ஜனநாயகத்தின் அடித்தளமாக இருக்கக்
கூடிய கிராமங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் கொடுப்பதற்
கான வழிமுறைகளை நாம் சிந்திக்கக்கூடிய நிலை இன்றைக்கு
இல்லை. ஜனநாயகத்தின் அடித்தளமான கிராமங்களுக்குக்
கிராம ராஜ்யமும், கிராமப் பஞ்சாயத்துக்களும், ஒன்றி
யங்களும் எந்த அளவுக்கு நல்ல முறையிலே இயங்குகின்றனவோ
அந்த அளவுக்குத்தான் சட்ட மன்றமும், பாராளுமன்றமும்
நல்ல முறையிலே இயங்கும் என்பதை அமைச்சர் அவர்கள்
உணர்வார்கள் என்று குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு ஒன்றியங்களிலே இருக்கின்ற தனி அதிகாரிகள்
ஆணையர்கள்தான். அந்த ஆணையர்கள் தாங்களே தனி நபர்
தீர்மானங்களை எழுதிக்கொண்டு தாங்களே செலவழிக்க
வேண்டிய வேலையையும் செய்கிறார்கள், அவர்களே அனைத்து
மாக இருக்கிறார்கள். அதிகாரப் பற்றற்றவர்கள் அந்த
வேலையைச் செய்கிறபோது செய்த தணிக்கை முறையைப்
போலவே இன்றைக்கு ஆணையர்கள் தனி நபர் தீர்மானத்தை
எழுதிக்கொண்டு அவர்களே செலவு செய்தாலும் அதைத் தணிக்கை
செய்வதும் ஒரு அதிகாரிதான், இ.ஓ.பி. தான் என்ற முறை
எந்த ஜனநாயகத்தைச் சேர்ந்தது என்பதை அமைச்சர்
அவர்கள் விளக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்
டுக்கொள்ள விரும்புகிறேன்.

நானும் ஒரு பஞ்சாயத்துத் தலைவர்தான். உங்கள் ஆட்சி
யிலே பஞ்சாயத்துக்கள், நன்றாக இருந்த பஞ்சாயத்துக்களைக்
கூடக் கலைத்துவிட்டார்கள். எங்களுடைய பஞ்சாயத்திலே
30 ஆயிரம் ரூபாய் நான் சேமித்து வைத்திருந்தேன். இன்
றைக்கு அந்த ரூபாயைத் தனி அதிகாரி தன்னிச்சையாக சிறு
சேமிப்பு மற்ற மற்றக் காரியங்களுக்கு எடுத்துக் கொடுக்கின்ற
நிலைமை இருக்கிறது. அவர்களே தனித்தீர்மானங்களை
எழுதிக்கொண்டு செல வழித்துவிட்டு, இன்றைக்கு 400, 500
ரூபாய்தான் அங்கே இருப்பு இருக்கின்ற நிலைமைதான் இருக்
கிறதே தவிர ஊர்களில் அபிவிருத்தி வேலைகள் கிடையாது.
இந்த நிலைமையில் மேலும் தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை
நீட்டிக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொல்வது சரி
யல்ல. மக்கள் குழு இருக்கிறது. ஆனால் அந்த மக்கள் குழு
எந்த அளவுக்குச் செயல்படுகிறது என்று பார்த்தால் வருத்தத்திற்
குரியதுதான். அதை ஆளுங்கட்சித் தரப்பிலேயே குறை கூறி
யிருக்கிறார்கள். மக்கள் குழு செயல்படாத நிலைமையில்
டி.டி.ஓ.க்களும், ஆணையர்களும் அவர்கள் நினைத்தபடி காரி
யங்களைச் செய்கிறார்கள். அங்கே மினிட்ஸ் புக், தீர்மானம்



[1980 ஆகஸ்ட் 11 [திரு. இல. பலராமன்]

புத்தகம் இருக்கிறதே அதைக்கூட யாருக்கும் தருவதில்லை.
பொறுப்பானவர்கள் சென்றால் கூட அதைக் காண்பிப்பது
இல்லை என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்
கிறேன். அங்கே இருக்கின்ற எஞ்சினியர்களைப் பயன்படுத்
திக் கொண்டு 3,000 ரூபாய்க்குள் ஒவ்வொரு திட்டமும் இருக்கக்
கூடிய முறையிலே பணத்தைச் செலவழிக்கிறார்கள். ஊராட்சி
களிலே என்ன நிலைமை இருக்கிறதோ அந்த நிலைமைதான
ஊராட்சி ஒன்றியங்களிலேயும் ஏற்பட்டிருக்கிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர் கடந்த காலத்திலே 6 மாதத்
திற்கு ஒரு முறை செல்லவேண்டுமென்று இருந்தது, இப்போது
யாரும் செல்லாத நிலைமைதான் இருக்கிறது, அவர்களுடைய
எதேச்சாதிகாரமும், காட்டுத்தர்பாரும்தான் நடைபெறுகிறது.
காட்டாறுபோல அங்கே தனிக்காட்டு ராஜாக்களாக ஆணை
யர்கள் செயல்படுகிறார்கள். யாருக்கும் அஞ்சாதவர்களாக,
அதிகாரப்பற்றற்றவர்களுக்குப் பயப்படாதவர்களாக அவர்கள்
இருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் நினைத்ததையெல்லாம்
செய்யக்கூடிய முறையிலே பல ஊழல்கள் நடைபெறுவது அமைச்சர்
அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். அதையெல்
லாம் போக்குவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டு, காந்தி
கண்ட கனவை நினைவாக்குவதற்காக ஜனநாயகத்தின் அடித்
தளத்தை மீண்டும் உருவாக்குவதற்காக வழிவகைகளைக் காண
வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அதிக நாட்கள் தள்ளாமல்
விரைவிலே நல்ல முறையிலே தேர்தலை நடத்தவேண்டுமென்று
கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

[மாலை 6-50].

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு இந்த மாமன்றத்
தினுடைய துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980 ஆம்
ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்)
திருத்தச் சட்ட முன் வடிவின் மீது நான் சார்ந்திருக்கின்ற
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகச் சில கருத்துக்களை
இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர
விரும்புகிறேன்.

இந்த மசோதாவிலே மூன்று முக்கியமான அம்சங்கள் சொல்
லப்பட்டிருக்கின்றன. தனி அதிகாரிகளாக நியமிக்கப்பட்டவர்
களின் பதவிக் காலம் 6 மாதமாக நீட்டிக்கப்படுகிறது. இடை
யிலே ஒரு வேளை நகராட்சிகளுக்குத் தேர்தல் வந்துவிட்டால்
அந்தப் பதவிக் காலம் மூன்று மாதங்களாகக் குறைக்கப்படுவதற்
கான அதிகாரத்தைப் பெறுவதற்காக இந்த மசோதா வழி
செய்கிறது.

அதைப் போலவே, இப்பொழுது வாக்காளர்களுடைய
வாக்குகள் வழங்குகின்ற உரிமை 21 வயது என்று நிர்ணயிக்கப்
பட்டிருக்கிறது. அந்த 21 வயது என்பதை 18 வயதாக
ஆக்குகிறோம் என்று அதற்கான அங்கீகாரத்தை அதிகாரத்தைப்
பெறுவதற்கு இந்த மசோதா வருகிறது.

அடுத்து, குறை கூறப் போகிறேன் என்று யாரும் கவலைப்பட
வேண்டாம். காலதாமதம் ஆகிவிடாது. 4 மாத காலத்திற்
குள்ளே 18 வயதுடையவர்களின் வாக்காளர் பட்டியல் தயார்
ஆகிவிடும் என்ற உத்தரவாதம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த மூன்று அம்சங்கள்தான் இந்த மசோதாவின் முக்கிய
அம்சங்கள் ஆகும். இதைத் திராவிட முன்னேற்றக் கழகம்
எதிர்க்கவில்லை. எதிர்க்கட்சி என்பதால் இது சரியல்ல என்று
சொல்லவில்லை. இதை நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கி
றோம். அப்படியானால், நம்முடைய துணை சபாநாயகர் அவர்
கள் சொல்லலாம், இதோடு அமர்ந்து விடுங்கள் என்று. ஆனால்
அக்பர் என்ன காரியம் செய்தார் ஆட்சியில் இருந்தபொழுது
என்று கேட்டால் அவர் நிறையச் செய்திருக்கிறார் என்று
முடித்துவிட்டால் மார்க் வராது. அது போலத்தான் எதிர்க்
கட்சியிலுள்ள நாங்கள், மனப்பூர்வமாக இதை வரவேற்றாலும்,
இதிலே உள்ள சில குறைபாடுகளைச் சொல்லக் கடமைப்பட்டு
இருக்கிறோம். அமைச்சரவர்கள் அதை அமைதியாக ஏற்றுக்
கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

நான் சொல்ல வருவது, விரைவில் தேர்தல் நடைபெற
வேண்டும். அனைத்துக் கட்சியினருக்கும் இதிலே கருத்து வேறு
பாடு கிடையாது. ஆனால் நாங்கள் உங்கள் மூலமாக
அமைச்சரவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.
விரைவில் தேர்தல் வருகிறது என்ற வாதம் இந்த மாமன்றத்தில்
ஓரே பாட்டாக, ஓரே ராகமாக, அந்தக் கீதம் காற்றிலே
கலந்து வருகிறதே தவிர, அதற்கான காரணம் திரும்பத் திரும்பச்
சூழ்நிலைகளை ஒட்டி, சந்தர்ப்பங்களையொட்டிச் சொல்லப்
படுகிறதே தவிர, அதற்கான ஆக்க பூர்வமாக முயற்சிகள் எடுக்கப்
படவில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லி, நல்ல காரியம்
நடைபெற வேண்டும், தேர்தல் விரைவில் வர வேண்டுமென்று
அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இன்னும்கூட சந்தேகம் ஏற்படுகிறது. ஒரு உதாரணத்தைச்
சொல்கிறேன். உங்கள் மூலமாக நான் அமைச்சரவர்களின்
கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மதுரை மாநகராட்சி:
அங்கு மேயரின் பதவிக் காலம் ஏறக்குறைய இரண்டாண்டுக்
காலம். ஆகஸ்ட் 8 ஆம் தேதியோடு அது முடிவடைகிறது.
இன்றைக்கு மதுரை மாநகராட்சி கலைக்கப்பட்டிருக்கிறதா என்று
கேட்டால் இல்லை. மாநகராட்சி மன்றம் உள்ளது,





சௌபாக்கியமாக, சௌகரியமாக, சிரஞ்சீவியாக உள்ளது.
நான் கேட்கிறேன், ஆகஸ்ட் 8 வந்தாகிவிட்டது. மன்ற உறுப்
பினர்களும் இருக்கிறார்கள்; மாநகராட்சி மன்றமும் கலைக்கப்
படவில்லை. பிறகு ஏன் மதுரை மாநகராட்சி மேயர் தேர்தல்
நடைபெறவில்லை? மாறாக இன்றைக்கு அதிகாரிகள் கையில்
கொடுக்கப்பட்டிருக்கிறது.

அருமை நண்பர் திரு. சமரசம் அவர்கள் சொன்னார்கள்,
தனி அதிகாரி டெல்லிப் பட்டணத்து மொகலாய சாம்ராஜ்
யத்தின் பாதுஷாவைப் போல் என்ற அவர்கள் வார்த்தையில
சொல்லாவிட்டாலும், தனி அதிகாரிகளை யதேச்சாதிகாரிகளாக
உருவாக்கும் நிலைமையை உண்டாக்க வேண்டுமா? சீசரின்
மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவளாக இருக்க வேண்டும்.
தேர்தலை விரைவில் நடத்தி மேயரிடம் அதிகாரத்தைக் கொடுக்
காமல் தனி அதிகாரிகளின் கையில் அந்த அதிகாரத்தைக்
கொடுப்பது ஏன் என்பதற்கு அமைச்சரவர்கள் அருள் கூர்ந்து
பதில் அளிக்க வேண்டுமென்று பணிவோடும், அடக்கத்தோடும்
கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, நான் உங்கள் மூலம் அமைச்சரவர்களின்
கவனத்திற்குக் கொண்டு வருவது, வாக்குரிமை வயது 18 ஆக
ஆக்கப்பட இருக்கிறது. இந்த மன்றத்தில் நான் ஏற்கனவே
பேசுகிற பொழுது சொல்லியதாக ஞாபகம். 18 அல்ல, 16
வயதினிலே என்று வாக்குரிமை கொடுத்தாலும்கூட நான்
வரவேற்கத் தயார். சுப்ரீம் கோர்ட்டில்—உச்ச நீதிமன்றத்தில்
ஒரு தீர்ப்பு சொன்னார்கள்; தெளிவாகச் சொன்னார்கள்,
மைனர், மேஜர் என்பது வயதை வைத்து அல்ல; ஒரு காரி
யத்தைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் ஒருவருக்கு இருந்தால்
அவர்களை வயதுடையவர்களாக, மேஜராக வைத்துக்
கொள்ளலாம் என்று கிட்நாப்பிங் கேஸ்களிலும், ரேப்பிங்
கேஸ்களிலும் தீர்ப்புகள் சொல்லியிருக்கிறார்கள். மாமன்றத்
துணைத் தலைவரவர்கள் தலைசிறந்த வழக்கறிஞர்;
அமைச்சரவர்களும் நல்ல வக்கீல். எனவே அவர்களுக்கும்
புரியும். ஆக, வயது ஒரு தடையாக இருக்கக் கூடாது. எனவே,
16 ஆக இருந்தாலுங்கூட, நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக
இருக்கிறோம். அமைச்சரிடத்திலே தனியாகக்கூட அல்ல,
இந்த மாமன்றத்திலேயே 10 நிமிடங்களுக்கு முன்பாக, கடைசி
யிலே ஒரு கேள்வி கேட்டேன். வாக்காளர்களுடைய வயது 18
என்று நிர்ணயிக்கிறோம். எந்த அடிப்படையில்? அவர்கள்
விவரம் தெரிந்தவர்களாக, நிலைமைகளைப் புரிந்து கொள்
பவர்களாக, ரீசனிங் பவர் உள்ளவர்களாக இருக்கிறார்கள்.
எனவே, அவர்களுடைய வயது 18—இளைஞர்கள் வாக்காளர்
களாக வரலாம், வரவேண்டும்; இளைஞர்கள் தலைமையிலே,
இளைஞர்களின் கையிலே பொறுப்புக்களை ஒப்படைக்க வேண்டு
மென்ற நல்ல எண்ணத்தோடு தூய நோக்கத்தோடு வாக்காளர்
களுடைய வயது 18 என்று கொண்டு வருகிற பொழுது,

வேட்பாளர்களுக்கு ஏன் 18 என்ற வயது இருக்கக் கூடாது;
வாக்காளர்களுக்கு 18 வயது என்றால், வேட்பாளர்களுக்கு
18 என்று ஏன் இருக்கக் கூடாது? வாக்காளர்
களுக்கு 18 வயது என்று நிர்ணயிப்பதை மகிழ்ச்சியோடு
வரவேற்கும் இளைஞர் சமுதாயம், வேட்பாளர்களது வயது 18
என்று நிர்ணயித்தால், மேலும் மகிழ்ச்சி அடையும். இளைஞர்
தலைமுறை எவ்வளவு சந்தோஷப்படும் என்பதைக் கவனத்திலே
கொண்டு நம்முடைய அமைச்சரவர்கள் அதைச் செய்ய
வேண்டும். அதற்குக்கூட நம்முடைய அமைச்சர் ஒரு விளக்கம்
கொடுத்தார். சட்டமன்ற உறுப்பினர் தேர்தலில், வாக்காளர்
வயது 21; பாராளுமன்றத் தேர்தலுக்கும் வாக்காளர் வயது
அதுதான் என, அரசியல் சட்டத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.
இராஜ்ய சபாவில், வேட்பாளர்களுக்கும், வயது நிர்ணயிக்கப்
பட்டிருக்கிறது. யாரெல்லாம் வாக்கு அளிக்க உரிமை பெற்ற
வர்கள் என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. People's Representation
Act அடிப்படையில் வயது வித்தியாசம் அங்கே இருக்கிறதே, அது
போல்தான் இங்கேயும் இருக்கிறது என்று சொன்னார்கள்.
நான் அமைச்சரைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், நீங்கள்
சொல்வது சரிதான். நீங்கள் வக்கீல்—சிறப்பாகச் சொல்கிறீர்
கள், பாராட்டுகிறேன். ஆனால், நான் ஒன்றைப் பணிவோடு
தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அரசியல் சட்டத்திலே
வாக்காளர்களுக்கு வயது 21 என்றுதான் குறிப்பிடப்பட்டு
இருக்கிறது. அரசியல் சட்டத்தைத் துணை தேடுகிற நீங்கள்,
வாக்காளர்களுக்கு 21 என்று தானே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது,
அதையே 18 என்று மாற்றுகிறீர்கள். அப்படியானால், அதில்
ஏதோ அர்த்தம் இருக்கிறது. அர்த்தம் என்றால், 18 வயதான
இளைஞர்களுக்கு வாய்ப்பு தர வேண்டுமென்று விரும்புகிறீர்கள்.
அதை மாற்றும்போது, ஏன் வேட்பாளர்களுக்கு வயதை
மாற்றக் கூடாது? அது நியாயம் தானே? முறை தானே? இதை
நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள்
என்று நம்புகிறேன்.

அதைப் போல், இன்னொரு கருத்தையும் நான் சொல்ல
விரும்புகிறேன், தனி அதிகாரிகள் நியமனம் தவறானது. தேர்
தலை விரைவிலே நடத்த வேண்டும். டாக்டர் சமரசம் அவர்
கள், நல்ல யோசனையை, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவராக
இருந்தாலும், கன்ஸ்ட்ரக்டிவ் சஜெஷன் கொடுத்தார்கள்,
இந்தத் தனி அதிகாரிகள் நியமிக்கப்படுகிற நேரத்திலே,
கோவாப்பரேடிவ்லே எப்படி, 9 பேர் கொண்ட மானேஜிங்
கமிட்டி போடப்படுகிறதோ, அது போல், போட வேண்டு
மென்று சொன்னார்கள். அதைத்தான் நான் எதிர்க்கட்சியின்
சார்பாக, உங்கள் மூலமாக, அமைச்சருடைய கவனத்திற்குக்
கொண்டு வருகிறேன். கூட்டுறவுச் சங்கங்களில், தனி அதிகாரி
கள் மூலம் இலஞ்ச இலாவண்யங்கள் நடைபெறலாம். அவர்கள்
கறை படிந்த கரங்களுக்குச் சொந்தக்காரர்களாக, பொதுச்
சொத்துக்களோடு விளையாடி விடுவார்களோ என்று, எங்கள்



கட்சியினரை மட்டுமல்ல, அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக அமைப்பாளர்களை மட்டுமல்ல, மக்கள்
பிரதிநிதிகளையும் சேர்ப்போம். ஜனநாயகம் என்னும்
தோட்டத்தில் ஆயிரம் மலர்கள் பூக்கட்டும் என்ற சிந்தனையின்
அடிப்படையில், அவர்கள் எந்தக் கட்சியாக இருந்தாலும், எந்தப்
பிரிவினராக இருந்தாலும், எல்லோருக்கும் வாய்ப்பு அளிக்கும்
வகையில் 9 பேர் கொண்ட குழு போடுவோம் என்று சொன்னார்
களே, அந்த வாதம் இங்கே பொருந்தாதா? மாநகராட்சி தனி
அதிகாரிகளை நியமிக்கின்ற இடத்திலே அந்த வாதம் பொருந்
தாதா? ஏன் பொருந்தாது? நம்முடைய மாண்புமிகு
அமைச்சரவர்களிடமிருந்து அதற்கான பதிலை, உங்கள் மூலம்
நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே,
உங்களுக்குத் தெரியாதது அல்ல, உங்கள் மூலம் நான் சொல்ல
விரும்புவதெல்லாம் ....................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எனக்கு
எல்லாம் தெரியும். நீங்கள் 7 மணிக்குள் முடிக்க வேண்டும்
என்பதும் தெரியும்.

[இரவு 7-00]

திரு. அ. ரகுமான்கான்: மாமன்றத்தின் துணைத் தலைவர்
அவர்களே, அதைப்போலவே நம்முடைய அமைச்சர் அவர்
கள் இந்த மாமன்றத்தில் ஒரு விவாதத்தின்போது ஒரு கருத்தை
வெளியிட்டார்கள். இங்கே இருக்கக்கூடிய மாமன்ற உறுப்பினர்
கள் ஆளும் கட்சியாக இருந்தாலும் எதிர்க்கட்சியாக இருந்தா
லும் எல்லோருக்கும் தெரியும் என்று நம்புகிறேன். நம்முடைய
மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்கள் தாய்மார்களுக்கு
25 சதவீதம் ரிசர்வேஷன், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 25 சத
வீதம் ரிசர்வேஷன், நிச்சயமாக இட ஒதுக்கீடு செய்வோம்
என்று சேரித் தோட்டத்திலே பூத்த அந்தக் கறுப்பு ரோஜாக்
களுக்கு, அந்த அரிஜன சகோதரர்களுக்கு, தாய்மார்களுக்கு
உறுதியளித்தார்கள்; நிச்சயமாக உண்டு என்று வாக்குறுதி
கொடுத்தார்கள். இந்த மசோதா வருகிறபோது நான் புரட்டிப்
புரட்டிப்பார்க்கிறேன், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு
உண்டா? திரும்பவும் நான் கேட்க விரும்புகிறேன். தாய்மார்
களுக்கு இட ஒதுக்கீடு உண்டா? இதிலே இல்லை என்றாலும்
நாளைக்கு தேர்தல் வந்தால் இந்த பர்சென்டேஜ் தேர்தலிலே
போட்டியிடுகின்ற அரிஜனங்களுக்கும், தாய்மார்களுக்கும் அதிக
இடம் தரப்படுமா? கடந்த சட்ட மன்றத் தேர்தலிலே இந்த
வாக்குறுதி காப்பாற்றப் பட்டிருக்கிறதா என்று பார்த்தால்,
இல்லை. (மணியடிக்கப்பட்டது) முடித்து விடுகிறேன்.
நான் அதிக நேரத்தை எடுத்துக் கொள்ள விரும்பமாட்டேன்.

[திரு. அ. ரகுமான்கான்] [1980 ஆகஸ்ட் 11

உங்கள் மூலமாக நான் தெரிவித்துக் கொள்ள விரும்பு
கிறேன். வாக்காளர்கள் பட்டியல் மிகவும் கவனத்தோடு தயாரிக்
கப்படவேண்டும். இந்திய அரசியல் சட்டத்தில் பிரதான
அங்கம் வகித்தவரும் தலைசிறந்த ஒரு சோசலிஸ்டுமாக இருக்
கிற ஒரு அறிவு ஜீவி திரு. எச்.வி. காமத் ஒருமுறை ஒரு
கருத்தைச் சொன்னார். பாராளுமன்றத் தேர்தலிலே நிற்க
விரும்பி அதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து
நிற்கப் போகின்றபோது என்னுடைய பெயர் வேட்பாளர்
பட்டியலிலே இருக்கிறதா என்று பார்க்கிற போது வேட்பாளர்
பட்டியலிலே இல்லை. வேட்பாளர் பட்டியலிலே இல்லை
என்ற காரணத்தினாலே நான் தேர்தலிலே நிற்க முடியவில்லை.
காமத் போன்ற அறிவுஜீவிகளெல்லாம் விடுபட்டுப் போய்விட்ட
போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோபித்துக்
கொள்ளக்கூடாது; தவறுகள் நடக்கக்கூடாது என்பதைச்
சுட்டிக்காட்டத்தான் நான் குறிப்பிடுகிறேன். மதுரையிலே
பழனிவேல் ராஜன் அவர்கள் குடும்பம் கட்சி அரசியலுக்கு
அப்பாற்பட்ட குடும்பம். எல்லோராலும் மதிக்கப்படுகின்ற
ஒரு குடும்பம். அவருடைய பெயர் மாநகராட்சி பட்டியலில்
இடம் பெற முடியாமல் போய்விட்டது. (மணியடிக்கப்பட்டது).

அது மட்டுமல்ல. இதிலே ஒரு வேடிக்கை என்னவென்
றால், நான் உங்கள் மூலமாக அமைச்சருடைய கவனத்திற்குக்
கொண்டுவர விரும்புகிறேன். கிறிஸ்துவர்களும், முஸ்லீம்
களும், செத்தவர்கள் உயிரோடு வருவார்கள் என்பதிலே நம்
பிக்கை வைத்திருக்கிறார்கள். ஆனால், நம்முடைய வாழ்
நாளில் செத்தவர்களை உயிரோடு பார்க்கின்ற ஒரு திருநாள்
தேர்தல் நாள். அன்றைக்கு செத்தவர்கள், கல்லறைக்
குள்ளே போய்விட்டவர்கள் எல்லாம் திடீரென்று உயிர்
பெற்று வாக்குச்சாவடிக்கு வருகிறார்கள்......

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> இத்துடன்
முடித்துக்கொள்ளுங்கள். எல்லோருக்கும் கொடுத்ததை விட
உங்களுக்கு அதிக நேரம் கொடுத்திருக்கிறேன்.

<u>திரு. எம். வின்சென்ட் :</u> துணைத் தலைவர் அவர்களே,
இறந்துவிட்டவர்கள் உயிரோடு வருவதை கிருஸ்துவர்கள் நம்புவ
தாகச் சொன்னார்கள். அவர்கள் அப்படி நம்பவில்லை.

<u>திரு. அ. ரகுமான்கான் :</u> வாக்காளர் பட்டியலில் இறந்து
விட்டவர்கள் பெயர் இருக்கின்ற காரணத்தால் அதைச்
சொன்னேன். அது மட்டுமல்ல. அவர்கள் வாக்குச்
சாவடிக்கு வந்து ஓட்டுப் போடும் விசித்திரம் கூட இருக்கிறது
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1980 ஆகஸ்ட் 11] [திரு. அ. ரகுமான்கான்]

அண்மையில் கூட, எலெக்ஷன் கமிஷனின் தலைவர் அவர்கள்
கூடச் சொல்லியிருக்கிறார்கள். கள்ள ஓட்டுப்போடுவதைத
தவிர்ப்பதற்கு எல்லோருக்கும் போட்டோ ஒட்டிய அடையாளக
கார்டு வழங்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது
பத்திரிக்கையிலும் வந்து இருக்கிறது.

<u>திரு. எம். வின்சென்ட்:</u> எலெக்ஷன் கமிஷனுக்குத் தலைவர்
கிடையாது. கமிஷனர் தான் இருக்கிறார்.

<u>திரு. அ. ரகுமான்கான்:</u> திருத்தத்திற்கு நன்றி. தலைமை
எலெக்ஷன் கமிஷனர் இருக்கிறார்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> மற்றவர்களுக்கும்
கொடுத்த நேரத்தை விட உங்களுக்கு அதிக நேரம் கொடுத்து
இருக்கிறேன். மற்றவர்களுக்குக் கொடுத்த வாய்ப்பைக் கூட
குறைத்து இருக்கிறேன், சீக்கிரம் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

<u>திரு. துரை முருகன் :</u> 5 சட்ட முன்வடிவுகள் மீது இப்
போது விவாதம் நடந்து கொண்டு இருக்கிறது. ஒவ்வொரு
பில்லிலும் 10 நிமிடம் பேசலாம். நாங்கள் பில் மீது
பேசுவதை ரெஸ்ட்ரிக்ட் செய்ய முடியாது. என்னுடைய
நேரத்தையும் சேர்த்து அவருக்குக் கொடுங்கள். நான் பேச
வில்லை.

<u>திரு. அ. ரகுமான்மான்:</u> மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்
கள் வேண்டும் என்று சொல்கிறீர்கள். ஆனால் நகராட்சி
களுக்கு அதிகாரம் தரப்பட்டு இருக்கிறதா? (மணியடிக்கப்
பட்டு அமைச்சர் பேச அழைக்கப்பட்டார்.)

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:</u> துணைத் தலைவர்
அவர்களே, 1980-ம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி
அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்ட
மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 37/1980), அதே
போல் சட்ட மன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 38/1980,
சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 39/1980,
சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 40/1980.
சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 41/1980.
ஆகிய ஐந்து சட்டத் திருத்த மசோதாக்கள் மீது பல்வேறு
உறுப்பினர்கள் இங்கே ஏறத்தாழ 15 பேர் தங்களுடைய
மேலான கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். குறிப்
பாக இந்த மாமன்றத்தில் இருக்கிற எல்லா மாமன்ற உறுப்பி
னர்களும் இந்தச் சட்டத்திருத்தங்களை ஏற்றுக்கொண்டு இருக்
கிறார்கள் என்றுதான் நான் சொல்லிக்கொள்கிறேன்.

[மாண்புமிகு திரு, ப. குழந்தைவேலு] [1980 ஆகஸ்ட் 11

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. த. வேணுகோ பால் அவர்கள் மட்டும் வன்மையாகக் கண்டிக்கிறேன் என்று சொன்னார்களே தவிர, அந்த வன்மை வார்த்தைகளில் இருந் ததே தவிர, வாதத்தில் இல்லை என்பதை நான் பணிவன் போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே இந்தச் சபை ஒரு மசோதாவை ஏற்றுக்கொண்டு இருக்கிறது. அதாவது, 21 வயது வாக்களிக்க என்று இருக் கின்றதை 18 வயது என்று குறைத்து இருக்கிறோம். இதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டு இருக் கிறார்கள். அதன் காரணமாக, அந்த இடங்களில் இந்தத் தனி அதிகாரிகள் நியமனத்தை மேலும் 6 மாத காலத்திற்கு இருக்க வேண்டும் என்பதையும் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பதில் எனக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

18 வயது வந்தவர்களுக்கு வாக்களிக்க என்று சொல்லப்படுகிற காரணத்தால், அதற்கான வகையில் வாக்காளர் பட்டியல் தயாரிக்க 4 மாத காலம் அவகாசம் தேவை என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். அதன் காரண மாக அந்தத் தனி அதிகாரியின் பதவிக்காலம் 6 மாதகாலத் திற்கு நீட்டிக்கவேண்டும் என்று சொல்வதையும் ஏற்றுக் கொள்கிற வகையில் இங்கே மாமன்ற உறுப்பினர்கள் தங்க ளுடைய மேலான கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார் கள்.

குறிப்பாக, இந்த அரசைப் பொறுத்த வரையில், உடனடி யாக உள்ளாட்சித் தேர்தலை நடத்த வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. ஜனநாயகத்தின் தொட்டில்கள் என்று சொல் லக்கூடிய ஊராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகி வற்றின் தேர்தல்கள் உடனடியாக நடத்த வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அதனால்தான் ஏற்கனவே கடந்த 1979-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரையில் இங்கே ஊராட்சிகளின் தலைவர்கள் எல்லாம் பொறுப்பிலே இருந்தார் கள். அதற்குப் பின்னர் தேர்தல் நடத்துவோம் என்று கடந்த ஜனவரி மாதத்தில் நாங்கள் வாக்குறுதி அளித்தது மட்டுமல்ல, தேதியைக் குறிப்பிட்டு, 1980 ஏப்ரல் மாதத்தில் 21-22 தேதிகளில் தேர்தல் நடத்துவோம் என்பதைக் கூட சொன்னோம். ஆனால் இடையிலே ஏற்பட்ட அரசியல் விபத்தின் காரணமாக, ஜனநாயகப் படுகொலை காரண மாகத்தான் தேர்தல்களைத் தள்ளிப் போடவேண்டிய தவிர்க்க முடியாத நிலை எங்களுக்கு ஏற்பட்டது என்பதைச் சொல்லிக்கொள்ளக்கடமைப்பட்டு இருக்கிறேன். இன்னும் கூட சொல்லப்போனால், இந்தத் தேர்தல்களை இன்னும் 6 மாதத் திற்கு முன்னதாகவே கூட நடத்துவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் பணிவோடு தெரி வித்துக்கொள்கிறேன்.



1980 ஆகஸ்ட் 11] [மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு]

(இரவு 7-10)

ஆனாலும் இங்கே எல்லோரும் ஒப்புக்கொண்ட ஒரு கருத்தை அடிப்படையாகக் கொண்டு வாக்காளர் பட்டி யலைத் தயாரிக்க வேண்டிய சூழ்நிலைகள் இருப்பதால இந்த காலதாமதமே தவிர தனிப்பட்ட முறையில் எப்படி யாவது தேர்தலைத் தள்ளிப்போட வேண்டும்; தேர்தலை ஒத்தி வைக்க வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்பதை நான் மீண்டும் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இங்கே ஒரு ராகத்தை இசைத்தார்கள். உண்மையிலே நான் 1977 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்குப் பின்னாலே அவருடைய பேச்சைத் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறேன். ஒரே ராகம். ஒரே தாளம் என்ன அளவிலே பாடிக்கொண்டிருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். ஏனென்றால் எங்களைப் பொறுத்தவரையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையாகிய ராகத்தைத் தான் நாங்கள் இதுவரை பாடிக்கொண்டிருக்கிறோம். எங்க ளுக்கு என்று தனிப்பட்ட ராகத்தை இதுவரை பாடவில்லை. ஆனால் ரகுமான்கான் அவர்கள் அவருக்கே உரிய ராகத்தை, தாளத்தை இசையை அடிக்கடி பாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் அவருக்கு இருக்கிற தனித்தன்மையை பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் அவர்கள் மதுரை மாநகராட்சியப்பற்றி கோடிட்டு காட்டி, பேசினார்கள். மதுரை மாநகராட்சிக்கு எவ்வளவு சிக்கிரமாக புது மேயர் தேர்தலை நடத்த முடியுமோ அவ்வளவு சிக்கிரத்தில் அந்தத் தேர்தலை நடத்த இருக்கிறோம் என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல ரகுமான்கான் அவர்கள் இன்னொன்றையும் குறிப்பிட்டார்கள். சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற் பட்டு இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஊழல் என்ற சந்தேகம் இல்லாத அளவுக்கு நீதி, நியாயம், நேர்மை என்ற அளவில் ஊழலுக்கு இடம் இல்லாமல் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு துணைத் தலைவ ரவர்களே, இந்த அரசு கறைபடாத அரசு என்று சொன்னார், நன்றி. ஆனால், ஒரே ராகத்தைப் பாடுவதாகச் சொன் னார்கள். அதற்குக் காரணம் இந்த அமைச்சரவை போடு கின்ற தப்புத் தாளத்தைச் சுட்டிக்காட்டுவதுதான் எங்கள் நோக்கம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு] [1980 ஆகஸ்ட் 11

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. த. வேணுகோ
பால் அவர்கள் மட்டும் வன்மையாகக் கண்டிக்கிறேன் என்று
சொன்னார்களே தவிர, அந்த வன்மை வார்த்தைகளில் இருந்
ததே தவிர, வாதத்தில் இல்லை என்பதை நான் பணிவன்
போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே இந்தச் சபை ஒரு மசோதாவை ஏற்றுக்கொண்டு
இருக்கிறது. அதாவது, 21 வயது வாக்களிக்க என்று இருக்
கின்றதை 18 வயது என்று குறைத்து இருக்கிறோம். இதை இந்த
மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டு இருக்
கிறார்கள். அதன் காரணமாக, அந்த இடங்களில் இந்தத் தனி
அதிகாரிகள் நியமனத்தை மேலும் 6 மாத காலத்திற்கு இருக்க
வேண்டும் என்பதையும் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பதில்
எனக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை என்பதைத் தெரிவித்
துக்கொள்கிறேன்.

18 வயது வந்தவர்களுக்கு வாக்களிக்க என்று சொல்லப்படுகிற
காரணத்தால், அதற்கான வகையில் வாக்காளர் பட்டியல்
தயாரிக்க 4 மாத காலம் அவகாசம் தேவை என்பதை எல்லோரும்
ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். அதன் காரண
மாக அந்தத் தனி அதிகாரியின் பதவிக்காலம் 6 மாதகாலத்
திற்கு நீட்டிக்கவேண்டும் என்று சொல்வதையும் ஏற்றுக்
கொள்கிற வகையில் இங்கே மாமன்ற உறுப்பினர்கள் தங்க
ளுடைய மேலான கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்
கள்.

குறிப்பாக, இந்த அரசைப் பொறுத்த வரையில், உடனடி
யாக உள்ளாட்சித் தேர்தலை நடத்த வேண்டும் என்ற எண்ணம்
இருக்கிறது. ஜனநாயகத்தின் தொட்டில்கள் என்று சொல்
லக்கூடிய ஊராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகி
வற்றின் தேர்தல்கள் உடனடியாக நடத்த வேண்டும் என்ற
எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அதனால்தான் ஏற்கனவே
கடந்த 1979-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரையில் இங்கே
ஊராட்சிகளின் தலைவர்கள் எல்லாம் பொறுப்பிலே இருந்தார்
கள். அதற்குப் பின்னர் தேர்தல் நடத்துவோம் என்று
கடந்த ஜனவரி மாதத்தில் நாங்கள் வாக்குறுதி அளித்தது
மட்டுமல்ல, தேதியைக் குறிப்பிட்டு, 1980 ஏப்ரல் மாதத்தில்
21-22 தேதிகளில் தேர்தல் நடத்துவோம் என்பதைக் கூட
சொன்னோம். ஆனால் இடையிலே ஏற்பட்ட அரசியல்
விபத்தின் காரணமாக, ஜனநாயகப் படுகொலை காரண
மாகத்தான் தேர்தல்களைத் தள்ளிப் போடவேண்டிய தவிர்க்க
முடியாத நிலை எங்களுக்கு ஏற்பட்டது என்பதைச்
சொல்லிக்கொள்ளக்கடமைப்பட்டு இருக்கிறேன். இன்னும் கூட
சொல்லப்போனால், இந்தத் தேர்தல்களை இன்னும் 6 மாதத்
திற்கு முன்னதாகவே கூட நடத்துவதற்கு இந்த அரசு
தயாராக இருக்கிறது என்பதை நான் பணிவோடு தெரி
வித்துக்கொள்கிறேன்.



1980 ஆகஸ்ட் 11] [மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு]

(இரவு 7-10)

ஆனாலும் இங்கே எல்லோரும் ஒப்புக்கொண்ட ஒரு கருத்தை அடிப்படையாகக் கொண்டு வாக்காளர் பட்டியலைத் தயாரிக்க வேண்டிய சூழ்நிலைகள் இருப்பதால இந்த காலதாமதமே தவிர தனிப்பட்ட முறையில் எப்படியாவது தேர்தலைத் தள்ளிப்போட வேண்டும்; தேர்தலை ஒத்தி வைக்க வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்பதை நான் மீண்டும் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இங்கே ஒரு ராகத்தை இசைத்தார்கள். உண்மையிலே நான் 1977 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்குப் பின்னாலே அவருடைய பேச்சைத் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறேன். ஒரே ராகம். ஒரே தாளம் என்ன அளவிலே பாடிக்கொண்டிருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். ஏனென்றால் எங்களைப் பொறுத்தவரையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையாகிய ராகத்தைத் தான் நாங்கள் இதுவரை பாடிக்கொண்டிருக்கிறோம். எங்களுக்கு என்று தனிப்பட்ட ராகத்தை இதுவரை பாடவில்லை. ஆனால் ரகுமான்கான் அவர்கள் அவருக்கே உரிய ராகத்தை, தாளத்தை இசையை அடிக்கடி பாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் அவருக்கு இருக்கிற தனித்தன்மையை பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் அவர்கள் மதுரை மாநகராட்சியப்பற்றி கோடிட்டு காட்டி, பேசினார்கள். மதுரை மாநகராட்சிக்கு எவ்வளவு சீக்கிரமாக புது மேயர் தேர்தலை நடத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அந்தத் தேர்தலை நடத்த இருக்கிறோம் என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல ரகுமான்கான் அவர்கள் இன்னொன்றையும் குறிப்பிட்டார்கள். சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஊழல் என்ற சந்தேகம் இல்லாத அளவுக்கு நீதி, நியாயம், நேர்மை என்ற அளவில் ஊழலுக்கு இடம் இல்லாமல் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த அரசு குறைபடாத அரசு என்று சொன்னார், நன்றி. ஆனால், ஒரே ராகத்தைப் பாடுவதாகச் சொன்னார்கள். அதற்குக் காரணம் இந்த அமைச்சரவை போடுகின்ற தப்புத் தாளத்தைச் சுட்டிக்காட்டுவதுதான் எங்கள் நோக்கம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. அ. ரகுமான்கான்] [1980 ஆகஸ்ட் 11

மதுரை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் மேயர் பதவி காலம் இரண்டு ஆண்டுகள், ஆகஸ்ட் மாதம் 8-ந்தேதி பதவி முடிகிறது. சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட இந்த சீசரின் மனைவி தேர்தல் நடத்துவதில் கால தாமதம் செய்வதற்கான நோக்கம் என்ன? ஏன் தேர்தலை நடத்தவில்லை?

திரு. ப. நெடுமாறன் : துணைத் தலைவரவர்களே மதுரை மாநகராட்சியைப்பற்றி திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். சில ஆண்டுகளுக்கு முன்னால் அதே மதுரை மாநகராட்சியிலே—அன்றைக்கு மாநகராட்சியைக் கலைப்பதற்கு உத்தரவு போட்டது திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

திரு. அ. ரகுமான்கான் : திராவிட முன்னேற்றக் கழகம் செய்தது சரியல்ல; நாங்கள் யோக்கியர்கள் என்று சொல்லி, வந்தீர்கள். வந்த பிறகு அதே தவறை செய்வது ஏன்? நீங்கள் வந்த பிறகு அந்த தப்பைச் செய்யலாமா? அதுதான் என்னுடைய கேள்வி.

திரு. துரை முருகன் : துணைத் தலைவரவர்களே, ஒரு விளக்கம். மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் கேட்டார்கள். ஒரு மாநகராட்சியை கலைப்பது என்பது வேறு. இவர்கள் 13,000 பஞ்சாயத்துக்களையே கலைத்திருக்கிறார்கள். இதை விட பெரிய கலைப்பு வேறு ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) விளக்கத்திற்காகச் சொல்கிறேன். நம்முடைய நெடுமாறன் அவர்கள் கலைத்தது ஏன் என்று கேட்டார்கள். கலைத்தது பரவாயில்லை; அது ஒரு மாநகராட்சி, இந்தக் காலத்திலே அங்கத்தினர்கள் இருக்கும் போது ஏன் தேர்தலை நடத்தவில்லை என்பது என்னுடைய கேள்வி. இன்ன காரணத்திற்காக நடத்தவில்லை என்று அமைச்சர் சொல்லியிருக்க வேண்டும். அதைவிட்டுவிட்டு வேறு எதையோ சொல்கிறார். அங்கத்தினர்கள் இருக்கும்போது குறிப்பிட்ட தேதியில் ஏன் தேர்தல் நடத்தவில்லை.

டாக்டர் மு. கருணாநிதி : நண்பர் நெடுமாறன் அவர்கள் மதுரை மாநகராட்சியை தி.மு. கழகம் ஆட்சியில் கலைத்தார்கள் என்று சொன்னார். அதை அவர் நிரூபிக்க முடியுமா? எப்போது கலைக்கப்பட்டது?

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவை உதவி தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசும்போது மதுரை மாநகராட்சி கலைக்கப்பட்டதை நிரூபிக்க முடியுமா என்று கேட்டார்கள். டெக்னிக்கலாக அவர் சொல்வது சரியாக இருந்தாலும் கூட. உண்மையில் அந்த



1980 ஆகஸ்ட் 11] [திரு. ப. நெடுமாறன்]

மாநகராட்சியின் தலைவராக இருந்தவருக்கும் நம்முடைய மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கும் இருந்த சொந்தத் தகராறு காரணமாக அவரை அன்றைக்கு பதவியிலிருந்து இறக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக மாநகராட்சி கலைக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவரவர்களே, நான் நண்பர் நெடுமாறன் அவர்களுக்கு விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த மாநகராட்சி கலைக்கப்படவில்லை. ஆகவே மீண்டும் மீண்டும் கேட்கிறேன் மாநகராட்சி மன்றம் கலைக்கப்பட்டதாகத்தான் அவர்கள் சொல்கிறார்களா?

திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இங்கே டெக்னிகலாக வாதாடுகிறார்கள். ஆனால் உண்மையில் நடந்தது என்ன? மற்ற மாநகராட்சிகளுக்கும் மற்றவைகளுக்கும் எல்லாம் எக்ஸ்டென்ஷன் கொடுத்த அவர்கள், தன்னுடைய சொந்த கட்சி ஆட்சி செய்த இந்த மாநகராட்சியை எந்தக் குற்றச்சாட்டும் இல்லாமல், [illegible] இல்லாமல் [illegible] நிலையில் கலைத்தார்கள்; குற்றச்சாட்டின் பேரில் மாநகராட்சிக்கு எக்ஸ்டென்ஷன் கொடுக்காமல் இருந்தால் பரவாயில்லை, எந்தக் குற்றச்சாட்டும் சொல்லாமலேயே இவர் அவர்களைக் கலைப்பது போன்ற நடவடிக்கை எடுத்து அங்கே ஸ்பெஷல் ஆபீஸரை நியமித்தார்களா இல்லையா?

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, முதலில் கலைத்ததாகச் சொன்னார்கள், இப்போது கலைப்பது போன்ற நடவடிக்கை என்று கொஞ்சம் மாற்றிச் சொல்கிறார்கள். மதுரை மாநகராட்சிக்கு ஒரு முறைதான் எக்ஸ்டென்ஷன் தர முடியும். இரண்டாவது முறை அந்தப் பதவி நீடிப்பு தரப்பட்டு, மீண்டும் தர முடியாத சூழ்நிலையில் எக்ஸ்டென்ஷன் நிறுத்தி வைக்கப்பட்டதே தவிர மாநகராட்சி மன்றம் கலைக்கப்படவில்லை.

திரு. ப. நெடுமாறன் : எக்ஸ்டென்ஷன் தர முடியாத சூழ்நிலை என்றால் என்ன? எக்ஸ்டென்ஷன் தர முடியாததற்குக் காரணம் என்ன?

டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவரவர்களே, ஒரு மாநகராட்சிக்கு ஒரு முறைதான் எக்ஸ்டென்ஷன் தரலாம். தொடர்ந்து எக்ஸ்டென்ஷன் தர முடியாது என்பதற்காகத்தான் எக்ஸ்டென்ஷன் தரப்படவில்லை.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் இட ஒதுக்கீடுகளைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்த ஒதுக்கீடுகளைப் பற்றி ஏற்கனவே அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்திலே கடந்த 1980-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 11-ஆம் தேதி தலைமைச் செயலகத்திலே பேசப்பட்டது. அப்படி இட ஒதுக்கீடுகள் வைத்து தேர்தல் நடத்த வேண்டுமென்றால் அதற்கு அதிக காலம் பிடிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பெரும்பான்மையான கட்சிகளின் தலைவர்கள் ஒத்துக்கொண்டிருப்பதால்தான் அந்த இட ஒதுக்கீடுகளை இப்போது வற்புறுத்தவில்லை என்பதை நான் பண்வோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் வாக்காளர்களுக்கு புகைப்படங்களை ஒட்டி அடையாள அட்டைகளைக் கொடுக்கவேண்டும் என்று திரு. ரகுமான்கான் அவர்கள் இப்போது சொன்னார்கள். இன்றைய பத்திரிகைகளிலும் கூட அதுபற்றிய செய்திகள் வந்திருக்கின்றன. அப்படிப் புகைப்படங்களை ஒட்டி வாக்காளர்களுக்கு அடையாள அட்டை கொடுக்கப்பட்டால் ஏறத்தாழ $1\frac{1}{2}$ ஆண்டுக்காலம் ஆகும். அப்படி $1\frac{1}{2}$ ஆண்டுக் காலத்திற்குப் பின்னால் தேர்தலை வைத்துக்கொள்ளலாம் என்ற எண்ணம் யாரிடத்திலேயும் இருக்காது என்று நினைக்கிறேன். ஆகவே, அது இப்போது வேண்டாம் பின்னால் பார்த்துக்கொள்ளலாம் என்கிற எண்ணத்தில்தான் மேலும் இந்தத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்ற எண்ணத்தில்தான் தனி அலுவலருடைய பதவிக் காலத்தை மோதத்திற்கு நீட்டித்து கொடுத்திருக்கிறோமே தவிர தேர்தலே நடத்தக்கூடாது, தள்ளிப்போட வேண்டும், ஒத்தி வைக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோவை நகராட்சியை மாநகராட்சியாக ஆக்குவதற்கு ஏற்கனவே இந்திய அரசின் குடியரசுத் தலைவர்கள் முன் அனுமதியைத் தெரிவித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்





கொள்கிறேன். ஆகவே கோவை நகராட்சி மாநகராட்சியாக ஆக இருக்கின்றது என்பதிலே ஒரு சில சட்டப் பிரிவுகளை மட்டும் மாற்றம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் முன் அனுமதியைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே கோவை மாநகராட்சியானவுடன் அதற்குரிய தேர்தலும் அதேபோல் சென்னை மாநகராட்சிக்கும் தேர்தல் நடத்தப்படும் என்கின்ற உத்தரவாதத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே பல்வேறு கருத்துக்களை மாமன்ற உறுப்பினர்கள் கூறினார்கள். குறிப்பாகத் தனி அதிகாரிகள் தங்களுடைய சாம்ராஜ்யமாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள், ஊழல் சாம்ராஜ்யத்தின் ஒட்டுமொத்தமாக திகழ்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். ஆகவே ஒருசில இடங்களில் அப்படி இருந்தாலும்கூட அந்தக் குறைபாடுகளை எல்லாம் நீக்கி மக்களுக்கு அவசியமானவற்றை செய்ய வேண்டும் என்றும் அடிப்படையான வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்றும் அரசு விரும்புகிறது.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

[இரவு 7—20]

புரட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு இடங்களில் அத்தகைய அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதற்கான முறைகளில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று எங்களுக்கு ஆணையிட்டிருக்கிறார். அதன் அடிப்படையில் இந்த அரசாங்கம் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது. உடனடியாக தேர்தல் நடத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. உடனடியாக நடத்தப்படும் என்ற உறுதிப்பாட்டினை இந்த நேரத்தில் தெரிவித்து, இந்த 5 சட்ட முன்வடிவுகளையும் ஏற்றுக்கொண்டு, சட்டமாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று தலைவர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. துரை முருகன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கார்பரேஷன். ஊராட்சி ஒன்றியங்களுக்கெல்லாம், பி. டி. ஓ. தான் ஸ்பெஷல் ஆபிசர் ஆக நியமிக்கப்பட்டிருக்

கிறார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்தினுடைய வரவு செலவு களையெல்லாம் ஆணையர்தான் செய்து வருகிறார், ஆனால் அவர் செய்கிற அந்த வரவு செலவுகள் சரியா, தவறா என்று ஆடிட் செய்வது அவர் கீழ் உள்ள ஈ. ஓ. பி. ஆபீசர். அவர்கள் ஆணையரின் கீழ் இருப்பதால் அவர்களை எதிர்த்து எழுத முடியாது. இந்த முறை சரியல்ல என்று சென்ற தடவை கூட எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருக் கிறார்கள். இப்போதும்கூட பல மன்ற உறுப்பினர்கள் திரு. பலராமன் உள்பட எடுத்துக் காட்டினார்கள். நான் கேட்கவிரும்புவது என்னவென்றால் அந்த முறை இனிமே லாவது மாற்றப்படுமா? முன்பு இருந்த உள்ளாட்சித்துறை அமைச்சர் காளிமுத்து அவர்கள் அதை மாற்ற நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் நிலைமை இன்னும் அப்படியேதான் இருப்பதாகத் தெரிகிறது விரைவில் அது மாற்றப்படுமா அல்லது நீடிக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> தலைவா அவர் களே, அதை போக்க ஆவன செய்வோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவை முன்னுள்ள கேள்வி :—'' தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு நகராட்சி மன்றங் கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) இருத்தச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/ 1980, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.





<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> தலைவர் அவர் களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;—

'' தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) இருத்தச்சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 37/1980) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்றது, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

<u>ஈ. கோயம்புத்தூர் நகராட்சி மன்றத் (தனி அதிகாரியை நியமித்தல்) இருத்தச் சட்ட முன்வடிவு, 1980 [சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 38/1980.]</u>

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

'' 1980 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சிமன்றத் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 38/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

<u>மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு :</u> தலைவர் அவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

---

* 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு] [1980 ஆகஸ்ட் 11

" 1980ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றத் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1980) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

2. ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு 1980 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1980).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;—

" தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர் களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;—

" தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1980) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

* 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1 ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



1980 ஆகஸ்ட் 11]

ஊ. ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1980 (சட்ட மன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1980.)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர் களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

" தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு* எண் 40/1980) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

" தமிழ்நாடு 1980ம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1980) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

எ. ஊராட்சிகள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1980 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1980.)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர் களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

" தமிழ்நாடு 1980/ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகளை நியமித்தல் திருத்தச் சட்ட முன்வடிவு *(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 41/1980) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

* 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

“தமிழ்நாடு 1980ம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1980) நிறைவேற்றப் பெறவேண்டும்.”

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும். பின்னர் பேரவை இரவு 7–29 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

86. தமிழ்நாடு 1944 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 19 ஆம் தேதியிடப்பெற்ற 665 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1943 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1943) 22 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]





87. தமிழ்நாடு 1944 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 2 ஆம் தேதியிடப்பெற்ற 813 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1943 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1943) 22 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

88. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1978–79 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

89. கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு பல்கலைக் கழகத்தின் 1977–78 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை (ஆங்கிலம்). [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

90. தமிழ்நாடு பல்கலைக் கழகத்தின் 1977–78 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் (ஆங்கிலத்தில்). [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு, வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாளகள்.

எதுவுமில்லை.

23095